சுதந்திர ஜோதி நூல் 1.

இந்திய சமஸ்தானங்கள்

"தினமணி" உதவி ஆசிரியர்
கே. அருணாசலம்
எழுதியது.



ஸ்ரீ. க. சந்தானம், எம். எல். ஏ. (சென்டிரல்)
அவர்களின் முகவுரை.

சென்னை மேயர் ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஏ.,
(சென்டிரல்) அவர்களின் முன்னுரை.

சுதந்திர ஜோதி பிரசுராலயம்
289, லிங்கிச் செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

காபிரைட்] 1940 [விலை ரூ. 1-8-0

முகவுரை

இந்தியாவின் விடுதலைப் போராட்டம் முற்றிடவே, இந்திய சமஸ்தானங்களின் பிரச்னையும் வலுத்து வந்திருக்கிறது. ஓர் புறம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ராஜதந்திரிகள் இந்திய சமஸ்தானங்களை தேசிய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக உபயோகிக்க முயன்று வருகின்றனர். அதை அகற்றி நாட்டின் மக்கள் அனைவரும் விடுதலை அடையவேண்டும் என்ற நோக்குடன் சமஸ்தான பிரஜைகளுக்கு அரசியல் அறிவு ஊட்டுவது தேசத் தொண்டர்களின் கடமையாயிற்று.

இந்த சமஸ்தானங்கள் எவ்வாறு சிருஷ்டிக்கப் பட்டன? அவைகளின் தற்கால நிலைமை யாது? சமஸ்தானாதிபதிகளின் போக்கு என்ன? ராஜீய இயக்கங்கள் எந்தெந்த சமஸ்தானங்களில் தோன்றி எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன? இவ்வித விஷயங்களை புள்ளி விவரங்களுடனும், சரித்திர அத்தாக்ஷிகளுடனும் ஸ்ரீ. அருணாசலம் இந்நூலில் சுருக்கமாகவும், தெளிவாகவும் வர்ணித்திருக்கிறார்.

"சமஸ்தானங்களைப்பற்றிய சகல விஷயங்களை யும் புள்ளி விவரங்களுடன் தெரிந்து கொள்ள விரும்பும் தமிழர்களுக்கு இப்புஸ்தகம் இன்றி யமையாதது."

சென்னை,
12-4-1940.

—காமராஜ்,
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS

முகவுரை

இந்தியாவின் விடுதலைப் போராட்டம் முற்றிடவே, இந்திய சமஸ்தானங்களின் பிரச்னையும் வலுத்து வந்திருக்கிறது. ஓர் புறம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ராஜதந்திரிகள் இந்திய சமஸ்தானங்களை தேசிய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக உபயோகிக்க முயன்று வருகின்றனர். அதை அகற்றி நாட்டின் மக்கள் அனைவரும் விடுதலை அடையவேண்டும் என்ற நோக்குடன் சமஸ்தான பிரஜைகளுக்கு அரசியல் அறிவு ஊட்டுவது தேசத் தொண்டர்களின் கடமையாயிற்று.

இந்த சமஸ்தானங்கள் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டன? அவைகளின் தற்கால நிலைமை யாது? சமஸ்தானாதிபதிகளின் போக்கு என்ன? ராஜீய இயக்கங்கள் எந்தெந்த சமஸ்தானங்களில் தோன்றி எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன? இவ்வித விஷயங்களை புள்ளி விவரங்களுடனும், சரித்திர அத்தாக்ஷிகளுடனும் ஸ்ரீ. அருணாசலம் இந்நூலில் சுருக்கமாகவும், தெளிவாகவும் வர்ணித்திருக்கிறார்.

இந்நூலாசிரியர் தேசபக்தி ததும்பிய இளைஞர். தேசத்திற்காக நீண்ட காலம் சிறை சென்றிருக்கிறார். சிறையில் மற்றவர்களுடன் நமது அரசியல் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து தேர்ச்சியடைந்திருக்கிறார். "தினமணி"யில் வேலை செய்துவரும் பலரைக, சாதாரண மக்களுக்கு போதிக்கத்தக்க எளிய நடையில் தமிழும் எழுத ஆற்றல் பெற்றிருக்கிறார் என்று இப்புத்தகத்திலிருந்து விளங்கும்.

அவரது இம்முயற்சிக்குத் தமிழ் நாட்டில் போதிய ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறேன்.

கும்மிட்டித்திடல்,
16-4-40.

—க. சந்தானம்.

முன்னுரை

"இந்திய சமஸ்தானங்கள்" என்று தமிழில், "தினமணி" உதவி ஆசிரியர் ஸ்ரீ. கே. அருணாசலம் சிறப்பான நூலை எழுதியிருப்பதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். அது எளிய நடையில், இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் இன்று வரையுள்ள சரியான தகவல்களுடன் வரையப் பெற்றுள்ளது. சமஸ்தானங்களின் சரித்திரம் அவைகளின் இப்போதைய நிலைமை முதலியவை பொருத்தமான எல்லா அம்சங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளன. சமஸ்தானங்களில் தோன்றியுள்ள ராஜீய விழிப்பு பல அத்தியாயங்களில், பூர்ண அநுதாபத்துடன், விஷய ஞானத்துடன்கூட, ஏராளமான விவரங்கள் சகிதமாய் வருணிக்கப்பட்டுள்ளது. இந்திய பெடரேஷனின் உருப்புகளாக அவற்றின் எதிர்காலம் எவ்வாறு இருக்குமென்றும் அறிவிக்கப்படுகிறது. ருசிகரமான, பயன்தரும் தன் புத்தகத்தின் இறுதியில், ஜனநாயக சுதந்திர இந்தியாவில், ஜனநாயக சமஸ்தானங்களாக அவை இருக்க முடியுமா என்பதைப்

பற்றி ஆசிரியர் ஒளிவு மறைவின்றி தன் அபிப் பிராயத்தை எடுத்துரைக்கிறார். இது ஏராளமான பேர் படிக்க வேண்டிய நூல். அத்தகைய பேரா தரவு இதற்குக் கிடைச்சுமென்று நான் நம்பு கிறேன்.

சென்னை,
18-4-40

—எஸ். சத்தியமூர்த்தி,
சென்னை மேயர்.

ஆசிரியர் குறிப்பு

இந்தியா வெகு சீக்கிரத்தில் சுதந்திரமடையப் போகிறது. இந்த சமயத்தில், சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு எம்மாதிரி இருக்கவேண்டும் என்பதுபற்றி தர்க்கங்கள் ஆரம்பமாவது இயற்கையே. ஸ்ரீ. ஜின்னு, இந்தியாவை இரண்டாக வெட்டிவிட வேண்டுமென்கிறார்.

இன்னம் 564 'ஜின்னுக்கள்' இருக்கிறார்களென்பது நமக்கு சுலபமாகத் தெரிவதில்லை. இந்திய சமஸ்தானாதிபதிகளையே குறிப்பிடுகிறேன். பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலிருந்து போவதாயிருந்தால், இந்தியாவில் ஏற்படும் மத்திய சர்க்காருக்கு ஆதிபத்திய அதிகாரத்தை பிரிட்டிஷ் சர்க்கார் மாற்றி விடக்கூடாதென்றும், தாங்கள் பூர்ண ராஜ்யதிகாரமுள்ள மன்னர்களாய் இருக்கவேண்டுமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

அதாவது தங்களுக்காக மாத்திரம் இந்தியாவை 564 பாகங்களாக வெட்டவேண்டுமென கோருகின்றனர். இப்படிக் கேட்பது நியாயமா? கேட்க அவர்களுக்கு அருகதையுண்டா? ஜனங்களின் கடமை என்ன? இந்த பிரச்னைகளையெல்லாம் என்னுல் இயன்றவரை இப்புஸ்தகத்தில் விவாதித்திருக்கிறேன்.

முதல் பாகத்தில், பிரிட்டிஷாரின் ராஜதந்திர உபாயங்களில் இந்திய மன்னர்கள் சிக்கிக்கொண்டதும், அதனுல் ஏற்பட்ட விளைவுகளும் கூறப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பாகத்தில், சுதேச மன்னர்களின் அடக்குமுறையைத்

தாங்கமுடியாத பிரஜைகள், காங்கிரஸ் தலைவர்கள் கொடுத்த உற்சாகத்தால் பொறுப்பாட்சிப் போரை தைர்யத்துடனும், உறுதியுடனும் ஆரம்பித்த வரலாறும், அந்த இயக்கத்தை ஒடுக்க சமஸ்தானாதிபதிகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் உடந்தையாயிருந்ததும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சமஸ்தானங்களைப்பற்றி ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பொதுவாக யாரும் சுலபமாகத் தெரிந்துகொள்ள ஒரு சாதனமாய் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இப்புஸ்தகத்தை எழுதலானேன். இம் முயற்சி கைகூடிவிட்டால், நான் என் கடமையைச் செய்தவனாவேன். புஸ்தகத்தில் குற்றம், குறைகள் இருப்பின், அதற்காக மன்னிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு சில உண்மைகளை அறிவித்தும், போட்டோக்களை அனுப்பியும் உதவி புரிந்த பவநகர் திவான் ஸ்ரீ. அனந்தராய் பட்டணி, அவுண்டு மாஜி திவான் ஸ்ரீ. தர்சனு ஆகிய இருவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இப்புஸ்தகத்தை எழுத எனக்கு மிக்க ஊக்கமளித்த 'தினமணி' ஆசிரியர் ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை எம். எல். ஏ., அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை,
10-4-40.

—கே. அருணாசலம்.

பொருளடக்கம்

முதல் பாகம்

அத்தியாயம்		பக்கம்
	முகவுரை ...	iii
	முன்னுரை ...	v
	ஆசிரியர் குறிப்பு ...	vii
1.	சமஸ்தானங்களின் தோற்றம் ...	1
2.	விபரீத ஒப்பந்தங்கள் ...	15
3.	கம்பெனியின் கொள்கை ...	26
4.	புதிய அதிகார ஆக்ரமிப்பு ...	33
5.	பிரிட்டிஷ் உரிமைகள் ...	46
6.	அரசியல் இலாகா ...	58
7.	நரேந்திர மண்டலம் (ராஜாக்கள் சபை) ...	60
8.	நிர்வாக அலங்கோலம் ...	64
9.	ஸல்லாப உல்லாஸங்கள் ...	78
10.	வில்லங்கங்களும், தலையீடுகளும் ...	90

இரண்டாம் பாகம்

1.	பிரஜைகளின் எழுச்சி	...	105
	மன்ஸா	சத்யாக்ரஹம் ...	112
	மைசூர்	,, ...	119
	திருவாங்கூர்	,, ...	136
	ஹைதராபாத்	,, ...	158
	ராஜ்கோட்	,, ...	174
	ஜெயப்பூர்	,, ...	202
	ஒரிஸ்ஸா சமஸ்தானங்களில்	,, ...	207
	காஷ்மீர்	,, ...	218

2. அவுண்டு சீர்திருத்தம் .. 233
3. சமஸ்தானங்களும் காங்கிரசும் ... 241
4. பொறுப்பாட்சிக்கு பிரிட்டிஷ் எதிர்ப்பு ... 248
5. இரட்டையாட்சி பலிக்காது ... 256
6. சமஷ்டி திட்டத்தின் கதி ... 259
7. சமஸ்தானங்கள் அவசியமா? ... 279
அனுபந்தங்கள் 289–302
விஷய அட்டவணை ... 303

படங்கள்

பிரிட்டிஷ் இந்தியாவும், இந்திய சமஸ்தானங்களும் ... 80
பண்டித ஜவாஹர்லால் நேரு ... 1
பவநகர் மகாராஜா
கோண்டால் மன்னர்
காலஞ் சென்ற ஸ்ரீ. பிரபா சங்கர் பட்டணி ... 66
நரேந்திர மண்டலத்தின் அத்யக்ஷகர்
நவநகர் மகாராஜா ... 67
ஸ்ரீ. பலவந்தராய் மேத்தா
இந்தூர் மகாராஜா
மாஜி இந்தூர் மகாராஜா சர் துக்கோஜி ராவ் 81
ராம்பூர் நவாப்
திருவாங்கூர் மகாராஜா
திருவாங்கூர் திவான் சர் வி. பி. ராமஸ்வாமி அய்யர் ... 138
மைசூர் மகாராஜா
ஹைதராபாத் நிஜாம் ... 139
மகாத்மா காந்தி ... 191
ராஜ்கோட் மன்னர்
சர்தார் வல்லபபாய் பட்டேல் ... 232
அவுண்டு மன்னர்
அவுண்டு பிரதம மந்திரி ... 233

இந்திய சமஸ்தானங்கள்

அத்தியாயம் 1

சமஸ்தானங்களின் தோற்றம்

இந்தியாவில் மொத்தம் 562 சமஸ்தானங்கள் இருக்கின்றன. இவற்றின் மொத்த ஜனத்தொகை 8 கோடி. ராஜாக்கள் சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறபடி இந்த சமஸ்தானங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் :

(1) 11 குண்டுகளுக்கு மேலாக மரியாதையுள்ள ராஜாக்களின் 109 சமஸ்தானங்கள். இவற்றின் மொத்த ஜனத்தொகை சுமார் 6 கோடி. வருஷ வருமானம் சுமார் ரூ. 42½ கோடி.

(2) ராஜாக்கள் சபையில் தங்களுக்காக பிரதிநிதிகளைக் கொண்ட 126 சமஸ்தானங்கள். இவற்றின் மொத்த ஜனத்தொகை 71 லட்சம்; வருமானம் சுமார் ரூ. 2½ கோடி.

(3) ராஜாக்கள் சபையில் பிரதிநிதித்துவமில்லாத 327 சிறிய எஸ்டேட்டுகளும், ஜாகீர்களும். இவற்றின் மொத்த ஜனத்தொகை 8 லட்சம். வருமானம் 74 லட்சம்.

இவைகளையெல்லாம் சேர்த்தால் 562 சமஸ்தானங்களாகும்.

இந்த 562 சமஸ்தானங்களும் பல ரகப்பட்டவை. 85,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள சமஸ்தானத்திலிருந்து (காஷ்மீர்), ஒரு சதுர மைல் விஸ்தீரணமுள்ள சமஸ்தானம் வரை (குஜராத் ஏஜன்சியிலுள்ள அவசார்)* இருக்கின்றன. ஜனத்தொகையைப் பார்த்தால் $1\frac{1}{2}$ கோடி உள்ள சமஸ்தானத்திலிருந்து (ஹைதராபாத்) 32 பேர் உள்ள சமஸ்தானம் வரை இருக்கின்றன. வருமானத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஹைதராபாத்தின் வருமானம் ரூ. $8\frac{1}{2}$ கோடி. ரூ. 20 வருமானம் உள்ள சமஸ்தானமும் இருக்கிறது.

நூற்றுக்கணக்கான ஜாகீர்களெல்லாம் ஏதோ சரித்திர சம்பவங்களால் சமஸ்தானங்களாகி விட்டன.

பிரிட்டிஷார் வியாபாரத்திற்காக இங்காட்டை அண்டிய போது, இங்கு இவ்வளவு சமஸ்தானங்கள் இல்லை. கிழக்கிந்திய கம்பெனியாரே பெரும்பாலான சமஸ்தானங்களை தங்களுடைய சுயநலத்திற்காக சிருஷ்டித்தார்கள். எப்படி என்பதை கவனிப்போம்.

இந்தியாவை வெல்ல வேண்டும் என்று எந்த ஐரோப்பிய நாடும் ஆதியில் எண்ணியதில்லை. வர்த்தக உறவு வைத்துக்கொள்ளவே விரும்பினார்கள். 1498-ல் போர்ச்சுகலிலிருந்து புறப்பட்ட வாஸ்கோடி காமா ஒரு சில பேர்களுடன் கள்ளிக்கோட்டையில் இறங்கினார். அங்கிருந்த ராஜா (ஜாமொரின்) தன்னுடைய ராஜ்யத்திற்கும், இதர இந்திய ராஜ்யங்களுக்கும் உலை வைக்கப்போகும் வெள்ளை நிறத்தினருக்கு இடம் கொடுக்கிறோ மென்பதை உணரவில்லை. வரவேற்றார். பாக்டரிகள் கட்ட இடமளித்

* 6ம் அநுபந்தம் பார்க்க.

தார். ஆனல் கால் வைத்த 10 வருஷத்தில் இந்த வெள் ளேக்காரர்கள் கள்ளிக்கோட்டை அரண்மனேக்கு நீ வைத்து, நாசமாக்கி விட்டனர். டவுனே சூறையாடினர்.

16-வது நூற்ருண்டுக் கடைசியிலேயே டச்சுக்காரர் களும் இந்தியாவுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, இந்திய மன்னர்களிடமிருந்து முடிந்தவரை பிடுங்கித் தின்றனர்.

கிழக்கே வர்த்தகம் செய்வதற்காக 1600-ம் வருஷத் தில் இங்கிலாந்தில் கிழக்கிந்திய கம்பெனி அமைக்கப்பட் டது. ராணி எலிஸபெத்திடமிருந்து இந்த கம்பெனி வர்த்தகத்திற்காக கிழக்கு இந்தியா செல்ல அனுமதி பெற்றது.

ஜஹாங்கீர் தாராளம்

இந்தியாவில் காலடி வைத்த முதல் ஆங்கிலேயரின் பெயர் காப்டன் ஹாக்கின்ஸ். அவர் 1608-ம் வருஷம் சூரத்தில் கப்பலில் வந்து இறங்கினர். அப்பொழுது இங்கிலாந்தில் மன்னஞயிருந்த முதல் ஜேம்ஸிடமிருந்து அவர் கொண்டு வந்திருந்த கடிதத்தை முகலாய சக்கரவர்த்தியாகிய ஜஹாங் கீரிடம் கொடுத்தார். ஜஹாங்கீர் வெள்ளேக்காரனே மரி யாதையுடன் நடத்தினர். யூனியன் ஜாக் இந்தியாவில் பறக்கப்போகிறது என்று ஹாக்கின்ஸ் கனவில்கூட நினேத்திருக்க மாட்டார். ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து முகலாய சக்கரவர்த்தியுடன் நேசப்பான்மையிலிருப் பதை சூரத்திலிருந்த போர்ச்சுகர்களுக்குப் பிடிக்கவில்லே. ஹாக்கின்ஸுக்கு எதிராக சூழ்ச்சி செய்தனர். இதை அறிந்த ஹாக்கின்ஸ் இங்கிலாந்துக்கு செய்தி யனுப்பினர். 1612 ல் நான்கு பிரிட்டிஷ் கப்பல்கள் நிறைய சோல்ஜர்கள் சூரத்துக்கு வந்து, போர்ச்சுகீயர்களே வீழ்த்தி, சூரத்

நகரைக் கைப்பற்றினர். நகரில் யூனியன் ஜாக் பறக்க ஆரம்பித்தது. 1613-ல் சக்கரவர்த்தி ஜஹாங்கீருக்கும் பிரிட்டிஷ்காரர்களுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, மூகலாய தலைநகரில் கிழக்கிந்திய கம்பெனியின் ஸ்தானாதிபதி ஒருவன் இருக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. சூரத்தில் ஒரு பாக்டரியை வைக்கவும் ஆங்கிலேயர் அனுமதி பெற்றனர். அப்பொழுதுதான் முதல் முதலாக இங்கிலீஷ் வர்த்தகத்திற்கு இந்தியாவில் அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது.

1661-ல் இரண்டாவது சார்லஸ் கிழக்கு இந்திய கம்பெனிக்கு விசேஷ அதிகாரங்கள் அளித்தார். அதன்படி, இக்கம்பெனியார் கிறிஸ்தவர்களல்லாத எந்த ஜனங்கள் மீதும் போர் தொடுக்கவும், சமாதானம், உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் உரிமை பெற்றனர்.

சென்னையில் பிரிட்டிஷ்—பிரஞ்சு சண்டை

சென்னையில் 100 வருஷங்களாக இருந்து வந்த பிரிட்டிஷாரை பிரஞ்சுக்காரர்கள் விரட்டி 1746-ல் இந்நகரை தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கையில், வர்த்தகக் கம்பெனி, சென்னையிலிருந்து பிரஞ்சுக்காரர்களை துரத்தி நகரை மீட்டுத் தருமாறு ஹைதராபாத் மன்னரை கேட்டுக்கொண்டது. அதன்படி நிஜாம், பிரஞ்சுக்காரரை விரட்டுமாறு தனக்குட்பட்ட கர்னாடக நவாபுக்கு உத்திரவிட்டார். கர்னாடக நவாபின் ஆயிரக்கணக்கான போர் வீரர்களை, பிரஞ்சு தளபதி டியூப்ளேயின் 1,200 சோல்ஜர்கள் முறியடித்து விரட்டியனுப்பினர். இதைக்கண்ட பிரிட்டிஷாருக்கு துணிச்சலேற்பட்டது. இந்திய ராஜாக்கள் மீதும், இந்திய மக்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தலாம்

என்ற எண்ணம் அப்பொழுதுதான் அவர்களுக்கு முதல் முதலில் உதயமாயிற்று.

அந்த சமயத்தில் புதுச்சேரி பிரஞ்சுக்காரர்கள் வசமிருந்தது. ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் யுத்தம் ஆரம்பமானதும், அந்த யுத்தம் இந்தியாவிலும் பரவியது. 1748-ல் புதுச்சேரியை பிரிட்டிஷார் தாக்கினர். ஆனால் அவர்களை டியூப்ளே முறியடித்து, தன்னுடைய பிரதாபத்தை இந்திய ராஜாக்கள் அனைவருக்கும் அறிவித்தார். அந்த சமயத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைப்படி, டியூப்ளே. சென்னையை இங்கிலீஷ் காரரிடம் ஒப்படைக்க நேரிட்டது. ஐரோப்பாவில் சமாதானம் ஏற்பட்ட பின்னரும் இந்தியாவில் பிரஞ்சுக்காரர்களும் பிரிட்டிஷார்களும் தருப்புகளை தயாராக வைத்திருந்தனர். இந்திய ராஜாக்களுக்குள் நடக்கும் சண்டையில் ஏதாவது ஒரு கட்சிக்கு உதவி செய்ய இந்த வெள்ளைக் கூட்டங்கள் முன் வந்தன. முதலில் பிரஞ்சுக்காரர்களை எப்படியேனும் இந்தியாவிலிருந்து விரட்டி, பின்னர் இந்தியாவை ஒரு கை பார்த்துக்கொள்ளலாம் என்பதே பிரிட்டிஷார்களின் நோக்கம். எனவே தங்களுடைய பலத்தை அதிகரித்துக்கொள்ளுவதென முடிவு செய்தனர். சீக்கிரத்தில் சந்தர்ப்பமும் கிடைத்தது.

தஞ்சையில் பிரிட்டிஷ் துரோகம்

தஞ்சாவூரில் பட்டத்தை இழந்த ஹிந்து ராஜா சாஹுஜியை மீண்டும் சிம்மாசனத்தில் வைக்க பிரிட்டிஷார் முன்வந்தனர். இந்த கைங்கரியத்திற்கு தேவிகோட்டையை சன்மானமாக அளிப்பதாக சாஹுஜி வாக்களித்தார். அவரை விரட்டிய சந்தா சாஹிப், மராட்

டியால் கைது செய்யப்பட்டார். இங்கிலீஷ்காரர்கள் சாஹுஜியின் உதவிக்குச் செல்லுகையில், தஞ்சையை பிரதாப் சிங் என்ற ராஜா ஆண்டு வந்தார். அவருடைய பரிபாலனம் ஜனங்களுக்கு திருப்தியளித்தது. எனவே பிரிட்டிஷ்காரர்கள் சாஹுஜி மீதே பாய்ந்தனர்! திடீரென தேவிகோட்டை மீதே படையெடுத்து அந்நகரை கைப்பற்றிக் கொண்டார்கள். சாஹுஜிக்கு பென்ஷன் கொடுத்து விட்டு, பிரதாப் சிங்குடன் பரஸ்பர உதவி உடன்படிக்கையும் செய்து கொண்டனர்.

அந்தக் காலத்தில் மராட்டியர்களைக் கண்டால் முகலாய சக்கரவர்த்திக்கு சிம்ம சொப்பனமாயிருந்தது. மராட்டியர்கள் ஐரோப்பியர்களிடம் தோற்றதில் தைமூர் வம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்திக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டது தெரியுமா? புதுச்சேரியில் பிரஞ்சு ராணுவத்தின் தளபதியாயிருந்த டுமாஸ், கர்னாடக நவாப் தஸ்தலி கானுடன் சிநேகம் செய்து கொண்டதின் விளைவாக, தஸ்தலிக்கும், அவர் மருமகன் சந்தா சாகிப்புக்கும் உதவி செய்து, மராட்டியர்களை எதிர்த்தார். சண்டை வந்தால் அதை சமாளிப்பதற்காக ஐரோப்பிய முறையில் தேர்ச்சியடைந்த 1,500 பிரஞ்சு சோல்ஜர்களையும், 5,000 இந்திய சிப்பாய்களையும் புதுச்சேரியில் வைத்திருந்தார். இந்த முன்னேற்பாடுகளைக் கண்டு மராட்டியர்கள் பிரமித்துப் போயினர். கர்னாடகத்தை கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலைமையை தெரிந்து கொண்ட டில்லி சக்கரவர்த்தி, அளவிலா ஆனந்தமடைந்து, டுமாஸின் சாமர்த்தியத்திற்காக அவனுக்கு "நவாப்" என்ற பட்டத்தை அளித்தார்; 2,000 குதிரைப் படை வீரர்களையும் சன்மானமாகக் கொடுத்தார்.

இந்திய ராஜாக்கள் தங்களுக்குள்ளேயே போரை நடத்த பிரிட்டிஷாரின் ராணுவ உதவியை நாடினர். சமயம் வாய்த்தால் இங்கிலீஷ்காரர்களா விடுவார்கள்? தாராள மாக உதவி செய்ய முன்வந்தனர். பிரதிப் பிரயோசனத் திற்காகத்தான். கடைசியில் இந்திய ராஜாக்களே எதிர்த் தும் போரிட்டார்கள்.

பிஷ்வா—பிரிட்டிஷ் ஒப்பந்தம்

1757-ல் பிளாஸி யுத்தத்திலும், இரண்டாவது மராட்டிய யுத்தத்திலும் கிழக்கிந்திய கம்பெனியார் ஜெயித்த பின்புதான், இந்தியாவில் அவர்களுடைய ஆதிக் கம் ஸ்திரப்பட்டது. 1817 ம் வருஷம் பீஷ்வா, பூனாவில் பிரிட்டிஷ் ரெஸிடெண்டாக இருந்த எல்பின்ஸ்டனுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். அதில்,

"எனக்கும், என்னுடைய சந்ததிகளுக்கும், மராட்டிய சம்மேள னத்தில் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இதுவரை நான் இதர மராட்டிய ராஜ்யங்கள் மீது செலுத்தி வந்த அதிகாரங்களை இழக்கின்றேன். இதன் மூலம் மராட்டிய சம்மேளனத்தையே கலைத்து விடுகிறேன்,"

என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். எனவே கோலாப்பூர், சாவந்த்வாடி, குவாலியர், இந்தூர், நாகபுரி, பரோடா ஆகிய ஆறு சமஸ்தானங்களும் சம்மேளனத்தி லிருந்து பிரிக்கப்பட்டன. இப்படி பிரிக்கப்பட்டவை களில் மிகவும் முக்கியமானது குவாலியர். 1817-லேயே லார்டு ஹேஸ்டிங்ஸ் பெரிய பட்டாளத்துடன் இந்த சமஸ் தானத்திற்குச் சென்று, பயமுறுத்தி ஒரு உடன்படிக் கையை எழுதி வாங்கிக்கொண்டார். அதன்படி குவாலி யரில் இரு கோட்டைகளில் பிரிட்டிஷ் பட்டாளங்கள்

இருக்க உரிமை கிடைத்தது. இந்த பட்டாளத்திற்கு மகா ராஜாவே 5,000 குதிரைகளும் வாங்கித் தரவேண்டும்! மராட்டியர்களுடன் யுத்தம் முடிந்த பின், எல்பின்ஸ்டன், நாகபுரியில் ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். சமஸ் தானத்தில் பிளவுகளே உண்டு பண்ணவும், ராஜாவாக இருப்பவரை விரட்ட, அதே ராஜ குடும்பத்தைச் சேர்ந்த இன்னொருவனை கிளப்பவும்தான் சமஸ்தான தலைநகர் களில் ரெஸிடெண்டுகள் நியமிக்கப்பட்டார்கள். இப்படி உள்நாட்டு சச்சரவுகளைக் கிளப்பி, இறுதியில் தானே இந்த ராஜ்யங்களை விழுங்கி விடலாமென்பதே கிழக்கிந்திய கம் பெனியின் அந்தரங்க நோக்கம். மராட்டிய சாம்ராஜ்யம் கலைக்கப்பட்டதும், பீஷ்வாவுக்கு உட்பட்டிருந்த சிற்றரசர் களுடன் கம்பெனியார் உடன்படிக்கை செய்துகொள்ள ஆரம்பித்தனர். அவர்களையெல்லாம் தனி ராஜாக்களாக பாவிப்பதாக வாக்களித்தார்கள். பரோடாவைப் பொறுத்த வரையில் பிரிட்டிஷாருக்கு சிரமமேயில்லை. அங்கிருந்த ராணுவம் பிறருக்கு ஆபத்தாயிருந்ததைக் காட்டிலும், பரோடாவுக்கே அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியதாயி ருந்தது. அப்பொழுது ராஜாவாயிருந்த ஆனந்தராவ் கெய்க்வார், சில வருஷங்களுக்கு முன், அவரிடம் வேலை பார்த்த அராபிய சிப்பாய்களின் கைதியாயிருந்திருக்கிறார். அந்த ராணுவத்தை பிரிட்டிஷ் படை வீழ்த்திய பின்பு, கெய்க்வார், அரண்மனை சூழ்ச்சிகளில் அம்மானைக் காயாக இருந்தார். ரெஸிடெண்ட் சொல்லுவதே ராஜாவின் கொள்கையாக இருந்தது.

பிரிட்டிஷார் மராட்டியர்களை ஒரு வழியாக தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த பின், வேறு யாரைக் கண்டும் பயப்பட வேண்டிய அவசிய மேற்படவில்லை.

அடுத்தபடியாக மத்திய இந்திய, ரஜபுதன மன்னர்களின் தலையில் கையை வைக்க ஆரம்பித்தனர்.

பிண்டாரிகள் மீது பாய்ச்சல்

குவாலியரின் ராணுவம் தாக்கியதால் திணறிக்கொண்டிருந்த போபால், தன்னுடைய உதவிக்கு பிண்டாரிகளை* அழைத்தது. பிண்டாரிகளைக் கண்டு எப்பொழுதும் நடுக்க முற்றிருந்த பிரிட்டிஷார் இதைக் கண்டு ஆத்திரப் பட்டனர். எப்படியும் அவர்களை ஒழிக்க வேண்டுமென கம்பெனியார் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்கள். கவர்னர்–ஜெனரலின் ஏஜெண்ட் 1717-ம் வருஷம் அக்டோபரில் போபால் சர்க்காருக்கு பின்கண்ட கடிதம் எழுதினார் :—

---

* பிண்டாரிகளை பிரிட்டிஷ் சர்க்கார் "கொள்ளைக்காரர்கள்" என்று அழைத்தனர். ஆனல் அவர்கள் கொள்ளைக்காரர்களல்ல வென்று இந்திய சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். பிண்டாரிகள் மராட்டிய ராஜாக்களின் ராணுவத்தில் சேவகம் செய்தவர்கள். அவர்களுடைய தலைவர்களெல்லாம் பட்டாணியர்கள். சிவாஜியின் ராணுவத்தில் இந்த பட்டாணியர்கள் இருந்திருக்கின்றனர். மகாராஷ்டிர ராஜாக்களுக்கு இவர்கள் செய்த உதவிக்காக ஜாகீர்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிக்க மிருப்பதை ஒழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்ட மகாராஷ்டிர மன்னர்களின் பலம், இந்த பிண்டாரிகள் மூலம் அதிகமானதால் தான், பிண்டாரிகளை ஒழித்து விடுவதென பிரிட்டிஷார் முடிவு செய்தனர். பிண்டாரிகள் தங்கள் தற்காப்பை உத்தேசித்து, பிரிட்டிஷ் இந்திய பிரதேசங்களைத் தாக்கி, சொத்துக்களை கொள்ளையடித்தனர்.

"பிண்டாரி கொள்ளைக் கூட்டங்களை தொலைத்து விடுவ தென பிரிட்டிஷார் முடிவு செய்திருக்கிறார்கள். சூறையாடும் முறை இந்தியாவிலேயே தலைகாட்டா வண்ணம் செய்யப் போகிறார் கள். இந்த வேலைக்காக பிரிட்டிஷ் ராணுவங்கள் ஒவ்வொரு திக்கி லிருந்தும் மால்வாவில் நுழையப்போகின்றன. எனவே ஒவ் வொரு சமஸ்தானமும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு சிநேகிதமா, விரோதமா என்பதைத் தெரிவித்துவிட வேண்டும். எங்கள் வேலை யில் பூர்ணமாக ஒத்துழைக்காதவர்கள்கூட விரோதிகளாகவே கருதப்படுவார்கள்; நடத்தப்படுவார்கள்."

நவாப், பிரிட்டிஷ் சர்க்கார் சொல்படி கேட்டு, சிநேகிதராகி விடவே, போபால், 1817 டிசம்பர் முதல் பிரிட்டிஷாரின் பாதுகாப்பு சமஸ்தானமாயிற்று.

மால்வாவில் நிலையான சர்க்கார் எதுவுமில்லாததால், கம்பெனியாருக்கு கொண்டாட்டமாயிருந்தது. அடுத்த படியாக இந்தூரில் கால் வைத்தனர். ஹோல்காருக்கும் பாதுகாப்பளித்து, அவருடைய ராஜதந்திர உறவுகள் எல்லாம் பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் மூலம் இருக்க வேண்டு மென உத்திரவிட்டார்கள்.

ராஜபுதன சமஸ்தானங்களில் முதல் முதலில் கராலி சமஸ்தானம் 1817-ல் பிரிட்டிஷாரின் பாதுகாப்பு ராஜ்ய மாயிற்று. இதற்கு முன்னால் இந்த சமஸ்தானம் பீஷ் வாவுக்கு கப்பம் செலுத்தி வந்தது. கராலிக்குப் பின் ஜோத் பூர், உதயபூர், பிக்கானீர், கிஷன்கார், ஜெயப்பூர், முதலிய ராஜபுதன சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் பாதுகாப்பு ஆதிக்கத் தின் கீழ் வந்தன.

மத்திய இந்தியாவில்தான் சமஸ்தானங்கள் மள மள வென்று சரணாகதி யடைந்தன. தார், திவாஸ், தேரி, தாட்டியா, சம்தார், ரேவா முதலிய சமஸ்தானங்களுடன்

பிரிட்டிஷாருக்கு ஏற்கனவே உறவு இருந்ததால் இவற்றை பணிய வைப்பது சிரமமாகயில்லை. பெரிய சமஸ்தானங்கள் சின்ன பின்னப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு அதிபதி நியமிக்கப்பட்டான். மொத்தம் 143 அதிபதிகளை பிரிட்டிஷார் அங்கீகரித்து, சமஸ்தானாதிபதிகளாக்கினர். இப்படி இந்தியா பூராவும் செய்ததால்தான் இந்நாட்டில் இடறி விழுந்தால் சமஸ்தானமாயிருக்கிறது. சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்தானங்களையெல்லாம், பிரிட்டிஷார்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டதாக பாவித்து, அவைகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். மாராட்டிய சாம்ராஜ்யம் மீண்டும் ஸ்தாபிதமாகக் கூடாதென்பதே பிரிட்டிஷாரின் நோக்கம். அதற்காகத்தான் இந்த ஏற்பாடுகளெல்லாம் நடந்தன.

பிரிட்டிஷார் மத்திய இந்தியாவில் அநுஷ்டித்த கொள்கையை பம்பாய் மாகாணத்தில் குஜராத் சமஸ்தானங்களிலும் அமுலுக்குக் கொண்டு வந்தனர். இதன் விளைவாக கட்ச் மன்னருடன் ஆரம்பித்த சமரசப் பேச்சுகள் வெற்றியடைந்தன—அதாவது பிரிட்டிஷாருக்கு வெற்றி கிடைத்தது. அப்பொழுது அங்கு ரஜபுத்திர மன்னன் ஆட்சி செலுத்தி வந்தான். சிந்து அமீர்கள் கட்ச் மீது படையெடுக்கப் போவதாக வதந்தியிருந்ததால், பிரிட்டிஷாருடன் தான் ஒப்பந்தம் செய்துகொண்டால் தான் பெயரளவுக்காவது ராஜாவாக யிருக்கலாம் என்று கட்ச் மன்னன் எண்ணினான். 1816-ல் ஒப்பந்தமும் கையெழுத்தாயிற்று. இதற்குப் பின் பிரிட்டிஷாரின் பார்வை கத்தியவார் மீது விழுந்தது. அப்பொழுது கெய்க்வார்தான் கத்தியவார், மஹேகாந்தா ஆகிய இரு மாகாணங்களிலிருந்தும் வரி வசூல் செய்து வந்தான். வரி

லேசில் வசூலாகாது. எனவே, கெய்க்வாரின் ராணுவங்கள் அந்த இரு மாகாணங்களிலுமுள்ள ஜமீன்தார்களின் பிரதேசங்களில் நுழைந்து, பயமுறுத்தி, வரிகளை வசூலித்து வந்தன. இந்த ஜமீன்தார்களெல்லாம் பீஷ்வாவுக்கு கெய்க்வார் மூல்யமாக கப்பம் கட்டி வந்தவர்கள். பீஷ்வாவுக்கும் கம்பெனியாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, பீஷ்வா இந்த ஜமீன்களின் மீது தனக்கிருந்த உறவுகள் அனைத்தையும் இழந்து விட்டதால், கம்பெனியார் இப்பொழுது இந்த ஜமீன்தார்கள் விஷயத்தில் தலையிட்டனர். பரோடா சமஸ்தானத்துடன் 1820-ல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அது, கெய்க்வாருக்கும் இந்த ஜமீன்தார்களுக்கும் இருந்த உறவை கத்தரித்து விட்டது. இப்படியாக பிரிட்டிஷார்கள் குஜராத்தின் அதிபதியானார்கள். குஜராத்தை நான்கு அரசியல் ஏஜென்ஸிகளாக (கத்தியவார், மஹிகாந்தா, ரேவா, பலன்பூர்) பிரித்து, அங்கு முன்னர் பீஷ்வாவுக்கு கப்பம் கட்டி வந்த ஜமீன்தார்களையெல்லாம் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, அவர்களை சமஸ்தானாதிபதிகளாக்கினர். எனவே 2, 3 கிராமங்களுக்குச் சொந்தமாயிருந்தவர்கள், ராஜாக்களாய் விட்டனர்.

அப்பொழுது முகலாய சாம்ராஜ்யம் க்ஷீணமடைந்து கொண்டிருந்தது. இந்த சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்த சமஸ்தானாதிபதிகளெல்லாம் தங்களுடைய 'உரிமைகளை' நிலைநாட்ட ஆரம்பித்தனர். பிரிட்டிஷ் சர்க்கார் இவர்களை அணுகுகையில் சமரசத்திற்கு நிர்ப்பந்திப்பதில் சிரமமே ஏற்படவில்லை. "உங்களுடைய சமஸ்தான உள்நாட்டு விவகாரங்களில் உங்களுக்கு பூர்ண சுதந்திரமளிக்கிறோம்; உங்களை யெல்லாம் ராஜாக்களாக்குகிறோம்! டில்லி

சக்கரவர்த்திக்கு தலை வணங்க வேண்டாம்" என்று சொன்னதும், இவர்களும் பேரானந்தமடைந்து, பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இப்படியாக தூற்றுக்கணக்கான சமஸ்தானங்கள் சிருஷ்டிக்கப்பட்டன.

562 சமஸ்தானங்களையும் நான்கு தலைப்புகளின் கீழ் பிரிக்கலாம்.

(1) கொம்ப காலமாகவுள்ள ஹிந்து சமஸ்தானங்கள். உதாரணம்: ராஜபுத் சமஸ்தானங்கள், மத்திய இந்தியா, கத்தியவார், மைசூர், திருவாங்கூர்.

(2) முகலாய சாம்ராஜ்யத்தில் வைசிராய்களாகவோ, அல்லது ஜெனரல்களாகவோ இருந்தவர்கள், சாம்ராஜ்யத்திலிருந்து விலகி, தனியாக ஸ்தாபித்துக்கொண்ட சமஸ்தானங்கள். உதாரணம்: ஹைதராபாத், ராம்பூர்.

(3) முகலாய சாம்ராஜ்யம் தகர்ந்து கொண்டிருந்த சமயத்தில் ராணுவத் தலைவர்கள் தங்கள் வசமிருந்த துருப்புகளைக்கொண்டு, "எரிகிற வீட்டில் அகப்பட்டது லாபம்" என்கிற மாதிரி, தாங்கள் ஆக்ரமிக்கக்கூடிய இடங்களை கைப்பற்றிக்கொண்ட பிரதேசங்கள். இந்த ரகத்தில் முக்கிய சமஸ்தானங்கள்: போபால், டோங்க், பகவல்பூர்.

(4) முஸ்லிம் படையெடுப்பால் விரட்டப்பட்ட ராஜபுத்ரர்களின் சிற்றரசு சமஸ்தானங்கள். உதாரணம்: ஓரிஸ்ஸாவிலும், மத்திய மாகாணத்திலும் இருப்பவை.

சில சமஸ்தானாதிபதிகளின் நிலைமை விசித்திரமாகத்தான் இருக்கிறது. இப்பொழுது பெரிய ஜமீன்தார்களாயுள்ள, ஆனால் சமஸ்தானாதிபதிகளுக்குள்ள அதிகாரங்கள் இல்லாத பர்த்துவான் மகாராஜா (வங்காளம்), தர்பங்கா மகாராஜா (பிஹார்), சென்னை ஏஜென்ஸி பிரதேசங்களி

• ளுள்ள ஜெயப்பூர் மகாராஜா, பொப்பிலி, விஜயநகரம் ராஜாக்கள் முதலியோர் எந்த விதத்திலும்—நிலப்பரப்பிலோ, ஜனத் தொகையிலோ, வருமானத்திலோ—கத்தியவாரிலுள்ள மன்னர்களுக்குக் குறைந்தவர்களல்ல. மேற்கண்ட ஜமீன்தார்களுக்குள்ள பிரதேசத்தில் 10-ல் ஒரு பாகம்கூட—என் சிலர் விஷயத்தில் 20-ல் ஒரு பாகம்கூட இல்லாத சமஸ்தானாதிபதிகள் கத்தியவாரிலும், இன்னும் பல ஏஜென்ஸியிலும் இருக்கிறார்கள். இந்த தாரதம்யங்களுக்கு சரித்திர சம்பவங்களே காரணமாகும். வங்காளத்திலும், தெற்கே சர்க்கார்களிலும் (கிருஷ்ணை, கோதாவரி, டெல்டா பிரதேசங்கள்) இருந்த சிற்றரசர்களை பிரிட்டிஷார், பெரிய ஜமீன்தார்களாகவே பாவித்தார்கள்.

அத்தியாயம் 2

விபரீத ஒப்பந்தங்கள்



கிழக்கிந்திய கம்பெனி, திருவாங்கூர் ராஜாவுடன் தான் முதல் முதலாக 1723-ம் வருஷம் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. இதன்படி [illegible] கோட்டை கட்டுவதென்றும், அதற்கு கம்பெனியார் ஆயுதங்களும், வெடி மருந்துகளும் சப்ளை செய்வதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ராஜாவின் சர்க்கார் கிழக்கிந்திய கம்பெனியின் பக்கம் சேர்ந்து நேச உறவில் இருக்க வேண்டுமென்றும் ஒப்பந்தம் கூறியது. கொள்ளைக் கூட்டத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஜிஞ்சரியா மன்னருடன் 1733-ல் கம்பெனியார் ஒரு அனுக்ரமிப்பு ஒப்பந்தமும், பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்துகொண்டனர். இந்த இரண்டு உடன்படிக்கைகளும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. பிரிட்டிஷ் வர்த்தகம் யாதொரு இடையூறுமின்றி இந்த இரு ராஜாக்களின் பிரதேசங்களிலும் செழித்தோங்கவே, கம்பெனியார் இந்த ஒப்பந்தங்களைச் செய்துகொண்டனர்.

நிஜாமுடன் ஒப்பந்தம்

பிளாஸி யுத்தத்திற்குப் பின் 1759-ம் வருஷம் மே மாதம் 14ந்-தேதி ஹைதராபாத் சுபேதாருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் *கம்பெனியின் அரசியல் நோக்கத்தை வெளிக்காட்டுகிறது. தென் இந்தியாவில் ஹைதர்அலி,

---

* முதல் அநுபந்தம் பார்க்க.

நிஜாம், மராட்டியர் இம்மூவரும் ஒருவருடன் ஒருவர் யுத்தம் செய்து கொண்டிருந்ததால், கம்பெனியார் தலை தூக்க சரியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. மசூலிப்பட்டண ஒப்பந்தப்படி கம்பெனியார், நிஜாமுடன் ராணுவ உறவை ஸ்தாபித்துக் கொண்டனர். தங்களுடைய அரசியல் அதி காரத்தை நிலைநாட்ட ஆங்கிலேயர்கள் இந்திய ராஜாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதில் இதுவே முதலாவதாகும்.

ஒப்பந்தங்களில் மூன்று ரகங்கள்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் வளர்ந்த விதத்தை கிழக்கிந்திய கம்பெனியும், இந்திய மன்னர்களும் 18-ம் நூற்றாண்டிலிருந்து செய்துகொண்ட பல ரக உடன்படிக்கை களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

(1) சம அந்தஸ்து கொள்கையும், நேச உறவும்

18-ம் நூற்றாண்டுவரை செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், சம அந்தஸ்து நிலைமையை அடிப்படை யாகக் கொண்டவை. திருவாங்கூர், ஹைதராபாத், அயோத்தி, பரோடா, குவாலியர் ஆகிய சமஸ்தானங் களுடன் முதலில் இதைப்போல உடன்படிக்கைகள்தான் செய்துகொள்ளப்பட்டன.

(2) வேலிக் கொள்கையும், ராணுவப் பாதுகாப்பும்

19-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் பிரிட்டிஷார் இன் னும் ஒரு படி சென்றனர். தங்களுடைய நிலைமையை யும் ஸ்திரப்படுத்திக் கொண்டார்கள். ஹைதராபாத், அயோத்தி, பரோடா, பூனாவிலிருந்த மராட்டிய பிஷ்வா முதலியோருக்கு பிரிட்டிஷ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

கம்பெனி இவற்றை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, ஒவ்வொரு சமஸ்தானத்தின் தலைநகரிலும் "உதவிப் பட்டாளங்களை" வைத்தது. இந்தப் பட்டாளங்களின் செலவையெல்லாம் சமஸ்தானமே ஏற்க வேண்டும். அதற்காக சமஸ்தானத்தில் ஒரு பகுதியையோ, அல்லது பணத்தையோ, கம்பெனியாருக்கு தந்துவிட வேண்டும். கம்பெனி தன்னுடைய எல்லைகளையும், தன்னுடன் ராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ள சமஸ்தானங்களின் எல்லைகளையும் பாதுகாத்து வந்தது. இந்த சமஸ்தானங்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. ஆனால் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளாத சமஸ்தானங்களுடன் போரிடலாம். இதற்கு "வேலிப் பாதுகாப்புக் கொள்கை" என்று பெயர்.

(3) பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம்

"வேலிப் பாதுகாப்புக் கொள்கை" வெற்றியடையாமற் போகவே, 1812 முதல் 1820 வரை ஒரு புது ரக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இதன்படி போபால், ராஜபுதன சமஸ்தானங்கள் முதலியவை பிரிட்டிஷாரின் பாதுகாப்பு நாடுகளாயின. தங்களுடன் உடன்படிக்கை செய்துள்ள எல்லா சமஸ்தானங்களுடைய வெளி உறவுகளின் பூர்ண அதிகாரத்தையும் பிரிட்டிஷாரே ஏற்றுக்கொண்டனர். சமஸ்தானங்களுடன் வைத்துக் கொண்ட இந்த சம்பந்தத்திற்கு "பிரிட்டிஷ் மேலதிகாரத்தை அங்கீகரிக்கும் உறவு" என்று பெயர். பிரிட்டிஷார், இந்திய ராஜாக்களுக்கு அவர்களுடைய ராஜ்யத்தில் பூர்ண அரசாங்க உரிமை அளித்தார்கள்.

மேலே உள்ள மூன்று தலைப்புகளில் முதல் தலைப்

பின் கீழ் ஒப்பந்தம் செய்துகொண்ட ஒவ்வொரு சமஸ்தானமும் மற்ற எந்த சமஸ்தானத்துடனும் நேரில் உறவு வைத்துக்கொள்ள உரிமையுண்டு. இதில் விசேஷமாக குறிப்பிட எதுவுமில்லை. இந்த ஒப்பந்தத்தால் 'இந்திய ராஜாக்களின் பூர்ண ராஜ்யாதிகாரம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமலிருந்தது.

இரண்டாவது தலைப்பின் கீழ் (வேலிக் கொள்கையும், ராணுவப் பாதுகாப்பும்) ஒப்பந்தம் செய்து கொண்ட சமஸ்தானங்கள், கம்பெனியுடன் உறவில்லாத சமஸ்தானங்களுடன் **மட்டும்** ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம். எனவே இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதின் மூலம், ராஜாக்கள், தங்கள் இஷ்டப்படி **வேறு எந்த சமஸ்தானாதிபதியுடனும்**—அவர் பிரிட்டிஷாருடன் உறவு வைத்திருப்பவராய் இருந்தால்கூட—உடன்படிக்கைகள் செய்துகொள்ள தங்களுக்கிருந்த உரிமையை பறி கொடுத்தனர்.

மூன்றாவது தலைப்பின் கீழ் (ஆதிபத்யத்திற்கு உட்பட்ட பாதுகாப்பு) ஒப்பந்தம் செய்துகொண்ட சமஸ்தானம், வேறு எல்லா சமஸ்தானங்களுடனும், நாடுகளுடனும் எவ்வித உடன்படிக்கையும் செய்துகொள்ளக்கூடாது. இந்த ஒப்பந்தம்தான் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆதிபத்ய அதிகாரத்தை யளித்தது. இந்த ஆதிபத்ய அதிகாரத்தைக் கொண்டுதான் இந்திய அரசியல் இலாகா, இப்பொழுதும் சமஸ்தானாதிபதிகளை ஆட்டி வருகிறது.

அந்த சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்காரை சவாலுக்கு அழைக்கக்கூடிய அளவுக்கு மராட்டிய சமஸ்தானங்களுக்கு பலமிருந்தது. மைசூரில் ஹைதராலி ஆட்சி புரிந்து வந்தார். டெக்கானில் முஸ்லிம்களின் ஆதிக்கம் செழிப்புற்றி

ருந்தது. பிரஞ்சுக்காரர்கள் தாக்கினால் என்ன செய்வது என்ற பயமும் பிரிட்டிஷாருக்கு இருந்தது. (இந்த பயம் 1808 வரை போகவில்லை.)

எனவே, கம்பெனியார் தங்களுடைய எல்லைக்குப் பக்கத்திலுள்ள சமஸ்தானங்களுடன் முதலில் "ராணுவ பாதுகாப்பு உடன்படிக்கைகள்" செய்து கொண்டார்கள். "புலிக்குப் பயப்படுகிறவர்கள் எல்லோரும் என் மேல் படுத்துக்கொள்ளுங்கள். நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்" என்கிற மாதிரிதான் இதுவும். தற்காப்புக்காகவே, சுயநலத்தை உத்தேசித்தே, மேற்கண்ட மூன்று இந்திய ராஜாக்களின் ஆக்கிரமிப்புகளிலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றே பிரிட்டிஷார் இந்த ஒப்பந்தங்களை செய்துகொண்டனர். வியாபாரத்திலும் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். பக்கத்து சமஸ்தானங்களில் அமைதி நிலவினால்தானே அங்கு பிரிட்டிஷ் சரக்குகளை விற்க முடியும்? இந்த உறவுப்படி, பிரிட்டிஷார் தன்னை பாதுகாத்துக்கொள்ள தன் கையிலிருந்து பணம் செலவழிக்காமல், சமஸ்தானங்களில் "உதவிப் பட்டாளங்களை" வைத்து, சமஸ்தானங்களின் செலவிலேயே தன்னை பாதுகாத்துக்கொண்டது.

ராஜாக்களுக்கு அவர்களுடைய எல்லையில் பூர்ண ராஜாங்க உரிமை அளித்து, அவர்களின் எல்லைகளை பாதுகாப்பதாக பிரிட்டிஷார் கூறியதால் என்ன அனர்த்தம் நேரிட்டதென்பதைப் பார்ப்போம். மன்னர்கள் இதைப் போல உடன்படிக்கைகள் செய்யாதிருந்த காலத்தில் தங்கள் தங்களுடைய சமஸ்தானத்தில் திறமையான நிர்வாகம் இருந்தால்தான் தாங்கள் வாழ முடியும் என்பதை உணர்ந்து, அதற்குத் தக்கவாறு நடந்து கொண்டிருந்தனர்.

பிரஜைகளின் குறைகளை நீக்கி வந்தார்கள். இல்லையேல் உள்நாட்டுக் கலகம் ஏற்படுமல்லவா? நிர்வாகச் செலவும் சிக்கனமாயிருந்தது. விரோதி வந்தால் அவனை சமாளிப்பதற்காக கஜானாவில் வேண்டிய பணமும், திறமையான ராணுவமும் இருந்தது.

இந்த உடன்படிக்கைக்குப் பின் ராஜாக்கள் தங்கள் மக்களுக்கும், சமஸ்தானத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளையே மறந்தனர். பிரிட்டிஷார்தான் பாதுகாக்கிறார்களே, நமக்கென்ன ஆகவேண்டியது! என்று அலக்ஷியமாயிருந்தனர். இதோடு மட்டுமா? தர்பார்களெல்லாம் மதுபானம் அருந்தும் மடங்களாகவும் விபசாரம் நடத்தும் இடங்களாகவும் மாறின. அப்பொழுது கவர்னர்-ஜெனரலாயிருந்த வெல்லஸ்லி, வர்த்தகக் கம்பெனியின் டைரக்டர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில்,

"நமது கொள்கை சுதேச மன்னர்களை பேடிகளாக்கி விட்டது. பிரிட்டிஷாரின் உதவியே கதியென்றிருக்கிறார்கள்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த பாதுகாப்பு முறை 15 வருஷ காலம் அமுலிலிருந்த பின் சர். தாமஸ் மன்ரோவே அதைப்பற்றி கூறியிருப்பதாவது :

"இந்த முறை எந்தெந்த சமஸ்தானங்களில் அமுலிலிருக்கிறதோ, அந்த சமஸ்தானங்களெல்லாம் பலவீனமாயிருக்கின்றன. அவற்றின் ராஜாக்கள், பிரஜைகளை கொடூரமாக நடத்துகிறார்கள். சமூகத்தில் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் கௌரவத்தையெல்லாம் காற்றில் பறக்க விட்டு, கேவலமான வேலைகளில் இறங்கி, எல்லா ஜனங்களையும் பரதேசிகளாக்குகின்றார்கள். இந்தியாவில் எங்கேனும் மோசமான ஆட்சியிருந்தால், அதற்குப் பரிகாரம் என்ன நடக்கும் தெரியுமா? ஒன்று, அரண்மனையில்

'அமைதியான புரட்சி' நடக்கும்; அல்லது ஜனங்கள் ராஜாவை ஒழித்துவிட பலாத்காரப் புரட்சியில் இறங்குவார்கள். ஆலை இப்பொழுது உள்நாட்டிலிருந்தோ, வெளியிலிருந்தோ, ராஜாவுக்கு விரோதிகள் கிளம்பிலுல், அவர்களை ஒடுக்கவும், ராஜாவின் சிம்மாசன உரிமையை காப்பாற்றவும் தலைநகர்களில் பிரிட்டிஷ் படைகள் தயாராய் காத்துக்கொண்டிருப்பதால், ஜனங்களுக்கு பரிகார வழி இல்லாமற் போய் விடுகிறது. இக்கொள்கை "உன்னுடைய பாதுகாப்பிற்கு அன்னியரை நம்பியிரு" என்ற பாடத்தை ராஜாவுக்கு போதிக்கிறது. அவனை சோம்பேறியாக்கி விடுகிறது. பிரஜைகளின் வெறுப்புக்கு அஞ்ச வேண்டாம் என்று அவனுக்கு தைரியம் கொடுப்பதின் மூலம் பிரிட்டிஷ் சர்க்கார் தன்னுடைய கொடூரமான, பேராசை பிடித்த மனப்பான்மையைக் காட்டுகிறது. இந்த பாதுகாப்பு முறை எங்கெங்கு அமுலுக்கு வருகிறதோ அங்கெல்லாம் அதனுல் விளையும் அனர்த்தங்களை உடனே பார்க்கலாம். கிராமங்களெல்லாம் க்ஷீணமடையும். ஜனத்தொகைகூட குறைந்து விடுகிறது. பிஷ்வா, நிஜாம் நாடுகளில் இது பிரத்யக்ஷமாகத் தெரிகிறது."

பிரிட்டிஷார் இந்தியர்களை ஆண்டிகளாக்கினர் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி ஏதேனும் தேவையா? லார்டு கார்ன்வாலிஸ் 1805-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் லார்டு லேக்குக்கு எழுதியதாவது:

"நம்முடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கும் சமஸ்தானங்களெல்லாம் படுமோசமான, திக்கற்ற நிலைமைக்கு வந்துள்ளன. இந்த சமஸ்தான சர்க்கார்களிடம் பணமோ, துருப்புகளோ இல்லை. எங்கு பார்த்தாலும் அதிருப்தியும், துவேஷமுமே நிலவியிருக்கிறது."

பொதுவாக நிலைமை இவ்வாறிருக்க, ஹைதராபாத்தில் வேலியே பயிரை மேய ஆரம்பித்தது. நிஜாமின் மந்திரிகளே லஞ்சம் வாங்கினர்!

ஹோல்காரின் நிர்வாகம் மிகக் கேவலமாயிருந்தது. மகாராஜா ஹரி ராவின் ஆட்சியை பிரஜைகளால் சகிக்க முடியவில்லை. 1835ல் அவனுடைய பிரஜைகள் அரண்மனையை சூழ்ந்துகொண்டு, அவனை கொல்ல முயற்சித்தனர்.

கெய்க்வார், சில லேவாதேவிக்காரர்களிடமிருந்து வாங்கியிருந்த கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

திருவாங்கூரில் கேட்க வேண்டியதில்லை. ரெஜிடெண்டே கொஞ்ச காலத்திற்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

1830-ல் மைசூர் நிர்வாகத்தை பிரிட்டிஷாரே நடத்த ஆரம்பித்தார்கள்.

சமஸ்தான நிர்வாகங்களின் சீர்கேட்டைப்பற்றி "லண்டன் டைம்ஸ்" 1853-ல் ஒரு தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :

"கொடுங்கோன்மையின் அவதாரமாயுள்ள இந்த சோகை பிடித்த, திறமையற்ற படாடோப ராஜாக்களை, சாதாரணமாக அவர்களுக்கு ஆகவேண்டிய கதியிலிருந்து நாம் காப்பாற்றினோம். உள்நாட்டுக் கலகத்தின் மூலம் ஒரு திறமையான ராஜாவுக்கு பட்டம் சூட்ட இந்திய சமஸ்தான பிரஜைகளுக்கு இருந்த உரிமையை நாம் பறிமுதல் செய்து விட்டோம். ராஜாக்களுக்கு பொறுப்பையும், அதிகாரத்தையும் சேர்த்துக் கொடுக்காமல், அதிகாரத்தை மாத்திரம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லப்படுவதில் யாதொரு தவறுமே கிடையாது. அவர்கள் எவ்வளவு குற்றங்கள் செய்தாலும், பாப காரியங்களில் இறங்கினாலும், நிர்வாகத் திறமையற்றவர்களாயிருந்தாலும், நம்முடைய இரும்புக்கை அவர்களை சிம்மாசனங்களில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. சொல்லுந் துயரத்திற்குள்ளாகியுள்ள ரயத்துக்கள், கொடுக்க

முடியாத அளவுக்கு வரி விதிக்கப்படுகின்றனர். சர்க்கார் ஜனங்களுக்காக இல்லைபோல தோன்றுகிறது. ராஜாவுக்காகவே ஜனங்கள் இருக்கிறார்கள் போலும்! ராஜாக்களுக்கு வேலையில்லாமல் வருமானம் கிடைத்து வரும் வரை, பிரிட்டிஷாரிடம் ராஜாக்கள் விசுவாசமாகவுள்ள வரை, நாம் இந்தியாவின் அதிபதிகள் என்ற ஹோதாவில் அவர்களுடைய பிரஜைகளுக்கு—அவர்கள் உண்மையில் நம்முடைய பிரஜைகள்தான்—நமது கடமையைச் செய்ய வேண்டும்."

இந்த விதமாக இங்கிலாந்திலுள்ளவர்களே சமஸ்தான உள் நாட்டு விவகாரங்களில் வர்த்தகக் கம்பெனி தலையிட வேண்டுமென்று கோரினர்.

"பரஸ்பர நட்பு", "நேசப்பான்மையான ஒத்துழைப்பு", "பரஸ்பர கடமைகள்" அடங்கிய உடன் படிக்கைகளெல்லாம், 1813-ம் வருஷத்தோடு முடிவடைந்தன. அதற்குப் பின் கையெழுத்தான உடன்படிக்கைகளில் "பரஸ்பர நட்பு", "நேசப்பான்மையான ஒத்துழைப்பு", "பரஸ்பர கடமைகள்" என்ற பதங்களுக்குப் பதிலாக "கீழ்ப்பட்ட சமஸ்தானத்துடன் நட்பு," "கீழ்ப்பட்ட சமஸ்தானத்துடன் ஒத்துழைப்பு", "பாதுகாப்பு", "விசுவாசம்" என்ற பதங்கள் உபயோகிக்கப்பட்டன. கிழக்கிந்திய கம்பெனி, இந்தியாவில் இருந்த பல சர்க்கார்களில் ஒன்றாக இருந்த காலம், 10 வருஷ காலத்தில் மாறி விட்டது. அதாவது மேலதிகாரம் செலுத்தும் சர்க்காராய் விட்டது. 1813-ம் வருஷத்திற்குப் பின் அது செய்து கொண்ட உடன்படிக்கைகளிலிருந்து இது நன்கு தெரிய வரும்.

பிரிட்டிஷாருடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திட்ட சமஸ்தானங்கள் 40 தான் (எல்லாம் பெரியவை).

பக்கி சமஸ்தானங்களுக்கு **சன்னதுகள்** (சலுகை அல்லது அதிகாரத்தையும், உரிமையையும் அங்கீகரிக்கும் தஸ்தாவேஜுகள்) வழங்கப்பட்டன. பொதுவாக இந்த சன்னதுகளில் ஆதிபத்திய சர்க்காரின் நிபந்தனைகள் இருக்கும். உதாரணமாக, புதுக்கோட்டை சமஸ்தானாதிபதிக்கு லார்டு கானிங் எழுதிக் கொடுத்த சன்னதில்,

"உங்களுடைய ராஜ வம்சம் பிரிட்டிஷ் மன்னரிடம் விசுவாசமாகயிருந்து, உடன்படிக்கைகளை கௌரவித்து, அதன்படி பிரிட்டிஷ் சர்க்காருக்கு கடமைகளைச் செய்து வரும் வரை உங்கள் ஸ்வீகாரப் புத்திரன் சிம்மாசனம் ஏறலாம்,"

என்று இருக்கிறது. 1813-ம் வருஷம் வரை வர்த்தகக் கம்பெனி, சமஸ்தானங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருந்தது.

கம்பெனியின் பாதுகாப்பின் கீழ் இல்லாத நாடுகளை அவைகளின் போக்குப்படியே பிரிட்டிஷார் விட்டு வைத்தார்கள், மராட்டிய ராஜாக்கள் மீண்டும் தங்களுடைய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க திட்டம் வகுக்க ஆரம்பித்தனர். இதைக் கண்ட வர்த்தகக் கம்பெனியார் பீதியடைந்து, தங்கள் பிரதேசங்களுக்கு ஆபத்து வருவதைத் தடுப்பதற்காக படிப்படியாக தங்களுடைய ஆதிக்கத்தை இதர சமஸ்தானங்களிலும் பரவச் செய்வதென முடிவு செய்தார்கள். "அடுத்த நாட்டில் அமைதியில்லையேல் நமது எல்லையில் எத்தனை நாளுக்கு அமைதி நிலவும்?" என்று யோசிக்கலானார்கள்.

எனவே, இதர சமஸ்தானங்களை அபகரித்துவிட வேண்டும், அல்லது இதர சமஸ்தானங்களுக்குள்ள தகராறுகளை நமது மத்தியஸ்தத்திற்கு அனுப்பும்படி செய்ய வேண்

டும்; யாருடனும் யுத்தம் செய்ய அவர்களுக்குள்ள உரிமையை பறிக்க வேண்டும்; நமக்கு முன்கூட்டி தெரிவித்து அங்கீகாரம் பெறுத எந்த உடன்படிக்கைகளையும் எந்த சமஸ்தானமும் வேறு சமஸ்தானத்துடன் செய்துகொள்ளுவதை அநுமதிக்கக்கூடாது; என்ற தீர்மானத்திற்கு வந்தனர். இதை சாதிப்பதற்காக அவசியமான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தார்கள்.

அத்தியாயம் 3

கம்பெனியின் கொள்ளை

அயோத்தி சமஸ்தானத்தை கிழக்கிந்திய கம்பெனி 1856-ம் வருஷம் அபகரித்தது. அங்கு மோசமான ஆட்சி யிருந்ததால் அதை தன்னுடைய ராஜ்யத்துடன் சேர்த்து, அந்த சமஸ்தான மக்களை கொடுங்கோலாட்சியிலிருந்து மீட்டதாக பிரிட்டிஷார் கூறுகின்றனர். அங்கு மோச மான ஆட்சி இருந்ததென்பதில் சந்தேகமில்லை. அந்த மன்னன் பிரிட்டிஷாருடன் செய்துகொண்ட ஒப்பந்தப் படி சமஸ்தானத்தின் நிர்வாகம் திறமையாயிருக்குமாறு பார்த்துக்கொள்ளவில்லை யென்பதும் உண்மையே. ஆனால், பிரிட்டிஷார் தங்களுடைய சுயநலத்தை உத்தேசித்தே அங்கு தலையிட்டார்கள். அயோத்தியின் மீது கிழக்கிந்திய கம்பெனியின் திருஷ்டி பல வருஷங்களாக யிருந்து வந் ததை நிரூபிக்க வேண்டிய அத்தாட்சிகள் இருக்கின்றன. ஹென்ரி லாரன்ஸ் 1745-ம் வருஷம் "**கல்கத்தா ரெவ்யூ**" வின் ஜனவரி மாத இதழில் எழுதியிருப்பதாவது :

"இங்கிலாந்தில் இந்தியாவைப்பற்றி நடக்கும் பேச்சுகளில் அயோத்திதான் ரொம்பவும் அடிபடுகிறது. 'அரசியலும், யோக் கியத்தன்மையும் இணைபிரியாதவை' என்று இங்கிலீஷ்காரர்க ளாகிய நாம் கருதுகிறோம். ஒரு யோக்கியமான நபர் யோக்கிய மான அதிகாரியாயுமிருக்கத்தான் வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் அயோத்தி விவகாரங்களைக் கண்டு நடுங்கிப்போய் விட்டோ மென்பதை மாத்திரம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ், லார்டு உன்மவுத், லார்டு வெல்லெஸ்லி, லார்டு ஹேஸ் டிங்ஸ், லார்டு ஆக்லண்ட் ஆகியோர், கவர்னர்—ஜெனரல் என்ற

ஹோதாவில் அயோத்தியின் அழிவுக்காக நடந்துகொண்டதைப் போல், தங்களுடைய சொந்த வாழ்க்கையில் நடந்து கொண்டதேயில்லை. ஒரு ராஜதந்திரி எவ்வளவு கேவலமாக நடந்துகொள்ள முடியும் என்பதை அயோத்தி விஷயத்தில் நாம் தெரிந்து கொள்ளலாம். அந்த சமஸ்தானத்தைப்பற்றி எழுதியுள்ள அனைவரும் அந்த தர்பாருக்கும், மக்களுக்கும் விரோதமாக, ஆங்கிலேயர்களின் நற்பெயருக்கே உலைவைக்கும் விதத்தில் கிழக்கிந்திய கம்பெனி நடந்து கொண்டிருந்ததென கூறுகிறார்கள். 'அயோத்தியின் நிர்வாகத்தில், விடாமல், முன்னேற்பாடாகவே தலையிட்டு வந்திருக்கிறோம். வேறு எந்த சமஸ்தானத்திலும் இவ்வளவு தூரம் தலையிடவில்லை' என்று கர்னல் சதர்லண்டு கூறுகிறார். எந்தப் பக்கம் திரும்பினாலும் நமது தலையீட்டால் ஏற்பட்ட சீர்கேடுகளே பார்க்கிறோம்."

அயோத்தியிலுள்ள வசதிகளைப்பற்றி 1856-வது வருஷம் "கல்கத்தா ரெவ்யூ" வின் ஜூன் மாத இதழில் ஒரு ஆங்கிலேயர் எழுதியிருப்பவாவது :

"குளிர் காலத்தில் அயோத்தியிலுள்ள சிதோஷ்ண நிலை போல வேறு எந்த இடத்திலுமே யிருக்காது. அக்டோபரிலிருந்து மழை கால ஆரம்பம் வரையில் ஐரோப்பாவில் கூட இதைப்போல ஜோரான கால நிலை இருக்காது. நமது வர்த்தகத்திற்கும்—ஏன் நமது எல்லாத் தொழில்களுக்கும்—அந்த சமஸ்தானுதிபதி பெரிய இடையூறாக இருக்கிறார். அவர் முட்டுக்கட்டையாக யில்லாவிட்டால், வெள்ளைக்கார தோட்டக்காரர்கள் அங்கு கொஞ்ச காலத்தில் கொள்ளை கொள்ளையாக சம்பாதித்து விடலாம். நமது வர்த்தகம் செழித்தோங்குவதற்கும் அந்த ராஜாவின் அதிகாரிகள் முட்டுக்கட்டைகளாகயிருக்கின்றனர். அந்த பூமியிலும் ரொம்ப சத்து இருக்கிறது. எதைப் போட்டாலும் நல்ல விளைச்சல் இருக்கும்."

எனவே அயோத்தியை அபகரித்தாலொழிய அங்

குள்ள இயற்கைச் செல்வங்களை தாங்கள் உபயோகிக்க முடியாதென பிரிட்டிஷார் கண்டு கொண்டார்கள். ஒழுங்கற்ற முறையில் அந்த சமஸ்தானத்தை பிரிட்டிஷ் இந்திய பிரதேசத்துடன் சேர்த்துக் கொள்ளுவதென்று முடிவு செய்தனர். அப்பொழுது கவர்னர்—ஜெனரலாயிருந்த டெல்ஹௌஸி இந்த முடிவை நிறைவேற்றியும் வைத்தார்.

சிந்து சமஸ்தானத்தை அமீர்களிடமிருந்து அபகரிக்கும் வேலையில் வெற்றி பெற்ற சர். சார்ல்ஸ் நேப்பியர் கூறியுள்ளதிலிருந்து அயோத்தியைப்பற்றி இன்னம சில விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம். அவர் தன்னுடைய பத்திரிகையில் 1850-ம் வருஷம் எழுதியிருப்பதாவது :

"டெல்ஹௌஸியின் தகப்பன் இங்கு (இந்தியா) கிழக்கிந்திய கம்பெனியின் ராணுவ தளபதியாயிருக்கையில், அயோத்தி ராஜாவைக் காண லக்ஷ்மணபுரிக்குச் சென்றிருந்தார். அப்பொழுது அவர் தன்னுடைய மனைவியை ராஜாவுக்கு அறிமுகப்படுத்தினர். ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஓஹோ! அவளை நம்மிடம் விற்க விரும்புகிறான் போலிருக்கு!' என்ன நினைத்தான். சற்று நேரத்திற்குப் பின்னல் திரும்பி தனது ஆட்களைப் பார்த்து, 'அதெல்லாம் ரொம்ப சரி, அவளைக் கொண்டு போ' என்றார்.

எங்கே என்று கேட்கவும் வேண்டுமா? அந்தப்புரத்திற்குத்தான்!

சர். சார்ல்ஸ் நேப்பியரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அவனுடைய சகோதரர் சர். வில்லியம் நேப்பியர், "அயோத்தியை அபகரிக்க இதுவும் (டெல்ஹௌஸியின் தாயாரை அந்தப்புரத்திற்குக் கொண்டு போகச் சொன்னது) முக்கிய காரணமாகும்" என்று குறிப்பிடுகிறார்.

அந்தக் காலத்தில் மோசமான ஆட்சி இல்லாத சமஸ்

தானங்கள்தான் அபூர்வமாக யிருந்தபடியால் அயோத்தியில் மாத்திரம் கம்பெனியார் விசேஷ கவனம் செலுத்தியதின் காரணங்களே மேலே கூறப்பட்டவைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இதற்கு முன்னால் இன்னம் சில சமஸ்தானங்கள் கிழக்கிந்திய கம்பெனியால் கபளீகரம் செய்யப்பட்டன.

குடகில் கொடுங்கோலாட்சி

குடகு சமஸ்தானத்தில் வீர ராஜேந்திர உடையார் என்ற ராஜா 1821-ம் வருஷம் பட்டத்திற்கு வந்தான். அவன் தன்னுடைய இஷ்டப்படி தன் உறவினர்களை சிறைப்படுத்தியும், தூக்கிலிட்டும் வந்தான். இந்த கொடுங்கோலாட்சியைத் தடுக்க பிரிட்டிஷ் சர்க்காரின் உதவி நாடப்பட்டது. பிரிட்டிஷார் ஒரு தூது கோஷ்டியை அனுப்பினர். இதனால் யாதொரு பிரயோசனமும் மேற்படவில்லை. மீண்டும் சமரசப் பேச்சை ஆரம்பிக்க குடகு பிரஜை ஒருவரையே பிரிட்டிஷார் அனுப்பினர். ஆனால் ராஜா மகா கோபமடைந்து, அவரை சிறையிலடைத்தான். ராஜா, தன்னுடைய கடமையை மறந்து, கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கீழ்ப்பட்டவன் என்பதையும் மறந்ததற்காக அவன் மீது யுத்தம் தொடுப்பதாக கவர்னர்—ஜெனரல் 1834-ம் வருஷம் மார்ச் மாதம் 15ந் தேதி அறிவித்தான். ராஜா சரணாகதியடைந்ததால், அவனுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டது. 1834-ம் வருஷம் மே மாதம் 7-ந் தேதி குடகு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டது.

சிந்து ஏன் கைப்பற்றப்பட்டது?

1843-ல் சிந்து சமஸ்தானம் முஸ்லிம் அமீர்களிட

மிருந்து அபகரிக்கப்பட்டது. இதற்கு இரு காரணங்கள் உண்டு:

(1) சிந்து அமீர்கள் கோடிச்வரர்களாயிருந்தனர். அவர்கள் கஜானாக்களில் தங்கம், வெள்ளி, வைடூரியங்கள் வழிந்து விழுவதாகவும் சொல்லப்பட்டது. பேராசை பிடித்த வெள்ளையர்கள் நாம் ஏன் அவைகளுக்கு சொந்தக் காரர்களாகக் கூடாது என்று நினைத்தனர். சர். சார்லஸ் டைக் என்பவன் தன்னுடைய பத்திரிகையாகிய "கிரேட் பிரிட்டனில்" எழுதியிருப்பதாவது:

"இந்தியாவில் சாப்பிடுகையில், சூறையாடுவதைப்பற்றி நடக்கும் சம்பாஷணைகளின்போதுதான், 'நாம் ஸ்காந்தனேவிய கடற் கொள்ளைக்காரர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்' என்பது ஞாபகத்திற்கு வருகிறது. நூற்றுக்கணக்கான வருஷங்களாக நாம் கற்ற கல்விகூட நமது ரத்தத்தை பரிசுத்தப்படுத்த முடியவில்லை; இந்தியாவில் நமது மனுஷ்யர்கள் ஒரு சுதேச ராஜாவை அல்லது ஒரு ஹிந்து அரண்மனையை கண்டார்களோ, இல்லையோ, உடனே 'அடடா! வழிப்பறி செய்ய எப்பேர்ப்பட்ட பேர்வழி! ஆஹா! கொள்ளையிட எப்பேர்ப்பட்ட இடம்!' என்று சொல்லாமலிருப்பதில்லை."

இரண்டாவது காரணம்: சிந்துவை கைப்பற்றினால், வடமேற்கு எல்லைப்புறத்திற்கு சிந்து நதி வழியாக ராணுவத்தைக் கொண்டு போகலாம்.

சர். சார்லஸ் நேப்பியர், அமீர்கள் குடும்பத்திலேயே சிலருக்கு லஞ்சம் கொடுத்து, தகராறுகளைக் கிளப்பி விட்டார். கடைசியில் அமீர்கள் பிரிட்டிஷாருடன் போரிட்டு தோல்வியடைந்தார்கள்.

"சிந்துவை கைப்பற்றுவது நியாயமாகாது. இருந்த போதிலும் நாம் அப்படிச் செய்தே தீருவோம். அந்த வேலையானது ஒண்ணும் நெம்பர் அயோக்கியத்தனமாகும்",

என்று சர். சார்லஸ் நேப்பியரே கூறியிருக்கிறார்.

1849-ம் வருஷம் பஞ்சாப், சீக்கிய ராஜாவிடமிருந்து பறிக்கப்பட்டது. சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்படும் முதல் இந்திய சுதந்திர யுத்தத்திற்கு முன் கிழக்கிந்திய கம்பெனியார், இந்திய ராஜாக்களின் ஸ்வீகார புத்திரர்கள் சிம்மாசனத்தில் ஏறுவதை அநுமதிக்க மறுத்து விட்டனர். ஹிந்து தர்மப்படி, ஒருவனுக்கு பிள்ளையில்லாவிடில், ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அவனுக்கு உரிமையுண்டு. அவனுடைய சொத்து, சிம்மாசனம் ஏறும் உரிமை அனைத்தும் ஸ்வீகாரப் புத்திரனையே சேரும். பிரிட்டிஷாரின் பேராசை, ஹிந்து ராஜாக்களின் இந்த சாதாரண உரிமையைக்கூட பறித்து விட்டது. புத்திர சந்தானமில்லாத ராஜாக்களின் சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது. இப்படி அபகரிக்கப்பட்டவை: சத்தாரா (1848), நாகபுரி (1853), ஜான்ஸி (1854), சம்பல்பூர், ஜெயப்பூர் (இரண்டும் 1849-ல் பறிக்கப்பட்டன), தஞ்சாவூர் (1855).

முதல் சுதந்திர யுத்தத்தின் பலன்

1857-ம் வருஷம் பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டுத் துரத்த நடந்த முதல் இந்திய சுதந்திர யுத்தத்திற்குப் பின், சர்க்கார் இந்த விதமாக அபகரிக்கும் கொள்கையை கைவிட்டனர். அந்த யுத்தத்தில் முக்கியமாக கலந்து கொண்டவர்கள்: (1) பிரிட்டிஷாரால் ஒடுக்கப்பட்ட மராட்டியர்கள்; (2) அபகரிக்கப்பட்ட சமஸ்தானங்களாகிய சத்தாரா நாகபுரி, ஜான்ஸி—இவைகளின் சமஸ்தானாதிபதிகள், (3) அயோத்தி ஹிந்துக்கள்.

ஜான்ஸி ராணியின் வீரப்பிரதாபம் சரித்திரப் பிரசித்தமானது.

"ஜான்ஸி ராணி, சுதந்தர வீரர்களுக்குத் தலைமை வகித்து, பிரிட்டிஷாரை யுத்த களத்தில் எதிர்த்தார். யூனிபாரத்துடன் குதிரை மீது சவாரி செய்து போரிடுகையில், குவாலியருக்கு சமீபத்தில் பிரிட்டிஷ் பட்டாளத்துக்கு இறையாகி, வீர சொர்க்கம் எய்தினாள். எங்களை எதிர்த்து போரிட்ட தலைவர்களில் மிகத் திறமையான, தைரியமானவர் ஜான்ஸி ராணிதான்,"

என்று போர்க்களத்திலிருந்த பிரிட்டிஷ் ஜெனரல் ஒருவனே கூறியிருக்கிறான்.

இந்த யுத்தத்திற்குப் பின், வாரிஸ் இல்லையென்றால் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம் என்ற உரிமையை பிரிட்டிஷ் சர்க்கார், சன்னதுகள் மூலம் இந்திய ராஜாக்களுக்கு அளித்தனர்.

சன்னது

"இப்பொழுது அவரவர்கள் சொந்த எல்லையில் ஆட்சி புரிந்து வரும் இந்திய சமஸ்தானாதிபதிகளின் சர்க்கார்களை சாசுவதமாக்க வேண்டுமென்றும், அவர்களுடைய வம்சங்களின் பிரதிநிதித்துவ உரிமையும், கௌரவமும் நீடித்திருக்க வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். இதன் மூலம் அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதால், சொந்த புத்திரர் இல்லாவிட்டால் நீங்களும், உங்களுக்குப்பின் உங்கள் சமஸ்தானத்திற்கு மன்னர்களாய் வருகிறவர்களும் இந்து மத சட்டப்படியும், வழக்கப்படியும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் புத்திரர் பட்டத்திற்கு உரியவர் என்பதை அங்கீகரித்து, ஊர்ஜிதம் செய்வோம் என்ற உறுதி மொழியை உங்களுக்கு அளிக்கிறேன். உங்கள் ராஜ வம்சம் பிரிட்டிஷ் மன்னரிடம் விசுவாசமாயிருக்கும் வரை, பிரிட்டிஷ் சர்க்காருக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளைக் கூறும் ஒப்பந்தங்களை கௌரவிக்கும் வரை இந்த சன்னது எந்த விதத்திலும் மீறப்படாதென நம்புங்கள்."

அத்தியாயம் 4

புதிய அதிகார ஆக்ரமிப்பு

1858-ல் இந்திய சுதந்திர இயக்கத்தை, இந்தியாவில் அண்டிப் பிழைக்க வந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி ஒடுக்கியவுடன், கம்பெனியைச் சேர்ந்த பிரதேசங்களின் நிர்வாகத்தை பிரிட்டிஷ் சர்க்காரே ஏற்றுக்கொண்டனர். 1858-வது வருஷ இந்திய சர்க்கார் சட்டத்தில் "வர்த்தகக் கம்பெனி செய்துகொண்ட ஒப்பந்தப் பொறுப்புகள் அனைத்தையும் சக்கரவர்த்தினி (விக்டோரியா) ஏற்றுக்கொண்டு விட்டார்" என்ற ஒரு ஷரத்தும் இருக்கிறது. சக்கரவர்த்தினியின் பிரகடனத்தில் இருப்பதாவது :

"கிழக்கிந்திய கம்பெனியார் இந்திய சுதேச மன்னர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள் அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஒப்பந்தங்களை பூர்ணமாக கௌரவிப்போம். மன்னர்களும் இப்படியே நடந்து கொள்ளுவார்களென எதிர்பார்க்கிறோம். இப்பொழுது எங்களுக்குள்ள பிரதேசங்களை விரிவாக்க நாங்கள் விரும்பவில்லை. எங்களுடைய எல்லை ஆக்ரமிக்கப் படுவதை அநுமதிக்க மாட்டோம். எங்கள் உரிமைகளுக்கு உலை வைக்கும் முயற்சியையும் சகியோம். இதரர்களுடைய எல்லையையோ, உரிமைகளையோ பறிக்க மாட்டோம். சுதேச மன்னர்களின் உரிமைகள், அந்தஸ்து, கௌரவம்—இவைகளை எங்களுடையதைப் போலவே மதிப்போம். அவர்களும், அவர்களுடைய பிரஜைகளும் உள்நாட்டு அமைதி, நல்ல ஆட்சி இவைகளினால் மாத்திரம் ஏற்படக்கூடிய சந்துஷ்டியையும், சமூக முன்னேற்றத்தையும் அனுபவிக்க வேண்டுமென விரும்புகிறோம்."

ராஜாக்களுக்கு பிள்ளையில்லாவிட்டால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்ற சன்னதம் அப்பொழுதுதான்

அளிக்கப்பட்டது. இந்த உரிமை மறுக்கப்பட்ட சமஸ்தானங்களிலெல்லாம் இருந்த பிரஜைகள் சுதந்திர யுத்தத்தில் கலந்து கொண்டதால், பிரிட்டிஷார் இதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டனர். மேலும் இந்த யுத்தத்தில் எல்லா இந்திய ராஜாக்களும் பிரிட்டிஷாரிடம் 'விசுவால' மாக இருந்தனர். இவர்களும் பிரிட்டிஷாரை எதிர்த்திருந்தால், இந்தியாவுக்கு அப்பொழுதே சுயராஜ்யம் கிடைத்திருக்கும். ஹைதராபாத் சர்க்கார் மாத்திரமாவது பிரஜைகள் பக்கம் சேர்ந்திருந்தால் போதும்; இந்திய முஸ்லிம்கள் அனைவரும் நிஜாமை பின்பற்றியிருப்பார்கள். **"அவர்கள் பக்கம் நிஜாம் சேர்ந்து விட்டால் எல்லாம் தொலைந்தது"** என்று பம்பாய் சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அனுப்பிய தந்தியிலிருந்து அப்பொழுதிருந்த நிலைமையை தெரிந்துகொள்ளலாம். ஹைதராபாத் மக்களும் சுதந்திர யுத்தத்தின் போது வீறிட்டெழுந்தார்கள். பச்சைக் கொடியை ஏந்தினர். பிரிட்டிஷ் ரெஸிடென்ஸி காரியாலயத்தை தாக்கினார்கள். ஆனால் அவர்கள், நிஜாமின் மந்திரியின் உதவியால் தூரத்தப்பட்டனர்.

டில்லியில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் சுதந்திர வீரர்களுக்கும் நடந்த சண்டையில் ஜிண்டு மகாராஜா பிரிட்டிஷ் பக்கம் நின்று போர் புரிந்தார்; அவருக்கு வெள்ளைக்கார எஜமானனிடம் இருந்த விசுவாசம் அவ்வளவு தூரம் கரை புரண்டு ஓடிற்று.

பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய நலனே உத்தேசித்தே இந்திய சமஸ்தானங்களை இனி அபகரிக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்தனர். இந்தியர்களின் சுதந்திர எழுச்சிகளை ஒடுக்க இந்த ராஜாக்களை உபயோகித்துக் கொள்ளலாமென்பதை கண்டு கொண்டனர்.

ஜோஸியம் பலித்தது

1825ம் வருஷத்திலேயே சர். ஜான் மால்கம் என்ற ஆங்கிலோ–இந்திய ராஜ தந்திரி ஒருவர் கூறியதாவது :

"கிழக்கே நமக்குள்ள பிரதேசங்களில் அமைதி நிலவ வேண்டுமானால், அந்த பிரதேசங்கள் நம்மிடமே இருக்க வேண்டுமானால், நமது பாதுகாப்பையே எதிர்பார்த்திருக்கும் சுதேச சமஸ்தானங்களே இப்பொழுதுள்ளபடியே விட்டுவிட வேண்டும். இந்த சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் பாதுகாப்பே கதி என்றிருக்கின்றன; நமது பிடிப்புக்கு பூர்ணமாக உட்பட்டிருக்கின்றன. அவைகளுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதால், நாம் எவ்வளவோ நன்மைகள் அடைந்து வருகிறோம். இது ஒரு புறமிருக்கட்டும். நமது ஆட்சியுடன் அவைகளும் இருக்கின்றனவே, அது ஒன்றே நமக்கு அரசியல் சக்தி ஊற்றாக இருக்கிறது. இது எவ்வளவு முக்கியமென்பதை இதை இழந்த பின்னர்தான் அறிய முடியும்."

இவருடைய கூற்றின் உண்மையை பிரிட்டிஷார் 1858ல் உணர்ந்தனர். பிரிட்டிஷ் சர்க்கார், கம்பெனியின் பொறுப்புகளே ஏற்றுக்கொண்டதோடு, முகலாய சக்ரவர்த்தியின் அதிகாரத்தையும்—அதாவது சக்கரவர்த்தி அக்பர், ஷாஜஹான் முதலியவர்கள், இதர இந்திய மன்னர்கள் மீது செலுத்தி வந்த அதிகாரத்தையும்—ஸ்வீகரித்துக் கொண்டது. டில்லி சிம்மாசனத்தில் கடைசியாக உட்கார்ந்த பகதூர் ஷா இறந்தவுடன், 1876ல் விக்டோரியா ராணி, இந்திய சக்கரவர்த்தினி என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டாள். அப்பொழுது டில்லியில் நடத்தப்பட்ட தர்பாருக்கு இந்திய சமஸ்தானாதிபதிகள் அனைவரும் நிர்ப்பந்தத்தின் பேரில் சென்றிருந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்காருடன் சம அந்தஸ்தில் இருப்பதாகச் சொல்லிக்

கொண்டிருந்த ராஜாக்களும் முணு முணுத்துக்கொண்டே போனார்கள்.

"பிரிட்டிஷ் சர்க்காரின் மேலதிகாரத்தின் கீழ் இந்தியாவில் உள்ள சமஸ்தானங்களெல்லாம் பிரிட்டிஷ் சர்க்காரின் நேரிடையான நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதேசங்களைப் போலவே கருதப்படும். இந்த பிரதேசங்களும், இந்திய ராஜாக்களின் பிரதேசங்களும் ஒரே பாதுகாப்பின் கீழ் (பிரிட்டிஷ் ஆட்சி), ஒரே அரசியல் முறையின் கீழ் வந்து விட்டன. இப்படிச் செய்ய வேண்டுமென முகலாய மன்னர்களோ, மராட்டிய ராஜாக்களோ நினைத்ததே கிடையாது. நாம் கிரியாம்சத்தில் காட்டி விட்டோம்," என்று லார்டு கானிங் 1860ம் வருஷம் சொன்னர்.

இந்திய ராஜாக்கள் தாங்களாக, உடன்படிக்கைகள் மூலம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விட்டுக் கொடுத்த உரிமைகள், அதிகாரங்களைத் தவிர வேறு புதிதாக எதையும் இழக்கத் தயாராக இல்லை. எனவே, பிரிட்டிஷ் சர்க்கார் தனக்குள்ள அந்தஸ்து, அரசியல் அதிகாரம் இவைகளை ஆதாரமாகக்கொண்டு, இந்திய சர்க்கார் சொல்படி சமஸ்தானங்கள் கேட்க வேண்டுமென ஒரு கொள்கையை நிர்ணயித்தனர்.

ஆதிபத்ய அதிகாரம் பிரிட்டிஷாரிடம் இருப்பதிலிருந்தே, அதன் சொல்படி இந்திய சமஸ்தானங்கள் கேட்கத்தான் வேண்டுமென்பதும், சமஸ்தானங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட பிரிட்டிஷ் சர்க்காருக்கு உரிமையிருப்பதும் தெளிவாகிறதென கூறப்பட்டது. எனவே கொள்கைப் பிரச்னைகளில் இந்திய சர்க்காரின் உத்தரவுகளுக்கு சமஸ்தானங்கள் பணிய வேண்டியதாயிற்று.

பாட்டியாலா சர்க்கார், ரயில்வே லயனில் தனக்குள்ள அதிகாரத்தை இழந்துவிட மறுத்தது. உடனே லெப்-

கவர்னர், பாட்டியாலா மகாராஜாவுக்கு பின்வருமாறு எழுதினார்:

"நீங்கள் கூறியதை கவனித்தோம். இந்தியா பூராவிலும் அமலுக்கு வரும் ஏகாதிபத்திய காரணங்களை யுத்தேசித்து, பாட்டியாலா மகாராஜா இந்திய சர்க்கார் சொல்கிறபடி கேட்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. எனவே ஒப்பந்தப் பிரதிகள் இரண்டிலும் கையெழுத்துப் போட்டு உடனே அனுப்பவும்."

1866ல் போபால் ராஜா, செலிடெண்டின் அதிகாரங்களை ஆட்சேபித்து அப்பீல் செய்தார். "அதைப்போல ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளுவீர்களென எதிர்பார்க்கப் படுகிறது" என்ற பதில் கிடைத்தது.

திருவாங்கூர் சர்க்காரின் சுங்க உரிமைகளில் ஆதிபத்ய சர்க்கார் தலையிடும் துறைமுக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட முடியாதென திருவாங்கூர் ராஜா கூறினார். உடனே செலிடெண்ட், "பிடிவாதம் வேண்டாம், கையெழுத்துப் போடுங்கள்" என்று ராஜாவுக்கு யோசனை கூறினார். இந்திய ராஜாக்களுடன் ஆதிபத்திய சர்க்கார் உபயோகிக்கும் பாஷைகளில் 'யோசனை' என்பதற்கு கட்டளை என்று அர்த்தம் என சமஸ்தான விஷயங்களை நன்கறிந்த ஸ்ரீ. (இப்பொழுது சர்தார்) கே. எம். பணிக்கர் கூறுகிறார்.

நிஜாமுக்கு ரீடிங் கடிதம்

1926-ம் வருஷம் மார்ச்சு மாதம் 22ந் தேதி வைசிராய் லார்டு ரீடிங், ஹைதராபாத் நிஜாமுக்கு எழுதியுள்ள கடிதத்தில், சமஸ்தானங்களுக்கும் ஆதிபத்ய சர்க்காருக்கு மூள்ள உறவை தெளிவாக்கி யிருக்கிறார். அது பின் வருமாறு:

"இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னருக்கு மேற்பட்ட அதிகாரமில்லை. இந்த மேலதிகாரம், ஒப்பந்தங்கள், சன்னதுகளை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டில்லை. இவைகள் இல்லையென்று வைத்துக்கொண்டால்கூட அந்த அதிகாரம் ஆதிபத்ய சர்க்காருக்கு உண்டு. உடன்படிக்கைகளையும், சன்னதுகளையும் கௌரவிக்க வேண்டியது பிரிட்டிஷ் சர்க்காரின் கடமைதான். இதோடு இந்தியா பூராவிலும் சமாதானமும், அமைதியும் நிலவுமாறு பார்த்துக்கொள்ள வேண்டியதும் பிரிட்டிஷ் சர்க்காரின் பொறுப்பாயிருக்கிறது. பிரிட்டிஷ் மன்னர் அங்கீகரிக்காத யாரும் ஹைதராபாத் சிம்மாசனத்தில் ஏறமுடியாது. அடுத்த நிஜாம் யார் என்பதுபற்றி தகராறு கிளம்பினால், பிரிட்டிஷ் சர்க்காரின் மத்தியஸ்தமே இறுதியான முடிவாகும்.

"சமஸ்தான உள்நாட்டு விவகாரங்களில் தலையிட பிரிட்டிஷ் சர்க்காருக்குள்ள அதிகாரம் ஒன்றே, பிரிட்டிஷ் சர்க்காரின் மேலதிகாரத்தை நன்கு விளக்குகிறது.

"சமஸ்தானத்திற்கு வெளியிலிருந்து அல்லது உள்ளிருந்து ராஜாக்களை சிம்மாசனத்தை விட்டுத் துரத்த யாரும் முன்வராமலிருக்கிறார்கள். இதற்கு பிரிட்டிஷ் சர்க்காரின் பாதுகாப்பு அதிகாரமே காரணம். சமஸ்தான சர்க்காரின் நடவடிக்கைகளால் ஏகாதிபத்திய நலன்கள் பாதிக்கப்பட்டாலும் சரி, சமஸ்தான பிரஜைகளின் யோகக்ஷேமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டாலும் சரி, பரிகார நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்பு ஆதிபத்ய சர்க்காரிடம்தான் இருக்கிறது, பல சமஸ்தானாதிபதிகள் அனுபவித்து வரும் பலதரப்பட்ட ராஜ்யாதிகாரங்களும் ஆதிபத்ய சர்க்காரின் அதிகாரத்துக்குட்பட்டதாகும்.

"சமஸ்தானங்களுக்குள் எழும் தகராறுகளையும் அல்லது தனக்கும் ஒரு சமஸ்தானத்திற்கு மேற்படும் தகராறுகளையும் தீர்த்து முடிவு கூறவேண்டியது ஆதிபத்ய சர்க்காருக்குள்ள உரிமையாகும். சில விவகாரங்களில் மத்யஸ்த கோர்ட்டு நியமிக்கப்பட்டால் கூட, அந்த கோர்ட்டின் தீர்ப்பு வெறும் சிபார்சாகவே கரு

தப்படும். இறுதியான முடிவு கூறும் உரிமை இந்திய சர்க்காருக்கே உண்டு.''

ஆதிபத்ய சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும், அந்த சர்க்காரின் அதிகாரம் எவ்வளவு தூரம் வியாபித்த தென்பதையும் கவனிப்போம்.

மைசூரில் பிரிட்டிஷ் ஆட்சி

1831ல் (ஆதிபத்ய அதிகாரம் கிழக்கிந்திய கம்பெனியிட மிருந்தபோது) மைசூரில் பிரிட்டிஷாரே நிர்வாகத்தை நேரில் கவனித்தனர். இந்த சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் இருந்ததால் ராஜாவின் நிர்வாக மதிப்பு குறைந்து விட்டது. உள்நாட்டில் கலகம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் துருப்புகள் கலகத்தை அடக்கியது. மகாராஜா சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டார். மைசூரை நிர்வகிக்கும் பொறுப்பை பிரிட்டிஷ் அதிகாரிகளே ஏற்றனர். 1880ல் இந்த ராஜ்யம் மீண்டும் மைசூர் ராஜ வம்சத்திடம் சேர்க்கப்பட்டது. மோசமான ஆட்சியிருந்தால் பிரிட்டிஷ் சர்க்கார் மீண்டும் தலையிட்டு, நிர்வாகத்தை மறுபடியும் கவனிக்க வேண்டி நேரிடும் என்று லார்டு வெல்லஸ்லி எச்சரிக்கை செய்தார்.

பரோடா சமஸ்தானத்துடன் கம்பெனியார் 1802ம் வருஷம் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைப்படி, அந்த சமஸ்தான பிரஜைகளின் நலனை உத்தேசித்து கம்பெனியார் கூறும் யோசனைக்கு பரோடா ராஜா செவி சாய்க்க வேண்டும். மல்ஹாரி ராவ் கெய்க்வார் ஆண்டு வருகையில், சமஸ்தானத்தில் மோசமான ஆட்சியும் அரண்மனை சூழ்ச்சிகளும் இருந்தன என்ற காரணத்தினால் இந்திய சர்க்கார் ஒரு விசாரணைக் கோர்ட்டை நியமித்தனர். இதன்

விளைவாக கெய்க்வார் எச்சரிக்கப்பட்டார். இரண்டு வருஷங்களுக்குப் பின் அங்கிருந்த பிரிட்டிஷ் ஏஜெண்டுக்கு விஷத்தைக் கொடுக்க முயற்சித்ததாக கெய்க்வார் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. கெய்க்வார் கைது செய்யப் பட்டு, ஒரு விசேஷ கோர்ட்டால் விசாரிக்கப்பட்டார். பிரிட்டிஷ் அதிகாரிகள், ஒரு இந்திய மன்னர், ஒரு சமஸ் தானத்தின் உயர்தர அதிகாரி (சர். தினகர ராவ்) முதலி யோர் ஜட்ஜுகளாக நியமிக்கப்பட்டனர். இதில் சில ஜட்ஜுகள், 'எதிரி குற்றவாளி' யென்றும், வேறு சிலர் 'எதிரி குற்றவாளியல்ல' வென்றும் கூறினர். கெய்க்வார் ராஜ் யாதிகாரத்திலிருந்து தள்ளப்பட்டார். இவர் குற்றவாளி யென நிரூபிக்கப்படாமலிருக்கையில் இவர் மீது இப்படி நட வடிக்கை எடுத்தது சொம்பவும் அநியாயமென்பதில் சந் தேகமில்லை. மேலும் அந்த கெய்க்வாரின் புத்திரர்கள் பட்டத்திற்கு வரும் உரிமையும் பறிமுதல் செய்யப் பட்டது.

நாபா—பாட்டியாலா தகராறு

நாபா மகாராஜா, "விசுவாசமில்லாமல் நடந்து கொண்டதாலும், ராஜத்துவேஷ* காரியங்களுக்கு உடந்

---

*ஸ்ரீ. பால கங்காதர திலகர் மீது தொடரப்பட்ட வழக்கை 1897-ம் வருஷம் விசாரித்த ஜஸ்டிஸ் ஸ்ட்ராஷி, ஜூரிகளுக்கு வழக்கை எடுத்துக் கூறுகையில், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சர்க் காருக்கு பாதகமாக நடைபெறும் சரித்திர சம்பந்தமான விவாதங் களின் மீது ஜூரிகளுக்கு வெறுப்பு உண்டாகும்படிச் செய்தார். திலகர் மீது தொடரப்பட்ட வழக்கின் விளைவாக, ராஜத்துவேஷ சட்டம் இயற்றப்பட்டது. "இந்த சட்டம், ஒரு இந்தியன் உண் மையைப் பேசினால் அதை குற்றமாக பாவிக்கிறது" என்று இந்திய சரித்திராசிரியரான மேஜர் பி. டி. பாசு கூறுகிறார்.

தையாக இருந்ததாலும்" 1922ல் பட்டத்தை துறக்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டார். இவர் பாட்டியாலா மகாராஜாவை எதிர்த்து பத்திரிகைகள் மூலமாக இயக்கம் நடத்தியதாகவும், தன்னுடைய ஏஜெண்டுகளே பாட்டியாலாவுக்கு அனுப்பி, அங்கு ராஜத்துவேஷமான வேலைகளில் ஈடுபடும்படி செய்ததாகவும் பிரிட்டிஷார் கூறினர். நாபா மகாராஜா 1928ல் பலவந்தமாக கொடைக்கானலுக்கு கொண்டு போகப்பட்டு, அங்கு பல தடைகளின் கீழ் வைக்கப்பட்டார்.

போபாலில் ஆட்சி புரிந்துவந்த நவாப் பீகத்தின் கணவன் சமஸ்தான விவகாரங்களில் தலையிடுகிறார் என்று பிரிட்டிஷ் ஏஜெண்டு சர். கிரிப்பத் புகார் செய்ததின் பேரில், இந்திய சர்க்காரால் நியமிக்கப்படும் ஒரு மந்திரியை ஏற்றுக்கொள்ளுமாறு நவாப் பீகம் நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்த மந்திரியிடம் பூர்ண அதிகாரமும் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் இந்திய சர்க்கார் கோரினர்.

காஷ்மீர் மன்னராகிய பிரதாப் சிங்ஜி ரஷ்யாவுடன் கடிதப் போக்கு வரத்து செய்து வருகிறாரென்ற சால்ஜாப்பின் பேரிலும், லஞ்சம் வாங்கும் அதிகாரிகள் சொல்லுகிறபடி கேட்கிறாரென்ற காரணத்திற்காகவும் அவரிடமிருந்து ராஜ்யாதிகாரங்கள் பறிக்கப்பட்டன. ரஷ்யாவுடன் அவருக்கு எவ்வித சம்பந்தமுமில்லை யென்பது உடனே நிரூபிக்கப்பட்ட போதிலும், பிரிட்டிஷார் செவி சாய்க்கவில்லை. 1899ல் ரெஸிடெண்ட், காஷ்மீருக்கு ஒரு நிர்வாக கவுன்சிலை நியமித்தார். இக் கவுன்சில், ரெஸிடெண்டின் உத்திரவுப்படி நடக்க வேண்டும்.

ஹைதராபாத் நிஜாம், அவருடைய நிர்வாக கவுன்சிலில் சில ஐரோப்பிய அதிகாரிகளையும், வைசிராய் அங்கீ

கரிக்கும் ஒருவரை நிர்வாக கவுன்சில் தலைவராகவும் (பிரதம மந்திரியாக) நியமிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

மணிப்பூர் கலகம்

மணிப்பூர் மகாராஜா சர் சந்திர சிங் 1890ம் வருஷம் சமஸ்தானத்திலிருந்து ஓடிவிட்டார். அவருடைய இளைய சகோதரனுகிய சேனுபதி அரண்மனையையும், ஆயுதச் சாலையையும் கைப்பற்றிக்கொண்டு, மகாராஜா திரும்பி வருவதை எதிர்த்தார். உள்நாட்டுப் புரட்சியின்போது தலை நகரிலில்லாத யுவராஜா, மணிப்பூர் நகருக்குத் திரும்பி சேனுபதியின் உதவியால் சிம்மாசனமேறினர். பிரிட்டிஷ் எல்லைக்கு பயந்து ஓடிய மகாராஜா, தனக்கு பட்டத்தை மீட்டுத் தருமாறு பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டார். உடன் படிக்கைப்படி பார்த்தால், இந்த மகாராஜாவுக்கு உதவி செய்து, அவரை சிம்மாசனத்தில் வைக்க வேண்டியது பிரிட்டிஷ் சர்க்காரின் கடமையாகும். ஆனல் சர் சந்திர சிங் ஆட்சி புரிய அருகதையற்றவர்; நாட்டைவிட்டு ஓடிவந்திருக்கிறார்; மணிப்பூர் வாசிகளின் நலனை உத்தேசித்தே இவரை சிம்மாசனத்தில் வைக்கக்கூடாது என்று பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்தனர். எனவே யுவராஜாவையே மகாராஜாவாக அங்கீகரிப்பதென தீர்மானித்தனர். ஆனல், உள்நாட்டுக் கலகத்திற்குக் காரணை புருஷனுயிருந்த சேனுபதியின் மீது நடவடிக்கை எடுத்துத்தானுக வேண்டும்; அவனை மணிப்பூரிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்கார், யுவராஜாவுக்கு உத்திரவிட்டனர். இந்த உத்தரவு அமுலுக்கு வருமாறு செய்ய அஸாம் பிரதம கமிஷனர் 1891ல் ஒரு சில சோல்ஜர்களுடன் மணிப்பூர் சென்றார். ஆனல் சேனுபதி, யுவராஜா இருவரும்

பிரதம கமிஷனரின் கோஷ்டியை எதிர்த்து, அதிலிருந்த அதிகாரிகளே கொலை செய்தனர். இக்கொலையில் சம்பந்தப் பட்டிருந்த தலைவர்களெல்லாம் விசாரிக்கப்பட்டு, தண்டிக்கப் பட்டார்கள். யுவராஜாவுக்கு தூக்கு தண்டனை கிடைத்தது 1891 ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 13ந் தேதி பிரிட்டிஷ் சர்க்காரின் பிரகடனம் ஒன்று மணிப்பூரில் வெளியிடப்பட் டது. அது பின்வருமாறு :

" தெகன்ராஜித்பீர் சிங் என்ற மணிப்பூர் யுவராஜா ஜூன் மாதம் ஒரு விசேஷ கோர்ட்டால் விசாரிக்கப்பட்டு, இந்திய சக்கர வர்த்தினியை எதிர்த்து யுத்தம் செய்த குற்றத்திற்காகவும், பிரிட் டிஷ் அதிகாரிகளின் கொலைகளுக்கு உடந்தையாக இருந்ததற்காக வும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டார். இந்த தண்டனை இந் திய சர்க்காரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது, தண்டனை நிறை வேற்றப்படும்.

" கலகம், கொலை செய்த நபர்கள் தண்டிக்கப்பட்டிருப்பதை மணிப்பூர் பிரஜைகள் ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும்."

இந்த பிரகடனத்தின்படி யுவராஜா தூக்கிலிடப் பட்டார்.

ரெஸிடெண்ட்—நிஜாம் தகராறு

1804ல் ஹைதராபாத் பிரதம மந்திரி அஜிமுல் ஹம்ரா என்பவர் காலமானார். காலியான ஸ்தானத்துக்கு மீர் ஆலம் என்பவரை நியமிக்குமாறு ரெஸிடெண்ட் வற் புறுத்தினார். மீர் ஆலம் பிரிட்டிஷார் பக்கம் பேசுகிற வர் என்பதை சொல்லத் தேவையில்லை. நிஜாமிடம் பிரிட்டிஷாருக்கு நம்பிக்கையில்லாததால், பிரிட்டிஷாரிடம் விசுவாசமுள்ள ஒருவரை மந்திரியாக்கினால்தான் சமஸ்

தானத்திலிருந்து கிழக்கிந்திய கம்பெனிக்கு எல்லா சலுகை களும் கிடைக்குமென்று ரெஸிடெண்ட் நினைத்தார். மீர் ஆலம் பிரதம மந்திரியானர். ஆனல் அவருக்கு தர் பாரில் ஏக எதிர்ப்பு. அவர் நடவடிக்கைகளை இதர பிர முகர்கள் ஆதரிக்கவில்லை. மீர் ஆலம் பயந்துபோய், நகரத் திலிருந்து ஓடி, ரெஸிடெண்டுடன் வசித்தார். உடனே ரெஸிடெண்ட், நிஜாமை சந்தித்து, எதிர்க் கக்ஷித் தலைவர் கள் அனைவரையும் தர்பாரிலிருந்து டிஸ்மிஸ் செய்ய வேண்டு மென கோரினர். நிஜாம் என்ன செய்வார்? சரி என்று பணிந்தார். பின்னர் மீர் ஆலம் நகருக்குத் திரும்பி மீண்டும் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

கொச்சியில் திவானயிருந்த சங்கர வாரியர் பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் சொல்லுகிறபடி ஆடிக்கொண்டிருந்தார். இவர் திவானகு முன் ரெஸிடெண்டின் குமாஸ்தாவா யிருந்தவர். ராஜாவுக்கு எதிராக பிரிட்டிஷார் தலையிட வேண்டுமென்று இவர் கோரியிருப்பதிலிருந்து இவ ருடைய யோக்கியதையை தெரிந்துகொள்ளலாம்.

ரெஸிடெண்டுகள் மன்னர்களுக்கு யோசனை கூற வேண்டும். ஆனல் நடைமுறையில் இவர்கள் மன்னர் களின் எஜமானர்களாகவே இருந்து வருகிறார்களென்று அறிஞர் செய்லி கூறுகிறார். இப்பொழுதும் அதே நிலைமை தான் என்பதை ராஜ்கோட் விவகாரங்கள் நிரூபிக்கின்றன. இதை வேறு அத்தியாயத்தில் கவனிப்போம்.

1875ல் எட்வர்ட் மன்னர் (வேல்ஸ் இளவரசரா யிருந்தபோது) இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்கை யில் இந்திய ராஜாக்களின் பரிதாப நிலைமையைப்பற்றி கொம்ப இரக்கப்பட்டார். இவர் விக்டோரியா ராணிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "இங்கிலீஷ் அரசியல் அதி

காரிகளெல்லாம் (ரெஸிடென்ட், அரசியல் ஏஜெண்டுகள்) இந்திய ராஜாக்களே காட்டுமிராண்டித்தனமாக, மூர்க்கத்தனமாக நடத்துவதைக் கண்டு பிரமித்து விட்டேன். இந்த நடத்தை சொம்பவும் வருந்தத்தக்கது. இது தவறான முறையென்பதில் கொஞ்சம்கூட சந்தேகமில்லை.'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர் ஒப்பந்தம்

ஆதிபத்ய சர்க்காரைக் கலந்து கொள்ளாமல் முக்கிய சட்டங்களே இயற்றக்கூடாதென, சில சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்குமுள்ள ஒப்பந்தங்கள் கூறுகின்றன. மைசூருடன் செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தில், ஆதிபத்ய சர்க்காரின் சம்மதத்தின் பேரில்தான் ராஜா எந்த சீர்திருத்தத்தையும் அளிக்கலாமென்றிருக்கிறது.

கொச்சியில் சமஸ்தான சர்க்கார் தயாரித்த மத, தர்ம சொத்து பரிபாலன மசோதாவை ஆதிபத்ய சர்க்கார் அங்கீகரிக்காததால் அந்த மசோதா கைவிடப்பட்டது.

1877ல் பன்ஸ்டா ராஜா மைனராயிருந்தார். அப்பொழுது கவர்னர்—ஜெனரலின் ஏஜெண்ட், பன்ஸ்டா ராஜாவின் ''உரிமைகளின் பாதுகாப்பாளர்'' என்ற ஹோதாவில் ஒரு குறிப்பிட்ட கிராமத்தை விற்று விடுமாறு உத்திரவிட்டார்.

அத்தியாயம் 5

பிரிட்டிஷ் உரிமைகள்

சர்வதேச விவகாரங்களில் சமஸ்தானங்களுக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது. வெளி நாடுகளுடன் கடிதப் போக்கு வரத்துகள் செய்யவோ, உடன்படிக்கைகள் செய்துகொள்ளவோ உரிமை கிடையாது. இதர தேச விஷயங்களில் பிரிட்டிஷ் இந்தியர்களின் நிலைமையும், சமஸ்தான மக்களின் நிலைமையும், ஒரே மாதிரியானது. சர்வதேச சங்கத்திற்கு பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தானங்கள் இரண்டின் சார்பாகவும் பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதிகளே நியமிக்கிறார்கள். வெளி நாடுகளிலுள்ள அல்லது வெளி நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும் சமஸ்தான பிரஜைகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது பிரிட்டிஷ் சர்க்காரின் கடமையாகும். இந்திய சமஸ்தானங்களில் வசிக்கும் அந்நியர்களின் உயிரையும், சொத்தையும் பாதுகாப்பதும் பிரிட்டிஷ் சர்க்காரின் பொறுப்பாகும். ஒரு சமஸ்தானம் பிரிட்டிஷ் சர்க்காரின் சம்மதமின்றி தன்னுடைய எல்லையை இன்னொரு சமஸ்தானத்திற்கு விற்கவோ, மாற்றிக்கொள்ளவோ கூடாது. சமஸ்தானங்களுக்குள்ள தகராறுகள் ஆதிபத்திய சர்க்காரின் (பிரிட்டிஷ்) அங்கீகாரத்தின் பேரிலேயே சமரசமாகத் தீரவேண்டும்.

பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தானங்கள் இரண்டையும் பாதுகாக்கும் பொறுப்பு ஆதிபத்ய சர்க்காரைச் சேர்ந்தது.

திருவாங்கூரும், கொச்சியும் ஆதிபத்ய சர்க்காரிடமிருந்து ராணுவ உதவி பெற்றிருக்கின்றன. கொச்சியை

ஹைதராலி கைப்பற்றி, கொஞ்ச காலத்திற்கு ஆண்டு வந்தான். ஆனல் மூன்றுவது மைசூர் யுத்தம் முடிந்தபின், கொச்சி, திப்பு சுல்தானிடமிருந்து கிழக்கிந்திய கம்பெனிக்கு மாறிற்று. கொச்சி ராஜா மீண்டும் சிம்மாசனமேறினர். 4, 5 வருஷங்களுக்குள் அங்கு கொந்தளிப்பு ஏற்படவே அமைதியை நிலைநாட்ட கம்பெனியார் அங்கு ஒரு பட்டாளத்தை அனுப்பினர். இந்த துருப்புகளுக்கு ஆன செலவை ராஜா ஏற்றுக்கொண்டார்.

திருவாங்கூரும் மைசூர் சுல்தானிடமிருந்து மீட்கப் பட்டது. 1795-ல் திருவாங்கூர் ராஜா மூன்று சிப்பாய் பட்டாளங்களுக்காகும் செலவைத் தருவதாகவும், ஒரு ஐரோப்பிய பட்டாளத்தையும், இரண்டு குதிரைப் படைகளையும் வைத்துக்கொள்ளுவதாகவும் வாக்களித்தார். 1805-ல் இந்த ராணுவம் அதிகரிக்கப்பட்டது. அங்குள்ள துருப்புகளின் செலவுக்காக திருவாங்கூர் மன்னர் வருஷா வருஷம் ரூ. 8 லக்ஷம் தர ஒப்புக்கொண்டார்.

பிரிட்டிஷார் எப்படி சமஸ்தானுதிபதிகளுக்கு ராணுவ உதவி யளிக்கிறார்களோ அதைப்போலவே சமஸ்தானுதிபதிகளும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு வேண்டிய சமயத்தில் உதவி புரிய வேண்டும். இரண்டுக்கும் ஒரே ஒரு முக்கிய மான வித்யாசமிருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்கார் செய்யும் உதவிக்காக சமஸ்தானங்கள் பணம் கொடுக்க வேண்டும். ஆனல், சமஸ்தானுதிபதிகள் அவர்களுடைய ராணுவத்தை பிரிட்டிஷாரின் உதவிக்கு அனுப்பினல், ஆதிபத்ய சர்க்கார் கொஞ்சம்கூட பணம் தர மாட்டார்கள். "நீ அவல் கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன். இரண்டு பேரும் ஊதி ஊதி சாப்பிடலாம்" என்கிறதைப் போலத் தான் இதுவும்.

ஏகாதிபத்திய சேவைத் துருப்புகள்

இந்தியாவின் பொது பாதுகாப்புக்காக சமஸ்தானாதிபதிகளிடம் திறமையான ராணுவம் இருக்க வேண்டுமென்பதற்காக 1888ம் வருஷம் கவர்னர்–ஜெனரல் டப்ரின் ஒரு திட்டத்தை வகுத்தார். அதன்படி இந்தியாவில் "ஏகாதிபத்திய சேவைத் துருப்புகள்" நிறுவப்பட்டது. இதில் அப்பொழுது 22,000 சோல்ஜர்கள் இருந்தார்கள். இந்த 22,000 பேர்களும் கீழ்க்காணும் 27 சமஸ்தானக்களால் போஷிக்கப்பட்டார்கள்: ஹைதராபாத், காஷ்மீர், பாட்டியாலா, நாபா, ஜிண்டு, கபூர்தாலா, பஹவல்பூர், பரீட்கோட், இந்தூர், ஆல்வார், ஜோத்பூர், பாரத்பூர், பிக்கானீர், ஜெயப்பூர், குவாலியர், ராம்பூர், மைசூர், போப்பால், பவநகர், ஜூனகர், நவநகர், இதார், ஜிஞ்சிரா, கெயிர்பூர், மாலர்கோட்லா, சிர்மூர், தேரி.

இப்பொழுது இந்திய சமஸ்தானாதிபதிகளிட முள்ள மொத்த ராணுவம்: சாதாரண துருப்புகள் 1,61,000; ஏகாதிபத்திய சேவைத் துருப்புகள்: 22,000; ஆயுதந்தாங்கிய போலீஸ் 47,000. மொத்தம் 2,30,000. ஏகாதிபத்திய சேவைத் துருப்புகள் (இப்பொழுது இந்திய சமஸ்தானப் படைகள் என்று அழைக்கப்படுகிறது) ஆப்கன் யுத்தத்திலும், சென்ற மகா யுத்தத்திலும் பல முனைகளில் மிகத் திறமையாக போராடின. மகா யுத்தத்திற்குப்பின் இந்த துருப்புகளின் எண்ணிக்கை 50,000க்கு உயர்த்தப்பட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் யுத்தத்தில் ஈடுபட்டால் இந்திய சமஸ்தானங்கள் தங்களுடைய சாதனங்கள் பூராவையும் ஆதிபத்திய சர்க்காருக்கு கேட்ட மாத்திரத்திலேயே அளிக்க வேண்டுமென ஒப்பந்தங்கள் கூறுகின்றன.

மகா யுத்தத்தில் இந்திய ராஜாக்கள்

சென்ற மகாயுத்தத்தின்போது இந்திய சமஸ்தானாதிபதிகள் பிரிட்டனுக்கு எல்லா விதத்திலும் உதவி செய்தனர். கீழ்க்காணும் ராஜாக்கள் போர் முனைக்கே சென்று பிரிட்டிஷாரின் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டார்கள்.

(1) பிக்கானீர் மகாராஜா, (2) ஜோத்பூர் மகாராஜா, (3) இதார் மகாராஜா, (4) கிஷன்கார் மகாராஜாதிராஜா. (5) நவாகர் ஜாம்சாகிப், (6) பர்வானி ராணு, (7) ரத்லம் ராஜா, (8) பரியா ராஜா, (9) ராஜகோட் தாகூர் சாகிப் (இப்பொழுது தாகூராக இருப்பவரின் தகப்பனார்), (10) சச்சின் நவாப், (11) வங்கனீர் ராஜா சாகிப், (12) அகல்கோட் ராஜா சாகிப், (13) ஜாம்கண்டி ராஜா, (14) சானூர் நவாப், (15) லோஹாரு நவாப்.

இவர்களைத் தவிர இன்னும் பல்வேறு ராஜ குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பிரிட்டிஷார் சார்பாக போரிட்டனர். போர்க்களத்திற்கு நேராக செல்ல முடியாத ராஜாக்களும், சென்ற ராஜாக்களும் தங்களிடமிருந்த 'படைகளை' பிரிட்டிஷாரின் உதவிக்கு அனுப்பினர்கள். பண உதவியும் செய்தார்கள். ஹைதராபாத் நிஜாம் ரூ. 60 லக்ஷமும், மைசூர் மகாராஜா ரூ. 50 லக்ஷமும் தந்தனர்.

1938ல் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பமாகும்போல் தோன்றியபோதுகூட, இந்திய ராஜாக்களுக்கு பிரிட்டிஷ் மன்னரிடம் உள்ள விசுவாசம் கரை புரண்டு ஓடிற்று. யுத்தம் வந்தால் தங்களிடமுள்ள ஆள் பலத்தையும், பணம் இன்னும் இதர சாதனங்களையும் பிரிட்டிஷாரின் உபயோகத்திற்காக தருவதாக வைசிராய்க்கு தந்தி மேல் தந்தி அடித்தார்கள். இந்த ராஜாக்கள் தங்களுடைய சமஸ்

தானத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமானால், பிரிட்டிஷ் பட்டாளத்தின் உதவியை நாடவேண்டியிருக்கிறது. இப்போர்ப்பட்ட சேர்வழிகள் பிறருக்கு; அதுவும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ராணுவ உதவி செய்வதாக முன் வருவது வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கிறது.

இந்திய ராஜாக்கள் தங்களுடைய சமஸ்தானங்களில் கோட்டை கட்டிக்கொள்ள உரிமை கிடையாது.

மைசூர் மகாராஜாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு உத்தரவில் இருப்பதாவது :

"கவர்னர்-ஜெனரலின் அநுமதியின்றி நீங்கள் (1) புது கோட்டைகளை கட்டக்கூடாது ; (2) ஆயுதங்கள், வெடி மருந்துகள், ராணுவ சாமான்கள்—இவைகள் இறக்குமதியாக அநுமதிக்கக் கூடாது ; (3) உங்கள் சமஸ்தானத்தில் ஆயுதங்கள், வெடி மருந்துகள், ராணுவ சாமான்கள் உற்பத்தி செய்வதின் மீது தடை விதிக்க வேண்டும்."

இந்த நிபந்தனைகள் எல்லா சமஸ்தானங்களிலும் அமுலிலிருந்து வருகின்றன.

ஆகிபத்திய சர்க்கார் நிர்ணயிக்கிற அளவுக்குத்தான் சமஸ்தானங்களில் ராணுவ பலம் இருக்க வேண்டும். ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும் எப்போர்ப்பட்ட ரகத்தைச் சேர்ந்த, எவ்வளவு ஆயுதங்கள் தேவை என்று பிரிட்டிஷ் ஏஜெண்ட் தெரிவிக்கிறாரோ, அவ்வளவு மாத்திரம்தான் பிரிட்டிஷ் சர்க்காரால் சப்ளை செய்யப்படும்.

ரயில்வேக்கள், தந்தி, தபால் போக்கு வரத்துகள்

ரயில்வேக்கள், தந்தி, தபால் போக்கு வரத்துகள்—இவைகள் பொது தற்காப்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ரயில்வேக்களுக்காக பிரிட்டிஷ் சர்க்கார் கேட்



கும் பிரதேசங்களை யெல்லாம் ராஜாக்களிடம் தந்துவிட வேண்டும். ரயில்வேக்களை உள்ள இடம் பிரிட்டிஷ் பிரதேசமாகவே இருந்துவரும். சமஸ்தானத்திலுள்ள அதிகாரம் அங்கு செல்லாது. அங்கு நீதி, நிர்வாகத்தை கவனிக்கும் பொறுப்பெல்லாம் பிரிட்டிஷ் கொள்கைகளைச் சேர்ந்தது. (கண்டோன்மெண்ட் பிரதேசங்களும் இதைப்போலவே நிர்வகிக்கப்படுகின்றன.) அதைத்தவிர்ந்து எந்த சமஸ்தானமும் ரயில்வேக்களை போடக்கூடாது. தந்தி ஆபீஸ்களெல்லாம் இந்திய சர்க்கார் இலாகாவால், சமஸ்தானங்கள் உள்பட இந்தியா பூராவும் கட்டப்பட்டிருக்கின்றன. சமஸ்தானங்களிலுள்ள தந்தி ஆபீஸ்களெல்லாம் இந்திய சர்க்கார் அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்படுகிறது; மேற்பார்வையிடப்படுகிறது. காஷ்மீரில் மாத்திரம் சமஸ்தான சர்க்காரே தந்தி ஆபீசை நடத்தி வருகிறார்கள். அங்குள்ள தந்திக் கம்பிகளும், சமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள தந்திக் கம்பிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சமஸ்தானங்களில் சமஸ்தான சர்க்காரே தந்தி, டெலிபோன் இலாகாக்களை ஆரம்பிக்கலாம். சமீபத்தில் தான் இந்த உரிமை அளிக்கப்பட்டது.

பெரிய சமஸ்தானங்களாகிய ஹைதராபாத், திருவாங்கூர் போன்றவைகளில் சமஸ்தான சர்க்கார்களே தபால் போக்கு வரத்தை கவனித்து வருகிறார்கள். அநேக சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் தபால் ஏற்பாடே இருந்து வருகிறது. குவாலியர், ஜிண்டு, நாபா, பாட்டியாலா—இந்த நான்கு சமஸ்தானங்களிலும் தபால் ஒப்பந்தப்படி ஒரு விசேஷ பரிவர்த்தனை ஏற்பாடு அமுலிலிருந்து வருகிறது. இந்த சமஸ்தானங்களில், கண்டோன்மெண்டுகளிலும், ரயில்வே பிரதேசங்களிலும் மாத்திரம்தான் பிரிட்டிஷ்

போஸ்டாபீஸ்கள் இருக்கின்றன. சமஸ்தான போஸ்டா பீஸில் போடப்படும் தபால்களெல்லாம் இந்தியா பூராவுக் கும் கொண்டு போகப்படுகின்றன. இந்த போஸ்டாபீஸ் கள் பிரிட்டிஷ் இந்திய ஸ்டாம்புகளையே உபயோகிக்க வேண்டும். ஸ்டாம்புகளில் சமஸ்தானங்களின் பெயர் அச்சிடப்பட்டிருக்கும்.

ஐரோப்பியர்கள் மீது வழக்கு

சமஸ்தானங்களில் குற்றமிழைக்கும் ஐரோப்பியர்களை விசாரிக்க சமஸ்தான கோர்ட்டுகளுக்கு உரிமை கிடையாது. 1861-ம் வருஷம் ஜூலை மாதம் 10-ந் தேதி ஹைதராபாத் நிஜாம் ஆதிபத்திய சர்க்காருக்கு பின்கண்டவாறு எழுதிக் கொடுத்திருக்கிறார் :—

"நமது சமஸ்தானத்தில் அநேக ஐரோப்பியர்களும், அங்கியர் களும் அவர்களுடைய சந்ததிகளும் வசித்து வருவதாலும், அவர் களுக்குள்ளேயும், அவர்களுக்கும் நமது சமஸ்தான மக்களுக்கும் தகராறுகள் வருவதாலும், மேலே கூறப்பட்ட வகுப்பினருக்குள் இந்த சமஸ்தானத்தில் தகராறுகள் ஏற்பட்டால், அந்த தகராறு களை விசாரித்து, குற்றவாளிகளை தண்டிக்கும் பொறுப்பு ஹைதரா பாத் ரெஸிடெண்டைச் சேர்ந்தது. விசாரணை செய்ய ரெஸி டெண்டு, வேறு எந்த அதிகாரியையும் நியமிக்கலாம். நிஜாம் சர்க்காரின் கீழ் வேலை பார்க்கும் அல்லது சர்க்காரிடமிருந்து கிடைக்கும் பணத்தால் (பென்ஷன் முதலியவை) ஜீவனம் செய்து வரும் ஐரோப்பியர்களையும், அங்கியர்களையும் விசாரிக்க சமஸ்தான கோர்ட்டுக்கு உரிமையுண்டு."

இந்தியா பூராவிலும் இதே முறைதான் அநுஷ்டிக்கப் படுகிறது.

வடக்கே ஹிமாலயத்தின் அருகில் உள்ள சில சமஸ்

தானங்களும், ஓரிஸ்ஸா, மத்திய இந்தியாவிலுள்ள சில சமஸ்தானங்களும் தங்கள் கோர்ட்டுகளில் விதிக்கப்படும் தூக்கு தண்டனைகளை அரசியல் ஏஜெண்ட் ஊர்ஜிதம் செய்த பின்னர்தான் நிறைவேற்ற வேண்டும்.

கடல், கப்பல் உரிமைகள்

கடல் போக்கு வரத்து, கப்பல்கள் வைத்துக்கொள்ளுவது-இவைகளில் ஆதிபத்திய சர்க்காருக்கு ஏகபோக உரிமையுண்டு.

துறைமுகச் சுங்கம்

பெரிய சமஸ்தானங்களில் திருவாங்கூர், கட்ச், பரோடா ஆகிய மூன்றிலும்தான் சமுத்திரக் கரைகளிருக்கின்றன. துறைமுகச் சுங்கம் விஷயமாக பிரிட்டிஷ் சர்க்கார் இந்த சமஸ்தானங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதன்படி திருவாங்கூர் சர்க்காருக்கு மத்திய சர்க்கார் தன்னுடைய வருமானத்திலிருந்து வருஷா வருஷம் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து வருகிறார்கள்.

வெளி நாடுகளிலிருந்து தரை மார்க்கமாக காஷ்மீரிலும் சரக்குகள் இறக்குமதியாவதால், அங்கு சுங்கம் விதிக்கும் உரிமையும் ஆதிபத்திய சர்க்காரிடமே இருக்கிறது.

நாணயங்கள்

இந்தியாவில் பூர்ண ராஜாங்க உரிமையுள்ள மன்னர்களெல்லாம் பண்டைக் காலத்திலிருந்து தங்கள் தங்கள் நாணயங்களை உற்பத்தி செய்து வந்தனர். முகலாய சாம்ராஜ்ய ஆட்சியின்போது, இந்த உரிமையை முகலாய சக்கர

வர்த்தி பறித்து விட்டார். அந்த சாம்ராஜ்யம் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போய்விடவே, ஒவ்வொரு சமஸ்தானமும் தனது சொந்த நாணயச்சாலைகளை அமைத்து, நாணயங்களை வெளியிட்டன. கிழக்கிந்திய கம்பெனி இந்திய சமஸ்தானங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட பின், சுதேச மன்னர்களுக்கிருந்த நாணய உற்பத்தி உரிமையை பறிக்க ஆரம்பித்தது. ஒரு சமஸ்தானம் கொஞ்ச காலத்திற்கு நாணய உரிமையை அநுபவிக்காத பட்சத்தில், மீண்டும் நாணய உற்பத்தி செய்யக்கூடாது; கொஞ்ச காலமாக மார்க்கெட்டில் பழகி வராத நாணயங்களை மீண்டும் உற்பத்தி செய்யக்கூடாது, என்று, கம்பெனி உத்திரவிட்டது. இதன் விளைவாக இப்பொழுது ஒன்பது சமஸ்தானங்கள்தான் தங்களுடைய நாணயச் சாலைகளில் ரூபாயை உற்பத்தி செய்கின்றன. அநேக சமஸ்தானங்கள் செம்பு நாணயங்களை மாத்திரம் உற்பத்தி செய்கின்றன.

மகா யுத்தத்திற்குப்பின் ஹைதராபாத் நிஜாம் ரூபாய் நோட்டுகளை வெளியிட்டார். திருவாங்கூரில் ரூபாய் நாணயங்கள் அடிக்கப்படவில்லை. ஆனல், சமஸ்தான கணக்குகளெல்லாம், அந்த அடிக்கப்படாத கற்பனை ரூபாய்ப்படியே இருக்கின்றன. அரை ரூபாய்களும், கால் ரூபாய்களும் அங்குள்ள நாணயச்சாலைகளில் உற்பத்தியாகின்றன.

1893ல் பிக்கானீர் மன்னர் மைனராயிருந்த போதும், 1905ல் ஆல்வார் மகாராஜா மைனராயிருந்தபோதும், அரசியல் ஏஜெண்டின் உத்தரவுப்படி இந்த சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் நாணயங்கள் புகுத்தப்பட்டன. அப்பொழுது பிரிட்டிஷ் ஏஜெண்டே சமஸ்தான நிர்வாக கவுன்சிலின் தலைவராகயிருந்தார்.

"சுதேச சமஸ்தானங்களின் தலைநகரில்தான் நாணயச் சாலைகள், ராஜாவின் கட்டுப்பாட்டின் கீழும், அதிஜாக்கிரதையான மேற்பார்வையின் கீழும் இருக்க வேண்டும். அந்த சமஸ்தானத்தின் எல்லைகளுக்குள்ளும், அவருடைய சிற்றரசர்களின் எல்லைகளுக்குள்ளும் எவ்வளவு நாணயங்கள் தேவையோ, அவ்வளவு மாத்திரம் உற்பத்தி செய்ய வேண்டும்,"

என்று ஆதிபத்ய சர்க்காரின் உத்தரவு ஒன்று கூறுகிறது.

ராஜா மைனராயிருந்தால்

ஒரு சுதேச மன்னர் காலமானபின், அல்லது பட்டத்திலிருந்து நீக்கப்பட்டபின் யார் சிம்மாசனமேற வேண்டியது என்று முடிவு செய்யப்படாவிட்டால், அல்லது அங்கீகரிக்கப்பட்ட ராஜா மைனராயிருப்பதால் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தால், பிரிட்டிஷ் சர்க்காரே சமஸ்தான நிர்வாகத்தை கவனிப்பார்கள். மைனர் ராஜாக்களை பாதுகாத்து, அவர்களுக்கு கல்வி பயின்று வைக்கும் வேலையை பிரிட்டிஷ் சர்க்காரே கவனித்து வருகிறார்கள்.

நிதி விஷயங்கள்

சமஸ்தான சர்க்கார்கள் சமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள யாருடனாவது பண ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டுமானால், ரெசிடெண்டுக்கு முன்னதாகவே அறிவிக்க வேண்டும். அவருடைய "யோசனை" யையும் கேட்க வேண்டும்.

ரெஸிடெண்டின் அதிகாரம்

ஒவ்வொரு சமஸ்தானத்திலும் பிரிட்டிஷ் ரெஸிடெண்ட், அல்லது அரசியல் ஏஜெண்ட் இருக்கிறார். சமஸ்

தானாதிபதிக்கு யோசனை கூறுவதும் (அதாவது கட்டளை யிடுவதும்), பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய் வதும் ரெஸிடெண்ட், அரசியல் ஏஜெண்டின் வேலையாகும். இதைத் தவிர ரெஸிடெண்டு ரயில்வே பிரதேசத்தில் நீதி, நிர்வாகப் பொறுப்புகளை ஏற்று நடத்துகிறார்.

கப்பம் (ராணுவ பாதுகாப்புக்காக கொடுக்கப்படும் தொகை)

பல சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் மன்னருக்கு கப்பம் கட்டி வருகின்றன. இந்த கப்பத் தொகைகள் (மொத்தம் ரூ. 59 லக்ஷம்) இந்திய சர்க்காரின் வருமானத்தில் சேரு கிறது. மைசூர் வருஷத்திற்கு ரூ. 24½ லக்ஷம் (1928-க்கு முன் ரூ. 35 லக்ஷம்) கப்பம் கட்டுகிறது. ஒரு சமஸ்தானம் வருஷத்திற்கு ரூ. 3 கப்பம் கட்டி வருகிறது. அதன் பெயர் ரனிசள். இது பம்பாய் மாகாணத்தில் மஹீகாந்தா ஏஜென்ஸியிலிருக்கிறது.

சில சமஸ்தானாதிபதிகள் அவர்களின் சிற்றரசர்களிட மிருந்து கப்பம் வாங்கி வருகிறார்கள். பரோடா, குவாலி யர், முதலிய சமஸ்தானங்கள் இதைப்போல கப்பத் தொகைகள் வாங்கி வருகின்றன.

பட்டங்கள்

ஆதிபத்ய சர்க்கார் சமஸ்தானாதிபதிகளுக்கு பட்டங் களும், குண்டு மரியாதைகளும் அளிப்பதால், அந்நிய நாடு களிலிருந்து எந்த நிபந்தனைகளின் பேரில் இந்திய ராஜாக் கள் பட்டங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்யும் விசேஷ அதிகாரம் பிரிட்டிஷ் மன்னரிடம்தான் இருக்கிறது.

சமஸ்தானாதிபதிகள் பிரிட்டிஷ் இந்தியர்களுக்கு பட்டங்கள் அளிக்கக்கூடாது. பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அளிப்பதாயிருந்தால், ஆதிபத்திய சர்க்காரின் அநுமதி வேண்டும். 1875ம் வருஷம் ஹைதராபாத் நிஜாம் ஒரு பிரிட்டிஷ் அதிகாரிக்கு **முஸ்தாகிப் ஜங் இஸ்திகாம்-உத் தௌலா பகதூர்** என்ற பட்டத்தை அளிக்க அநுமதி கோரினர். ஆனல் ஆதிபத்ய சர்க்கார் மறுத்து விட்டது. பெரிய சமஸ்தானங்களின் மகாராஜாக்கள் அவர்களுடைய பிரஜைகளுக்கு இந்திய பட்டங்களை வழங்கலாம். ராவ் பகதூர், திவான்பகதூர் போன்ற பிரிட்டிஷ் பட்டங்களை வழங்கக்கூடாது. ஹைதராபாத் நிஜாம், மகாராஜா, ராஜா, நவாப், திவான் முதலிய பட்டங்களை வழங்கி வருகிறார்.

அத்தியாயம் 6

அரசியல் இலாகா

"பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் சார்பாக இந்திய சர்க்காரின் அரசியல் இலாகாதான் சமஸ்தானாதிபதிகளை ஆட்டிவைக்கிறது. இவர்கள் அதற்கேற்றாற்போல் தாளம் போட்டுக்கொண்டு ஆட வேண்டியிருக்கிறது. இல்லாவிடில் வந்து விடும் ஆபத்து. உள்ளூரி லுள்ள ரெஸிடெண்ட்தான் ராஜா."—பண்டித ஜவாஹர்.

முதல் இந்திய சுதந்திர யுத்தம் முடிந்தபின் சமஸ்தானங்களுக்கும் இந்திய சர்க்காருக்குமுள்ள உறவுகளை கவனிக்க அரசியல் இலாகா நிறுவப்பட்டது. சமஸ்தானாதிபதிகளுக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்குமுள்ள உடன் படிக்கைகளின்படி இந்த இலாகா எல்லா விவகாரங்களிலும் நடந்து கொள்ளுவதில்லை. இதற்கு முன்னால் நடைமுறை யில் எந்தக் கொள்கை அநுஷ்டிக்கப்பட்டிருக்கிறது, சம்பிர தாயம் என்ன என்பவை அடங்கிய ஒரு புஸ்தகத்தை ராஜ தந்திரிகள் தயாரித்திருக்கிறார்கள். இந்த புஸ்தகத்திலுள்ள படிதான் அரசியல் இலாகா எல்லா விஷயங்களிலும் தன் னுடைய அதிகாரத்தைச் செலுத்தும். ராஜாக்களுக்குக் கூட இந்த புஸ்தகத்தில் இருப்பவை தெரியாது. அரசியல் அதிகாரிகள் மாத்திரம்தான் அதைப் பார்க்கலாம். இந்த இலாகாவிலிருந்த **சர். ஸ்யி டப்பர்** என்ற வெள்ளைக்காரர், தர்பாருக்கும் ரெஸிடெண்டுக்கும் ஏற்படக்கூடிய தகராறு களை, பிரிட்டிஷ் சர்க்காருக்கு சாதகமாக தீர்த்துக்கொள்ள சம்பிரதாயத்தை எடுத்துக் காண்பிப்பதற்காக, இதற்கு

முன்னுல் அதுஷ்டானத்திலிருந்த கொள்கைகள் பூராவை யும் சாங்கோபாங்கமாக எழுதி வைத்திருக்கிறார்.

அரசியல் இலாகாவுக்கு தனி தலைமை அதிகாரி யாரும் கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியாயுள்ள வைசிராயே இந்த இலாகா வுக்கும் தலைவர்.

அத்தியாயம் 7
நரேந்திர மண்டலம்

நரேந்திர மண்டலம் (ராஜாக்கள் சபை) ஒன்றை அமைக்க வேண்டுமென மாண்டேகு-செம்ஸ்போர்ட் ரிப்போர்ட் சிபார்சு செய்தது. இந்த சபையை எந்த நோக்கத்தோடு நிறுவ வேண்டுமென்பதும் ரிப்போர்ட்டிலிருந்தது. அதாவது :

"ஒரு நிரந்தர ஆலோசனை ஸ்தாபனத்தை சிருஷ்டிக்க வேண்டுமென விரும்புகிறோம். சமஸ்தானங்களை பொதுவாக பாதிக்கும் பிரச்னைகளோ, அல்லது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பூராவையும், அல்லது பொதுவாக பிரிட்டிஷ் இந்திய, சமஸ்தான பிரஜைகளை பாதிக்கும் பிரச்னைகளோ இருப்பதால், இதைப் போல சபையின் அபிப்பிராயம் றொம்பவும் உபயோகமாயிருக்குமென நினைக்கிறோம். இந்த சபையின் ஒரு மெம்பராவது அல்லது சபை மெம்பர்கள் அனைவருமாவது சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் விவாதிக்க வேண்டிய பிரச்னை ஒன்றை சேர்த்துக் கொள்ளுமாறு வைசிராயை கேட்டுக்கொள்ளலாம். இந்த சபையை அமைப்பதால் இதுவரை பிரிட்டிஷ் சர்க்காருக்கும் சமஸ்தானங்களுக்கும் நடந்துவரும் விவகாரங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது."

1921ம் வருஷம் பிப்ரவரி மாதம் 8ந் தேதி ராஜாக்கள் சபை பிரிட்டிஷ் மன்னரின் பிரகடனத்தின் மூலம் அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் மன்னரின் சார்பாக கன்னாட் கோமகன் ராஜாக்கள் சபையை டில்லியில் ஆரம்பித்து வைத்தார்.

சபையில் சேருவதின் மூலம் எந்த சமஸ்தானமும் தன்னுடைய உரிமைகளை இழந்து விடாது ; எந்த ராஜா

வாவது விரும்பினால்தான் அவருடைய சமஸ்தானத்தின் விவகாரங்கள் சபையில் விவாதிக்கப்படும் என்பது தெளிவாக்கப்பட்டது.

ராஜாக்கள் சபையில் மொத்தம் 120 மெம்பர்கள் இருக்கிறார்கள். இந்த 120 பேர்களில்,

(அ) 11 அல்லது அதற்கு மேல் குண்டு மரியாதையுள்ளவர்களும்,

(ஆ) உள்நாட்டு விவகாரங்களில் பூர்ண அதிகாரமுள்ள ராஜாக்களுமாக 108 பேர்களும் (சபையில் சேர இவர்களுக்கு யோக்யதாம்சமுண்டு என்று வைசிராய் அத்தாக்ஷிதரவேண்டும்);

மேற்கண்ட யோக்யதாம்சங்கள் இல்லாத, ஆனால் அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்துள்ள 127 சமஸ்தானங்கள், கோஷ்டி வோட்டு முறைப்படி தேர்ந்தெடுக்கும் 12 பேர்களும் இருக்கிறார்கள். எனவே பாக்கியுள்ள 327 சமஸ்தானங்களுக்கு ராஜாக்கள் சபையில் பிரதிநிதித்துவம் கிடையாது.

1929ம் வருஷம் வரை ராஜாக்கள் சபையின் நடவடிக்கைகள் ரகசியமாயிருந்தன. அதற்குப் பின்னர்தான் கூட்டத்தின் நடவடிக்கைகளைப் பார்க்க பத்திரிகைக்காரர்களும், பொது ஜனங்களும் அநுமதிக்கப்பட்டனர். ஆனால் முக்கியமான பிரச்னைகள் நிரந்தரக் கமிட்டியில் விவாதிக்கப்படுகின்றன. வைசிராய்தான் ராஜாக்கள் சபைக்குத் தலைவர். ஒரு அத்யக்ஷகரும், ஒரு உதவி அத்யக்ஷகரும் மெம்பர்களால் வருஷா வருஷம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

பெரும்பாலான சமஸ்தானங்களுக்கு இந்த சபையில் பிரதிநிதித்துவம் இல்லாததால் சபை திருப்திகரமாக

வேலை செய்யவில்லை. பெரிய சமஸ்தானங்களுக்கும் இந்த சபையில் நம்பிக்கையில்லாமலிருந்தது. பெரிய சமஸ்தானங்களுக்கு உள்ள வோட்டுரிமையே சிறிய சமஸ்தானங்களுக்கு மிருந்ததால், தங்களுடைய நலனுக்கு பாதகமாக சிறிய சமஸ்தானங்கள் ஒன்று சேர்ந்து சில முக்கிய பிரச்னைகளின் மீது வோட் செய்துவிட்டால் என்ன செய்வது என்று பெரிய சமஸ்தானங்கள் அஞ்சின. இந்த பயத்தினால் முதலில் ஹைதராபாத், மைசூர், பரோடா, காஷ்மீர், திருவாங்கூர் ஆகிய சமஸ்தானங்கள், ராஜாக்கள் சபையில் சேரவில்லை.

1939ம் வருஷம் மார்ச் மாதம் 11ந் தேதி ராஜாக்கள் சபை சீர்திருத்தப்பட்டது. இதற்கு முன், சபையின் நிரந்தரக் கமிட்டியில் 11 மெம்பர்கள்தான் இருந்தார்கள். புது கமிட்டியில் 35 மெம்பர்கள் இருப்பார்கள், சபையை விஸ்தரிப்பதுபற்றி தீவிரமாக ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது சபைக்கு நவநகர் மகாராஜா அத்யக்ஷராயிருக்கிறார்.

சபை வருஷா வருஷம் டில்லியில் தன்னுடைய சொந்த ஹாலில் கூடுகிறது.

கீழ்காணும் பிரச்னைகளைப்பற்றி விவாதிக்க சபைக்கு உரிமை கிடையாது :

(1) தனிப்பட்ட சமஸ்தானங்களின் உடன்படிக்கைகள், உள்நாட்டு விவகாரங்கள்.

(2) தனிப்பட்ட ராஜாக்களின் உரிமைகள், சலுகைகள், தகராறுகள். அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் விவகாரங்கள்.

(3) தனிப்பட்ட சமஸ்தானாதிபதியின் நடத்தை.

ராஜாக்கள் சபையை அமைக்கு முன் பெரிய சமஸ்தானங்களின் மன்னர்கள், தங்களுக்கும் சிறிய சமஸ்தான ராஜாக்களுக்கும் அந்தஸ்தில் வித்யாசம் இருக்க வேண்டுமென்று கோரினர். அப்படிச் செய்தால்தான் சபையில் சேர முடியுமென்றும் சொன்னார்கள். அரசியல் இலாகா எல்லா சமஸ்தானங்களையும் ஒரே மாதிரியாக கவனிப்பதையும் இவர்கள் ஆக்ஷேபித்தனர். இதற்கு லார்டு செம்ஸ்போர்டு பதிலளிக்கையில், குண்டு மரியாதை ஜாப்தாவின் மூலம்தான் வித்யாசம் காண்பிக்க முடியுமென்று கூறி விட்டார்.

(முக்கிய சமஸ்தானங்களுக்கெல்லாம் குண்டு மரியாதையுண்டு. அதாவது அவர்கள் பிரிட்டிஷ் இந்திய பிரதேசத்திற்கு வந்தால் அவர்களுக்கு பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் குண்டு மரியாதை செய்வார்கள். ராஜாக்களின் அந்தஸ்தை இதுதான் நிர்ணயிக்கிறது. 1857ம் வருஷம் மரியாதை ஜாப்தா தயாரிக்கப்பட்டு, 1864ல் பிரசுரிக்கப்பட்டது.)

அத்தியாயம் 8

நிர்வாக அலங்கோலம்

"இந்தியாவில் முதல் பிரிவைச் சேர்ந்த 108 சமஸ்தானங்களில் 30ல் சட்ட சபைகள் இருக்கின்றன. இந்த சபைகளில் பெரும்பாலானவை ராஜாவுக்கு சிபார்சு செய்யலாமே யொழிய தாமாக எந்த சட்டத்தையும் இயற்ற முடியாது."

என்று பட்லர் கமிட்டி கூறியிருக்கிறது. ஆனால் இப்பொழுது (1939ல்) சமஸ்தான மக்களிடையே விழிப்பு ஏற்பட்டிருப்பதாலும், பூர்ண பொறுப்பாட்சி சர்க்காரைப் பெறுவதென்று பிரஜைர்ள் உறுதி கொண்டிருப்பதாலும், பல சமஸ்தானங்களில் சட்டசபைகள் நிறுவப்படுகின்றன. சில சமஸ்தானங்களில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்களில் ஒருவராவது அல்லது இருவராவது நிர்வாக கவுன்சிலில் (மந்திரி சபை) சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

சமஸ்தானங்கள் நிர்வாக கவுன்சில்களால் நிர்வகிக்கப்படுகின்றன. நிர்வாக கவுன்சில் சட்டசபையின் அதிகாரத்திற்குட்பட்ட தல்ல. திவானே நிர்வாக கவுன்சிலுக்குத் தலைவர். சில சமஸ்தானங்களில் இவர் **பிரதம மந்திரி** என்றும் அழைக்கப்படுகிறார். சமஸ்தான பிரஜையாக இல்லாதவர்களே திவான்களாக நியமிக்கப்படுவதை சற்று கவனிக்க வேண்டும். ஹைதராபாத், திருவாங்கூர், கொச்சி, ஜெயப்பூர், காஷ்மீர், பரோடா ஆகிய சமஸ்தானங்களை உதாரணமாகக் கூறலாம்.

திவானே சட்ட சபைக்கும் சபா நாயகராக இருப்ப

தால், நிர்வாகத்தைக் கண்டிக்கும் பிரேரணைகளை சபாநாயகர் அநுமதிப்பதில்லை. ஒரு குற்றவாளியே ஜட்ஜாயிருந்தால் தீர்ப்பு எப்படியிருக்கும் என்று கேட்கவும் வேண்டுமா? அப்படி கண்டனப் பிரேரணைகள் அநுமதிக்கப்பட்டால்கூட, நியமன மெம்பர்கள் ஏராளமாயுள்ள சட்ட சபையில் அவை தோற்றுப்போவது நிச்சயம்.

எல்லா சமஸ்தான சர்க்கார்களுக்கும் ஒரேவித ராஜ்யாதிகாரம் கிடையாது. உதாரணமாக, ஹைதராபாத், குவாலியர் சர்க்கார்களுக்கு அவர்களுடைய எல்லையில் உள்ள பிரஜைகள் மீது பூர்ண அதிகாரம் செலுத்த (சட்ட ரீதியாக) உரிமையுண்டு. அதாவது, சட்டங்களை தயாரித்து, இயற்றி, அமுலுக்குக் கொண்டு வரலாம். இந்த பெரிய சமஸ்தானங்களின் சர்க்கார்கள் ஆதிபத்ய சர்க்காருக்குக் கீழ்ப்பட்டதாயுள்ள போதிலும், அவர்களுடைய சமஸ்தான எல்லையில் அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது. அங்குள்ள கோர்ட்டுகளின் தீர்ப்பை எதிர்த்து யாரும் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள முடியாது.

ராஜாவின் நிர்வாகத்தை எதிர்த்து பிரஜைகள் ஆதிபத்திய சர்க்காருக்கு எவ்வளவு மனுக்கள் அனுப்பினாலும், அதனால் பிரயோசன மேற்படுவதில்லை. ராஜா, தான் ஜனங்களின் விருப்பத்தினாலும், ராஜ்யத்தை வென்றதினாலும் ஆட்சி புரியவில்லையென்பதையும், தப்பித்தவறி ராஜாவுக்கு பிறந்ததையோ, அல்லது ராஜாவின் ஸ்வீகாரப் புத்திரனானதையோ பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரித்ததால் தான் பட்டத்திலிருப்பதையும் நன்கு உணருகிறார். சில சமஸ்தானங்களில் போற்றத்தக்க சமூக சீர்திருத்தங்களும், கல்வி முன்னேற்றமும் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக கோண்டால் (கத்தியவார்) சமஸ்தானத்தில்

பெண்கள் கட்டாயக் கல்வி முறை அமுலிலிருக்கிறது. திருவாங்கூர், இந்தூர், ஹிண்டோல் (ஒரிஸ்ஸா) ஆகிய சமஸ்தானங்களில் சர்க்காருக்குச் சொந்தமான எல்லா கோவில்களுக்கும் செல்ல ஹரிஜனங்கள் அநுமதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

பொதுவாக எல்லா சமஸ்தானங்களிலும் லேவா தேவிக்காரர்கள் விவசாயிகளுக்கு 10%லிருந்து 25%வரை வட்டிக்கு கடன் கொடுக்கிறார்கள்.

பவநகரில் விவசாயிகள் இந்த வட்டிப் பளுவை தாங்க முடியாமல் அவதிப்பட்டனர். சமஸ்தான சர்க்கார், விவ சாயிகளின் கடன் பொறுப்பை யெல்லாம் ஏற்றுக்கொண்டு, லேவாதேவிக்காரர்களின் கணக்கை பட்டுவாடா செய்த னர். அதே சமயத்தில் விவசாயிகளுக்கு குறைந்த விகித வட்டிக்கு கடன் கொடுத்தார்கள். இப்பொழுதுள்ள ராஜா மைனராயிருந்தபோது சர். பிரபா சங்கர் பட்டணி இந்த சமஸ்தானத்தின் நிர்வாகத்தை நடத்தி வந்தார். அப் பொழுதுதான் இந்த கடன் நிவாரணச் சட்டம் அமுலுக் குக் கொண்டு வரப்பட்டது. சர். பட்டணி காலமானதற் குப் பின் அவருடைய புத்திரர் ஸ்ரீ. அனந்தராய் பட்டணி பிரதம மந்திரியானார். (இவர் ராஜ்கோட் சிக்கலே தீர்க்க காந்திஜிக்கும் தாக்கூர் சாஹிப்புக்குமிடையே ஒரு சமரச தூதராயிருந்தார்.)

பிரிட்டிஷ் இந்தியாவில் பால்ய விவாகத் தடைச் சட் டம் அமுலுக்கு வரு முன்னதாகவே பரோடாவில் அந்தச் சட்டமும், கட்டாய இலவச ஆரம்பக் கல்வி திட்டமும் அமுலுக்கு வந்து விட்டன. படித்த ஹரிஜனங்களின் விகிதம் இந்த சமஸ்தானத்தில்தான் அதிகமாயிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் ஹரிஜனங்கள் அநுமதிக்கப்படாத



கோண்டால் மன்னர்



பவநகர் மகாராஜா



காலஞ்சென்ற ஸ்ரீ. பிரபா சங்கர் பட்டணி (பவநகர் மாஜி திவான்.) இவர்தான் அந்த சமஸ்தானத்தில் கடன் நிவாரணச் சட்டம் அமுலுக்கு வர முயற்சி எடுத்துக்கொண்டார்.



அகில இந்திய சமஸ்தான
பிரஜைகள் ஸ்தாபனத்தின்
பொதுக் காரியதரிசி
ஸ்ரீ. பலவந்தராய் மேத்தா



நரேந்திர மண்டலத்தின்
அத்யக்ஷகர் நவநகர் மகாராஜா

கிராமங்களுக்கு சர்க்கார் கொடுத்து வரும் மான்யம் நிறுத்தப்படுகிறது.

திருவாங்கூர் தன்னுடைய வருமானத்தில் 18% ஐ கல்விக்காக செலவிடுகிறது. பரோடாவும், மைசூரும் முறையே 17%ம், 16%ம் கல்விக்காக செலவிடுகிறது.

போலீஸ் நிர்வாகம்

எல்லா சமஸ்தானங்களும் உள்நாட்டு அமைதியை பாதுகாக்க அவசியமான போலீஸ் படைகளை வைத்திருக்கின்றன. ரண்பூர் போன்ற சிறிய சமஸ்தானங்களில் 40 அல்லது 50 பேர்கள் அடங்கிய போலீஸ் படைகளைத்தான் காணலாம். பெரிய சமஸ்தானங்களில் இந்தியாவின் பொது பாதுகாப்புக்கு இந்திய ராணுவத்துடன் ஒத்துழைக்கவும், உள்நாட்டு அமைதியை பாதுகாக்கவும் "இந்திய சமஸ்தானப் படைகள்" என்ற திறமையான பட்டாளங்கள் இருக்கின்றன. இந்த பட்டாளங்களை மத்திய சர்க்காரின் அதிகாரிகள் மேற்பார்வையிடுவார்கள். இந்த அதிகாரிகளுக்கு ராணுவ ஆலோசனைகர்த்தாக்கள் என்று பெயர். எப்பேர்ப்பட்ட பேர் வழிகள் போலீஸ் படையில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதைப்பற்றி ஸ்ரீ. பி. எல். சட்கார் "பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழ் இந்திய ராஜாக்கள்" என்ற புஸ்தகத்தில் எழுதியிருப்பதாவது :—

"சாதாரண கான்ஸ்டேபிள்கள், எழுதப் படிக்கத் தெரியாதவர்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். 100 கான்ஸ்டேபிள்களில் ஒருவனுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கலாம். இவர்களுக்கு ரூ. 3 முதல் ரூ. 10 வரை மாதச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. போலீஸ் சூப்பிரெண்டுக்கு ரூ. 35 அல்லது 40 சம்பளம். (பெரிய சமஸ்தானங்களில் அதிகம் கிடைக்கிறது—ஆசிரியர்.)

இதன் விளைவாக லஞ்சமும், ஊழலும் தாண்டவமாடுகிறது. குற்றங்களில் 50% கண்டு பிடிக்கப்படுவதில்லை. திருட்டுப்போன சொத்துக்களில் 30% திரும்பி வருவதே அபூர்வமாயிருக்கிறது. கொலை வழக்குகளில் உண்மையான குற்றவாளி ஒருவன் இருப்பதுகூட குதிரைக் கொம்பாக யிருக்கிறது. சிருஷ்டிக்கப்பட்ட சாக்கியங்களால், ஒன்று மறியாத அப்பாவிகள் தண்டிக்கப்படுகிறார்கள். சொல்ல முடியாத சித்திரவதையான, மூர்க்கத்தனமான குற்றங்களெல்லாம் வெட்ட வெளிச்சத்திற்கு வருகின்றன. ஆனால், ஒரு சிலர் விஷயத்தில்தான் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.''

நியமனங்கள்

சமஸ்தானங்களில் யோக்யதாம்சங்களுக்கு தக்க்வாறு அதிகாரிகள் நியமிக்கப்படுவதில்லை. இது சம்பந்தமாக சர். வில்லியம் பார்ட்டன் (மாஜி மைசூர் ரெஸிடெண்ட்) கூறுவதாவது :

''பெரிய மராமத்து திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கும் ஒரு எஞ்ஜினீயர் திடீரென ராஜாவின் அந்தரங்க உத்யோகஸ்தர்களில் ஒருவராக நியமிக்கப்படலாம். வருஷத்திற்கு ரூ 1,500 சம்பளத்தில் நாட்டியக்காரிகளின் (தாசிகள்) இன்ஸ்பெக்டர் வேலையை பார்த்து வந்த ஒருவர், ஆக்டிங் பிரதம நீதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டார். இந்த பெரிய வேலைக்காக அவருடைய வருஷ சம்பளத்தில் ரூ. 150 உயர்த்தப்பட்டது.''

ஒரு ராஜபுத சமஸ்தானத்தில் ஒரு சமயத்தில் தெருவில் திரிந்து கொண்டிருந்த நாட்டியக்காரி, சமஸ்தான நிர்வாகம் பூராவையுமே பார்க்க ஆரம்பித்து விட்டாள். அவள் அழகாய் இருந்தாள். முதலில் ராஜா, அவளுக்கு ரூ. 60 சம்பளத்தில் உத்தியோகம் கொடுத்தார். இவ்வளவு பணம் கிடைத்ததால், அவளுடைய சொந்த கவலைகள் தீர்ந்தன.

காட்டியத்தில் சொம்ப தோர்ச்சி பெற்றுள். தான் காட்டிய மாடியதோடு, ராஜாவையும் தன்னிஷ்டப்படி நடனமாடச் செய்தாள். அவள் வைத்ததுதான் சட்டம். உத்தியோகங்களில் சலுகைகள் வேண்டிய அனைவரும், அவளுடைய வீட்டிற்கு 'சன்மானங்களுடன்' வந்து குவிந்தனர். ராணியாகப் பிறக்காத போதிலும், 5 வருஷங்களுக்கு ராஜ்ய பரிபாலனம் செய்தாள்.

இன்னொரு சமஸ்தானத்தின் காட்டியக்காரிபற்றி சில வருஷங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் வெளி வந்த தாவது :

"வழக்குகளில் அவளே தீர்ப்புக் கூறினாள். நவாப் அவளுடைய கைப்பொம்மையாகவே இருந்தார். ஒவ்வொரு விஷயத்திலும் அவள் வைத்ததே சட்டம்."

பட்லர் கமிட்டியின் ரிபோர்ட்டின்படி பார்த்தால்கூட 520 சமஸ்தானங்களில் ஹைக்கோர்ட்டுகளோ, உயர்தர நீதி மன்றங்களோ கிடையாது; 528 சமஸ்தானங்களில் நிர்வாக வேலை பார்க்கிறவர்களே நீதி வழங்கும் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்கள்; 500 சமஸ்தானங்களில் வருமானத்தில் ராஜாக்களின் சொந்தச் செலவுக்காக ஒரு குறிப்பிட்ட விகிதம் நிர்ணயிக்கப்படவில்லை.

1938-39ல் பொறுப்பாட்சிக் கிளர்ச்சி ஆரம்பமான பின்னர்தான் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தாங்க முடியாத வரிகள்

சமஸ்தானங்கள் விதிக்கும் வரிகளே பிரஜைகளால் தாங்க முடியவில்லை. முற்போக்கு சமஸ்தானம் என்று சொல்லப்படும் மைசூரில் விதிக்கப்படும் வரிகளைப்பற்றி சமஸ்தான சட்ட சபை மெம்பர் ஒருவர் கூறியதாவது :

"வரி விகிதம் ரொம்ப அதிகமாயிருக்கிறது. வரிகள் அடிக்கடி பரிசிலனை செய்யப்பட்டு, புது விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. கலால் வருமானம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கடன் சுமையால் குடிகள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நெற்றி வியர்வை நிலத்தில் விழ வேலை பார்க்கிறவர்களின் முகங்களில் திக்கற்ற குறிகள் தென்படுகின்றன. தொழிலாளர்கள் கேட்பாரற்று கிடக்கிறார்கள். சிவில் நிர்வாகச் செலவு ரொம்பவும் அதிகம். கொழுத்த சம்பளமுள்ள அதிகாரிகளும், ரிசர்வ் ஆட்களும் தேவைக்கு அதிகமாகவே இருக்கிறார்கள். கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் மிகக் குறைவான சம்பளங்கள்; இதில் பெரும்பாலோருக்கு ஜீவனத்திற்கு வேண்டிய சம்பளம் கூட கிடையாது. இதன் விளைவாக லஞ்சம், சோம்பேறித்தனம், அதிருப்தி இவைகள் அதிகரித்திருக்கின்றன."

ராஜாக்களின் சொந்தச் செலவு

எல்லா தேசங்களிலும், ஜனங்கள் (சட்ட சபைகள் மூலம்) நிர்ணயிக்கும் தொகையைத்தான், மன்னர்கள் தங்களுடைய சொந்தச் செலவுக்காக எடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்தியாவிலோ தலைகீழ்ப் பாடமாயிருக்கிறது. ராஜா தன் இஷ்டப்படி சமஸ்தான வருமானத்தில் தனக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு, பாக்கியைத்தான் பிரஜைகளின் நன்மைக்காக செலவிடுகிறார். (சில ராஜாக்கள் இதற்கு விதி விலக்கு.)

இங்கிலாந்து மன்னர் வருஷத்திற்கு 4,70,000ம் பவுனும், ஜப்பான் சக்கரவர்த்தி வருஷத்திற்கு 4,50,000 பவுனும், தங்கள் சொந்தச் செலவுக்காக பெறுகிறார்கள். ஹைதராபாத் நிஜாம் தன்னுடைய சொந்தச் செலவுக்

காக ரூ. 50 லட்சத்தை வருஷா வருஷம் சமஸ்தான வருமானத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகிறார்.

மகாத்மா காந்தி 10 வருஷங்களுக்கு முன் வைசிராய்க்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டதாவது :

"அந்நியர்கள் இந்நாட்டில் பெறும் சம்பளங் கூடப்போல், வேறு எந்த நாட்டிலும் யாரும் பெறுவதில்லை. உங்கள் சம்பளத்தையே எடுத்துக்கொள்ளுவோம். உங்களுக்கு மாதம் ரூ. 21,000 சம்பளம். இதைத் தவிர வேறு எவ்வளவோ வரும்படி உங்களுக்கு உண்டு. அதை விட்டுத் தள்ளுவோம். பிரிட்டிஷ் பிரதம மந்திரி வருஷத்திற்கு 5,000 பவுன் சம்பளம் பெறுகிறார். அதாவது மாதத்திற்கு ரூ. 5,400. இந்தியாவின் தினசரி சராசரி வருமானம் 2 அணாவுக்குக் குறைவாகயிருக்கிறது. நீங்கள் தினசரி ரூ. 700 பெறுகிறீர்கள். பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு தினசரி ரூ. 180 கிடைக்கிறது. ஆங்கிலேயனின் தினசரி சராசரி வருமானம் ரூ. 2. எனவே இந்தியாவின் சராசரி வருமானத்திற்கு 5,000 மடங்கு மேலாக நீங்கள் சம்பளம் பெறுகிறீர். பிரிட்டிஷ் பிரதம மந்திரி பிரிட்டனின் சராசரி வருமானத்தைக் காட்டிலும் 90 மடங்குதான் அதிகமாகப் பெறுகிறார்!"

வைசிராய் இந்தியாவின் சராசரி வருமானத்தைக் காட்டிலும், 5,000 மடங்கு அதிகமாகப் பெறுகிறார். நிஜாம் எவ்வளவு பெறுகிறார் தெரியுமா? மூர்ச்சையாய் விழுந்து விட வேண்டாம்! இந்திய சராசரி வருமானத்தைக்காட்டி

லும், கிட்டத்தட்ட 2 லக்ஷம் மடங்கு அதிகமாகத்தான் பெறுகிறார். இங்கிலாந்து மன்னர் தன்னுடைய சொந்தச் செலவுக்கு நாட்டின் வருமானத்தில் 1600ல் ஒரு பங்கும், பெல்ஜிய மன்னர் ஆயிரத்தில் ஒரு பங்கும், ஜப்பான் சக்கரவர்த்தி 400ல் ஒரு பங்கும் பெற்று வருகிறார்கள். திருவாங்கூரில் இப்பொழுதுள்ள ராஜா மைனராயிருந்தபோது; மகாராணி சமஸ்தான வருமானத்தில் 17ல் ஒரு பங்கை தன் சொந்தச் செலவுக்காக எடுத்து வந்தார். 1939வது வருஷம் இந்த சமஸ்தான பட்ஜெட்டில் செலவு இனங்களுக்காக ரூ. 261.41 லக்ஷம் ஒதுக்கப்பட்டது. இதில் மகாராஜாவின் சொந்தச் செலவு சுமார் ரூ. 10 லக்ஷம்.

மைசூர் ராஜா 14ல் ஒரு பங்கும், ஹைதராபாத் நிஜாமும், பரோடா மகாராஜாவும் 13ல் ஒரு பங்கும், காஷ்மீர், பிக்கானீர் மகாராஜாக்கள் 5-ல் ஒரு பங்கும் எடுத்து வருகிறார்கள்.

பிரஜா உரிமைகள் பூஜ்யம்

அநேகமாக எல்லா சமஸ்தானங்களிலும், பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்த அநுமதி வாங்க வேண்டும். அப்படி கூட்டம் போட அநுமதி தரப்பட்டால்கூட, கூட்டத்தைக் கலைக்க காலிகள் வந்து விடுகிறார்கள். உதாரணமாக லிம்டியை எடுத்துக்கொள்ளலாம். பிரஜா பரிஷத் மகாநாடுகூட அநுமதிக்கப்பட்டது. ஆனால், ஒரு நாள் பூராவும் நகரில் காலிகள் அட்டூழியஞ் செய்தனர். மகாநாட்டைக் கலைத்தனர். பரிஷத் ஊழியர்களை படுகாயப்படுத்தினர். ராஜா இதையெல்லாம்

பார்த்துக்கொண்டே யிருந்தார். லிட்டி சர்க்கார் திருவாங்கூர் திவான் சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரைத்தான் பின்பற்றியது. திருவாங்கூரில் சமஸ்தான காங்கிரஸ் மீது தடை விதிப்பதற்காக, சமஸ்தான காங்கிரஸ் கூட்டங்களை கலைக்க காலிகள் ஏவப்பட்டனர். போலீஸார் முன்னிலையிலேயே—ஏன் அவர்கள் பாதுகாப்பின் கீழே—காலிகள் அட்டூழியம் செய்ததால், சர்க்கார்தான் இவர்களை ஏவி விட்டார்கள் என்று கூறப்படுவதில் என்ன தவறு இருக்கிறது? இந்த காலிகள் சமஸ்தான காங்கிரஸ் கூட்டங்களில் பூனைகளைப் போலவும், நாய்களைப் போலவும், நரிகளைப் போலவும், கழுதைகளைப் போலவும் ஊளையிட்டு, பிரசங்கிகளை பேசவொட்டாமல் தடுத்தார்கள். சமஸ்தான காங்கிரசுக்கு எதிர்ப்பு இருந்ததால் அதன் மீது தடை விதிப்பதாக சர்க்கார் கூறினர்.

பிரிட்டிஷ் இந்தியாவில் ராஜத்துவேஷ குற்றங்களுக்காக 2 வருஷங்களுக்கு மேல் தண்டனை விதிக்கப்படுவதில்லை. ஆனால், சில சமஸ்தானங்களில் 5 வருஷம் வரை தண்டனை விதிக்கப்படுகிறது. ஆள்வார் சமஸ்தானத்தில் அமுலிலுள்ள ராஜத்துவேஷ சட்டத்தின் ஷரத்துகள்:

(1) 5 பேர்களுக்கு மேற்பட்டு கூடினால் அது பொதுக் கூட்டமாக கருதப்படும். சட்டப்படி அது பொதுக் கூட்டமாகாது என்று, அக்கூட்டத்திலிருந்தவர்கள் ஆக்ஷேபித்தால், அவர்களே தாங்கள் குற்றவாளிகளல்ல வென்பதை கோர்ட்டில் நிரூபிக்க வேண்டும்.

(2) எந்த பொதுக் கூட்டத்திலும் சமஸ்தானம், அதன் சர்க்கார், அதன் ராஜா, இந்தியாவின் சக்கரவர்த்தி (பிரிட்டிஷ் மன்னர்), அவர் சர்க்கார் அல்லது இதர இந்

திய ராஜாக்கள்—இவர்களுடைய நலனை பாதிக்கும் விதத்தில் விவாதங்களோ, பிரசாரமோ செய்யக்கூடாது.

(3) பொதுக் கூட்டத்தை நடத்த "சதியாலோசனையில்" யாரும் கலந்து கொள்ளக்கூடாது. ஆள்வார் மகாராஜா, அவருடைய குடும்பம், அவர் சர்க்கார் அல்லது சக்கரவர்த்தி அல்லது இதர ராஜாக்களின் நலனை மறைமுகமாகவோ, நேராகவோ தாக்கும் தஸ்தாவேஜுகள் அல்லது கட்டுரைகளை சமஸ்தான பிரஜைகள் சமஸ்தானத்திலோ, அல்லது சமஸ்தானத்திற்கு வெளியிலோ எழுதவோ, அச்சடிக்கவோ, பிரசுரிக்கவோ, விநியோகிக்கவோ, அல்லது **எழுத முயற்சிக்கவோ, பிரசுரம் செய்ய முயற்சிக்கவோ, அச்சிட முயற்சிக்கவோ, விநியோகிக்க முயற்சிக்கவோ கூடாது.**

(4) இதைப்போல கட்டுரைகள், தஸ்தாவேஜுகளை யாரும் வைத்திருக்கக்கூடாது. யாரிடமாவது இருந்தது கண்டு பிடிக்கப்பட்டால், 5 வருஷ கடுங்காவல் தண்டனை அல்லது ரூ. 3,000 அபராதம் விதிக்கப்படும். அவசியமானால், குற்றவாளிகள் சமஸ்தானத்தை விட்டு வெளியேற்றப்படலாம்."

மார்வாரிலுள்ள ஒரு சட்டத்தில், "ராஜத்துவேஷி என்று அனைவருக்கும் தெரிந்துள்ள எந்த நபருக்கும் யாரும் தங்க இடம் கொடுக்கக்கூடாது" என்றிருக்கிறது. ராஜத்துவேஷிகளுடன் கடிதப் போக்கு வரத்தும், சகவாசமும் கூடாது.

ஹைதராபாத்தில் எந்த பொதுக் கூட்டமும் நடக்கக் கூடாதென சமீப காலம் வரை ஒரு சட்டம் இருந்தது. இது இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. அதன்படி, பொதுக் கூட்டத்தை கூட்ட விரும்புகிற நபர் அதிகாரி

களின் அநுமதி பெற்றே எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். ஹிந்துக்களின் மத உரிமைகள்கூட பறிக்கப்பட்டிருந்தன. மேலும் இந்த சர்க்கார் வகுப்பு வாதத்தில் இறங்கியிருந்தும் வருந்தத்தக்கது. இஸ்லாம் மத பிரசாரத்தை ஹைதராபாத் சர்க்கார் அநுமதித்தனர். ஆனால், ஆரிய சமாஜின் ஹிந்து மத பிரசாரத்தையும், சுத்தியையும் (மூஸ்லிமானவர்களை திரும்ப ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளும் சடங்கு) அநுமதிக்கவில்லை.

ராஜபுதன சமஸ்தானங்களில் அடிமைத்தனமிருந்து வருகிறது. அங்கு ஏழு, எட்டு வருஷங்களுக்கு முன் 1,61,735 அடிமைகள் இருந்ததாக மதிக்கப்பட்டது. இவர்களை ஒவ்வொரு ரஜபுதன ராஜாவின் அரண்மனையிலும், சிற்றரசர்கள், ஜாகீர்தார்களின் மாளிகைகளிலும் காணலாம். இந்த அடிமைகள் ஸ்ரீதன சொத்தாகவும் கொடுக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் ரகசியமாகவும் விற்கப்படுகிறார்கள். இவர்கள் மீது—கற்பு உள்பட—எஜமானர்களுக்கு பூர்ண அதிகாரம் உண்டு. எஜமானர்களின் இஷ்டப்படி இவர்களின் விவாகமும், விவாக ரத்தும் நடைபெற வேண்டும்.

அநேக சமஸ்தானங்களில் இன்னும் நிர்ப்பந்த ஊழிய முறை அமுலிலிருக்கிறது. இவர்களுக்கு சொம்ப சொற்பமாகவே கூலி கிடைக்கும். சில சமயங்களில் சாப்பாடு மாத்திரம்தான் உண்டு.

பிரஜைகளின் சகிப்புத் தன்மைக்கும் ஒரு அளவு உண்டல்லவா? கஷ்டங்களை தாங்க முடியாமல் கலகத்தில் இறங்கி விடுகிறார்கள். சமஸ்தான ராணுவம் அவிழ்த்து விடப்படுகிறது. பிரஜைகளின் தலைவர்கள் எமலோகத்துக்கு அனுப்பப்படுவார்கள். 300, 400

பேர்களுக்கு கடுங்காவல் தண்டனை கிடைக்கும். அவர்களுடைய சொத்து பறிமுதலாகும். இப்படி அமைதி நிலை நாட்டப்படும். ஒரு ராஜபுதன சமஸ்தானத்தில் சில வருஷங்களுக்கு முன் விவசாயக் குறைகளினால் கலகம் உண்டாயிற்று. இதை அடக்கும் வேலையில் ஈடுபட்ட சர்க்காரின் ஆட்கள் ஒன்றுமறியாத 123 ஸ்திரீகளையும், குழந்தைகளையும் படுகொலை செய்தனர். அந்த கிராமம் பூராவும் அழிக்கப்பட்டது.

யார் ஜவாப்தாரி ?

சமஸ்தானங்களில் இவ்வளவு படுமோசமான நிர்வாகம் இருப்பதற்குக் காரணம் என்ன? சமஸ்தான பிரஜைகளில் திறமையாக நிர்வாகம் செய்யக்கூடியவர்கள் இல்லையா? இதற்கெல்லாம் ஒரே ஒரு பதில்தான் சொல்ல முடியும். பிரிட்டிஷ் சர்க்கார் இஷ்டப்பட்டிருந்தால், பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் எப்படி திறமையாக நிர்வாகம் நடக்கிறதோ அதைப்போல சமஸ்தானங்களிலும் இருக்கும்படி செய்திருக்கலாம்.

இது சம்பந்தமாக **கர்னல் பவல்** என்ற வெள்ளைக்காரரே பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"இந்திய சமஸ்தானங்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றன. ஏதோ ஒரு சிலவற்றைத் தவிர பாக்கி சமஸ்தானங்களில் பிரதிநிதித்துவ சட்ட சபைகளே கிடையாது. அரசியல் இலாகா, ஏகாதிபத்திய நலன்களை விருத்தி செய்துகொள்ளக் காட்டிய ஆர்வத்தை, சமஸ்தானங்களின் நலனிலும் காட்டியிருந்தால் சமஸ்தான பிரஜைகளின் மரணத்தருவாய் நிலைமை இது வரை இருந்திருக்காது. ஒரு சிலர்களைத் தவிர பாக்கி எல்லா இந்திய ராஜாக்களும் அரசியல் (இலாகா) அதிகாரிகளிடம்

வணக்கமாகவும், அவர்கள் இட்ட கட்டளைகளை அப்படியே நிறை வேற்றியும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மீது திணிக்கப்பட்ட எல்லா கொள்கைகளுக்கும்—அவை அவர்களுடைய நலன் களுக்கு பாதகமாயிருந்தால்கூட—ஆதிபத்ய சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாயிருக்க வேண்டும் என்பதற்காக எல்லாவற்றிற்கும் சம்மதித்திருக்கிறார்கள். எனவே, அரசியல் அதிகாரிகள் சரியான பாதையில் சென்று, நிர்வாகத் திறமை, நல்ல ஆட்சி, பொறுப் பாட்சி சர்க்காரைப் பெற படிப்படியாய்ச் செல்லுவது—இவைக ளில் பிரிட்டிஷ் இந்தியாவைப் பின்பற்றுமாறு இந்திய ராஜாக் களை தூண்டியிருந்தால், நிலைமை இப்படி இருக்கவே இருக்காது. எனவே, இந்திய சமஸ்தானங்களின் பிற்போக்கான நிலைமைக்கு அரசியல் இலாகாவின் தலையிடாக் கொள்கையே முக்கிய காரணம்.''

அத்தியாயம் 9

ஸல்லாப உல்லாஸங்கள்

ராஜாக்களின் வாழ்க்கையைப்பற்றி எழுதக்கூட சுவாரஸ்யமாயிருக்கிறது. இருந்தாலும் சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. சில ராஜாக்களின் நடத்தைகளில் அப்படியொன்றும் இருக்காது. பொதுவாக அவர்களுடைய யோக்கியதைகள் என்னவென்பதை மாத்திரம் கவனிப்போம்.

ரொம்ப வைதீகமாயுள்ள ராஜாக்கள் சாஸ்திரோக்தமாக வாழை இலையில்தான் சாப்பிடுகிறார்கள். ஆனால் அந்த இலை தங்கம் அல்லது வெள்ளித் தட்டின் மேல் இருக்கும்! இந்த ரக ராஜாக்கள், அன்னியர்களுக்கு விருந்தளிக்கையில்கூட அவர்களுடன் உட்கார்ந்து சாப்பிட மாட்டார்கள். சிலர் விருந்து மண்டபத்திற்கு வந்து வரவேற்புப் பிரசங்கம் செய்து விட்டுப் போய் விடுவார்கள். ஒரு சில ராஜாக்கள் அன்னியர்களுடன் பேசியவுடன், "தீட்டுப் பட்டதற்காக" ஸ்நானம் செய்வதுண்டு. ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று தடவை ஸ்நானம் செய்யக் கூடாதென்பதற்காக முதலில் அன்னியர்களுக்கு பேட்டியளித்து விட்டு, பின்னர் ஸ்நானத்திற்குச் செல்லுகிறார்கள்.

ஹிந்து ராஜாக்களில் பெரும்பாலோர் மாமிசம் உண்பதில்லை. முஸ்லிம் ராஜாக்கள் மாமிசம் சாப்பிடுவதுண்டு. எல்லா மாமிசமும் சரியாக கொல்லப்பட்டிருக்க வேண்டும். அதாவது, ஜந்துவின் கழுத்தை வெட்டுகையில் குர் ஆனில் இதற்கென உள்ள பகுதிகளை பாராயணம் செய்ய வேண்டும்.

ராஜா தனக்காக சமைக்கப்பட்டிருப்பதில் கொஞ்சம் தான் சாப்பிடுவார். பாக்கியுள்ளதெல்லாம் அரண்மனையில் சாப்பிடுவதற்காக அமர்த்தப்பட்டிருக்கும் வேலைக்காரர்களுக்குப் போய்ச் சேரும். ஒரு ராஜா பகாசுரப் பேர்வழியாம். வரும் சாப்பாடு பூராவையும் தீர்த்து விடுவார். பாக்கி இருந்தால்தானே அந்த வேலைக்காரர்களுக்குக் கிடைக்கும். இந்த விஷயம் ராஜாவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ராஜா கொம்ப துக்கப்பட்டு, தனக்கு வருவதைப் போல் வேலைக்காரர்கள் ஒவ்வொருவருக்குப் இனி சாப்பாடு கொண்டு வருமாறு உத்தரவிட்டார்.

சில ராஜாக்கள் கோவிலில் விக்ரகங்களுக்கு போடப்பட்டிருப்பதைக் காட்டிலும் அதிகமாக ஆபரணங்களை போட்டுக்கொள்ளுகிறார்கள். ஒரு ராஜா 10 லக்ஷம் பவுண்டு ($1\frac{1}{2}$ கோடி ரூபாய்) மதிப்புள்ள நகைகளையும், ஆடைகளையும் போட்டிருக்கிறார். இது எப்படி சாத்யமாகும் என்று சிலருக்கு சந்தேகம் எழலாம். அவர் போட்டிருந்தவைகளின் ஜாப்தா கீழே தரப்படுகிறது :

தங்கத்தில் 203 விலையுயர்ந்த கற்கள் பதியவைத்த ஒரு ஆபரணம். இதை தலை மேல் வைத்துக்கொள்ளுவது. அழகான சிறகுகளும் இதில் உண்டு. மதிப்பு: 15, 800 பவுண்டு.

ஒரு குஞ்சரம். மதிப்பு : 9, 350 பவுண்டு.

334 வைரக் கற்கள் பதியவைத்த ஒரு கோட். மதிப்பு: 1, 300 பவுண்டுகள்.

172 மரகதக் கற்களும், 1, 742 வைரக் கற்களும் பதியவைத்த பாட்ஜுகள் (தோள்களில் அணிந்துகொள்பவை.) மதிப்பு : 4, 500 பவுண்டு.

ஒரு வைரக்கல் பதியவைத்த ஒரு பின். மதிப்பு: 320 பவுண்டு.

786 வைரக் கற்களும், 90 மாணிக்கங்களும் பதிய வைத்த ஒரு ஸ்டாரும், பாட்ஜும். மதிப்பு: 700 பவுண்டு.

135 வைரக்கற்கள் அடங்கிய ஒரு ப்ரூச். மதிப்பு: 2, 250 பவுண்டுகள்.

ஒரு வைரச் சங்கிலி (கழுத்துக்கு). மதிப்பு: 2, 38, 000 பவுண்டுகள்.

8, 619 முத்துக்களும், 54 மாகதக் கற்களும். 27 மாணிக்கங்களும் பதியவைத்த ஒரு பெல்ட். மதிப்பு: 2, 350 பவுண்டுகள்.

கையிலிருந்து தோள்வரை வரும் ஒரு வளைவு ஆபரணம். இதில் 263 வைரக் கற்களும், 8 மாணிக்கங்களும் உண்டு. மதிப்பு: 525 பவுண்டுகள்.

பித்தான்கள். மதிப்பு: 700 பவுண்டுகள்.

ஒரு மோதிரம். மதிப்பு: 7, 000 பவுண்டுகள்.

450 வைரக்கற்கள் பதியவைத்த ஒரு கெடிகாரம். மதிப்பு: 1, 750 பவுண்டுகள்.

135 வைரங்கள் வைத்த ஒரு சங்கிலி. மதிப்பு: 2, 250 பவுண்டுகள்.

6, 596 முத்துக்கள், 612 வைரக் கற்கள், 26 மாணிக்கங்கள், 48 மாகதக் கற்கள் பதியவைத்த நிஜார்கள். மதிப்பு: 275 பவுண்டுகள்.

6, 800 முத்துக்கள், 62 மாகதக் கற்கள், 92 மாணிக்கங்கள் பதியவைத்த ஜோடுகள். மதிப்பு: 100 பவுண்டுகள்.

இவ்வளவையும் போட்டுக்கொண்டிருக்கும் ராஜா எப்படி ஜ்வலிப்பார் என்பதை கேட்கவும் வேண்டுமா?



(1) ஆப்கனிஸ்தானம் (2) வடமேற்கு எல்லை (3) காஷ்மீர், ஜம்மு (4) பஞ்சாப் (5) பலுசிஸ்தான் ஏஜன்ஸி (6) கெயிர்ப்பூர் (7) ராஜபுதனம் (8) பஞ்சாப் சமஸ்தானங்கள் (9) டில்லி (10) ஐக்ய மாகாணம் (11) நேபாளம் (12) திபேத் (13) சிக்கிம் (14) அஸ்ஸாம் (15) கூச்-பிஹார் (16) வங்காளம் (17) பிஹார் (18) ஒரிஸ்ஸா (19) சோட்டா-நாகபுரி (20) மத்திய இந்திய ஏஜன்ஸி (21) இந்தார் (22) பரோடா (23) கட்ச் (24) மேற்கு இந்திய சமஸ்தானங்கள் (25) பேரார் (26) ஹைதராபாத் (27) பம்பாய் (28) நோவா கோவா (29) மைசூர் (30) பங்களூர் (31) கூடகு (32) சென்னை சமஸ்தானங்கள் (33) சென்னை (34) பஸ்தார் (35) மத்திய மாகாணம் (36) சிலோன்.



இந்தூர் மாஜி மகாராஜா
சர். துக்கோஜிராவ் ஹோல்கார்



ராம்பூர் நவாப்: ஆபரண
அலங்காரத்திற்கு ஒரு உதாரணம்



இந்தூர் மகாராஜா

"இதைப்போல ராஜாவை நம்மாத்து ஸவாத்தில் கொலுவிலே வைச்சா ரொம்ப நன்னியிருக்குமே" என்று தமிழ் நாட்டு ஸ்திரீகளும், குழந்தைகளும் சொல்லுவார்களென்பதில் சந்தேகமில்லை.

* * * * *

ஒரு சமஸ்தான அந்தப்புரத்தில் வேலை செய்து கொண்டிருந்த அழகான அடிமைப் பெண் மீது ராஜாவின் பார்வை விழுந்தது. ராஜாவின் மனைவிகளுக்கும், வைப்பாட்டிகளுக்கும் இது பிடிக்கவில்லை. அந்த அடிமைப் பெண் ஒரு சங்கிலியை திருடி விட்டதாக ராஜாவிடம் புகார் செய்தார்கள். வாஸ்தவத்தில் அவள் ஒன்றையுமே திருடவில்லை. அழகாக இருந்தது ஒன்றுதான் அவள் மீதுள்ள குற்றம். அடிமைப் பெண் திருடியதை தன்னிடம் ஒப்புக்கொள்ள வேண்டுமென ராஜா அவளை துன்புறுத்தினான். அந்த சமயத்தில் அவன் அதிகமாகக் குடித்திருந்ததால் குடி வெறியில் அவளை பலாத்காரப் புணர்ச்சி செய்தான். இதன் விளைவாக அப்பெண் இறந்து போனாள். இந்த விஷயம் அரசியல் ஏஜெண்ட் காதுக்கு எட்டியது. ஆனால் அந்தப்புரத்தில் நடக்கிறவைகளுக்கு சாக்ஷியங்கள் கிடைக்காதாகையால் வழக்கு ஒன்றும் தொடரப்படவில்லை. கடைசியில் ராஜா தன்னுடைய பொக்கிஷத்திலிருந்த பணம் பூராவையும் காலி செய்து விட்டான். சமஸ்தானத்தின் நிதி நிலைமையை சரியாக்க அரசியல் இலாகா ஒரு பிரிட்டிஷ் அதிகாரியை நியமித்தது. ஒரு பெண்ணை கொலை செய்து விட்டோமே என்ற ஏக்கம் அந்த ராஜாவின் மனதை அரித்துத் தின்றது. பிராயச்சித்தம் செய்துகொள்ள காசிக்குப் போவதென முடிவு செய்தான். ஆனால் பணம் வேண்டுமே? ஒளிவு மறைவின்றி

பூரா விஷயத்தையும் அந்த பிரிட்டிஷ் அதிகாரியிடம் சொன்னான். அடுத்த நாள், 'பட்டத்தை உடனே துறந்து விடுக' என்று, அரசியல் இலாகாவிடமிருந்து உத்தரவு வந்தது. அதற்கு ராஜாவும் கீழ்ப்படிந்தான்.

மும்தாஜ் மீது மோகம்

இந்தூர் மாஜி ராஜாவின் விவகாரம் மொம்ப பிரசித்தமானது.

மும்தாஜ் என்பவள் அம்ருதசரஸைச் சேர்ந்தவள். மகாராஜா ரஞ்சித் சிங் அரண்மனையிலிருந்த ராணி மோஹ்ரனின் கொள்ளுப்பேத்தி. இவள் மொம்ப பேஷாகப் பாடுவாள். இந்தூர் அரண்மனையில் உத்தியோகம் கிடைத்தது. மகாராஜா இவள்மீது காதலுற்றார். பிறகு கேட்கவேண்டுமா? அவள் ராணியாகவும் ஆகிவிட்டாள். பெயர் கமலாபாயாக மாறிற்று. ராஜா அவளை அழைத்துக்கொண்டு சர்வதேச சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு வந்தார். ஆனால் மும்தாஜுக்கு ராஜாவிடம் அதிருப்தி ஏற்பட்டது. பம்பாய்க்கு ஓடி, பாவ்லா என்ற மில் சொந்தக்காரை கல்யாணம் செய்து கொண்டாள். ராஜா, மும்தாஜை விட்ட பாடில்லை. தன்னுடைய ராணுவ அதிகாரிகளை பம்பாய்க்கு அனுப்பினார் மும்தாஜை கடத்திக்கொண்டு போவதற்காக. ஒரு நாள் அவள் மலபார் ஹில்லிலிருந்து மோட்டாரில் வந்து கொண்டிருக்கையில், ராஜாவின் ஆட்கள் வழிமறித்தனர். ஆனால், தெய்வாதீனமாக அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்த இரு பிரிட்டிஷ் அதிகாரிகள் ஸ்திரீயின் கூக்குரலைக் கேட்டு ஸ்தலத்திற்கு விரைந்து வந்தனர். சாயடை நடந்தது. இந்த இரு அதிகாரிகளில் ஒருவருக்கு கண்மேற்பட்டது. ராஜாவின் ஆட்கள் பயந்து போய் ஓடி

விட்டனர். பின்னர் பாவ்லாவை கொலை செய்ய சதி செய்யப் பட்டது. சதியும் வெற்றியடைந்தது. பாவ்லா பம்பாயில் நடுத் தெருவில் இந்தூர் ராஜா சர். துக்கோஜி ராவ் ஹோல் காரின் அதிகாரிகளால் கொலை செய்யப்பட்டார். இந்த கொலை சம்பந்தமாக வழக்குத் தொடருவதென மத்திய சர்க்கார் முடிவு செய்தனர். கோர்ட்டில் ஆஜராவதைவிட பட்டத்தைத் துறந்து விடுவதே நல்லதென ராஜா, ராஜ்யாதி காரத்தை துறந்தார். இவர் ஒரு அமெரிக்க ஸ்திரீயையும் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்.

இவருடைய புத்திரன்-இப்பொழுது மகாராஜாவாக இருப்பவர், 1924-வருஷம் ககால் (கோலாப்பூர்) சிற்றரசர் ஒருவரின் புத்திரியை மணந்து கொண்டார். இவர் தமது மனைவியுடன் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்கை யில், மிஸ். மார்க்கரட் லாலர் என்ற ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுடன் பரிச்சயம் ஏற்பட்டது. மனைவி ஐரோப் பாவிலேயே காலமானர். மகாராஜா மிஸ். லாலரை இந்தி யாவுக்கு அழைத்து வந்தார். 1939-ம் வருஷம் மார்ச் மாதம் 27-ந் தேதி விசேஷ தர்பாரை கூட்டி, தான் மிஸ். லாலரை மணம் செய்துகொண்டிருப்பதாக அறிவித்தார். அப்பொழுது அவர் சொன்னதாவது :

" இப்போது என் தேக ஸ்திதியில் முன்னேற்ற மேற்பட்டு விட்டதால், நான் ஐரோப்பாவுக்குப் போகப்போவதில்லை. இங்கேயே இருந்து என்னுடைய முதல் கடமையான பிரஜா சேவை செய்ய உத்தேசித்திருக்கிறேன். ஆனல், என்னுடைய கடமையை சரிவர செய்ய வேண்டுமானல், எனக்கு தேக சுக மும், மனச் சந்துஷ்டியும் இருக்க வேண்டும். இதற்காகத்தான் நான் காதலிக்கும் மிஸ். லாலரை மணந்துகொண்டேன். நாங்கள் இருவரும் இனி பொதுஜன சேவை செய்ய உத்தேசித் திருக்கிறோம். இந்த விவாகத்தினல், சமஸ்தானத்தின் வாரிசு பாத்

யதை எதுவும் பாதிக்கப்பட மாட்டாது. இந்த விவாக ஞாபகார்த்த மாக என் சொந்தப் பணத்திலிருந்து கிராம முன்னேற்ற வேலை களுக்காக வருஷா வருஷம் 1 லட்சம் ரூபாய் கொடுக்கத் தீர் மானித்திருக்கிறேன்."

இதை அறிவித்த ஒரு வாரத்திலெல்லாம், அதாவது ஏப்ரல் 2-ந் தேதி, மகாராஜாவின் ஐரோப்பிய மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

* * * *

வெள்ளைக்காரிகளை மணந்துகொள்ளுவதில் இந்திய ராஜாக்களில் சிலருக்கு ஒரு 'மேனியா' உண்டு போல் தோன்றுகிறது. கபூர்தாலா மகாராஜாவும் ஒரு அங்கிய ஸ்திரீயை-ஸ்பானிஷ் ஸ்திரீயை-மணம் செய்துகொண்டிருக் கிறார்.

* * * *

அரண்மனைகளில் ஸ்திரீகளுக்குள்ள செல்வாக்கைப் பற்றி ஒரு ரெவிடெண்டே பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"அரண்மனையில் ஸ்திரீகள் குழாமில் நடக்கும் சூழ்ச்சியின் விளைவாக, சமஸ்தானத்திற்கு பல வருஷங்களாக சேவை செய்து வந்த பலர் நாசமாயிருக்கிறார்கள். ராஜா அந்தப்புரத்தில் நுழைந்த பின், அவரை சந்திக்க முடியாமலிருப்பதால் சமஸ்தான விவகாரங் கள் பட்டுவாடா செய்யப்படாமல் நாள் கணக்கில் காத்துக்கொண் டிருக்க வேண்டியிருக்கிறது. அந்தப்புர வாசலில், காவலிருப்பவர் களும் ஸ்திரீகளே என்று பிரபல பிரதம மந்திரிகள் என்னிடம் கூறியிருக்கிறார்கள்."

* * * *

7, 8 வருஷங்களுக்கு முன் ஒரு ராஜாவின் அந்தப் புர ஸ்திரீகள் ஒரு டாக்டரை செருப்பாலும், தடிகளாலும் அடித்து விட்டனர். டாக்டர் மூர்ச்சையாய்ப் போய் விட்டார். ராஜாவின் குழந்தைக்கு இவர் வைத்தியம்

பார்த்தார். குழந்தை தவறிப் போய்விட்டது. அதற் காகவே இந்த ஸ்திரீகளிடம் அடிபட்டார்!

* * * *

ஒரு மகாராஜாவின் பார்வை ஒரு குடும்ப ஸ்திரீயின் மேல் விழுந்தது. ராஜாவின் ஆட்கள் இரவில் அந்த ஸ்திரீயின் கணவனைகொலைசெய்து, அவளை அரண்மனைக்குக் கொண்டு வந்தார்கள். அவளோ பதிவிரதை. ராஜாவின் இச்சைக்கு சம்மதிக்கவில்லை. இதனல் அவளை பலாத் காரப் புணர்ச்சி செய்யுமாறு ராஜா, 10 பேர்களுக்கு உத்தரவிட்டார். உத்தரவும் நிறைவேற்றப்பட்டது. பின் னர் அவள் கழுத்து வெட்டப்பட்டு, பிரேதம் கிணற்றில் வீசப்பட்டது. இதை கண்டித்த மந்திரிக்கு வேலை போயிற்று.

* * * *

காலஞ்சென்ற ஜோத்பூர் மகாராஜா 3,000 ஸ்திரீ களை தன்னுடைய அரண்மனையில் வைத்திருந்தார். அவரு டைய உத்யோகஸ்தர்கள், சிப்பந்திகள், ஆடுகள், மாடுகள், காய்கள் இவைகளைச் சேர்த்தால்கூட எண்ணிக்கை 3, 000 க்கு வருமா என்பது சந்தேகம்.

* * * *

நிஜாமின் அந்தப்புரத்தில் அவ்வளவு இல்லை. இரு நூறு ஸ்திரீகள்தான் இருந்தார்கள்.

* * * *

திவான்களுக்கு எப்போப்பட்ட வேலைகளெல்லாம் கொடுக்கப்படுகிறதென்பதை "பிரின்ஸ் ஆப் இந்தியா" என்ற பத்திரிகையில், 1929-வது வருஷம் ஜனவரி மாதம் 15-ந் தேதி இதழில் வெளி வந்துள்ள ஒரு கடிதம் தெளி வாக்குகிறது :

"உமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீரே, அந்த இரண்டு உருப்படியையும் கொண்டு வந்து விடும். அவர்கள் ரொம்ப அழகாகத்தான் இருக்க வேண்டும். என்னை திருப்தி செய்வதற்காக அவர்களை நீர் கொண்டு வந்தால், உம்மை ஒரு விசுவாச சேவகராக கருதுவேன்,"

என்று மகாராஜா 1928-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 28-ந் தேதி திவானுக்கு ஒரு கடிதமெழுதினார். இக் கடிதத்தின் நகலை ராஜாவிடம் வேலை பார்த்து, ஆனால் ராஜாவின் நடத்தை பிடிக்காமல் ராஜீனாமாச் செய்த ஒரு அதிகாரி மேற்கண்ட பத்திரிகைக்கு அனுப்பினார்.

* * * *

மகாராணியே சொல்லுகிறாள்!

ஒரு ராஜாவின் அந்தப்புர விவகாரங்களைப்பற்றி ஒரு மகாராணி 1927-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 'பம்பாய் கிராணிகள்' பத்திரிகைக்கு எழுதிய கடிதம்:

"நாங்கள் எவ்வளவு காட்டுமிராண்டித்தனத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது தெரியுமா? ஆப்ரிக்கக் காடுகளில்கூட இப்படி நடப்பதில்லை. எங்கள் எஜமானரின் பொம்மைகளாகவே இருக்கிறோம். நேபாள சர்க்கார் சில ஆயிரக்கணக்கான அடிமைகளை விடுவித்ததுபற்றி அரசியலில் சிரத்தையுள்ள நீங்கள் மகிழ்ச்சி யடைகிறீர்கள். ஆனால் உங்களுக்குப் பக்கத்திலேயே வசிக்கும் உங்கள் சொந்த சகோதரிகளின் கேவலமான நிலை உங்களுக்குத் தெரிவதில்லையா?"

* * * *

ராஜபுதனத்திலுள்ள ஒரு சமஸ்தானத்தின் ராஜா

காலமானதால், 4,000 ஸ்திரீகள் விதவைகளாய் விட்டதாக ஒரு பிரபல பொதுஜன ஊழியர், 10 வருஷங்களுக்கு முன்னல் ஆஜ்மீர் பிரமுகர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் கூறினர்.

* * * *

ஒரு ராஜா தன்னுடைய வெள்ளைக்கார காரியதரிசியின் புத்திரியுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தார். இதன் விளைவாக ஒரு குழந்தையும் பிறந்தது. காரியதரிசி தன் பெண்ணையும், அவள் குழந்தையையும் கப்பலேற்றி, இங்கிலாந்துக்கு அனுப்பினர். உடனே காரியதரிசிக்கு மந்திரிப் பதவி கிடைத்தது!

* * * *

தென்னிந்திய சமஸ்தானமொன்றின் திவான் அவருடைய பெண்ணை அரண்மனைக்கு அனுப்ப மறுத்ததின் விளைவாக, ராஜாவின் கோபத்திற்கு ஆளாகி விட்டார். திவான் சமஸ்தான பணத்தை கையாடியதாக ஒரு வழக்கை ஜோடிக்குமாறு ராஜா, போலீஸ் இலாகாவுக்கு உத்திரவிட்டார். ஆனல், போலீஸ் தலைமை அதிகாரி திவானின் சிநேகிதராதலால் அவரிடம் விஷயத்தை தெரிவித்து விட்டார். உடனே திவான் அந்த சமஸ்தானத்திற்கு பெரிய கும்பிடு போட்டு விட்டு, அடுத்த நிமிஷத்தில் குடும்ப சகிதமாக பிரிட்டிஷ் எல்லையில் நுழைந்தார்.

* * * *

1927-ல் ஒரு மகாராணி 'பம்பாய் கிரானிகள்' பத்திரிகையில், ராஜாக்களுக்கு வந்துள்ள அழிவு காலத்

தைப்பற்றி எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :

"இந்திய ராஜாக்களுக்கு என்ன வந்திருக்கிறதென்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். நாடு பூராவும் உயர்ந்த லக்ஷியங்களுக்கு பாடுபட்டு, முன்னேற முயற்சித்துக் கொண்டிருக்கையில், பல ராஜாக்களின் நிர்வாகம் நாளுக்கு நாள் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிக்கொண்டு' வருகிறது. அவர்களுடைய ஜனங்களுக்கு கோபாவேசம் வருகிறது. ஆனால் ராஜாக்கள் இதை ஏன் பொருட்படுத்துகிறார்கள்! (ஆதிபத்திய) சர்க்கார் சமஸ்தான விவகாரங்களில் தலையிடுவதில்லை. ஒரு வேளை ராஜாக்களே தங்களுக்கு குழி தோண்டிக்கொள்ளட்டும் என்கிற நினைப்போ என்னமோ!"

* * * *

இதற்கெல்லாம் ராஜாவின் மீது குறை கூறுவதில் பிரயோசனமில்லை. சிறு வயதிலிருந்தே இவர்கள் பொது ஜனங்களுடன் பழகுவதில்லை. இவர்களின் படிப்புக்காகவென்றே, இந்தியாவில் நான்கு ஊர்களில் காலேஜ்கள் இருக்கின்றன. எனவே, படிக்கிற காலத்தில்கூட இதர ராஜாக்களின் பையன்களைத் தவிர வேறு யாரையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஒரு ராஜா மைனராயிருந்தால் அவருக்கு கல்வி கற்று வைக்கும் பொறுப்பு ஆதிபத்திய சர்க்காரின் ஏகபோக உரிமையாக இருக்கிறது. வேறு யாரும் ராஜாவுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடாதென்பது சர்க்காரின் உத்தரவு.

இந்த ராஜ குமாரர்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் நியமிக்கும் வாத்தியார்கள், பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதாபத்தையும், அவர்கள் இந்நாட்டை விட்டுப்போனால் இந்திய ராஜாக்களின் பாடு அதோ கதிதான் என்பதையும்

தவிர வேறு உருப்படியாக எதை சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்?

மேலும், ராஜாக்களுக்கு, அவர்கள் நாட்டை பாது காக்கும் பொறுப்பைக் கொடுக்காமல், வெறும் அதிகாரம் மாத்திரம் தரப்பட்டிருக்கிறது. இதனால் சோம்பேறித் தனமும், அத்துடன் காமக் குரோதங்களும்தான் வளரு கின்றன. பிரஜைகளின் க்ஷேமத்தை கொஞ்சம்கூட கவனிப் பதில்லை. ராஜாக்களின் நடத்தைக்கு பிரிட்டிஷ் சர்க்கார் தான் ஜவாப்தாரி என்பதில் சந்தேகம் இருக்கிறதா?

———

அத்தியாயம் 10

வில்லங்கங்களும், தலையீடுகளும்

முதல் இந்திய சுதந்திர யுத்தத்தின் விளைவாக, பிரிட்டிஷார் ஒரு பாடம் கற்றுக்கொண்டார்கள். தங்களுக்கு ஆதிக்கம் இனியும் இந்தியாவில் இருக்க வேண்டுமானால், சமஸ்தானங்களை அபகரிக்காமலே, தங்களுடைய சுயநலன்களுக்கு இந்திய ராஜாக்களை பாதுகாப்பாளர்களாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தனர். ஆனால் அன்றுட விஷயங்களில் கூடத் தலையிட்டே வந்தனர், "சமஸ்தான சர்க்காரின் உள்நாட்டு விவகாரங்களில் கிழக்கிந்திய கம்பெனியின் எந்த அதிகாரியும் தலையிட மாட்டார்" என்று கம்பெனி, குவாலியர் மகாராஜாவுக்கு எழுதிக் கொடுத்திருப்பது உண்மையே. இதைப்போல ஒப்பந்தம் ஹைதராபாத், இந்தூர், உதயபூர் ராஜாக்களுடனும் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் ஒப்பந்தங்களில் கையெழுத்துப்போட்ட நிமிஷத்திலிருந்தே, பிரிட்டிஷார், சமஸ்தானத்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட ஆரம்பித்து விட்டனர் என்பதற்கு எவ்வளவோ அத்தாட்சிகள் இருக்கின்றன.

"உடன்படிக்கைகள்படி சமஸ்தானாதிபதிகளுக்கு அவர்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் பூர்ண ராஜாங்க உரிமை இருக்கிற போதிலும், ஒவ்வொரு விஷயத்திலும் பிரிட்டிஷ் சர்க்கார் தலையிட வேண்டியது அவசியமாய் விட்டது,"

என்று, வெல்லெஸ்லி 1806-ம் வருஷத்திலேயே கூறியிருக்கிறார்.

பிரிட்டிஷ் சர்க்கார் அவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்து சமஸ்தானங்களில் தலையிட்டிருப்பதை அயோத்தி விஷயத்தில் பார்த்தோம்.

சர். ஜார்ஜ் காம்பெல் என்பவர் 1852-ம் வருஷம் எழுதியிருப்பதாவது :

"ஒப்பந்தங்களே யெல்லாம் மீறி நாம் இந்திய சமஸ்தான விவகாரங்களில் தலையிட்டு வருகிறோம். உள்நாட்டு விவகாரங்களில் நாம் தலையிடாத சமஸ்தானங்கள் ஒன்றுகூட இல்லை. ஒரு திட்டமான முறையை நாம் பின்பற்றுவதில்லை. எதில் தலையிடுகிறோம், எதில் தலையிடுவதில்லை என்பதை ஸ்பஷ்டமாகக் கூற முடியவில்லை."

பிரிட்டிஷ் உரிமைபற்றி லார்டு கானிங்

சமஸ்தான விவகாரங்களில் தலையிட பிரிட்டிஷ் சர்க்காருக்குள்ள உரிமைபற்றி கவர்னர்-ஜெனரல் லார்டு கானிங் 1860-ம் வருஷம், ஏப்ரல் மாதம் 30-ந் தேதியன்று பின் வருமாறு எழுதியிருக்கிறார் :

"சமஸ்தான சர்க்கார்கள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதால் குழப்பங்கள் ஏற்படலாம். நாட்டில் ஒரு பாகத்தில் கலகம் ஏற்படும்போல் கூட இருக்கலாம். அப்போர்ப்பட்ட நிலைமையில் சமஸ்தானத்தின் நிர்வாகத்தை தற்காலிகமாக கவனிப்பது இந்திய சர்க்காரின் உரிமையாகும். ராஜாக்களுக்கு சன்னது கொடுப்பதால் இந்த உரிமை போய்விட்டதாக யாரும் நினைக்கக்கூடாது. இந்த அதிகாரத்தை நாம் அடிக்கடி உபயோகித்திருக்கிறோம். இது மிகவும் அவசியமான அதிகாரமாகையால், இந்திய சர்க்காரிடம் இது இருந்து வரவேண்டும். தலையிடும் அவசியம் எப்பொழுது நேரிடுகிறது என்பதை வைசிராயைத் தலைவராகக்கொண்ட இந்திய சர்க்காரின் நிர்வாகக் கவுன்சிலுக்கு மாத்திரம் உரிமையுண்டு. இந்த கவுன்சில் செய்தது

தவறு என்று கூற பிரிட்டிஷ் பார்லிமென்டுக்குத்தான் அதிகார முண்டு."

1860-ம் வருஷம், மே மாதம் 5-ந் தேதி பிரிட்டிஷ் சர்க்கார், பாட்டியாலா மகாராஜாவுக்கு சன்னது வழங்கினர்கள். அதன்படி மகாராஜாவுக்கும், அவர் சந்ததிகளுக்கும், அவருடைய எல்லையில் உள்ள பூர்ண ராஜ்யாதிகாரத்தை பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரித்தார்கள். அந்த சமஸ்தானத்தைச் சேர்ந்த எந்த பிரஜையிடமிருந்தும் புகார்களை ஏற்றுக்கொள்ளுவதில்லை யென்று வாக்களித்தனர். பிரஜைகளின் நன்மையை அபிவிருத்தி செய்யவும், பிரஜைகளுக்கு நியாயம் வழங்கவும் கட்டுப்பட்டிருப்பதாக பாட்டியாலா ராஜா எழுதிக் கொடுத்தார். அதாவது ராஜா அவருடைய பிரஜைகளை சரியாக கவனிக்கவில்லை யென்று ஆதிபத்திய சர்க்கார் கருதினால், உடனே சமஸ்தான விவகாரங்களில் தலையிட ஆதிபத்திய சர்க்காருக்கு உரிமை யுண்டென்பதை இது தெளிவாக்குகிறது.

சமஸ்தானத்தை ஆள யோக்கியதையில்லை யென்ற காரணத்திற்காக மைசூர் ராஜா 1831-ல் சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டார்.

1835-ம் வருஷம் இந்தூரில் ஜனங்கள், சர்க்காரை தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்தனர். இதை ராஜாவால் சமாளிக்க முடியவில்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் உதவியை நாடினர்.

"கிளர்ச்சி, உங்கள் நிர்வாக ஊழலாலேயே ஏற்பட்டிருக்கிறது. எனவே உமது ஆட்சியை பாதுகாக்க முடியாது,"

என்று பிரிட்டிஷ் சர்க்கார் பதிலளித்து விட்டது.

காஷ்மீரில் இழக்கிந்திய கம்பெனி செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில், சமஸ்தானத்திற்குள் ராஜாவின்

பூர்ண ராஜ்யாதிகாரத்தை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது. இருந்த போதிலும் பிரிட்டிஷ் சர்க்கார், அந்த ராஜாவுக்கு பின்கண்ட கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது :

"ராஜாக்கள் அவர்கள் பிரஜைகளுக்குச் செய்யும் அக்கிரமங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் கண்மூடித்தனமாக உதவி செய்வார்களென எண்ண வேண்டாம். பிரிட்டிஷ் சர்க்கார் எடுத்துக்காட்டிய பின்பும், ராஜா சிர்திருந்தாவிட்டால், பிரிட்டிஷ் சர்க்கார் நேரடியாக தலையிட வேண்டியிருக்கும். பிரஜைகளின் அபிமானத்தையும் விசுவாசத்தையும் கொடுங்கோலாட்சியால் இழந்து விட்ட ராஜாக்களுக்கு அடங்கி நடக்கும்படி பிரிட்டிஷ் சர்க்கார் அந்த பிரஜைகளை வற்புறுத்த வேண்டிய கடமை யெதுவுமில்லை."

ஐந்து வித கடமைகள்

பிரிட்டிஷ் சர்க்கார் தனது ஐந்து வித கடமைகளை அநுசரித்து, சமஸ்தான விவகாரங்களில் தலையிடும் உரிமையை உபயோகித்திருப்பதாக சமஸ்தான விஷயங்களை நன்கறிந்த லீ வார்னர் கூறுகிறார். அந்த ஐந்து வித கடமைகள் பின்வருமாறு :

(1) சமஸ்தானத்தை துண்டுபடுத்தக்கூடிய சம்பவங்களைத் தடுக்கத் தலையிடுவது.

(2) சமஸ்தானங்களில் புரட்சியைத் தடுக்கத் தலையிடுவது.

(3) மோசமான ஆட்சியைத் தடுக்கத் தலையிடுவது.

(4) மனிதத் தன்மையற்ற வழக்கங்களைத் தடுக்கத் தலையிடுவது.

(5) மத உரிமைக்கு ஆபத்து வருவதைத் தடுக்கத் தலையிடுவது.

1921-ல் மீவாரில் மோசமான ஆட்சியிருந்ததற்காக ராஜா பட்டத்திலிருந்து நீக்கப்பட்டார்.

சில பிற்போக்கான பழக்க வழக்கங்களை ஒழிக்கவும் ஆதிபத்ய சர்க்கார் சமஸ்தான விவகாரங்களில் தலையிட்டிருக்கிறது. பல வருஷங்களுக்கு முன் ஆதிபத்ய சர்க்கார் கட்ச் சமஸ்தான விவகாரங்களில் தலையிட்டு, சமஸ்தானத்தில் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதை சட்ட பூர்வமாகத் தடை செய்ய வேண்டுமென மகாராஜாவுக்கு 'யோசனை' கூறியது. இதற்கு மகாராஜா இணங்கி உடனே சட்டம் இயற்றினர். அமெரிக்காவுடன் செய்து வந்த அடிமை வர்த்தகத்தையும் நிறுத்திக்கொண்டார்.

உடன்கட்டை யேறும் பழக்கத்தின் மீது எல்லா ராஜாக்களும் பிரிட்டிஷ் சர்க்கார் யோசனையின் பேரில் தடை விதித்தனர். கொடூரமான தண்டனைகள் விதித்து வந்த ராஜாக்கள் இனி அதைப் போல செய்வதில்லை என எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

ராஜாக்கள், தங்களுடைய சமஸ்தானங்களில் தங்களுக்கு பூர்ண ராஜ்யாதிகாரம் உண்டு என்று எவ்வளவுதான் பறைசாற்றினாலும், சமஸ்தான பிரஜைகளின் நன்மைக்காக தலையிடும் உரிமை பிரிட்டிஷ் சர்க்காருக்கு வருஷக்கணக்காக இருந்து வந்திருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. அப்போர்ப்பட்ட தலையீடுகளுக்கு ராஜாக்களே ஆளாயிருக்கிறார்கள் என்பதை அவர்களே நன்கு உணருவார்கள். எனவே, "எங்கள் இஷ்டப்படிதான் பிரஜைகளை நடத்துவோம். பிரிட்டிஷ் சர்க்கார் எங்கள் சமஸ்தான விவகாரத்தில் தலையிடக்கூடாது" என்று இவர்கள் சொல்லுவது வெறும் அர்த்தமற்ற பேச்சு.

ராஜாக்களின் ஆட்சி எப்படியிருக்க வேண்டுமென பிரிட்டிஷ் சர்க்கார் பல முறை கூறியிருக்கிறார்கள்.

பரஸ்பர கடமைகள்

1932-ம் வருஷம் ராஜாக்கள் சபையில் ஆதிபத்ய சர்க்கார் கடமைபற்றியும், ராஜாக்களின் கடமைபற்றியும் வைசிராய் பேசியதாவது :—

"ராஜாக்கள் உடன்படிக்கைகள், சன்னதுகள் மூலம் பெற்றுள்ள உரிமைகளையும், சலுகைகளையும் பாதுகாக்க வேண்டியது பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதியாகிய வைசிராயின் கடமையாகும். அவசியமேற்பட்டால் எந்த ராஜாவுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டும்; அதே சமயத்தில் பிரஜைகளின் யோகக்ஷேமத்திற்காகவும், நன்மைக்காகவும் சமஸ்தானங்களை நிலையான, திருப்திகரமான, முற்போக்கான விதத்தில் நிர்வகிக்க வேண்டியது ராஜாக்களின் கடமையாகும். அப்படிச் செய்தால் ஒப்பந்தப்படியுள்ள அவர்களின் நிலைமை பலப்படும். இதனால் பிரிட்டிஷ் மன்னருடைய தீவிர பாதுகாப்புக்கு அவசியமேற்படாதென நம்புவோமாக!"

கொடுங்கோலாட்சிக்கு இடமில்லை

சமஸ்தான நிர்வாகத்தில் ஆதிபத்ய சர்க்காருக்குள்ள பொறுப்பைப்பற்றி லார்டு கர்ஸான் சொல்லியிருப்பதை கவனிப்போம் :

"ஒரு சுதேச சமஸ்தானாதிபதி பொறுப்பற்ற கொடுங்கோலனாக இருக்கக்கூடாது. அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை சரியான வழியில் உபயோகிக்க தனக்கு யோக்கியதை இருக்கிறதென்பதை அவர் காண்பிக்க வேண்டுமேயொழிய, அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அவர் பிரஜைகளின் சேவகராகவும், எஜமானராகவும் இருக்க வேண்டும்; அவருடைய வருமானங்களெல்லாம் அவருடைய சொந்த இச்சைகளை திருப்தி செய்ய வசூலிக்கப்படவில்லை, ஆனால் பிரஜைகளின் நலனுக்காக வசூலிக்கப்படுகிறதென்பதை அவர் கற்றுக்

கொள்ள வேண்டும். நிர்வாகம் எவ்வளவுக்கெவ்வளவு நேர்மையாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பிரிட்டிஷார் தலையீடு இல்லாமலிருக்குமென்பதையும், தெண்டு போடப்பட்டிருக்கும் சிம்மாசனம் சோம்பேறித்தனமாக உட்காரும் இடமில்லை என்பதையும், அது, அப்படியுக்கில்லாமல் கடமையைச் செய்ய உட்காரும் இடம் என்பதையும் உணர வேண்டும். அவர் 'போலோ' மைதானத்திலோ அல்லது குதிரைப் பந்தய மைதானத்திலோ, அல்லது ஐரோப்பிய ஹோட்டலிலோ தெரிந்திருந்தால் மாத்திரம் பிரயோசனமில்லை. அவருடைய உண்மையான வேலையும், கடமையும் அவருடைய பிரஜைகளிடையே தானிருக்கிறது இந்த நிபந்தனைகளைக் கொண்டுதான் அவரைப்பற்றி ஒரு முடிவான அபிப்பிராயம் கொள்ளுவேன்".

1920-ம் வருஷம் இந்தியாவில் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டு இந்திய ராஜாக்கள் பயந்து போனார்கள். பிரிட்டிஷ் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பதாயிருந்தால், இந்திய பிரதிநிதிகள் அடங்கிய இந்திய சர்க்காரிடம் ராஜாக்களைப்பற்றிய விவகாரங்களை விட்டு விடக்கூடாதென்று கூச்சல் போட்டார்கள். அதாவது பிரிட்டிஷ் மன்னரிடமுள்ள ஆதிபத்ய அதிகாரத்தை இந்திய சர்க்காரிடம் மாற்றக்கூடாதென்றனர். இது எவ்வளவு வேடிக்கையாகயிருக்கிறது? எங்களுக்கு எஜமானர் வெள்ளைக்காரர்கள்தான். அவர்களுக்குத்தான் அடிமைகளாயிருப்போம், எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டாம், என் பிரஜைகளுக்கும் வேண்டியதில்லை என்று சொல்லுவது போலிருக்கிறதல்லவா? ராஜாக்களின் இக்கூற்றை இந்தியர்கள் அனைவரும் ஒரு முகமாக கண்டிக்க ஆரம்பித்தனர். எரிகிற வீட்டில் எண்ணெயை விட்டதைப் போல் இந்திய ஹோம் மெம்பர் சர். மால்காம் ஹெயிலி, 1926-ல் ராஜாக்களின் வேண்டுகோளை ஆதரித்

தார். "இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பதாயிருந்தால், அதாவது வெள்ளையரது ஆட்சி இங்கிருந்து போவதாய் இருந்தால், பிரிட்டிஷ் சர்க்கார் தன்னுடைய ஒப்பந்தக் கடமைகளை இந்திய ராஜாக்களுக்கு நிறைவேற்ற முடியாமற் போய்விடுமே! தன் கடமைகளை நிறைவேற்ற பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிக்கம் இந்தியாவில் இருக்கத்தான் வேண்டும். யாருக்கும் சுயராஜ்யம் தரப்போவதில்லை" என்றார். இதைக் கேட்ட பின் இந்தியர்களின் ஆத்திரம் பன்மடங்கு அதிகரித்தது. இதைக் கண்ட ராஜாக்கள், இதென்ன 'கிணறு வெட்ட பூதம் கிளம்பிற்றே' என்று இன்னும் அதிகமாக பீதியடைந்தார்கள். எதற்காக? இந்திய பிரதி நிதிகளிடம் ஆதிபத்ய அதிகாரம் மாறினால், ராஜாக்கள் தங்கள் சுகபோகத்திற்காக கணக்கு வழக்கின்றி செலவு செய்து கொண்டிருக்க முடியுமா? உலக யாத்திரை செய்து கொண்டே இருக்க முடியுமா? தங்க கில்ட், வெள்ளி கில்ட் கொடுத்த மோட்டார்களை வைத்துக்கொள்ள முடியுமா? உலகத்திலேயே பிரசித்திபெற்ற சூதாட்ட மடமாகிய மாண்டி கார்லோவுக்குப் போகமுடியுமா? நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் குடிகளிடமிருந்து அளவுக்கு மிஞ்சிய வரியை வசூலித்து, இங்கிலாந்துக்கு கிரிக்கெட் கோஷ்டிகளையும், டேவிஸ் கப் பந்தயத்திற்கு டென்னிஸ் கோஷ்டிகளையும் கொண்டு போக முடியுமா? முடியாது. இதனால்தான் பயந்தார்கள். தங்களுக்கும் ஆதிபத்திய சர்க்காருக்கும் உடன்படிக்கைகளடியுள்ள உறவை நிர்ணயிக்கவேண்டுமென பிரிட்டிஷ் சர்க்காரை வேண்டிக் கொண்டார்கள்.

பட்லர் கமிட்டி

1928-ம் வருஷம் பிரிட்டிஷ் சர்க்கார், சர். ஹார் கோர்ட் பட்லரை தலைவராகக்கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தனர். சர். பட்லர், இந்தியாவில் கவர்னரா யிருந்து ரிடையரான பேர்வழி. இவரைத் தவிர கமிட்டி யில் லிட்னி பீலும், ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை சட்ட புரொபஸர் ஹோல்ட்ஸ்வொர்த்தும் மெம்பர்கள். இந்தக் கமிட்டியின் முன் ராஜாக்களின் சார்பாக ஆஜரான ஆங்கி லேய வக்கீல் லெஸ்லி ஸ்காட் (பிரிட்டனிலிருந்து தருவிக் கப்பட்டவர்) சொல்லியதாவது :

"உடன்படிக்கைகளின்படி ஏற்படும் கடமைகளை பிரிட்டிஷ் மன்னர் வேறு யாருக்கும் மாற்ற முடியாது. எல்லா சமஸ்தானங் களின் பாதுகாப்பையும் பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக் கிறது ; அந்த கடமையைச் செய்வதற்கு போதுமான ராணுவ பலத்துடன் இந்தியாவில் இருந்து வரவும் ஒப்புக்கொண்டிருக் கிறது. இந்த பொறுப்புகளை வேறு சர்க்காரிடம் பிரிட்டிஷார் ஒப்படைக்க முடியாது. உதாரணமாக, பிரான்ஸ், ஜப்பான் முதலிய அன்னிய நாட்டு சர்க்கார்களிடமாவது, அல்லது ஆஸ்தி ரேலியா, கானடா முதலிய டொமினியன் சர்க்காரிடமாவது ஒப் படைக்க முடியாது. அதைப்போல இந்திய சர்க்காரிடமும் ஒப் படைக்க முடியாது."

இந்தக் கூற்று இந்தியர்களின் ஆத்திரத்தைக் கிண்டி விட்டது. சர்வகக்ஷி மகாநாட்டுக் கமிட்டி (நேரு கமிட்டி) 1928-ம் வருஷத்தில் வெளியிட்ட தன்னுடைய ரிப்போர்ட்டில், லெஸ்லி ஸ்காட்டின் வாதத்தை பலமாகக் கண்டித்திருக்கிறது. யார் கண்டித்தாலென்ன ? பிரிட்டிஷ் சர்க்கார், ஸ்காட்டின் வாதத்தையே ஒப்புக்கொண்டனர்.

பட்லர் கமிட்டியும், சைமன் கமிஷனும், கூட்டுக் கமிட்டியும் இந்த வாதத்தை அங்கீகரித்தன. கமிட்டிகளின் இந்த முடிவு இந்திய சர்க்கார் சட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அயர்லாந்தில் ஒரு அல்ஸ்டர்தான் இருக்கிறது. ஆனால் இந்தியாவில் மேலே கூறப்பட்ட கமிட்டிகள் அனேத்தும் ஒன்று சேர்ந்து, 562 அல்ஸ்டர்களை சிருஷ்டித்து விட்டன.

பிரஜைகளின் கோரிக்கை

பட்லர் கமிட்டி மூன் இந்திய சமஸ்தான பிரஜைகளின் பிரதிநிதிகள் கூறியதையும் கவனிப்போம். அவர்கள் கொடுத்த சாக்ஷியத்தின் முக்கியமான பகுதியாவது :

" இந்திய ராஜாக்களெல்லாம் ஜனங்களின் டிரஸ்டிகளாகையால், அவர்கள் 75 வருஷமாக ஆட்சி புரிந்து வந்திருப்பதில் எப்படி தங்களுடைய கடமைகளைச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை விசாரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த ராஜாக்கள் தங்களுடைய சமஸ்தான விவகாரங்களில் தங்களுக்கு பூர்ண சுதந்திரம் வேண்டுமென்கிறார்கள். இந்த சலுகையைப் பெற அவர்கள் ஆசைப்படு முன், சரியாக ஆட்சி புரிவதன் மூலம் இந்த சலுகையைப் பெற தங்களுக்கு யோக்கியதை இருக்கிறதென்பதை நிரூபிக்க வேண்டியது அவர்கள் கடமையாகும். சமஸ்தானங்களுடன் இப்பொழுதுள்ள உறவை திருத்துமுன், இதைப் போல விசாரணை செய்ய வேண்டித்தான் இருக்கிறது. சமஸ்தான விவகாரங்களில் இன்னம் அதிக சுதந்திரம் பெற இந்திய ராஜாக்களுக்கு எவ்வளவு யோக்கியதை யிருக்கிறது என்பதை அவர்களுடைய ஆட்சியுடன் நெருங்கிய சம்பந்தமுள்ளவர்களின் (பிரஜைகளின்) சாக்ஷியத்திலிருந்து அறிந்துகொள்ள வேண்டியது ஆதிபத்திய சர்க்காரின் கடமையாகும். அதற்குத் தகுந்தாற் போல்தான் பிரிட்டிஷாரின் பிடிப்பு தளர வேண்டும். ராஜாக்கள்

அவர்களுடைய சமஸ்தானங்களை எப்படி நிர்வகித்திருக்கிறார்கள் என்பதை விசாரித்து தெரிந்துகொள்ளாமல், அவர்களுக்கு ஏதேனும் சலுகைகள் அளிக்கப்பட்டால், பிரஜைகளின் நலன்களுக்கு குந்தகமேற்படும். சுதேச மன்னர்களை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியை நிர்வகிக்க பிரிட்டிஷ் சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் என்றே, அல்லது பெரிய பரம்பரை அதிகாரிகள் என்றே கருதலாம். (இந்திய அரசியல் இலாகாவில் வேலை பார்த்த டப்பர் என்ற அதிகாரி இப்படி ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.) இந்த ஏஜெண்டுகளை, 'எப்படி நிர்வாகம் செய்திருக்கிறீர்கள்?' என்று கேட்க வேண்டியது அவசியமாயிருக்கிறது."

பட்லர் கமிட்டி, ஆதிபத்திய அதிகாரம் பிரிட்டிஷ் மன்னரிடம் தான் இருக்கிறதென்றும், இந்திய சர்க்காரிடம் இல்லையென்றும், விஸ்வாசத்தை பிரஜைகளுக்கு ஜவாப்தாரியாயுள்ள இந்திய சர்க்காருக்கு மாற்றுமாறு ராஜாக்களை நிர்ப்பந்திக்க முடியாதென்றும் ஒரு அடிப்படையான கொள்கையை நிர்ணயித்தார்களே யொழிய, பிரஜைகளின் உண்மையான கோரிக்கைகளை லட்சியம் செய்யவில்லை.

ஆதிபத்திய அதிகாரத்திற்கும் உடன்படிக்கைகளுக்கு முள்ள சம்பந்தத்தைப்பற்றி பட்லர் கமிட்டி கூறியதாவது:

"உடன்படிக்கைகள், காலத்திற்கேற்றவாறு அரசியல் அநுஷ்டானத்தால் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது; விளக்கப்பட்டிருக்கிறது. ஆதிபத்திய சர்க்கார் இனியும், ஆதிபத்திய அதிகாரம் உடையதாகவே இருக்க வேண்டும். இந்த அதிகாரத்தை வரையறுத்து, நிர்ணயிப்பது முடியாத காரியம்."

ராஜாக்கள் அவர்களுடைய பிரஜைகளின் கோரிக்கைகளுக்கு இணங்கி சீர்திருத்தங்கள் அளிக்க வேண்டியதைப் பற்றி கமிட்டி கூறியது, ராஜாக்களை கதிகலங்கச் செய்து விட்டது.

"சர்க்காரின் ஆட்சி முறையை மாற்ற நடக்கும் அரசியல் கிளர்ச்சியால், ராஜாவின் சிம்மாசன உரிமைக்கே ஆபத்து வரும் போல் இருந்தால், ராஜாவின் உரிமைகளையும், சலுகைகளையும், அந்தஸ்தையும் நிலைநாட்ட வேண்டியது ஆதிபத்திய சர்க்காரின் கடமையாகும். ஆனால், ராஜா தன் பட்டத்தை இழக்காமல் அளிக்கக்கூடிய சீர்திருத்தங்களை அமலுக்குக் கொண்டுவந்து பிரஜைகளின் கோரிக்கையை திருப்தி செய்ய வேண்டும் என்று யோசனை கூறுவதும் (கட்டளையிடுவதும்) ஆதிபத்திய சர்க்காரின் கடமையாகும்."

போட்டி விசாரணைக் கமிட்டி!

பிரிட்டிஷ் மன்னர் இந்திய சமஸ்தானங்களின் பிரஜைகளுக்கு சீர்திருத்தமளிக்குமாறு இந்திய ராஜாக்களுக்கு புத்திமதி கூறலாமென்று பட்லர் கமிட்டி கூறியதை இந்திய ராஜாக்கள் ஆக்ஷேபித்தனர். அவர்களுடைய வக்கீலான சர். லெஸ்லி ஸ்காட் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தனர். இந்தப் போட்டிக் கமிட்டி, 'ஒப்பந்தப்படி பிரிட்டிஷ் மன்னர் இதைப் போல யோசனை யெதுவும் கூற உரிமையில்லை' என்ற ராஜாக்களின் வாதத்திற்கு தாஸ்து கூறியது. பிரிட்டிஷ் சர்க்கார் சமஸ்தானங்களுக்கு ராணுவ பாதுகாப்பு அளிப்பதால், அதை அநுசரித்து, கலகம் அல்லது உள் நாட்டுக் குழப்பத்தில் முடியக்கூடிய மோசமான ஆட்சி உள்ள சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தலையிடுவதை ராஜாக்கள் அநுமதிக்க வேண்டியது நியாயந்தானென்று இக்கமிட்டியே அபிப்பிராயப்பட்டது.

உண்மை யென்னவென்பதை ஆராய்ந்து பார்த்தால், ஆதிபத்திய அதிகாரம் பிரிட்டிஷ் மன்னருக்கு கிடையா தென்பது தெளிவாகும். இந்திய ராஜாக்கள் கப்பம் கட்டி

வருகிறார்களல்லவா? அந்தப் பணமெல்லாம் இந்திய சர்க்காரின் வருமானத்தில் சேருகிறதே யொழிய, பிரிட்டிஷ் சர்க்காரிடம் சேரவில்லை. இதிலிருந்து ஆதிபத்திய அதிகாரம் யாரிடம் இருக்கிறதென்பதை தெரிந்துகொள்ளலாம். இது பிரஜைகளிடம்தான் உண்டு என்று மகாத்மா காந்தி ஸ்பஷ்டமாகக் கூறிவிட்டார். எந்த நாட்டிலாவது பிரஜைகள் விரும்பாத மன்னர் ஆட்சி புரிகிறார? கொடுங்கோல் மன்னர்களாகிய முதலாவது சார்லஸ், ரஷ்ய ஜார் முதலியவர்களின் கதி என்னவாயிற்றென்பது நமக்குத் தெரியும்.

இந்தியாவில் காந்திஜியின் முயற்சியினால் அஹிம்ஸா உணர்ச்சி வேரூன்றிப் போயிருப்பதால், ராஜாக்கள் எவ்வளவு அக்ரமங்கள் செய்தபோதிலும் பிரஜைகள் சகித்துக் கொண்டு, "ராஜாக்களின் கல் நெஞ்சுகள் கரைய வேண்டும். அவர்களுக்கு நல்ல புத்தி தாருங்கள்" என்று கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள். தங்களையே தியாகம் செய்கிறார்கள். நிலைமை இதுவாக இருக்க, இந்திய ராஜாக்கள் பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டில் என்றென்றும் இருக்கவேண்டுமென்று முறையிடுவது வெட்கக் கேடாயிருக்கிறது.

ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் சர்க்கார் கௌரவிக்க வேண்டுமென ராஜாக்கள் கூறுகின்றனர். முதலாவதாக, இந்த ஒப்பந்தத்தில் ராஜா கையெழுத்திட்டார். அதை ஜனங்கள் அங்கீகரிக்கவில்லை. பிற சர்க்காருடன் ஒரு தேசம் ஒப்பந்தம் செய்து கொண்டால், அந்த ஒப்பந்தம் சட்டசபை முன் கொண்டு வரப்படும். நமது ராஜாக்கள் அதைப் போலச் செய்தார்களா? கிடையாது. எனவே ராஜா ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பிரஜைகளின் உரிமையைப் பறி கொடுத்திருப்பது, கடைத் தேங்

காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது மாதிரியே இருக்கிறது.

ஒப்பந்தங்கள் சட்ட ரீதியாக நடந்ததாக வைத்துக் கொண்டால்கூட, பிரிட்டிஷ் சர்க்காரிடம் போய் யாராவது ஒப்பந்தத்தின் புனிதத்தன்மையைப் பற்றிப் பேசலாமா? "காந்தி—இர்வின் ஒப்பந்தக் கடுதாசியில் இர்வின் போட்ட கையெழுத்தின் மை உலருமுன்னர் ஒப்பந்தம் சர்க்காரால் மீறப்பட்டது" என்று சர்தார் வல்லபபாய் பட்டேல் ராஜ்கோட் தகராறில் குறிப்பிட்டார்.

"ஒப்பந்தங்களைக் கட்டிக்கொண்டு மாரடிக்க வேண்டாம். காலத்திற்கேற்றவாறு நடந்து கொள்ளுங்கள். நாங்கள் (ஜமீன்தார்கள்) குடிகளின் குறைகளை காலா காலத்தில் நிவர்த்தி செய்யாததால் இப்பொழுது படுமோசமான நிலைமைக்கு வந்திருக்கின்றோமே. இதைப் பார்த்தாவது நீங்கள் சீர்திருந்தக்கூடாதா?" என்று விஜயநகரம் மகாராஜ்குமார், சமஸ்தானாதிபதிகளுக்கு புத்திமதி கூறுகிறார். இதுவாவது ராஜாக்கள் காதில் விழுமா? இதுவரை விழவில்லை யென்றே தோன்றுகிறது.

"நேர்மையற்ற ஆட்சி"க்காக ஆதிபத்திய சர்க்கார் தலையிடுவதாயிருந்தால், முக்காலே மூன்று வீசம் சமஸ்தானங்கள் இத்தனைக் காலம் இருந்த இடம் தெரிந்திருக்காது.

சமஸ்தான பிரச்னை தீர்ந்தால்தான் இந்தியாவுக்கு விடுதலை

"1938-ம் வருஷம் இந்திய அரசியல் வானத்தில் திடீரென இந்திய சமஸ்தானங்கள் பிரச்னை தோன்றிற்று. இந்த பிரச்னை புதிதல்ல; இந்திய விடுதலைப் பிரச்னை எவ்வளவு பழையதோ அவ்வளவு இதுவும் பழையதுதான். ஆனால் இது இவ்வளவு காலம் வரை பின்னணியிலிருந்திருக்கிறது. நமது சக்தி பூராவையும் இந்தியாவின் இதர பாகங்களில் காண்பித்தோம். சமஸ்தான பிரஜைகள் போற்றத்தக்க விதத்தில் விழிப்படைந்து, நமது பூரா கவனத்தையும் இழுத்து விட்டனர்; சமஸ்தான பிரச்னை தீர்ந்தாலொழிய இந்தியாவுக்கு சுதந்திரம் வரப்போவதில்லை என்பதை இதற்கு முன் இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக நாம் உணரும்படிச் செய்து விட்டனர். இந்த பிரச்னையை, அதன் உண்மை தாத்பர்யத்தில் கவனிக்க வேண்டும்.

இது பிற்போக்கு ஆட்சியையும், விட்டது தொட்டதாக உள்ள யதேச்சாதிகார சின்னங்களையும் எதிர்த்து நடக்கும் போராட்டமாகும். இதைவிட முக்கியமாக, இந்தப் பிரச்னை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டமாகும். இந்த ஏகாதிபத்தியம் நம்மை நேர்முகமாகத் தடுக்க முடியாததால், இப்பொழுது மறைமுகமாக சமஸ்தானங்கள் மூலம் தடுக்கப் பார்க்கிறது."*

—ஜவாஹர்லால் நேரு

*1938-ம் வருஷ மத்தியில் ஸ்ரீ. ஜவாஹர் கூறியது.

இரண்டாம் பாகம்

அத்தியாயம் 1.

பிரஜைகளின் எழுச்சி

1938-ம் வருஷ ஆரம்பத்தில் அநேக சமஸ்தானங்களில் அரசியல் விழிப்பு ஏற்பட்டது. பிரிட்டிஷ் மாகாண வாசிகளைவிட நாங்கள் எந்த விதத்தில் குறைந்தவர்கள் என்று சமஸ்தான பிரஜைகள் கேட்க ஆரம்பித்தனர். இந்திய ராஜாக்கள் நமது கைகளுக்கு விலங்கு போட்டால் அது தங்கக் காப்பாகிவிடாது. அவர்களுடைய யதேச்சாதிகாரத்தை ஒழித்தே தீருவது; பிறப்புரிமையை அடைந்தே தீருவது என கங்கணம் கட்டிக்கொண்டு, அடிமைச் சங்கிலியை தகர்த்தெறிய ஆரம்பித்தார்கள்.

இந்த அரசியல் விழிப்பு ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்கள்:

(1) பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் சுயாட்சி அமுலுக்கு வந்தது.

(2) ஹரிபுரா காங்கிரசில் நிறைவேறிய தீர்மானம்.

(3) சர்தார் வல்லபபாய் பட்டேலின் யோசனைப்படி நடந்த மன்ஸா குடிகளின் வீரப் போர்.

மாகாண சுயாட்சியின் எதிரொலி

சென்னை, பம்பாய், மத்திய மாகாணம், ஐக்ய மாகாணம், பீஹார், ஓரிஸ்ஸா ஆகிய ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவிக்கு வந்ததும் (பின்னர் எல்லைப்புற மாகாணம், அஸ்ஸாம் இரண்டிலும் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டது), ஜனங்களின் குறைகளைப் போக்க இந்த மாகாண சர்க்கார்கள் உண்மையிலேயே பாடுபட ஆரம்பித்தன. இந்திய சர்க்கார் சட்டத்தை உடைக்கவும், விடுதலைப் போராட்டத்திற்கு இன்னம் பலம் தேடவுந்தான் காங்கிரஸ், மந்திரிப் பதவிகளை ஏற்றது. ஆனால் அதே சமயத்தில் இந்த சட்டத்தின் மூலம் ஜனங்களுக்கு எவ்வளவு நிவாரணமளிக்க முடியுமோ, எவ்வளவு தூரம் காங்கிரசின் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கமுடியுமோ அவ்வளவு தூரம் செய்ய முற்பட்டது. ஏனெனில், காந்திய வழிப்படி நடக்கும் சுயராஜ்யப் போராட்டத்தில் இரு ஆயுதங்கள் உண்டு. ஒன்று சட்ட மறுப்பு. மற்றொன்று நிர்மாணத் திட்டம். நிர்மாண வேலைகள் அழியாத்தன்மை வாய்ந்தது. காந்திஜி காங்கிரசுக்கு தலைமை வகித்து நடத்த ஆரம்பித்ததும், தேசத்தின் லக்ஷியத்தைப் பெற சட்ட மறுப்பு ஒரு சாதனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சட்ட மறுப்பின் மூலம், இந்த அந்நிய சர்க்காரை, இப்பொழுது இல்லாவிட்டால் இன்னம் சில வருஷங்களிலாவது இந்த நாட்டை விட்டுத் துரத்த தனக்கு—அதாவது தேசத்துக்கு—வல்லமை உண்டு என்பதை காங்கிரஸ் நிரூபித்தது. காங்கிரஸ் கட்டளைக்குட்பட்டு ஜனங்கள் எதற்காக சிறை சென்றார்கள்? காங்கிரஸ், ஜனங்களுக்கு நல்லதைத்தான் செய்யுமென்பதை அனைவரும் உணர்ந்திருந்ததே இதற்

குக் காரணம். அப்படி உணரும்படிச் செய்தது எது? காங்கிரசின் நிர்மாணத் திட்டங்கள்தான். அதாவது, கதர், மது விலக்கு, தீண்டாமை விலக்கு, குடிசைத் தொழில் இவைகளில் காங்கிரஸ், தான் பதவியில் இல்லாத போதுகூட கவனம் செலுத்தி, ஜனங்களின் அன்றாடக் குறைகளைப் போக்க முயற்சி எடுத்துக்கொண்டது. இதன் மூலம் ஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது. சுய ராஜ்ய இந்தியாவிலும் கதர்த் தொழில் இருக்க வேண்டுமா, அல்லது பெருவாரியாக மில்களின் மூலம் துணி முதலிய வைகளை உற்பத்தி செய்ய வேண்டுமா என்று இப்பொழுது தர்க்கம் செய்கிறவர்கள்கூட, காங்கிரஸ் இப்பொழுது நிறைவேற்றிவரும் எல்லா நிர்மாணத் திட்டங்களும் இறுதி யான சுயராஜ்யப் போருக்கு அஸ்திவாரம் என்பதை மறுக்க மாட்டார்கள்.

எனவே, காங்கிரஸ் மந்திரி சபைகள், மாகாணங்களில் மது விலக்கு, தீண்டாமை விலக்கு, கடன் நிவாரணம், ஜமீன் குடிகளுக்கு நிவாரணம் இவைகளுக்காக சட்டங்களை இயற்றின. கதர், குடிசைத் தொழில்களுக்கு மான்யங்கள் அளித்து ஊக்கமளித்தன. பிரஜா உரிமைகள் அளித்தன. பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஒவ்வொரு விஞ்டியும் பத்திரிகை கள் மூலமும், கடற் கரை, டிவிஷன் கூட்டங்கள் மூலமும் சமாரியான எச்சரிக்கைகள் விட அநுமதிக்கப்பட்டது. காங்கிரஸ் மந்திரிகள் பத்து அடி எடுத்து வைத்தால், நாம் ஐந்து அடியாவது எடுத்து வைத்தால்தான் நமது ஆயுளுக்கு சிக்கிரத்தில் அந்திகாலம் வராது என்று, காங்கிரஸல்லாத மந்திரி சபைகள் அரைகுறையான சில நிவாரணங்களை ஜனங்களுக்கு அளித்தன.

எனவே, சமஸ்தான பிரஜைகள் அவர்கள் எல்லைக்கு

அடுத்தாற் போலுள்ள மாகாணங்களில் ஜனங்கள் பெறும் அநுகூலங்களையும், அநுபவிக்கும் சுதந்திரங்களையும் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமா? அப்படி இருப்பார்கள் என்று எதிர்ப்பார்ப்பதுதான் நியாயமா? பிரிட்டிஷ் இந்தியாவில் காங்கிரஸ் காண்பித்த வழியை(சட்டமறுப்பை) பின்பற்ற அவர்களுக்குத் தெரியாதா என்ன? சகஜமாக நடைபெற வேண்டியபடியே, அவர்களும் பொறுப்பாட்சியைப் பெறுவதற்காக தங்கள் சொரூபத்தை காண்பிக்க ஆரம்பித்தனர். காங்கிரசும் ஹரிபுரா தீர்மானம் மூலம் 'ஸ்க்ரூ' கொடுத்தது.

ஹரிபுரா தீர்மானம்

சென்ற இருபது வருஷ காலமாக மகாத்மா காந்தி காட்டும் வழியையே காங்கிரசும், இந்தியாவும் பின்பற்றி வருகிற விஷயம் அனைவருக்கும் தெரிந்ததே. அவருடைய யோசனையின் பேரில்தான் ஹரிபுராவில் 1938-ம் வருஷம் பிப்ரவரி மத்தியில் கூடிய இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை, சமஸ்தானங்களைப்பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியது.

"சமஸ்தான ஜனங்கள் அவர்களுடைய லக்ஷியத்திற்காக கஷ்டப்படாமலிருந்தால், சத்யாக்ரஹ ரூபத்தில் வெளியிலிருந்து வரும் எந்த உதவியும் உண்மையான விடுதலையைக் கொண்டு வர முடியாது" என்பதே காந்திஜியின் கருத்து. எனவே சமஸ்தான பிரஜைகள் தங்களுடைய பலத்திலேயே நம்பிக்கை வைக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் ஹரிபுராவில் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தின் வாசகம்

"பொது வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியினாலும், சுதேச சமஸ்தானங்களில் சுதந்தரக் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதாலும், புதிய பிரச்னைகளும், புதிய முரண்பாடுகளும் எழுந்திருப்பதாலும், சமஸ்தானங்கள் சம்பந்தமான கொள்கையை காங்கிரஸ் மீண்டும் புதிதாக விதிக்கிறது.

"அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் இந்தியாவின் இதர பாகங்களுக்கு என்ன சுதந்திரம் வேண்டுமென்று காங்கிரஸ் விரும்புகிறதோ, அதையேதான் சமஸ்தானங்களும் விரும்புகிறது. சமஸ்தானங்களும் இந்தியாவைச் சேர்ந்தவை யென்றும், இரண்டையும் தனியாக பிரிக்க முடியாதென்றும் காங்கிரஸ் கருதுகிறது. காங்கிரஸின் லட்சியமான பூர்ண ஸ்வராஜ்யம் இந்தியா பூராவுக்கும் தான். சமஸ்தானங்களும் இதற்குட்பட்டதுதான். அடிமையாயிருக்கும்போது இந்தியாவின் ஆதிபத்தியமும், ஒற்றுமையும் ஒரே அதிகாரத்தின் கீழ் இருந்தது. சுதந்திரமடைந்த பிறகும் அப்படியேதான் இருக்க வேண்டும்.

"சுதந்திரமுடைய அங்கங்களாகவும், இந்தியாவில் இதர பாகங்களிலிருப்பதைப் போன்ற அதே ஜனநாயக சுதந்திரத்துடனும் உள்ள சமஸ்தானங்கள் கலந்துகொள்ளும் பெடரேஷன் ஒன்றைத்தான் காங்கிரஸ் மகாசபை ஒப்புக்கொள்ளும்.

"சமஸ்தானங்களில் பூர்ண பொறுப்பாட்சியும், பிரஜா உரிமைகளும் இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் விரும்புகிறது.

"பல சமஸ்தானங்களில் கொஞ்சங்கூட சுதந்திரம் இல்லாமலிருப்பதையும், பிரஜா உரிமைகள் ஒடுக்கப்பட்டிருப்பதையும் கண்டு காங்கிரஸ் வருந்துகிறது. சமஸ்தானங்களில் இத்தகைய உரிமைகள் ஏற்படுவதற்கு வேலை செய்வது ஒரு உரிமை யென்று காங்கிரஸ் கருதுகிறது. ஆனல் தற்போதைய நிலைமையில், இதற்காக காங்கிரஸ் திருப்திகரமாக வேலைசெய்ய முடியவில்லை. சமஸ்தானாதிபதிகளாலும், அவர்கள் மூலமாக வேலை செய்யும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தினலும், விதிக்கப்படும் பல தடைகளினல் காங்

கிரஸின் வேலைகள் தடைபடுகின்றன. காங்கிரஸின் பெயரும் மகத்தான அந்தஸ்தும் ஜனங்களிடையே மிகுந்த நம்பிக்கையை உண்டாக்குகிறது. நம்பிக்கை உடனே நிறைவேறுததால் ஏமாற்ற மேற்படுகிறது. பலனளிக்கத்தக்க முறையில் வேலை செய்ய முடியாத உள்ளூர் கமிட்டிகளை வைத்துக்கொண்டிருப்பது காங்கிரசின் அந்தஸ்துக்கு ஏற்றதல்ல. தேசியக் கொடிக்கு அவமானம் ஏற்படுவதையும் காங்கிரஸ் சகிக்காது.

"சமஸ்தானப் பிரஜைகளிடையே நம்பிக்கை ஏற்படும் காலத்தில், காங்கிரஸ், பாதுகாப்போ, பலனளிக்கத்தக்க உதவியோ கொடுக்க முடியாமலிருப்பதால், அவர்கள் மனதில் ஏக்கம் ஏற்படுகிறது. இது சமஸ்தானங்களில் சுதந்திரக் கிளர்ச்சி அபிவிருத்தியடைவதையும் தடை செய்கிறது. இந்தியாவின் இதர பாகங்களிலும், சமஸ்தானங்களிலும் வெவ்வேறு விதமான நிலைமை இருந்து வருகிறது. இதனால், காங்கிரஸின் பொதுக் கொள்கை சமஸ்தானங்களுக்கு ஏற்றதாயில்லை. எனவே சமஸ்தானங்களில் சுதந்தரக் கிளர்ச்சி இயற்கையாக அபிவிருத்தியடைவது தடைபடக்கூடும். இந்த இயக்கங்களுக்கு சமஸ்தான ஜனங்களிடமிருந்தே பலம் கிடைக்க வேண்டும். ஜனங்களுக்கு தன்னம்பிக்கையும் ஏற்பட வேண்டும். அந்தந்த சமஸ்தானங்களிலுள்ள நிலைமைக்குத் தகுந்தாற்போல் வேலை முறையும் இருக்க வேண்டும். வெளி உதவியையோ, காங்கிரஸின் செல்வாக்கையோ எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இக்கிளர்ச்சிகள் சீக்கிரமாகவும், பரந்த நோக்கங்களுடனும் விருத்தியடையும்.

"இத்தகைய இயக்கங்களை காங்கிரஸ் வரவேற்கிறது. ஆனால், இப்போதைய நிலைமையில் சுதந்தரப் போராட்டத்தின் பொறுப்பை சமஸ்தான ஜனங்களேதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். நியாயமானதும், சமாதானமுமான முறைகளில் நடத்தப்படும் இத்தகைய போராட்டங்களுக்கு காங்கிரஸ் எப்போதும் தனது ஆசியையும் ஆதரவையும் அளிக்கும். இந்த ஆதரவு, அநுதாபத்தைத் தெரிவிப்பதோடு மாத்திரம்தான் இருக்கும்.

ஆனல் தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் தங்கள் சொந்த ஹோதாவில் மேற்கொண்டு உதவி செய்யலாம். இந்த விதமாக காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கட்டுப்படுத்தாமல், போராட்டம் வளர்ச்சியடையலாம். ஆகவே, இப்போது, இந்திய சமஸ்தானங்களில் காங்கிரஸ் கமிட்டிகள் எதையும் ஸ்தாபிக்க வேண்டியதில்லை என்றும், சமஸ்தான பிரஜைகளின் உள்நாட்டுப் போராட்டங்கள் காங்கிரஸின் பெயரால் நடத்தக்கூடாதென்றும் காங்கிரஸ் கட்டளையிடுகிறது.

"இந்த போராட்டத்திற்காக தனி ஸ்தாபனங்களை ஆரம்பிக்க வேண்டும். ஏற்கனவே இத்தகைய ஸ்தாபனங்கள் இருந்தால் அவைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும். சமஸ்தானப் பிரஜைகள் காங்கிரஸ் மெம்பர்களாயிருக்கலாம். ஆனல், அவர்கள் மெம்பர்களாயிருக்கும் கமிட்டிகள், சமஸ்தானத்துக்கு வெளியே இருக்க வேண்டும்.

"சமஸ்தானப் பிரஜைகளின் சுதந்திரப் போராட்டத்தில், தனக்குப் பூர்ண அநுதாபம் இருக்கிறதென்று காங்கிரஸ் உறுதி கூறுகிறது. அவர்களுடைய போராட்டத்தை அக்கரையுடன் கவனித்து வருமென்றும் உறுதி கூறுகிறது. அவர்களுடைய விமோசன காலம் வெகுதூரத்திலில்லை யென்று காங்கிரஸ் நம்புகிறது.

"இப்போது சமஸ்தானங்களில் வேலை செய்துகொண்டிருக்கும் காங்கிரஸ் கமிட்டிகள் சம்பந்தப்பட்ட வரையில், காரியக் கமிட்டி அக்கமிட்டிகள் ஒவ்வொன்றின் நிலைமையையும் பரிசிலனை செய்து, அவைகள் தொடர்ந்து வேலை செய்ய வேண்டுமா? என்ன நிபந்தனைகளுடன் வேலை செய்ய வேண்டும்? என்று இத் தீர்மானத்தின் பொதுக் கருத்துக்கிணங்க நிர்ணயிக்க வேண்டும்."

காங்கிரஸ்காரர்கள் தனிப்பட்ட முறையில் சமஸ்தானப் போராட்டங்களில் கலந்துகொள்ளலாமென தீர்மானம் கூறுவதால், சமஸ்தான பிரஜைகளை காங்கிரஸ் விட்டுக் கொடுத்துவிடவில்லை யென்பதை அறிந்துகொள்ள

லாம். "சமஷ்டியை எதிர்த்து ஒரு மகத்தான போராட்டத்தை நடத்த காங்கிரஸ் தன் பலத்தை சேகரித்து வரும் சமயத்தில், அந்த பலத்தை சிதறடிப்பது சரியல்ல; காங்கிரஸ் கமிட்டிகளே சமஸ்தானங்களில் அமைக்க வேண்டாமென்று சொல்லுவது தற்காலிகமாக கையாள வேண்டிய ஒரு அவசியம்" என்று தலைவர்கள் எண்ணினர்.

தீர்மானத்தை நிறைவேற்றி, வைசிராய்க்கு ஒரு நகலையும், இந்தியா மந்திரிக்கு ஒரு நகலையும் அனுப்பி விட்டு, அடுத்த மகாநாடு வரை 'சிவ சிவா' என்று உட்காருவது காங்கிரஸ் தலைவர்களின் வழக்கமில்லாததால், தீர்மானத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வரவும் பிரயத்தனப்பட்டனர். 'குறைவாகச் சொல்லி, அதிகமாகச் செய்ய வேண்டும்' என்பதே இவர்கள் கொள்கை. தீர்மானத்திற்கு காரணபூதர்களாயிருந்த கோஷ்டியினர் சமஸ்தான பிரஜைகளுக்கு வழிகாட்டி, தவிழ்ந்துகொண்டிருந்த குழந்தையை நிமிர வைத்து, நடக்கச் சொல்லிக் கொடுத்தார்கள். பல போர்களில் 'முதல் பிரைஸ்' அடித்த சர்தார் பட்டேல், இதிலும் தன் திறமையைக் காட்டினர். முதலில் மன்ஸா சமஸ்தான குடிகளுக்கு வழி காண்பித்தார்.

மன்ஸா சத்யாக்ரஹம்

மன்ஸா சமஸ்தானம் வட குஜராத்தில் ஆமதாபாத்திலிருந்து 40 மைல் தூரத்திலிருக்கிறது. விஸ்தீரணம் 25 சதுர மைல்கள். 12 கிராமங்கள் கொண்டது. ஜனத்தொகை 16,942. அங்கு 10 வருஷங்களுக்கு ஒரு முறை வரி பரிசீலனை செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு முறையும் வரி அதிகமாகுமேயொழிய, குறைவதே கிடை

யாது. சென்ற 40 வருஷங்களில் நில வரி 200% உயர்த்தப் பட்டது. குடிகள் ஜீவனம் செய்யவும் ஒரு அளவுக் கேனும் வருமானம் கிடைக்காத விதத்தில் வரிச் சுமை இருந்தால், அதை எப்படி அவர்களால் தாங்க முடியும்? குறைகளை சட்ட ரீதியான வழிகளில் ராஜாவிடம் நய மாகச் சொல்லிப் பார்த்தனர். பலன் கிடைக்கவில்லை. மேற்கொண்டு என்ன செய்யலாமென்பதை முடிவு செய் யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்காக, குடியானவர் கள், 1938ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஒரு கமிட்டியை தேர்ந்தெடுத்தனர். இக்கமிட்டி, வரி கொடா இயக்கம் ஆரம்பிக்க வேண்டுமென முடிவு செய் தது. இதற்கு தர்பாரிடமிருந்து பதில் கிடைக்காமற் போகவில்லை. பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மீது தடை யுத்தரவுகளை பிறப்பித்தது. குடிகள் இந்த உத் தரவுகளுக்கு அஞ்சவில்லை. அவற்றை மீறினர்கள். பிப்ரவரி மாதக் கடைசியில் குடியானவர்களின் கூட்ட மொன்றில் சமஸ்தான போலீஸ் சுட்டது. இதனால் பலர் காயமடைந்தனர்.

உண்மையான குறைகளிருந்ததால், தாங்கள் நடத்து வது தர்மப் போர் என்று மனதில் பதிந்திருந்ததால், குடிகள் எதற்கும் அஞ்சாமல், வரி கொடா இயக்கத்தை தீவிரமாக நடத்தினர்கள். ஆண்களும், பெண்களும் ஆயி ரக்கணக்கில் கூடி, தடையுத்தரவுகளை தவிடு பொடி செய்வ தென முடிவு செய்தனர். தடையை மீறிய பலர் கைது செய்யப்பட்டார்கள். இத்தப் போரில் ஒரு முக்கியமான அம்சம் குறிப்பிடத்தக்கது. கொஞ்சம்கூட படிப்பு வாசனையில்லாத—ஒரு வேளை இந்த காரணத்தினால்தானே என்னவோ—ஆயிரக்கணக்கான ஸ்திரீகள், புருஷர்களுக்கு

பக்க பலமாக 'சரிநிகர் சமான'மாக நின்று சர்க்காரை எதிர்த்தார்கள். 1938 மார்ச் மாதத்தில் குடிகள் குறிப்பிட்ட காலத்தில் வரியைக் கொடுக்கத் தவறியதால், அவர்களுடைய நிலங்களிலுள்ள பயிர்கள் ஜப்தி செய்யப்பட்டன. இவற்றை அப்புறப்படுத்த வரும் சர்க்கார் சிப்பந்திகளை யாரேனும் தடுத்தால், தடுக்கிறவரின் நிலமே பறிமுதல் செய்யப்படும் என்றும் பயமுறுத்தப்பட்டது. இதற்கும் குடிகள் பயப்படவில்லை. ஜப்தி செய்யப்பட்ட தானியங்களை எடுத்துச் செல்ல போலீஸார் முதல் முதலில் இடோத்ரா என்ற கிராமத்திற்குச் சென்றனர். போலீஸ் லாரியில் கோதுமை ஏற்றப்பட்டதைப் பார்த்த ஒரு குடியானப் பெண், முரசைக் கொட்டினாள். உடனே, எங்கிருந்தோ தெரியவில்லை, மளமளவென்று சுமார் 250 ஸ்திரீகள் குவிந்து விட்டனர்! வந்திருந்த போலீசாரின் எண்ணிக்கை முப்பதுதான். இந்த ஸ்திரீகளிடம் தப்பித்துப் போக முடியுமா? ஸ்திரீகள், போலீஸார் எடுத்து வைத்திருந்த கோதுமையில் பெரும் பகுதியை மீட்டுக் கொண்டு போய் விட்டார்கள். இதை போலீஸார் தடுத்ததால், பல ஸ்திரீகள் காயமடைந்தனர். இன்னும் பல கிராமங்களிலும் இதைப்போலவே நடைபெற்றது.

தடியடிப் பிரயோகத்தில் அந்த சமஸ்தான அதிகாரிகள், ஆண்களுக்கும், ஸ்திரீகளுக்கும் யாதொரு வித்தியாசமும் காண்பிக்கவில்லை. தடையுத்தரவை மீறி ஊர்வலம், கூட்டம் நடத்திய ஸ்திரீகளுக்கும் 'சம அந்தஸ்து' அளித்து, தடியடியால் கலைத்தனர்.

இந்த கிளர்ச்சி ஆரம்பமானதிலிருந்து, மன்ஸா குடிகள் சர்தார் பட்டேலிடம் சென்று, அவருடைய யோசனையைக் கேட்டு, அதன்படியே நடந்து வந்தார்கள்.

தர்பார்—குடிகள் தகராறை சர்தாரின் மத்யஸ்தத்திற்கு விடலாமென்று குடிகள், தகராறு மூற்றியவுடன் சமஸ்தானாதிபதிக்கு யோசனை கூறினர். ஆனால் 'வெளியார்' தலையிடுவதை அநுமதிக்க முடியாது என்று ராஜா சொன்னார். ராஜா சொன்னார் என்பதற்குப் பதிலாக, இந்த சமஸ்தானத்தில் உள்ள ஏஜென்ஸியின் ரெஸிடெண்ட் ஸ்ரீ. கிப்ஸன் சொன்னதை ராஜா கிளிப்பிள்ளை போல திரும்ப குடிகளிடம் சொன்னார், என்பதுதான் பொருத்தமாகயிருக்கும். இயக்கம் சீக்கிரத்தில் நின்று விடுமென மனப்பால் குடித்த அதிகாரிகள் ஏமாந்து போனார்கள். நாளுக்கு நாள் கிளர்ச்சி வலுவடைந்தது.

1938 மார்ச்சில் சர்தார் பட்டேல் மன்ஸாவுக்கு நேரில் சென்று, குடிகளின் குறைகளை விசாரித்தார்.

'காங்கிரஸ் தலைவருக்கு இங்கு இடம் கொடுத்தால் ஆபத்து வந்துவிடும்; அவருடைய செல்வாக்கு ஓங்கக் கூடாது' என்ற எண்ணத்துடன், ஸ்ரீ. கிப்ஸன், குடிகளின் கோரிக்கைகளை ஒரு அளவுக்கு ஏற்றுக்கொள்ள ஒரு திட்டத்தை தயாரித்து, அதற்கு சம்மதிக்குமாறு ராஜாவுக்கு 'யோசனை' கூறினார். "வரியை நிர்ணயிக்கும் உரிமையை வெளியாரிடம் விடக்கூடாது. இப்பொழுதுள்ள வரியில் 25% குறைக்கலாம்" என்று, ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வந்த இந்த வெளியார் கிப்ஸன், ராஜாவிடம் சொன்னார். இதை குடிகள் ஏற்றுக்கொண்டால்தானே! வரியை இன்னும் அதிகமாகக் குறைக்க வேண்டும்; முக்கியமாக, சமஸ்தான நிர்வாகத்தில் எங்களுக்குப் பங்கு வேண்டும்; இதற்குக் குறைவான எந்த சமரசத்திற்கும் ஒப்புக்கொள்ள முடியாது, என்றனர். இந்த கோரிக்கைகளுக்கு இணங்க தர்பார் மறுத்தது.

உட்னே வரி கொடா இயக்கத்தோடு, காட்டு சத்யாக்கிரஹமும் ஆரம்பமாயிற்று. அதாவது, காட்டுச் சட்டங்களை மீறி குடிகள், விறகு, பழம் முதலியவைகளை காட்டிலிருந்து எடுத்து வந்தனர். எல்லா காங்கிரஸ் தலைவர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்தன. காங்கிரஸ் கட்டளைப்படி இந்தியா பூராவும் ஏப்ரல் 3-ந் தேதி "மன்ஸா தினம்" அநுஷ்டிக்கப்பட்டது.

குடிகளின் மனை உறுதி கொஞ்சம்கூட தளராமலிருந்ததைக் கண்ட தர்பார், இதற்கு முன் பேசிய வரட்டு ஜம்பங்களையெல்லாம் 'ஸ்வாஹா' செய்துவிட்டு, ஜூன் மாத ஆரம்பத்தில் சர்தார் பட்டேலிடம் சரணாகதி அடைந்தது. "நீங்கள்தான் வந்து மத்தியஸ்தம் செய்து வைக்க வேண்டும்"! என்று, ராஜா, மன்றாடிக் கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ. கிப்ஸன் இந்த இயக்கத்தில் சர்தார் பட்டேலுடன் பலப் பரீக்ஷை செய்து, தோல்வியடைந்த பின்னர்கூட, ராஜ்கோட் விஷயத்தில் மீண்டும் விஷமம் செய்ய ஆரம்பித்தது சொம்பவும் வருத்தத்தக்கது. இன்னொரு தோல்வியும் அடைய வேண்டும் என்று அவர் தலையில் எழுதியிருந்தால், அதை யாரால் அழிக்க முடியும்!)

ஜூன் மாதம் 9-ந் தேதி (1938) சர்தார் பட்டேலைக் காண மன்ஸா திவான் பம்பாய் சென்றார். ஜூன் 12ந் தேதி மன்ஸா குடிகளுக்கும், தர்பாருக்கும் பின்கண்ட ஒப்பந்தம் ஏற்பட்டது :

(1) மன்ஸாவுக்கு அடுத்த பரோடா சமஸ்தானத்திலுள்ள நில வரிச் சட்டத்தைப்போல் மன்ஸாவிலுள்ள நில வரிச் சட்டம் திருத்தியமைக்கப்படும். திருத்தியமைப்பதற்காக அநுபவம் வாய்ந்த ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார். இவருக்கு, விவசாயி

கள் அடங்கிய ஒரு கமிட்டி உதவி புரியும். திருத்தி யமைக்கப் பட்ட விகிதம் 1940-ம் வருஷத்திற்குள் அமுலுக்கு வரும்.

(2) புதிய நில வரி விகிதம் வெளியிடப்படும் வரை சர்க்கார் இப்பொழுதுள்ள நில வரி விகிதத்தில் 35%ஐக் குறைப்பார்கள்.

(3) ஒப்பந்தம் அமுலிலிருக்கும் காலம் 10 வருஷத்திலி ருந்து 30 வருஷத்திற்கு உயர்த்தப்படும். மத்தியில் வரி அதிக மாக விதிக்கப்பட மாட்டாது. ஒப்பந்தம் அமுலிலிருக்கும் காலத் தில் விவசாயிகள் நிலத்தை அபிவிருத்தி செய்தால், அதற்காக வரி அதிகமாகாது. பரோடா சமஸ்தானத்திலுள்ள வரி வஜா, வரி கொடுப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது பற்றிய விதிகள் மன்ஸா சமஸ்தானத்தில் அமுலிலிருக்கும்.

(4) சேர்ந்தாற்போல் நில வரியைச் செலுத்தாமலிருந்தா லொழிய, விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட மாட் டார்கள்.

(5) விற்பது, அடகு வைப்பது, தானமாகக் கொடுப்பது, வேறு ஒருவர் பெயருக்கு எழுதி வைப்பது, பரம்பரை பாத்தியம் போன்ற எல்லா நில அனுபவ உரிமைகளும் அங்கீகரிக்கப்படும்.

(6) இனம் நிலத்தையுடைய விவசாயிகள் இப்பொழுது அனுபவித்து வரும் உரிமைகள் நிரந்தரமானதென்பதை சர்க்கார் அங்கீகரிக்கும்.

(7) விவசாயிகளின் சொந்த நிலத்திலுள்ள எல்லா மரங் களும் அவர்களுக்கே சொந்தமானது. மரங்களை வெட்ட அவர் களுக்கு உரிமையுண்டு.

(8) எந்த விவசாயியும் பலவந்தமாக வேலை செய்யும்படி கேட்கப்பட மாட்டார்.

(9) ரெவின்யூ நிர்வாகம் சம்பந்தப்பட்ட எல்லா பொதுப் படையான விஷயங்கள் சம்பந்தமாகவும், மன்ஸா விவசாயிகள் பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கும் கமிட்டியின் ஆலோசனையை சர்க் கார் கவனிப்பார்கள்.

(10) சத்யாக்ரஹக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். தொடரப்பட்டிருக்கும் வழக்குகள் வாபஸாகும்.

(11) மன்ஸா விவசாயிகள் கமிட்டி, சத்யாக்ரஹப் போரை நிறுத்தி, எல்லா சமூக பகிஷ்கார நடவடிக்கைகளையும் வாபஸ் செய்யும்.

(12) இந்த ஒப்பந்தப்படி பாக்கியுள்ள நில வரியை விவசாயிகள் இன்னம் 3 வாரங்களுக்குள் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்படியாக குடியானவர்களின் ஆறு மாதப் போர் வெற்றிகரமாக முடிவடைந்தது. இது, இதர சமஸ்தான பிரஜைகளுக்கு ஊக்கத்தையும், தைரியத்தையும் அளித்து, அவரவர்களுடைய உரிமைகளுக்காக போராட வேண்டிய சக்தி அவரவர்களிடமே இருப்பதை உணரும்படிச் செய்தது.

இந்த வெற்றியின் மகத்துவத்தைப்பற்றி, ஸ்ரீ. மகாதேவ தேசாய் பின்வருமாறு "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதினார்:

"இந்த போரில் கலந்துகொண்டு கஷ்டங்களை சகித்து வெற்றி பெற்றவர்கள், இதர சமஸ்தான மக்கள் பின்பற்ற வேண்டிய வழியை காண்பித்திருக்கிறார்கள். கௌரவம் அனைத்தும், மன்ஸா போர் வீரர்களைச் சாரும். இதர சமஸ்தானங்களின் நிலைமை மன்ஸாவிலிருந்ததை விடக் குறைவாகயில்லை. ஆனால் அவற்றிலுள்ள பிரஜைகள் தைரியமாக போர் புரியக் கற்றுக்கொள்ளவில்லை."

மன்ஸா விவசாயிகள் கற்றுக்கொடுத்தனர்.

மைசூர்

சமஸ்தானத்தின் வரலாறு :—

இப்பொழுதுள்ள மைசூர் சமஸ்தானத்தின் வட பாகம் ஒரு காலத்தில் அசோக சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. அதற்குப் பின் மைசூர், ஆந்திர ராஜாக்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மூன்றாவது நூற்றாண்டிலிருந்து 11-வது நூற்றாண்டு வரை மைசூரின் வட மேற்கு பாகத்தை பல்லவ ராஜ வம்சத்தினரும், மத்திய, தெற்கு பாகத்தை கங்க ராஜ வம்சத்தினரும் ஆண்டிருக்கிறார்கள். 11-வது நூற்றாண்டில்தான் மைசூர், சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாயிற்று. சோழ ராஜா 12-வது நூற்றாண்டில் ஹோஸல்யர்களால் விரட்டப் பட்டார். ஆனால் ஹோஸல்யர்களும் 14-வது நூற்றாண்டில் மூட்டை கட்டி விட்டனர். பிறகு அது விஜயநகரம் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாயிருந்தது. 14-வது நூற்றாண்டிலேயே இந்த சமஸ்தானம் இப்பொழுதுள்ள ராஜ வம்சத்தினர் கைக்கு வந்தது. அந்த மன்னரைப்பற்றி ஒரு கதைகூடச் சொல்லப்படுகிறது, அது உண்மைதான் என்றும் சிலர் சொல்லுகின்றனர். ராஜாவுக்கு சித்த ஸ்வாதீனமில்லாமற் போய் விட்டதாம். மனைவியையும், பெண்ணையும் யாதொரு பாதுகாப்புமின்றி விட்டு, காட்டுக்கு ஓடி விட்டார். பக்கத்து நாட்டிலிருந்த ஒரு சிற்றரசன் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு, மைசூர் மன்னரின் பெண்ணை தனக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று கோரினான். இல்லையேல் படையெடுத்து மைசூரை தரை மட்டமாக்கி விடப்போவதாகவும் பயமுறுத்தினான். இந்த மூர்க்கத்தனத்தை மைசூர் ராணி

யும், இளவரசியும் வெறுத்தார்கள். ஆனால் அந்த கொடுங் கோலனை எதிர்த்தாலோ, ஜனங்களின் ரத்தம் ஆறுகப் பெருகுமே என்றும் அஞ்சினார்கள். அப்போர்ப்பட்ட கெருக்கடியான சமயத்தில் இரு ராஜபுத்திரர்கள், புகழ் சம் பாதிக்க, ஒரு சிறிய பட்டாளத்துடன் வந்தார்கள். இவர்கள் கத்தியவாரிலிருந்து மலபாருக்கு கப்பலில் வந்த தாகச் சொல்லப்பட்டது. மைசூர் இளவரசி மனை வேதனை பொறுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்ததும், இந்த இரு ராஜபுத்தார்கள், அவளுக்கு உதவி செய்ய முன் வந்து, சமஸ்தானத்தில் பெரிய படையை எழுப்பி, மிரட்டிக்கொண்டிருந்த சிற்றரச னின் பட்டாளத்தை முறியடித்து, அவனையும் போர்க் களத்தில் கொன்றனர். மூத்தவன், மைசூர் மன்னரின் பெண்ணை மணந்துகொண்டான். அவனை ஜனங்களும் புது மன்னனாக ஏற்றுக்கொண்டனர். அவர்களுடைய வம் சம்தான் இப்பொழுது மைசூரில் ஆட்சி புரிந்து வருகிறது. 1565-ல் விஜயநகர சாம்ராஜயம் வீழ்ச்சியடைந்த பின், மைசூர் சிற்றரசு ராஜ்யமாக இல்லாமல், சுயேச்சை ராஜ்ய மாயிற்று.

18-வது நூற்றாண்டில் ஹைதராலியின் வசத்திற்கு வந் தது. 1799-ம் வருஷம் பிரிட்டிஷார் திப்பு சுல்தானை தோற் கடித்த பின், மைசூரை பழைய ராஜ வம்சத்திடமே சேர்த் தனர். ஆனால் சமஸ்தானத்தில் உள் நாட்டுக் கலகங்கள் அதிகமாகி வந்ததாலும், அதை சமாளிக்க ராஜாவுக்கு திறமையில்லை யென்ற காரணத்தினாலும், பிரிட்டிஷ் சர்க் காரே மைசூரின் நிர்வாகத்தை 1831-ம் வருஷம் முதல் 1881-ம் வருஷம் வரை கவனித்து வந்தனர். 1881-ல் தான் இந்த ராஜ்யம் ஸ்ரீ சாம ராஜேந்திர உடையார் பக

தூரின் ஆட்சிக்கு விடப்பட்டது. அவர் 1894-ம் வருஷம் காலமானார். அவருடைய புத்திரர்தான் இப்பொழுதுள்ள மகாராஜா ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர உடையார் பகதூர்.

இவர் சொம்ப வைதீகப் பேர்வழி. ஐரோப்பியருடன் சாப்பிடுவதில்லை. கடலைக் கடக்கக் கூடாதென்று ஹிந்து கோட்பாடுகளில் இருப்பதால்தான் இவர் இதுவரை ஐரோப்பாவுக்குச் செல்லவில்லை.

பெங்களூரில் 'சிவில் அண்டு மிலிட்டரி ஸ்டேஷன்' என்று சொல்லப்படும் பிரிட்டிஷ் பிரதேசத்தில், பிரிட்டிஷ் சர்க்கார், பிரிட்டிஷ் துருப்புகளையும், இந்திய துருப்புகளையும் வைத்திருக்கிறார்கள்.

இந்த சமஸ்தானம் இங்கிலாந்தின் விஸ்தீரணத்தில் மூன்றில் இரண்டு பாகமாகும். அதாவது 29,474 சதுர மைல்கள். ஜனத்தொகை 65,57,302. (இதில் 92% ஹிந்துக்கள்.) வருமானம் ரூ. 3,50,72,000.

மைசூரில் முதல் முதலாக 1881-ம் வருஷம் ஒரு சட்ட சபை அமைக்கப்பட்டது. 1906-ம் வருஷம் ராஜா சீர்திருத்தமளித்தார். அதன்படி சமஸ்தான அசெம்பிளி மெம்பர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. ஒரு இரண்டாவது சபையும் (லெஜிஸ்லேடிவ் கவுன்சில்) நிறுவப்பட்டது. சமஸ்தான நிர்வாக கவுன்சிலில் உள்ளவர்கள் அனைவரும் அதிகாரிகளே. ஜனங்களின் பிரதிநிதிகள் யாரும் கிடையாது. மைசூரில் இப்பொழுதுள்ள பிரதிநித்துவ ஸ்தாபனங்கள்:

(1) 280 மெம்பர்களைக் கொண்ட ஒரு அசெம்பிளி. இதில் 250 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அசெம்பிளிக்கு சமஸ்தான நிர்வாகத்தின் மீது அதிக்கம் கிடை

யாது. நிர்வாகத்தின்மீது குறை கூறும் உரிமை மாத்திரம் உண்டு.

(2) ஒரு இரண்டாவது சபை. இதற்கு சமஸ்தான நிர்வாகத்தின் மீது ஓரளவுக்கு ஆதிக்கம் உண்டு. இதி லுள்ள 53 மெம்பர்களில் 21 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்.

(3) சமஸ்தானத்தில் 82 முனிசிபாலிடிகள். இவற் றில் மூன்றைத் தவிர 79 முனிசிபாலிடிகளுக்கும் தலை வரை சர்க்காரே நியமிக்கிறார்கள். இவற்றில் சிலவற் றிற்கு உத்யோகப் பற்றில்லாதவர்களும், பாக்கி உள்ளவை களுக்கு சர்க்கார் அதிகாரிகளும் தலைவர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

(4) ஜில்லா போர்டுகள். தலைவர்களை தேர்ந்தெடுக்க போர்டுகளுக்கு உரிமையுண்டு. ஆனல், சர்க்கார் தலையீடு கள் சகிக்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

(5) கிராம பஞ்சாயத்துகள். இதிலுள்ளவர்களெல் லாம் சர்க்காரின் தாஸானு தாஸர்கள்.

பிரஜைகள் ஏமாற்றம்

மைசூர்தான் 'மாடல்' சமஸ்தானம் என்று 4, 5 வருஷங்களுக்கு முன் சொல்லப்பட்டு வந்தது. பொது வாக காங்கிரஸ்காரர்களுக்கு இந்த சமஸ்தானத்திடம் அநுதாபம் இருந்தது. ஆனல் ஜனங்கள் எதிர்பார்த்த சீர்திருத்தம் கிடைக்கவில்லை. தாப்போவதில்லை யென்றும் சர்க்கார் அறிவித்தது.

மைசூரில் 1917-ம் வருஷம் 'பிரஜாமித்ர மண்டலி' என்ற ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. இது முக்கிய

மாக தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தது. 1930-ல் "ஜனநாயகக் கக்ஷி" என்ற ஒரு புதுக் கக்ஷி ஆரம்பமாயிற்று. மகாராஜாவின் ஆட்சிக்குட்பட்ட பொறுப்பாட்சி சர்க்காரைப் பெறுவதே தனது லக்ஷிய மென்று இந்த கக்ஷி அறிவித்தது. இப் புதுக்கட்சி வந்ததும், "பிரஜாமித்திர மண்டலி" யும் அரசியல் திட்டங்களை தயாரித்தது. இந்த இரு கக்ஷிகளும், 1934-ல் ஒன்று பட்டது. ஒன்றுபட்ட கக்ஷிக்கு "பிரஜைகளின் சம்மேளனம்" என்று பெயர். மைசூரில் காங்கிரஸ் ஸ்தாபனமும் இருந்தது. இரு ஸ்தாபனங்களும் உண்மையில் பொறுப்பாட்சியைப் பெறும் லக்ஷியங்களைக் கொண்டதால், இவற்றின் தலைவர்கள், இரண்டையும் ஐக்கியப் படுத்திஞல்தான் பிற்போக்கான ஆட்சியை எதிர்த்து வெற்றிகரமாக போர் நடத்த முடியுமென்பதை உணர்ந்தனர். எனவே, 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் நடந்த "பிரஜைகள் சம்மேளன" மகாநாட்டில், சம்மேளனம், மைசூர் காங்கிரஸுடன் ஐக்கியமாகி விடவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானமும் உடனே அமுலுக்கு வந்தது. ஏகஸ்தாபனமாகி, அவர்களுடைய குறைகளைப் போக்க ஒரு மூகமான கோரிக்கைகளை தர்பாரிடம் சமர்ப்பித்தது.

அடக்குமுறையும், கிளர்ச்சியும்

1935-ம் வருஷத்திலேயே இங்கு அடக்குமுறை ஆரம்பமாயிற்றென்று சொல்லலாம். சர்க்கார், ரயத்துக்கள் மகாநாடு ஒன்றின் மீது செக்ஷன் 144-ஐ பிறப்பித்தார்கள். 1937 ஜனவரியில் காங்கிரஸ் கக்ஷி சமஸ்தான சட்டசபைத்

தேர்தலுக்கு நின்றது. தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க விருந்த ஸ்ரீமதி. கமலாதேவி மீதும், ஸ்ரீ. கே. டி. பாஷ்யம், இன்னம் பல தலைவர்கள் மீதும் தடை விதிக்கப்பட்டது. இந்த அடக்கு முறையைப் போன்ற வெற்றிகரமான தேர்தல் பிரசாரம் வேறு ஏதேனும் இருக்க முடியுமா? இந்தத் தடைகள் மாத்திரம் போதாதென்று, "சுதந்திர தின"த்தன்று சமஸ்தானத்தில் பல்வேறு பாகங்களில் யாதொரு பொதுக்கூட்டமும் நடைபெறக்கூடாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பிரஜா உரிமையென்றால் என்னவென்று தெரியாதவர்களும், நிலைமையை நன்கு உணர ஆரம்பித்தனர். சர்க்காரின் சுயஸ்வரூபம் அப்பொழுதுதான் அவர்களுக்கு நன்கு தெரியலாயிற்று.

1937-ம் வருஷத்தில் பிறப்பிக்கப்பட்ட தடை யுத்தரவுகள் 1938 ஜனவரியில் காலாவதியாக வேண்டியது. ஆனால் சர்க்கார் அந்த உத்தரவுகளை இன்னும் 6 மாதங்களுக்கு நீடித்தனர்.

"சுதந்திர தினத்"தன்று (ஜனவரி 26-ந் தேதி) நடக்கும் எல்லா பொதுக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் தடுக்குமாறு, மைசூர் சர்க்கார், சமஸ்தானத்திலுள்ள எல்லா மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் உத்திரவிட்டனர். மைசூர் ஜில்லாவிலும் 15 நாள் தடையுத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது. 'இதை மீறலாமா?' என்று மைசூர் காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஆச்சார்ய கிருபளானியைக் கேட்டிருந்தனர். "அதைத்தவிர பாக்கி எல்லாவற்றையும் செய்க" என்று பதில்கிடைத்தது.

இதைக் கண்ட சர்க்காருக்கு அசட்டு தைரியம் வந்தது. "மைசூர் சமஸ்தானத்தில் தேசீயக் கொடியை பறக்க விடுவது மைசூர் ராஜாவின் கொடியை அவமதிப்பது

போலாகும். எனவே, தேசீயக் கொடி இந்த சமஸ்தானத்தில் இன்னும் ஒரு வருஷத்திற்கு தலை காட்டக்கூடாது". என்று சர்க்கார் ஒரு புது உத்தரவு பிறப்பித்தார்கள்.

சர்க்காரின் அடக்குமுறையை ஜனங்கள் கண்டித்திருக்கிறார்கள் என்பதை காண்பிப்பதற்காக சமஸ்தான அசெம்பிளியில் உள்ள காங்கிரஸ் மெம்பர்கள் அனைவரும் ராஜீநாமாச் செய்து, மறு தேர்தலுக்கு நின்றனர். அவ்வளவு பேரும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மைசூரிடம் காங்கிரஸ்காரர்களுக்கு கொஞ்சம் அனுதாபம் இருந்ததால், அங்கேயே நிலைமை மோசமாகிக் கொண்டு வருவது அவர்களுக்கு பிடிக்கவில்லை. ஒரு கௌரவமான சமரசத்திற்கு வர விரும்பினார்கள். அப்பொழுது ராஷ்டிரபதியாயிருந்த பண்டித ஜவாஹர், கடிதப் போக்குவரத்தின் மூலம், மைசூர் காங்கிரஸ் போர்டு தலைவரும் திவான் சர். மிர்ஸா இஸ்மெயிலும் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்தார். பிப்ரவரி 7-ந் தேதி காங்கிரஸ் போர்டு கமிட்டியின் தலைவர் ஸ்ரீ. செங்கல்வராய செட்டி, திவானைக் கண்டு, கீழ்க்காணும் கோரிக்கைளைச் சமர்ப்பித்தார் :

(1) எல்லா ராஜீயக் கைதிகளையும் விடுதலை செய்துவிட வேண்டும்.

(2) ஸ்ரீ. குப்தா மீதுள்ள சமஸ்தான பிரஷ்ட உத்திரவை வாபஸ் வாங்க வேண்டும்.

(3) இப்பொழுது ஊழியர்கள் மீது நடந்துவரும் வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும்.

(4) பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு சீர்திருத்தக் கமிட்டியை நியமிக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளுக்கு திருப்திகரமான பதிலொன்றும் கிடைக்கவில்லை.

1938-ம் வருஷம் பிப்ரவரி 9-ந் தேதி மைசூர் காங்கிரஸ்போர்டு காரியக் கமிட்டியின் சர்வாதிகாரி ஸ்ரீ. கே. டி. பாஷ்யத்திற்கு 18 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த தண்டனையை எதிர்த்து அவர் அப்பீல் செய்யாவிட்டாலும், பொதுஜனங்கள் சார்பாக வக்கீல்களின் சங்கம் அப்பீல் செய்துகொண்டது. இந்த அப்பீலை நிராகரித்த பிரதம நீதிபதி ரெயிலி, "ஸ்ரீ. கே. டி. பாஷ்யத்தின் பிரசங்கம் ஆபாசமானது, தற்புகழ்ச்சி வாய்ந்தது, சுய விளம்பரம் கொண்டது, குரோதமானது, ராஜத்துவேஷமானது" என்று தீர்ப்பில் குறிப்பிட்டார்.

பொதுஜனத் தலைவர் மீது இப்படி அநீதியான அபிப்பிராயம் கொண்ட ரெயிலியைத்தான் சர்க்கார் பின்னர் சீர்திருத்தக் கமிட்டிக்கு தலைவராக நியமித்தார்கள்.

இந்த சமயத்தில் சில காங்கிரஸ் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனல் ஊழியர்கள் பல இடங்களில் கைது செய்யப்பட்டார்கள். இருந்தபோதிலும், மைசூர் காங்கிரஸ், தேசிய காங்கிரசின் யோசனைப்படி சட்ட மறுப்பை மார்ச் மாதம் முதல் தேதி வரை ஆரம்பிப்பதில்லை யென்று முடிவு செய்தது.

ஏப்ரல் மாதத்தில் சர்க்கார், 20 மெம்பர்கள் கொண்ட ஒரு சீர்திருத்தக் கமிட்டியை அமைத்தது. இதற்குத் தலைவர் பிரதம நீதிபதி ரெயிலி! மெம்பர்களில் 3 பேர்கள் சர்க்கார் அதிகாரிகள், 13 பேர்கள் உத்யோகப்பற்றில்லாதவர்கள், நான்கே நான்கு பேர்கள் காங்கிரஸ் மெம்பர்கள்.

மைசூர் காங்கிரஸ் தன்னுடைய சமரசத் திட்டத்தை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் திவானிடம் சமர்ப்பித்தது. அது பின்வருமாறு :

(1) மைசூர் காங்கிரசை அங்கீகரித்தல்;

(2) பொறுப்பாட்சி ஏற்படுத்துவதே தன் கொள்கையென மைசூர் சர்க்கார் தனது கொள்கையை வரையறுத்தல்;

(3) காங்கிரஸ் தெரிந்தெடுக்கும் மெம்பர்களை, பரஸ்பர சமரசப் பேச்சின் மூலம், சர்க்கார் சீர்திருத்தக் கமிட்டிக்கு நியமிக்க வேண்டும்;

(4) பொறுப்பாட்சி ஏற்படுத்துவது என்ற சிபார்சையும் கமிட்டி கவனிக்கும் என்று சர்க்கார், எழுத்து மூலம் உறுதியளிக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை காந்திஜி பரிபூர்ணமாக ஆதரிக்கிறார் என்பது சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டது. திவான் இசுற்கும் செவிசாய்க்காமல், கோரிக்கைகள் அனைத்தையும் நிராகரித்தார். உடனே மைசூர் காங்கிரஸ் காரியக் கமிட்டி சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லையென முடிவு செய்தது. சீர்திருத்தக் கமிட்டியிலுள்ள காங்கிரஸ் மெம்பர்களை வாபஸ் வாங்குவதென்றும் தீர்மானித்தது.

ஏப்ரல் 11-ந் தேதி (1938) மைசூர் காங்கிரஸ் மகாநாடு சிவபுரத்தில் கூடியது. இம்மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ. சித்தலிங்கய்யாவை போலீஸார் கைது செய்தனர். இதனால் ஏக பரபரப்பு ஏற்பட்டது. போலீஸார் பல இடங்களில் காவல் புரிந்து வந்த போதிலும், காங்கிரஸ் ஊழியர்கள் அந்தக் காவலை மீறி தேசீயக் கொடியை பறக்க விட்டனர். இதில் பலர் கைதியானார்கள்.

மைசூர் "ஜாலியன் வாலாபாக்" படுகொலை

ஏப்ரல் மாதம் 25-ந் தேதி விதுராஸ்வதத்தில் போலீஸார் ஒரு கும்பல் மீது 92 ரவுண்டுகள் சுட்டனர். இதன் விளைவாக 32 பேர்கள் மாண்டதாக பத்திரிகைகளில்

செய்திகள் வந்தன. பத்தே பத்து பேர்கள் கொல்லப் பட்டதாக சர்க்கார் கூறினர்கள். இந்த துப்பாக்கிப் பிர யோகம் இந்தியா பூராவிலும் பரபரப்பை உண்டு பண்ணி யது. விதுராஸ்வதம், கோலார் ஜில்லாவில், கோரிபித் னூர் தாலுக்காவில் உள்ள கிராமம். ஏப்ரல் 25-ந் தேதி யன்று வழக்கம்போல காங்கிரசின் "பிரபாத் பேரி" (காலை பஜனை) கோரிபித்னூரிலிருந்து ஸ்ரீ. ராமாச்சார் என்ற காங்கிரஸ் பிரமுகரின் தலைமையில் புறப்பட்டு, 11 மணிக்கு விதுராஸ்வதத்தை அடைந்தது. அன்று சந்தையின் கடைசி தினமாதலாலும், விதுராஸ்வதத்தில் உற்சவம் நடந்து வந்ததாலும், ஊர்வலம் கூட்டத்தில் முடிந்தபோது 15 அல்லது 20 ஆயிரம் ஜனங்கள் இருந்தார்கள். தடையை மீறி ஒருவர் தேசியக் கொடியை உயர்த்தினர். அவர் போலீஸாரால் கைது செய்யப்பட்டதும், வேறொருவர் எழுந்து கொடியை ஏற்றப்போனர். இப்படியாக சிலர் கைது செய்யப்பட்டனர். இதற்குள்ளாக மாஜிஸ்டிரேட் ஸ்தலத்திற்கு வந்து கூட்டத்தை கலையுமாறு உத்திரவிட் டார். இதற்கு கூட்டம் மறுத்து விட்டது. உடனே கூட்டத்தின் மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்ட தாகவும், இதனால் ஆத்திரமடைந்த ஜனங்கள், போலீ ஸார் மீது சற்றே வீசி யெறிந்ததாகவும், அதற்குப் பின் போலீஸ் சுட்டதாகவும் ஜனங்களின் தலைவர்கள் சொன் னர்கள். ஜனங்கள் கற்களை வீசி யெறிந்த பின்னர்தான் போலீஸார் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோக மும் செய்ததாக அதிகாரிகள் சொன்னர்கள்.

இந்த துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக ஒரு விசா ரணைக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென இந்தியா பூரா விலும் கிளர்ச்சி நடந்தது. மைசூர் சர்க்காரும், சென்னை

ஹைக்கோர்ட்டு ரிடையர்டு நீதிபதி சர். வேப்பா ராமேசம் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தது. கமிட்டி 1938 ஜூன் மே மாதம் 23-ந் தேதி கூடியது. அதன் ரிபோர்ட் நவம்பர் மாதம் 19-ந் தேதி வெளியாயிற்று. அதன் முடிவுகள் அனைத்தும் ஒருதலை பட்சமாகவே இருந்தன. போலீஸாரின் குற்றங் குறைகளை கமிட்டி எடுத்துக் கூறி, இறுதியில் அபவாதத்தை ஜனங்கள் மீதே சுமத்தியது. 10,000 ஜனங்கள் கொண்ட ஒரு கூட்டத்தை 35 போலீஸ்காரர்கள் கலைக்க முன் வருவதே முதல்தர முட்டாள்தனமாகும். இதை கமிட்டியும் ஒப்புக்கொண்டது. இவ்வளவு ஜனங்கள் கூடியிருந்ததைக் கண்டு, போலீஸ் திரும்பியிருந்தால், சுட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காதென்றும், ஆனால் போலீஸார் சுட்டது நியாயம்தானென்றும் கூறியது. ஏப்ரல் மாதம் 22-ந் தேதியோடு தடை யுத்தரவை ரத்துச் செய்ய வேண்டுமென அமீல்தார் மாஜிஸ்டிரேட் அபிப்பிராயம் கூறியிருக்கிறார். ஆனால், ஜில்லா மாஜிஸ்டிரேட் அதற்கு சம்மதிக்கவில்லை. எனவே கமிட்டி முன் கொடுக்கப்பட்ட சாக்ஷியங்களிலிருந்தே போலீஸ் அக்கிரமம் தெரிந்திருந்த போதிலும், விசாரணைக் கமிட்டி நியாயமான முடிவைக் கூறுவதால், விசாரணைக்காக செலவு செய்யப்பட்ட ஜனங்களின் வரிப் பணமாகிய ரூபாய் 40 ஆயிரம் வீண் தண்டமாயிற்று. இதோடு மட்டுமா? "சுட்டது நியாயம்தான். அளவுக்கு மிஞ்சி சுடப்படவில்லை" என்று கூறி, "சர்க்கார் ஒரு கிரிமினல் திருத்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வர வேண்டும்" என்றும் கமிட்டி சிபார்சு செய்தது.

மைசூரிலுள்ள நிலைமைக்கு பரிகாரம் என்ன என்பதுபற்றி, காந்திஜி, 1938 ஏப்ரல் 29-ந் தேதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

"தேசியக் கொடி சம்பந்தமாக மைசூரில் நடக்கும் போராட்டம், காலத்தின் போக்குக்கு ஒரு அடையாளம். மைசூர் பொது ஜனங்களிடையே இவ்வளவு விழிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பது எனக்குத் தெரியாதென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இதைக் கண்டு எனக்கு சந்தோஷ மேற்படுகிறது. சர்க்காரின் எதேச்சாதிகாரத் தன்மையை நீக்கி விட்டு, மைசூரின் நிர்வாகத்திற்கு பொதுஜனங்களின் பிரதிநிதிகளே பொறுப்புள்ளவர்களாகச் செய்வது ஒன்றுதான் பரிகாரம் என்று மகாராஜாவுக்கும், அவரது திவான் சர். மீர்ஸா இஸ்மெயிலுக்கும் நான் ஆலோசனை கூறுகிறேன்".

காந்திஜியின் இந்த புத்திமதியையும் சர்க்கார் புறக்கணித்தனர். 'பொதுக் கூட்டங்களே கூட்டக் கூடாது, 5 பேர்களுக்கு மேல் கூடக்கூடாது' என்ற தடைகளை மீறியதற்காக ஏப்ரல் மாதக் கடைசியிலும், மே மாத ஆரம்பத்திலும் பலர் கைது செய்யப்பட்டனர்.

தேசியக் கொடி ஏற்றிவைத்ததற்காக 75 வயது கிழவி ஒருவர் உள்பட பலர் கைதியானார்கள். சிறுவர்கள், வாலிபர்கள்கூட கொடி ஊர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். சர்க்கார் திகைத்துப் போய்விட்டது.

1938வது மே மாத முதல் வாரத்தில் சர்தார் பட்டேலும், ஆச்சார்ய கிருபளானியும், மைசூர் காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் சமரசம் செய்து வைப்பதற்காக பெங்களூர் வந்தனர். இருவரும் திவானைக் கண்டு பேசியதின் பலனாக சர்க்கார்,

(1) மைசூர் காங்கிரசை அங்கீகரித்தார்கள்;

(2) எல்லா தடைகளையும் நீக்கினார்கள்;

(3) சீர்திருத்தக் கமிட்டியில் காங்கிரசுக்கு போதிய பிரதிநித்துவம் அளிப்பதாக வாக்குறுதி கூறினர்;

(4) ராஜீயக் கைதிகளை விடுதலை செய்தனர்;

(5) விசாரணையிலிருந்த ராஜீய வழக்குகளை வாபஸ் செய்தனர்;

(6) பொறுப்பாட்சியைப்பற்றி விவாதிக்க சீர்திருத்தக் கமிட்டிக்கு உரிமையுண்டு என்று எழுதிக் கொடுத்தனர்.

மே மாதம் 8-ந் தேதி (1938) மைசூர் பூராவும் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டன. யாரும் கைது செய்யப் படவில்லை.

சர்தார் பட்டேலின் சமரசத் திட்டத்தை, மே மாதக் கடைசியில் பம்பாயில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கீகரித்தது.

சமஸ்தானத்தில் தேசியக் கொடியேற்று விழாக்களின் போது முதலில் மைசூர் சமஸ்தானக் கொடியை ஏற்றி விட்டு, பின்னர் தேசியக் கொடியை ஏற்றுமாறு மகாத்மா, மைசூர் காங்கிரசுக்கு யோசனை கூறினார். அதன்படி இரு கொடிகளும் தனித்தனி ஸ்தம்பங்களில் உயர்த்தப்பட்டன.

சீர்திருத்தக் கமிட்டியில் இன்னம் மூன்று காங்கிரஸ் பிரதிநிதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதாவது 20 மெம்பர்களைக் கொண்ட கமிட்டியில் மைசூர் காங்கிரசுக்கு 7 ஸ்தானங்கள் அளிக்கப்பட்டன. இக்கமிட்டி தனது வேலையை செய்துகொண்டு வருகையில், 1939-ம் வருஷம் ஜனவரி மாதம் ஸ்ரீ. பூபாலம் சந்திரசேகர செட்டி என்ற காங்கிரஸ் மெம்பர் காங்கிரசிலிருந்து ராஜீநாமாச் செய்தார். இவர் உடனே சீர்திருத்தக் கமிட்டியிலிருந்து ராஜீநாமாச் செய்ய வேண்டும் என்று மைசூர் காங்கிரஸ் கோரியது. இதற்கு ஸ்ரீ. பூபாலம் மறுத்து விட்டார். "மைசூர் காங்கிரசின் பிரதிநிதி என்ற ஹோதாவில்தான் அவர் சீர்திருத்தக் கமிட்டியில் அங்கம்

வகிப்பதால், மைசூர் காங்கிரசின் தீர்மானத்திற்குட்பட்டு சீர்திருத்தக் கமிட்டியிலிருந்து ராஜீநாமாச் செய்ய வேண்டியது அவருடைய கடமை" என்று சர்தார் பட்டேலும் கூறினர். சர்தார் சொன்னதைக் கேட்கவும் ஸ்ரீ. பூபாலம் மறுத்தார். உடனே மைசூர் காங்கிரஸ் ஸ்ரீ. பூபாலத்தை கமிட்டியிலிருந்து டிஸ்மிஸ் செய்து, இன்னொரு காங்கிரஸ் பிரதிநிதியை அந்த ஸ்தானத்திற்கு நியமிக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டது. இதற்கு சர்க்கார் மறுத்து விட்டார்கள். இதன் மூலம் மைசூர் காங்கிரஸ்—சர்க்கார் ஒப்பந்தத்தை, சர்க்கார் மீறிவிட்டதாக மைசூர் காங்கிரஸ் காரியக் கமிட்டி குற்றஞ் சாட்டி, சீர்திருத்தக் கமிட்டியிலுள்ள காங்கிரஸ் மெம்பர்கள் அக்கமிட்டி கூட்டங்களுக்குச் செல்லக்கூடாதென முடிவு செய்தது. பின்னர் அகில மைசூர் காங்கிரஸ் கமிட்டி கூடி, ஒப்பந்தத்தை சர்க்கார் மீறியிருப்பதால், சட்ட சபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும் காங்கிரஸ் மெம்பர்கள் ராஜீநாமாச் செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்தது. அதன்படி சுமார் 80 சட்ட சபை மெம்பர்களும், பல ஸ்தல ஸ்தாபன மெம்பர்களும் ராஜீநாமாச் செய்தனர்.

சமஸ்தான அதிகாரிகளுடன் நேரடியாகப் பேசி, சமரசத்திற்கு வர காங்கிரஸ்காரர்கள் முயற்சிக்க வேண்டுமென்று காந்திஜி யோசனை கூறியதும், மைசூர் காங்கிரஸ் தலைவர்களும் திவானை பேட்டி காண அநுமதி கோரினர். ஆனல் பேட்டியளிக்க திவான் மறுத்து விட்டார்.

இந்த மறுப்பு, ஜனங்களுக்கு சவால் விடுவதாக இருந்தது. தலைவர்கள் எவ்வளவோ பொறுமையுடனிருந்தனர். ஆனல் சர்க்கார் இத்துடன் நிற்கவில்லை. காங்கிரஸின் நியாயமான வேலைகளிலும் தலையிட ஆரம்பித்தனர்.

1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 14-ந் தேதி சமஸ்தான காங்கிரஸ் அக்ராசனர் ஸ்ரீ. தாஸப்பாவும், இன்னம் 12 தலைவர்களும் கோலார் தங்க வயலுக்கு பிரசாரத்திற் காகச் சென்றிருந்தார்கள். ஆனல் ஜில்லா மாஜிஸ்டிரேட் இந்த தலைவர்கள் அனைவருக்கும் ஒரு தடை யுத்தரவை சாதரா செய்தார். அங்கு கூட்டங்களை நடத்தினல் அமைதிக்கு பங்கமேற்பட்டு விடுமென அந்த உத்தரவில் காணப்பட்டது. பேச்சுரிமையையும் பறிகொடுக்க தலைவர் கள் விரும்பவில்லை. அனைவரும் தடையை மீறி கைதியானர் கள். அதில் 11 பேர்களுக்கு தலா 3 மாத கடுங்காவல் தண்டனையும், இருவருக்கு தலா 2 மாத கடுங்காவல் தண்டனையும் கிடைத்தது.

சாரமற்ற சீர்திருத்தம்

1938-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1ஆ நியமிக்கப்பட்ட சீர்திருத்தக் கமிட்டி தனது ரிப்போர்ட்டை 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 30ஆ சர்க்காரிடம் சமர்ப்பித்தது. அதன் மீது சர்க்கார் 1939-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் உத்தரவு பிறப்பித்தனர்.

சர்க்கார் ஏற்றுக்கொண்ட சிபார்சுகளில் முக்கிய மானவை :

(1) அசெம்பிளி, இரண்டாவது சபை இரண்டின் வேலைகளையும் விஸ்தரித்தல் ;

(2) இரு சபைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களின் எண்ணிக்கையை அதிகமாக்குதல் ;

(3) இதுவரை திவானே சபாநாயகராயிருந்த இரண் டாவது சபைக்கு சபாநாயகரையும், உதவி சபாநாயகரை யும் தேர்ந்தெடுத்தல் ;

(ஆனல் அசெம்பிளிக்கு இனியும் திவானே சபா நாயகரா யிருப்பார்.)

(4) நிர்வாக கவுன்லிலுக்கு உத்யோகப்பற்றில்லாத இரு மந்திரிகள் நியமனம்;

(5) பப்ளிக் சர்விஸ்களுக்கு நபர்களே பொறுக்கி யெடுக்கவும், அந்த சர்விஸ்களே சரியாக அமைக்கவும் சர்க் காருக்கு உதவி செய்ய பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமனம்.

சீர்திருத்தங்களின் இறுதி லக்ஷியம் பொறுப் பாட்சி சர்க்கார் என்பதை அறிவித்துவிட வேண்டு மென்று சீர்திருத்தக் கமிட்டி செய்திருந்த சிபார்சை ஏற்றுக்கொள்ள சர்க்கார் மறுத்து விட்டது.

தனித் தொகுதிகள் தொலைந்தால் வகுப்புப் பிரச்னை இருக்குமிடம் தெரியாது என்று தேசீயத் தலைவர்கள் கரடியாகக் கத்திக்கொண்டு வரும் இந்த நாளில், மைசூர் சர்க்கார், கூட்டுத் தொகுதி முறையை கைவிட்டு, தனித் தொகுதி முறையை அநுஷ்டிக்கப் போவதாக சீர்திருத்தத் தில் அறிவித்தனர். தனித் தொகுதி வேண்டுமென சீர் திருத்தக் கமிட்டி கூட விரும்பவில்லை. ஜனங்களின் ஐக்கி யத்தைக் குலைக்கவே இந்த முறை புதிதாக புகுத்தப் பட்டிருக்கிற தென்பதை யாரும் மறுக்க முடியாது.

சீர்திருத்தத்தின்படி அசெம்பிளியில் 315 மெம்பர் கள் இருப்பார்கள். இதில் 211 பேர்கள் பொதுத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், 114 பேர்கள் மைனரிட்டி வகுப்புகள், விசேஷ உரிமைகள், நியமனங்கள் ஆகிய இனங்களின் கீழ் வருகின்றனர்.

தேசீய கக்ஷிக்கு பொதுத் தொகுதியில் 211 ஸ்தானங் களில் சுமார் 180 ஸ்தானங்களும், மைனரிட்டி, விசேஷ உரிமை முதலிய தொகுதிகளில் 114 ஸ்தானங்களில் சுமார்

20 ஸ்தானங்களும் கிடைக்கக்கூடுமென ஸ்ரீ. கே. டி. பாஷ்யம் அபிப்ராயப்படுகிறார். ஆனல் சர்க்கார், தங்கள் கீழ் வேலை செய்யும் கிராம முன்சீபுகளையும், கர்ணங்களையும் தேர்தலுக்கு நிற்க அநுமதிப்பதால் இந்த 200 ஸ்தானங்களில் குறைந்தது 60 ஸ்தான்ங்கள் அவர்களுக்கு கிடைத்து விடுமென நம்பப்படுகிறது. எனவே, பொது ஜனங்களின் உண்மை நலனுக்காக உழைக்க மொத்தம் 140 பேர்கள் தான் இருப்பார்கள். ஜனங்களின் கக்ஷி மைனரிட்டியாகி விடும்! இது விஷயத்தில் இப்பொழுதுள்ள சட்ட சபை அமைப்பே சிலாக்கியமானதெனக் கூறலாம். இப்பொழுதுள்ள சட்ட சபையில் மொத்தம் 280 ஸ்தானங்களில் குறைந்தபக்ஷம் 150 ஸ்தானங்களையாவது தேசியவாதிகள் கைப்பற்ற முடியும்.

புதிய சீர்திருத்தத்தின்படி இரண்டாவது சபையில் 68 மெம்பர்கள் இருப்பார்கள். இதில் 24 ஸ்தானங்கள் தான் பொதுத் தொகுதிக்கு ஒதுக்கப்படுகிறது. மைனரிட்டிகளுக்கும், விசேஷ உரிமைகளுக்கும் 20 ஸ்தானங்கள். பாக்கி 24 பேர்கள் சர்க்காரால் நியமிக்கப்படுவார்கள். இரண்டாவது சபையிலும் பொது ஜனக் கக்ஷிக்கு மெஜாரிட்டி கிடைக்கப் போவதில்லை.

எனவே, இப்பொழுதுள்ள சட்ட சபைகளில் உள்ளதைவிட அதிகமாகவே பிற்போக்காளர்கள் புதிய சட்ட சபைகளில் இருக்க சர்க்கார் ஏற்பாடு செய்து விட்டனர்.

மேலும், சட்ட சபைகள் நிறைவேற்றும் மசோதாக்கள், தீர்மானங்களை சர்க்காருக்கு செய்யப்படும் சிபார்சுகளாகவே கருதப்படும்.

இந்த விசித்திரமான சீர்திருத்தத்தை மைசூர் சமஸ்

தான காங்கிரஸ் நிராகரித்து விட்டதில் ஆச்சர்யமெதுவு மில்லை.

சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள், அவர்களுடைய கக்ஷியின் சார்பாக பிரசாரம் செய்வதைக்கூட சர்க்கார் தடுக்க ஆரம்பித்து விட்டனர். தலைவர்கள் இதற்கெல்லாம் பயப்படாமல், தங்கள் கடமையிலேயே குறியாக இருந்து, சர்க்காரின் அடக்குமுறைகளுக்கு ஆளாயினர். தடையுத் தரவுகளையும் மீறினர்கள். ஆனல் காந்திஜி கூறிய யோசனை யின்பேரில், சமஸ்தான காங்கிரஸ் சட்டமறுப்பை தற் காலிகமாக நிறுத்திவைப்பதென 1940-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி முடிவு செய்தது.

திருவாங்கூர்

சமஸ்தானத்தின் வரலாறு

திருவாங்கூர் ஒரு காலத்தில் பூர்ண சுதந்திர ராஜ்ய மாக இருந்தது. சமஸ்தானத்திலிருந்த சிற்றரசர்கள், மகாராஜாவை எதிர்த்து, வெற்றி பெற்று, கொஞ்ச காலத் திற்கு பூர்ண ராஜ்யாதிகார முள்ளவர்களாயிருந்தார்கள். பின்னர் இந்த சிற்றரசர்கள் 1729ம் வருஷம் முதல் 1758ம் வருஷம் வரை ஆட்சி புரிந்த மகாராஜ மார்த்தாண்ட வர்மாவால் முறியடிக்கப்பட்டனர். திருவாங்கூர் பூராவும் இவருடைய ஆட்சியின் கீழ் வந்தது. 18ம் நூற்றாண்டின் மத்தியில் கிழக்கிந்திய கம்பெனியார் மதுரையிலும், திரு நெல்வேலியிலும், யுத்தம் செய்துகொண்டிருக்கையில், திரு வாங்கூர் சர்க்கார் பிரிட்டிஷார்களுக்கு உதவி புரிந்தனர். அதாவது, இந்தியர்களுக்கு உதவி செய்வதற்கு பதிலாக, அந்நிய நாட்டினருக்கு ராணுவ பலத்தை யளித்து, அவர்

களுடைய ஆட்சி இந்தியாவில் ஸ்தாபிதமாவதற்கு ஓரள வுக்கு உதவி புரிந்தார்கள். 1795ல் வர்த்தகக் கம்பெனி யுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி கம்பெனியார், திருவாங்கூரை விரோதிகளிடமிருந்து பாது காப்பதாக உறுதி கூறினர். 1805ம் வருஷத்திலிருந்து திருவாங்கூர், வர்த்தகக் கம்பெனிக்கு (பின்னர் இந்திய சர்க் காருக்கு) வருஷா வருஷம் ரூ. 8 லக்ஷம் கப்பம் கட்டி வரு கிறது. இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் வேல்ஸைப் போன்றது. அதாவது 7625 சதுர மைல்கள். வருஷ வருமானம் ரூ. $2\frac{1}{2}$ கோடி. ஜனத்தொகை 50,95,973. இதில் 61% ஹிந்துக்கள். 16 லக்ஷம் கிறிஸ்துவர்களும், $3\frac{1}{2}$ லக்ஷம் முஸ்லிம்களுமிருக்கிறார்கள். ரோமா-ஸிரியன் களும், ரோமன் கத்தோலிக்கர்களும்தான் கிறிஸ்தவர்களில் பெரும்பாலு மிருக்கிறார்கள்.

ராஜ குடும்பம், நாயர் வகுப்பைச் சேர்ந்தது. இந்த வகுப்பில் ஒருவனுக்கு உள்ள சொத்து, (மலையாளத்திற் குரிய விசேஷமான மருமகதாய சட்டப்படி) அவனு டைய பிள்ளையைச் சேராது; சகோதரியின் பிள்ளைக்கே சேரும். ராஜ குடும்பமும் இந்த பழக்கத்தையே பின்பற்று கிறது. சமஸ்தானாதிபதிக்கு சகோதரியில்லாவிட்டால், அவர் தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயை சகோதரி யாக ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டும். காலம் சென்ற மகாராஜா நான்காவது ராம வர்மா விஷயத்தில் இப் படித்தான் நடந்தது. அவர், தன் குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்களை சகோதரிகளாக ஸ்வீகாரம் எடுத்துக்கொண் டார். அவர்கள்தான் ஸீனியர் மகாராணியாகவும், ஜூனியர் மகாராணியாகவும் ஆனார்கள். மூத்தவளுக்கு பெண்கள்தான் பிறந்தன. இளையவளுக்கு ஒரு ஆண்

குழந்தை (இப்பொழுதுள்ள மகாராஜா) பிறந்தது. இந்த மன்னர் 1924-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 1-ந் தேதி பட்டத்திற்கு வந்தார்.

இந்த மகாராஜா மைனராக இருக்கையில், வழக்கத்தை யனுசரித்து, ஸீனியர் மகாராணி ரீஜண்டாக இருந்தார். மகாராஜாவுக்கு 1931-ம் வருஷம் நவம்பர் மாதம் 6-ந் தேதி ராஜ்யாதிகார மளிக்கப்பட்டது. இவர், மைசூர் மகாராஜா வைப்போல, வெள்ளைக்காரர்களுடன் உட்கார்ந்து சாப்பிடு வதில்லை.

இந்த சமஸ்தானத்தில் 1931-ம் வருஷத்தில் கணக் கெடுத்ததில், ஜனத்தொகையில் 1,000 பேர்களுக்கு (5 வய துக்குட்பட்டவர்களைச் சேர்க்காமல்) 289 பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமென்று தெரிய வந்தது. புருஷர் களில் 1,000க்கு 408 பேர்களுக்கும், ஸ்திரீகளில் 1,000க்கு 168 பேர்களுக்கும் எழுதப் படிக்கத் தெரியும்.

சட்ட சபைகள்

1888-ம் வருஷத்தில் சட்ட சபை நிறுவப்பட்டது. பின்னர் 1921ம் வருஷமும் 1932ம் வருஷமும் சட்ட சபை சீர்திருத்தப்பட்டது. இப்பொழுது ஸ்ரீமூலம் அசெம்பிளி யும், ஸ்ரீ சித்ரா கவுன்சில் என்ற இரண்டாவது சபையும் இருக்கின்றன. அசெம்பிளியில் மைசூரைப்போல, தேர்ந் தெடுக்கப்பட்டவர்களே மெஜாரிட்டியாயிருக்கிறார்கள்.

கல்வியிலும் சரி, அரசியல் எழுச்சியிலும் சரி, திருவாங்கூர் மக்கள், இதர சமஸ்தானங்களிலுள்ளவர் களுக்கும், பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளவர்களுக்கும் சளைத் தவர்களில்லை. பல விஷயங்களில் பிரிட்டிஷ் இந்தியாவை விட முன்னேறி யிருக்கிறார்கள். உதாரணமாக கல்வி, சமூக சீர்திருத்தம் இவைகளைக் கூறலாம். அங்கு ஒவ்



திருவாங்கூர் மகாராஜா



மைசூர் மகாராஜா



திருவாங்கூர் திவான்
சர். ஸீ. பீ. ராமஸ்வாமி அய்யர்



ஹைதராபாத் நிஜாம்

வொரு சதுர மைலுக்கும் ஒரு ஆரம்பப் பாடசாலை யுண்டு. 5 தாய் பாஷை (மலையாள) தினசரிகள், 3 இங்கிலீஷ் தினசரிகள் உள்பட 200 பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் (1938-ல் அடக்குமுறை ஆரம்பமாகு முன்) இருந்தன. 1937-ம் வருஷக் கடைசியில் மகாராஜா, திவான் சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரின் யோசனையின் பேரில், தனக்குச் சொந்தமான கோவில்களையும், சர்க்காருக்குச் சொந்தமான கோவில்களையும், ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டதின் மூலம் இந்தியர்கள் அனைவரின் நன்றிக்குப் பாத்திரமானார்.

1937ல் புகழப்பட்ட திருவாங்கூர் சர்க்கார், 1938-ல் சமஸ்தான பிரஜைகளின் பிரஜா உரிமைகளை பறித்ததின் மூலம் இந்தியர்களின் வெறுப்புக்கு ஆளாயிற்று.

பொறுப்பாட்சிப் போர்

திருவாங்கூர் ஜனங்கள் பொறுப்பாட்சி வேண்டுமென கேட்டது 1938-ல்தான் என்று யாரும் நினைக்க வேண்டாம். 1929-ல் திருவனந்தபுரத்தில் திருவாங்கூர் சமஸ்தான மக்கள் கமிட்டியின் ஆதரவில் சர். எம். விஸ்வேஸ்வரய்யாவின் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டில், திருவாங்கூரில் பொறுப்பாட்சி சர்க்காரை ஸ்தாபிக்குமாறு சர்க்காரைக் கேட்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 2ந் தேதி ஸ்ரீ. டி. எம். வர்க்கீஸ் என்ற சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர், சமஸ்தான அசெம்பிளியில் "பொறுப்பாட்சியை ஸ்தாபிக்க சர்க்கார் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க" சபையின் நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு பிரேரணை கொண்டு வந்தார். இதற்கு திவான்—சபாநாயகர் சர். சி. பி.

பதிலளிக்கையில், ஆதிபத்ய சர்க்காருடன் திருவாங்கூர் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தங்கள், பொறுப்பாட்சி சர்க்காரை அளிப்பதற்கு தடையாக இருப்பதாகக் கூறினர். அதாவது இந்த ஒப்பந்தங்கள் இல்லையேல், மகாராஜா உடனே பொறுப்பாட்சி கொடுத்து விடுவார் என்ற பொருள்படும்படி சொன்னர். (“நாங்கள் ஒன்றும் மூட்டுக்கட்டை போட மாட்டோம்” என்று பிரிட்டிஷ் சர்க்கார் 1938 பிப்ரவரியில் பார்லிமென்டில் அறிவித்தனர். இது விஷயத்தை வேறு அத்தியாயத்தில் விவரமாகக் கவனிப்போம்.)

திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் கமிட்டி பிப்ரவரி மாதத்திலேயே பொறுப்பாட்சி வேண்டுமென கேட்டது.

1938 மார்ச் மாதத்தில்தான் சமஸ்தான காங்கிரஸ் கமிட்டி தனது கிளை ஸ்தாபனங்களை சமஸ்தானம் பூராவும் நிறுவுவதென முடிவு செய்தது. ஆனல், சர்க்கார் இதை அனுமதிக்கவில்லை. திருவாங்கூர் ஜில்லாவில், இரண்டு மாத காலத்திற்கு சமஸ்தான காங்கிரஸ் அல்லது காங்கிரஸ் என்று அழைக்கப்படும் ஏதோ ஒரு ஸ்தாபனத்தின் கிளை ஒன்றை ஸ்தாபிக்க எந்த விதமான பொதுக்கூட்டங்களும் கூடைபெறக்கூடாதென ஜில்லா மாஜிஸ்டிரேட் ஒரு தடையுத்தரவு பிறப்பித்தார்.

தடையுத்தரவு அமுலிலிருந்த 2 மாத காலத்தில் சமஸ்தான காங்கிரஸ் எதுவும் செய்யவில்லை. எதற்காக தடை போடப்பட்டது என்று யாராவது சர்க்காரைக் கேட்டால், “சமஸ்தான காங்கிரசின் பொறுப்பாட்சி கோரிக்கையை ஜனங்களில் ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள். ஆகவே சமஸ்தான காங்கிரஸ் கூட்டங்களைப் போட்டால் கலகம் ஏற்படும், அந்த ஸ்தாபனத்தின் தலைவர்கள்

ரகசிய வேலைகளில் ஈடுபடுகிறார்கள்'' என்ற பதில் கிடைத்தது. ''ரகசிய வேலைகள்'' என்றால் அதில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறதுதானே? என்று யாராவது கேட்டால், அதற்கு பதில் கிடையாது.

அந்த 2 மாத காலம் கழிந்த பின்பும் சர்க்காரின் மனப்பான்மை மாறவில்லை. சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள், பிரசாரக் கூட்டம் போட்டார்கள். ஆனால் காலாடிகளும், போலீசாரும் கூட்டத்தில் நுழைந்து, தடியடி செய்து கலைத்தனர். போட்டிக் கக்ஷியாகிய திருவாங்கூர் தேசிய காங்கிரசுக்கு சர்க்கார் எல்லாவித பாதுகாப்பும் அளித்தார்கள். இதிலிருந்து சமஸ்தான காங்கிரசின் நியாயமான, சட்டரீதியான வேலைகளை தடை செய்வதென சர்க்கார் முடிவு செய்திருந்தது தெரியலாயிற்று. துருப்புகளெல்லாம் தெருக்களில் பவனி செய்து, ஜனங்களின் உள்ளத்தில் பீதியைக் கிளப்பியது.

சமஸ்தான காங்கிரஸ் ஆரம்பிக்கப்படுகையில், அதில் சில வகுப்புவாதிகள் இருந்ததாக சந்தேகிக்கப்பட்டது. டாக்டர் பட்டாபி, சமஸ்தான காங்கிரஸ் அக்ராசனர் ஸ்ரீ. பட்டம் தாணுப் பிள்ளைக்கு இதைப்பற்றி ஒரு கடித மெழுதினர். அதில், சமஸ்தான காங்கிரஸ் மெம்பர்கள் வேறு எந்த வகுப்புவாத ஸ்தாபனத்திலும் மெம்பர்களாயிருக்கக்கூடாதென்று குறிப்பிட்டிருந்தார். இந்த யோசனையும் பின்பற்றப்பட்டது. ஸ்ரீ. ஜி. ராமச்சந்திரன் (வேதாரண்ய சத்யாக்ரகத்தில் கடைசி சர்வாதிகாரியாயிருந்தவர்) போன்ற பழுத்த காங்கிரஸ்வாதிகள். சர்க்காரின் அடக்குமுறையை சகிக்க முடியாமல், சமஸ்தான காங்கிரசில் சேர்ந்து, அந்த ஸ்தாபனத்தை பலப்படுத்தினர்கள். பிறகு அது ஜனங்களின் உண்மையான கட்சியாக

ஆகிவிட்டது. முதலிலிருந்த சந்தேகங்கள் ஒழிந்தன. தலைவர்கள் பிரஜா உரிமைகளுக்காக போராட உத்தேசித்திருந்ததற்கு இந்தியா பூராவிலும் ஆதரவு கிடைத்தது.

1938 ஆம் மே மாதம் 30ந் தேதி சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள் (22 பேர்கள்) ஒரு மகஜரை மகாராஜாவிடம் சமர்ப்பித்தனர். மகஜர்:

(1) இப்பொழுது திவானுக்குள்ள அதிகாரங்களை, சட்ட சபைக்கு ஜவாப்தாரியான ஒரு மந்திரி சபையிடம் ஒப்படைக்க வேண்டும். மகாராஜாவே நிர்வாகத்தின் தலைமைப் பேரதிகாரியாக யிருப்பார். சகல விஷயங்களிலும் அவர் தீர்ப்பே முடிவானது.

(2) சட்ட சபையை சீர்திருத்தியமைக்க வேண்டும். மைனாரிட்டிகளின் நலன்களுக்கு போதிய பாதுகாப்பளித்து, வயது வந்தவர்கள் அனைவருக்கும் வோட்டுரிமை அளிக்கவேண்டும். சட்ட சபைகளுக்கு மெம்பர்கள் நியமனம் செய்யப்படும் முறை ஒழிய வேண்டும். இரு சபைகளின் சபாநாயகர்களும் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(3) பேச்சு சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், மத பிரார்த்தனை சுதந்திரம், பக்ஷபாதமாக கைது செய்யப்படுவதிலிருந்தும், தண்டிக்கப்படுவதிலிருந்தும் பாதுகாப்பு, ஜீவனம் செய்ய குறைந்தபக்ஷ சம்பளம், தொழிலாளர்களுக்கு நியாயமான வேலை நிபந்தனைகள்—இவைகள் அடங்கிய ஜீவாதார உரிமைகள் அளிக்கப்படுமென புது சீர்திருத்தத்தில் இருக்க வேண்டும்.

(4) நீதி வழங்கும் விஷயத்தில் யாதொரு தலையீடுகளும் இல்லாமலிருக்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

(5) பத்திரிகைச் சட்டத்தை ரத்து செய்துவிட வேண்டும்.

(6) சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரை திவான் பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

(7) சர். சி. பி. ராமஸ்வாமி அய்யர் திவான் என்ற ஹோதாவில் ஜவாப்தாரியாயுள்ள நிர்வாக வேலைகள், நியமனங்கள், பணம் கொடுக்கல் வாங்கல்கள்—இவைகளைப்பற்றி சாங்கோபாங்கமாக விசாரிக்க ஒரு பக்ஷபாத மற்ற கமிட்டியை நியமிக்க வேண்டும்.''

இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுமாறு சமஸ்தான காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் மகாராஜாவை வேண்டிக்கொண்டார்கள். இந்த மகஜரிலுள்ளவைகளுக்கு ஆதாரங்கள் காட்டி, கமிட்டி இன்னொரு நீண்ட மகஜரையும் சமர்ப்பித்தது.

இந்த மகஜர்கள் மீது சமஸ்தான சர்க்கார் தடை விதித்தார்கள்.

ஜூன் மாதத்தில் (1938) சமஸ்தான காங்கிரஸ் ஊழியர்கள், கண்ட இடங்களிலெல்லாம் காலிகளால் தாக்கப்பட்டனர். பொதுக் கூட்டங்களில் காலிகள் நுழைந்து போலீஸார்கள் முன்னிலையிலேயே தலைவர்களை தாக்கினர்கள்; கூச்சல் போட்டார்கள்; தம்பட்டங்களை தட்டி, கொம்புகளை ஊதினர்கள்.

ஆகஸ்ட் மாதத்தில் ஸ்ரீமதி. கமலாதேவி, யுவர் சங்க மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க திருவனந்தபுரம் சென்றார். ரயிலில் செல்லுகையிலேயே, அவருக்கு, சமஸ்தானத்தில் நுழையக்கூடாதென சமஸ்தான சர்க்கார் ஒரு தடை யுத்தரவை சாதரா செய்தது. ஸ்ரீமதி. கமலாதேவி தடையை மீறிச் சென்றார். திருவனந்தபுரத்தில் கைது செய்யப்பட்டு, பின்னர் அதிகாரிகளால் திருநெல்வேலிக்குக் கொண்டு வரப்பட்டார். அங்கு விடுதலையானார்.

சமஸ்தான காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி அக்டோபர் மாதம் சர்க்காருக்கு ஒரு இறுதிக் கடிதம் எழுதியது.

அதில், 5 மாத காலமாக தடை யுத்தரவுகளே சகித்துக் கொண்டிருந்தாய் விட்டதென்றும், போட்டிக் கட்சியாகிய திருவாங்கூர் தேசிய காங்கிரஸ், சமஸ்தான காங்கிரஸ் மீது பொய்ப் பிரசாரம் செய்ய அநுமதிக்கப்பட்டிருக்கிற தென்றும் குறிப்பிட்டு, தடையுத்தரவுகள் வாபஸாகா விட்டால், அவற்றை மீறப் போவதாகவும் அறிவித்தது. இதற்கு அகம்பாவமான பதில் கிடைக்கவே, சமஸ்தான காங்கிரஸ் ஆகஸ்ட் 26-ந் தேதி தடை யுத்தரவுகளே மீறுவதென முடிவு செய்தது. நடக்கப்போவது பொது சத்தியாக்கிரகமல்ல ; பிரஜா உரிமைக்காகத்தான் என்பதும் ஸ்ரீ. பட்டம் தாணுப் பிள்ளையால் தெளிவாக்கப்பட்டது. திருவாங்கூர் சர்க்கார் ஆகஸ்ட் மாதம் 25-ந்தேதி கிரிமினல் திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். சமஸ்தான காங்கிரஸ், யுவர் சங்கம் இரண்டின் மீதும் தடை விதித்தார்கள். 26-ந் தேதி சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீ. பட்டம் தாணுப் பிள்ளையும், இன்னம் சில தலைவர்களும், பொதுக் கூட்டங்கள் மீதிருந்த தடையை மீறி கைதியானார்கள். சர்க்கார் நடத்தையை கண்டித்து மாணவர்கள் ஹர்த்தால் அநுஷ்டித்தனர். சமஸ்தானம் பூராவும் பல வீடுகள் சோதனையிடப்பட்டன. சங்குமுகம் கடற் கரையில் ஆகஸ்ட் 29-ந்தேதி நடைபெற்ற ஒரு பிரும்மாண்டமான கூட்டத்தை போலீஸார் தடியடிப் பிரயோகத்தால் கலைத்தனர். கூட்டத்திற்கு 15,000 ஜனங்கள் வந்திருந்ததிலிருந்து, சமஸ்தான காங்கிரஸை பொதுஜனங்கள் எவ்வளவு தூரம் ஆதரித்தார்களென்பதை தெரிந்துகொள்ளலாம்.

சத்யாக்கிரக இயக்கம் காட்டுத்தீ போல மளமளவென்று, சமஸ்தானம் பூராவும் பரவியது. பல இடங்

களில் தடியடிப் பிரயோகம் நடந்தது. ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் ஏழு இடங்களில் ராணுவமும், போலீசும் பொதுஜனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அநேகரைக் கொன்றன.

துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்து, காந்திஜி வெளியிட்ட ஒரு அறிக்கையில், தேவைக்கு அதிகமாகவே சர்க்கார் பலாத்காரத்தை உபயோகித்ததாக குறிப்பிட்டிருக்கிறார். அதே சமயத்தில் சமஸ்தான காங்கிரசை சரியான பாதையில் நடத்திச் செல்லவும் முயன்றார். மகஜரிலுள்ள குற்றச் சாட்டுகளை—அவை உண்மையாயிருந்தால் கூட—வாபஸ் வாங்கிவிட வேண்டுமென்று புத்திமதி கூறினார். சமஸ்தான காங்கிரஸ் இதைக் கேட்கவில்லை.

துப்பாக்கிப் பிரயோகங்கள், தடியடிகள்—இவைகளைப் பற்றி விசாரணை நடத்த சமஸ்தானத்திற்கு வெளியேயுள்ள ஒருவரை—காங்கிரஸ்காரராக இல்லாவிட்டால், கனம் சீனிவாச சாஸ்திரியைப் போன்ற ஒரு மிதவாதியையாவது—அழைக்குமாறு காந்திஜி, சமஸ்தான சர்க்காருக்கு யோசனை கூறி, கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டார் :

" கல்லெறியப்பட்டதும், பஸ்கள் கொளுத்தப்பட்டதும் போலீஸ்காரர்களால் தூண்டிவிடப்பட்ட போக்கிரிகளின் செய்கை என்று சிலர் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி முழு விசாரணை நடத்தினாலொழிய, எது உண்மை என்பது சொல்லுவது கஷ்டம். அந்தக் கூட்டங்களில் ஏராளமான போலீஸ்காரர்களும், துருப்புகளும் இருந்திருக்கின்றனர். அப்படியிருந்தும் இந்த சம்பவங்களில் ஒன்றையாவது தடுக்க முடியவில்லை, யாரையும் கைது

செய்ய முடியவில்லை யென்றால் உங்களுக்கு ஆச்சரியமாகயில்லையா? போலீஸ்காரர்களும், அவர்களுடைய கூலிக்காரர்களும் தான் இந்த அக்கிரமங்களை செய்வதால், யாரையும் கைது செய்வதற்கு போலீஸ்காரர்கள் துணியவில்லையென்று சமஸ்தான காங்கிரசை ஆதரிக்கிறவர்கள் சொல்லுகிறார்கள்."

என்ன சொல்லிப் பார்த்தும், சர்க்கார், பக்ஷபாத மில்லாத ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிக்க மறுத்து விட்டது.

திருவாங்கூரில் மாணவர்களும் தீவிரமாக பொறுப் பாட்சி இயக்கத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. (முதலில் பிரஜா உரிமைகளுக்காக ஆரம்பமான இயக்கம் பின்னர் பொறுப்பாட்சிப் போராக ஆகிவிட்டது.) பல ஊர்களில் இவர்கள் பொறுப்பாட்சி கிடைக்கும் வரை வகுப்புகளுக்குச் செல்லுவதில்லையென பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். இயக்கத்திலும் பலர் கலந்துகொண்டார் கள். 1938-ஐ செப்டம்பர் மாதத்தில், மதுரை, மலபார், மங்களூர் ஆகிய ஊர்களிலிருந்து தொண்டர் படைகள் திரு வாங்கூர் சென்று, சத்யாக்ரகத்தில் கலந்துகொண்டு கைதி யாயின.

போலீஸார் எவ்வளவு கேவலமாக நடந்துகொண்டார் களென்பதை கீழ்க்காணும் சம்பவங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர் மிஸ். அன்னி மாஸ்கரின் எம்.ஏ., பி.எல்., ஒரு நாள் ஸ்ரீ. நாரா யணப் பிள்ளை ராஜத்துவேஷ வழக்கில் எதிரி சார்பாக ஆஜராகி விட்டு வீடு திரும்பியதும், வீட்டின் மீது கற்கள் வீசப்பட்டன. அவர் மீது குறி பார்க்கப்பட்ட ஒரு கல் ஜன்னலை பொத்துக்கொண்டு, அவர் கால் மேல் விழுந்தது.

இன்னொரு நாள் அவர் வீட்டிலிருந்து துணி, ரூபாய், நகைகள், வக்கீல் சன்னது, சர்வகலாசாலை பட்டங்கள், இன்னும் சில தஸ்தாவேஜுகள் களவாடப்பட்டன. வந்த திருடன் வீட்டில் கந்தல் துணியைக்கூட பாக்கி வைக்க வில்லை. மிஸ். மாஸ்கரின் பிரசாரத்திற்குச் சென்று அன்று தான் திரும்பியதால், அவர் கையில் கொண்டு வந்திருந்த பெட்டியில் இருந்த புடவைகளைக் கொண்டே காலையில் எழுந்தவுடன் இரவு ஆடையை கழற்றி வேறு ஆடையை உடுத்திக்கொள்ள முடிந்தது. கந்தல்கள்கூட திருட்டுப் போயிருப்பதால் சந்தேகம் கிளம்புவது சகஜந்தானே!

* * * *

சமஸ்தான காங்கிரசின் கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ. நீலகண்டம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., ஒரு நாள் காலை 7-மணிக்கு தன்னுடைய வீட்டிலிருந்து ஆபீசுக்குச் சென்று கொண்டிருக்கையில், யாரோ ஒருவன் இரும்புத் தடியால் அவர் மண்டையில் அடித்தான். பிறகு கைமேலும் அடி விழுந்தது. இதன் விளைவாக ஸ்ரீ. பிள்ளையின் கை எலும்பு ஒன்று முறிந்தது.

* * * *

சமஸ்தான காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ. பட்டம் தாணுப் பிள்ளை (1938 ஜூன் மாதத்தில்) நெடுங்கண்டா என்ற கிராமத்தில் ஒரு கூட்டத்திற்கு தலைமை வகித்துக் கொண்டிருக்கையில், குடித்து விட்டு வந்த ஒருவன், ஸ்ரீ. தாணுப் பிள்ளையின் பின்புறம் வந்து நின்றான். உட்காரு மாறு ஸ்ரீ. பிள்ளை எவ்வளவோ சொல்லியும், குடிகாரன் கேட்கவில்லை. ஸ்ரீ. பிள்ளை உடனே போலீஸ் உதவியை நாடினார். 15 போலீஸ்காரர்கள் இருந்த இடத்தை விட்டு அசைய வில்லை. இந்த சமயத்தில் இன்னொரு காலி

ஸ்ரீ. தாணுப் பிள்ளையை அணுகி, ஏனய்யா போலீசை அழைக்கிறாய் என்று கேட்டான். அவன் கையில் ஒரு தடியும் இருந்தது. ஸ்ரீ. பிள்ளை கூட்டத்தை ஆரம்பித்த தும், இரு ரௌடிகளும் "கூட்டம் நடப்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்றனர். முன் பக்கத்தி லிருந்து வந்தவன் ஸ்ரீ. பிள்ளையின் சட்டையைப் பிடித்து இழுத்தான். பின்னல் நின்று கொண்டிருந்தவன் ஸ்ரீ. பிள்ளையை முன்னல் தள்ளினன். இதைக் கண்ட ஜனங்கள் ஆத்திரப்பட்டனர். ஸ்ரீ. பிள்ளை கூட்டத்தினரை சமா தானம் செய்ததின் பேரிலேயே அந்த காலிகள் சட்னி யாகாமல் தப்பித்தனர். கூட்டம் நடந்த 15, 20 தெரு தூரத்தில் போலீஸ் அதிகாரிகளும், கான்ஸ்டேபிள்களும் இந்த சம்பவத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தார்கள்! தலையிடவே யில்லை.

1938-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஸ்ரீமான்கள். ஜி. ராமச்சந்திரன், இ. ஜான் பிலிப்போஸ், வர்க்கீஸ் மூவரும் செங்கணூரில் ஒருபொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தார்கள். மேடையில் சில குடிகாரர்கள் உட்கார்ந் திருந்தனர். இவர்கள் தலைவர்களே பேச அனுமதிக்கவில்லை. திட்டினர்கள். பிறகு அடிக்க ஆரம்பித்தார்கள். எல்லாம் போலீசின் முன்னிலையில்தான்! 'மப்டி'யில் (சாதாரண உடையில்) வந்திருந்த ஒரு போலீஸ்காரன் ஸ்ரீ. பிலிப் போஸை செருப்பால் அடித்தான். இதற்குள் குடிகாரர் களில் ஒருவன் ஸ்ரீ. பிலிப் போஸின் பேனுவை பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான். ஸ்ரீமான்கள். ராமச்சந்திரன், வர்க்கீஸ், பிலிப்போஸ் மூவருக்கும் குத்தும், உதையும், செருப்படிகளும் கிடைத்தன.

* * * *

இதைப்போல சம்பவங்களைச் சொல்லிக்கொண்டே போனால், பல புஸ்தகங்கள் எழுத வேண்டியிருக்குமாகையால், போலீசின், போலீஸ் கூலிகளின் அட்டகாசங்களைப் பற்றி எழுதுவதை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

திருவாங்கூரில் எஸ். என். டி. பி. யோகம் (ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம்) என்ற ஒரு ஸ்தாபனம் உண்டு. இது திருவாங்கூர், கொச்சி, பிரிட்டிஷ் மலபாரிலுள்ள 25 லக்ஷ ஈழவர்களின் (தீயர்களின்) ஸ்தாபனமாகும். ஸ்ரீ நாராயண குரு என்பவர் 1903-ம் வருஷம் இந்த சங்கத்தை ஆரம்பித்தார். சர். சி. பி. ராமஸ்வாமி அய்யர் மகாராஜாவுக்கு சட்ட அரசியலமைப்பு ஆலோசனை கர்த்தராயிருந்தபோதே அவரை (சர். சி. பி. யை) பதவியிலிருந்து நீக்கி விடுவதே சமஸ்தானத்திற்கு நல்லது என்று தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தை இந்த சங்கம் நிறைவேற்றியிருக்கிறது. அப்பொழுது சர். முகம்மது ஹபிபுல்லா திவானாகயிருந்ததால், யோகத்தின் மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் 1938-ல், சர். சி. பி., அந்த யோகத்தின் ஆலசென்ஸை என்ரத்துச் செய்யக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு யோகத்தின் ஆக்டிங் பொதுக் காரியதரிசி ஸ்ரீ. வி. கே. வேலாயுதனுக்கு நோட்டீஸ் பிறப்பித்தார். இந்த ஸ்தாபனம் ராஜீய வேலைகளில் ஈடுபடுவதே, இந்த நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதற்கு காரணம் என்றும் கூறப்பட்டது.

இயக்கம் நடத்தும் திறமையிலும், பிரசாரம் செய்யும் சாமர்த்தியத்திலும் கைதேர்ந்திருந்த திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள், ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் ஹிமாலயத் தவறு செய்து விட்டார்கள். மகஜரை வாபஸ் வாங்க மறுத்ததின் மூலம், இயக்கத்தையே பல

வீனப்படுத்தி விட்டனர். காந்திஜியின் ஆதரவுதான் இந்திய தேசீய காங்கிரசின், ஏன் இந்தியாவின் ஆதரவு என்பதை அவர்கள் உணர்ந்திருந்தபோதுகூட, மகஜரை வாபஸ் வாங்க மறுத்தது, திருவாங்கூரின் துரதிருஷ்டமென்றே சொல்ல வேண்டும். ஏனெனில், அவர்கள் வாபஸ் வாங்கியிருந்தால், இயக்கம் பலப்பட்டு, திருவாங்கூர் பொறுப்பாட்சி பிரச்னை, அகில இந்திய பிரச்னையாக ஆகியிருக்கும்.

ஸ்ரீ. பாண்டியன் மரணம்

திருமங்கலத்தைச் சேர்ந்த ஸ்ரீ. ஜே. பி. சீமைராஜ பாண்டியன் (வயது 45), மதுரைத் தொண்டர் படையில் திருவாங்கூர் இயக்கத்தில் கலந்துகொள்ள வந்தார். செங்கோட்டையில் அவருக்கு தண்டனை கிடைத்தது. 1938-ம் வருஷம் அக்டோபர் மாதம் 6-ந் தேதி கொல்லத்திற்கு கொண்டு வரப்பட்டார். 8-ந் தேதி லாக்கப்பில் மாண்டார். போலீசார் அடித்ததால் இவர் காலமாயிருப்பாரோ என்ற சந்தேகமும் இருந்தது.

இது சம்பந்தமாக சமஸ்தான காங்கிரஸின் 8-வது அக்ராசனர் ஸ்ரீமதி. பந்தலம் கே. ராமன் பிள்ளை வெளியிட்ட ஒரு அறிக்கையில்,

"ஸ்ரீ. பாண்டியன் லாக்கப்பில் மாண்ட கோரத்தைக் கேட்டஸ்திரீயின் மனம் பதைக்கிறது. அந்த மதுரைத் தொண்டர்களின் தலைவர், கோர்ட்டில் சமர்ப்பித்த வாக்கு மூலத்தில், லாக்கப்பில் தாங்கள் பலமாக தாக்கப்பட்டதாக கூறியிருக்கிறார். இந்த சம்பவத்தை விசாரிக்க பட்சபாதமற்ற ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும்"

என்று கோரியிருக்கிறார்.

ஆனல் திருவாங்கூர் சர்க்கார், அத்தொண்டரை யாரும் அடிக்கவில்லை என்று சமாதானம் கூறியது.

அந்த சமயத்தில் போட்டி மகஜர் ஒன்று தயாரிக்கப் பட்டது. எதற்கு? இந்த திவானை டிஸ்மிஸ் செய்யவே கூடாது என்பதற்காக! மகஜரில் கையெழுத்து வாங்கு வதில் கிராம அதிகாரிகள் விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டனர்.

1938 வரை அக்டோபர் மத்தியில் "இந்தியன் எக்ஸ் ப்ரஸ்" மீது திருவாங்கூர் சர்க்கார் தடை விதித்தனர். இந்த பத்திரிகை செய்த குற்றம்:

(1) ஜனங்களின் போராட்ட லக்ஷியத்தை ஆதரித் தது.

(2) திவான் மீது கொடுங்கோன்மை, லஞ்சம் ஆகிய குற்றச் சாட்டுகளை சமஸ்தான காங்கிரஸ் சுமத்தி யிருப்பதால், பிரச்னையை 'அமுக்கி' வைப்பதற்கு பதி லாக, திவான் ஒரு விசாரணைக் கோர்ட் முன் ஆஜாக வேண்டுமென பலமாக வற்புறுத்தியது.

ஜனங்கள் வெற்றி:

ஒரு சில வாரங்களில் இயக்கத்தை நசுக்கி விடுவதாக வீரம் பேசிய சர். சி. பி., அடக்குமுறைகளால் இயக்கம் பலமடைவதைத்தான் இறுதியில் கண்டார். அக்டோபர் மாதம் 22-ந் தேதி மகாராஜாவின் பிறந்த தினத்தை ஒரு காரணமாகக் கொண்டு, எல்லா ராஜீயக் கைதிகளையும் விடு தலை செய்யும்படியும், கிரிமினல் திருத்தச் சட்டப்படி பிறப் பிக்கப்பட்ட உத்தரவுகளை நிறுத்தி வைக்கும்படியும் மகாராஜா உத்திரவிட்டார். சமஸ்தான காங்கிரஸ், யுவர் சங்கம் இரண்டு ஸ்தாபனங்கள் மீதும் இருந்த தடைகள்

நீக்கப்பட்டன. இவ்வளவுதான் சமஸ்தான காங்கிரசுக்கு வெற்றி கிடைத்ததாகச் சொல்ல வேண்டும். பிரஜா உரிமைகள்பற்றியும், பொறுப்பாட்சி பிரச்னைபற்றியும் சர்க்கார் ஒன்றும் சொல்லவில்லை. போலீஸ், தடியடிப் பிரயோகங்கள் செய்தது, ஏழு இடங்களில் சுட்டு பலரைக் கொன்றது, சிறையில் ராஜீயக் கைதிகளை சித்திரவதை செய்தது— இவைகளைப் பற்றி விசாரிக்க ஒரு பட்சபாதமில்லாத கமிட்டியை நியமிக்க வேண்டுமென மகாத்மா காந்தியும், இந்தியா பூராவும் கோரியதற்கு சர்க்கார் இணங்கவில்லை. எனவே, மகாராஜாவின் அறிக்கை, சந்தோஷத்திற்கு பதிலாக ஏமாற்றத்தையே அளித்தது. மேலும், கிரிமினல் திருத்தச் சட்டத்தின் கீழ் இல்லாமல், வேறு சட்டங்களின் கீழ் தண்டிக்கப்பட்ட சுமார், 60, 70 ராஜீயக் கைதிகளுக்கும் விடுதலை கிடைக்கவில்லை. காங்கிரஸ் ஊழியர்களும், மாணவர் சங்க பிரமுகர்களும் கைது செய்யப்படுவதும் ஓயவில்லை.

கைதிகளை விடுதலை செய்வதாக, மகாராஜா பிறப்பித்த உத்தரவுபற்றி காந்திஜி பின்கண்ட அறிக்கை வெளியிட்டார் :

"இந்த விடுதலை பிரயோசனமாகும் பொருட்டும், சமாதானம் நிரந்தரமாகும் பொருட்டும், கடந்த சம்பவங்களைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியும், பொறுப்பாட்சி ஏற்படுத்துவது சம்பந்தமாக மற்றொரு கமிட்டியும் நியமிக்கப்பட வேண்டும்."

"திவான் மீது குற்றச் சாட்டுகள் கூறப்பட்டது இன்னுமிருக்கிறது. அந்த குற்றச்சாட்டுகளை வாபஸ் செய்ய வேண்டுமென மீண்டும் வற்புறுத்துகிறேன். வாபஸ் வாங்குவதால் அப்புகார்கள் பொய் என்று அதிகாரிகள் நினைத்துவிட வேண்டாம்."

காந்திஜியின் யோசனைகளை சர்க்காரும் கேட்கவில்லை ;

சமஸ்தான காங்கிரசும் கேட்கவில்லை. தென்னிந்தியாவில் இதுவரை சமஸ்தான காங்கிரஸ் இயக்கத்தை ஆதரித்து வந்த பத்திரிகைகள், சமஸ்தான காங்கிரஸ் தலைவர்களின் பிடிவாதத்தைக் கண்டிக்க ஆரம்பித்தது.

சர்க்கார் சும்மாயிருக்கவில்லை. சமஸ்தான காங்கிரஸ் ஒரு தொண்டர் படையை நிறுவுவதென உத்தேசித்திருந்தால், அந்த படையை அமைப்பதின் மீது கடையை விதிக்கவும், திருவாங்கூருக்கு வெளியில் திருவாங்கூர் பிரஜைகள் சமஸ்தான சர்க்காருக்கு விரோதமான, ஆக்ஷேபகரமான பிரசாரங்கள் செய்தால், அவர்கள் மீது சமஸ்தானத்தில் வழக்கைத் தொடரவும் ஒரு புதிய கிரிமினல் சட்டத்தை டிசம்பர் மாதம் 8-ந் தேதி அமுலுக்குக் கொண்டு வந்தனர். மகஜரில் கையெழுத்திட்டிருந்த கீழ்க்காணும் சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள் (22 பேர்கள்) மீது வழக்குத் தொடரப்பட்டது. ஸ்ரீமான்கள். ஏ. தாணுப் பிள்ளை, கே. பி. நீலகண்டம் பிள்ளை, கே. டி. தாமஸ், எம். ஆர். மாதவ வாரியர், டி. எம். வர்க்கீஸ், என். கே. பத்மநாப பிள்ளை, ஏ. ஜே. ஜான், ஸி. கேசவன், டி. கே. நாராயணப் பிள்ளை, இ. ஜான் பிலிப்போஸ், பி. ஜே. செபாஸ்டியன், கே. எம். கோரா, பி. சங்குப் பிள்ளை, வி. கே. வேலாயுதம், பி. கே. குஞ்சு, கே. கேசவன், கண்ணூர் கோபால பணிக்கர், ஆர். வாசுதேவப் பிள்ளை, எம். என். பரமேஸ்வரன் பிள்ளை, கே. என். குஞ்சு கிருஷ்ணப் பிள்ளை, ஏ. நாராயணப் பிள்ளை, மிஸ். அன்னி மாஸ்கரின்.

வழக்கு தாக்கலான 2, 3 நாட்களில் மேற்கண்டவர்களில் பெரும்பாலோர் கைது செய்யப்பட்டார்கள்.

1938-ம் வருஷம் டிசம்பர் 17-ந் தேதி சமஸ்தான

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி, மகஜரில் கையெழுத் திட்டிருந்தவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பதால் குற்றச்சாட்டுகளை வாபஸ் வாங்குவதற்கில்லை யென்று ஒரு 'கொண்டிச் சாக்கு' சொல்லிற்று.

ஆனால் அதேமாதம் 24-ந் தேதி இதே காரியக் கமிட்டி மெம்பர்கள் (சிறையில்) கூடி, "மகாராஜாவிடம் குறைகளு டன் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் திவான் மீதுள்ள குற்றச் சாட்டுகளை **காந்திஜியின் யோசனையின் பேரில்**, திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி இதன் மூலம் வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறது" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. காங்கிரஸ்காரர்களுக்கெல்லாம் இதில் திருப்தி ஏற்பட்டது. காந்திஜி "குற்றச்சாட்டுகளை சமஸ் தான காங்கிரஸ் காரியக் கமிட்டி வாபஸ் செய்தது ரொம்ப சரி. சட்ட மறுப்பையும் நிறுத்திவிட வேண்டும். வழக்கு களை வாபஸ் செய்து, கைதிகளை சர்க்கார் விடுவிப்பார்களென நம்புகிறேன்" என்று டிசம்பர் 25-ந் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார்.

1939-ம் வருஷம் ஜனவரி மாத ஆரம்பத்தில் மகஜர் வழக்கு வாபஸாயிற்று; தலைவர்களும் விடுதலை செய்யப் பட்டனர். சமஸ்தான காங்கிரஸ், காந்திஜியின் யோசனை யின் பேரில் நிர்மாண திட்டங்களில் கவனத்தைச் செலுத் தியது. ஆனால் அந்த வேலைகளைத் தடுக்கவும் காலிகள் வந்து விட்டனர். மது விலக்குப் பிரசார கூட்டத்தில், போலீசாரின் முன்னிலையிலேயே குடிகாரர்கள் கூச்சல் போட்டு, அட்டகாசம் செய்தனர்.

சட்ட சபை மெம்பர்கள் டிஸ்மிஸ்

சர்க்கார், 19 சட்ட சபை மெம்பர்கள் மீது நட

வடிக்கை எடுத்தது. ஸ்ரீ மூலம் அசெம்பிளியைச் சேர்ந்த 15 மெம்பர்களும், ஸ்ரீ சித்ரா கவுன்சிலைச் சேர்ந்த 4 மெம்பர்களும் (சத்யாக்ரகத்தில் கலந்துகொண்டதற்காக) கிரிமினல் கோர்ட்டுகளால் 6 மாதத்திற்கு அல்லது அதற்கு மேலாக தண்டிக்கப்பட்டிருப்பதால், அவர்கள் சட்டப்படி மெம்பர் பதவியை இழந்து விட்டதாக ஒரு அறிக்கை வெளியிட்டது.

1939 ஆம் மார்ச் மாதம் 7-ந் தேதி சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி, அம்மாதம் 25-ந் தேதி மீண்டும் போரை ஆரம்பிப்பதென முடிவு செய்தது.

உடனே சர். சி. பி., இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் மீது சிறிப்பாய ஆரம்பித்தார். நிலையான புத்தியுள்ளவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாத அறிக்கைகளை வெளியிட்டார். உதாரணமாக, அவர் மார்ச் மாத மத்தியில் வெளியிட்ட ஒரு அறிக்கையில், திரிபுரி காங்கிரசில் ஏற்பட்ட குழப்பத்தை பிரஸ்தாபித்து, காந்திஜியையும், இதர தலைவர்களையும் தாக்கினார்.

சட்டமறுப்பை மீண்டும் மார்ச் 25-ந் தேதி ஆரம்பிப்பதென சமஸ்தான காங்கிரஸ் முடிவு செய்திருந்ததால், அதன் யுத்த சபை மெம்பர்களை மார்ச் மாதம் 18-ந் தேதியே சர்க்கார் கைது செய்தனர். காந்திஜி அப்பொழுது ராஜ்கோட் தகராறு சம்பந்தமாக வைசிராயுடன் பேசுவதற்காக, வைசிராயின் அழைப்பிற்கிணங்கி டில்லிக்கு போயிருந்தார். சட்டமறுப்பை ஆரம்பிக்க வேண்டாமென மார்ச் மாதம் 20-ந் தேதி சமஸ்தான காங்கிரசுக்கு எழுதினார். ஒரு அறிக்கையும் வெளியிட்டார்.

"சர். சி. பி., யும் அவரைப் போன்ற அபிப்பிராயமுடையவர்களும் தங்கள் அரசர்களுக்கு தவறுக யோசனை கூறுகிறவர்

களாக இருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. காங்கிரசையும், காங்கிரஸ் ஊழியர்களையும், சமஸ்தானத்தில் அதனுடைய இயற்கையான செல்வாக்கு பரவுவதையும் அலட்சியம் செய்து புறக்கணிக்க முயற்சிப்பது, ஒரு சிறிய குழந்தை தன் உள்ளங் கையினால் பிரமாதமான பிரவாகத்தை தடுக்க முயற்சிப்பது போலிருக்கிறது.

"திருவாங்கூர் ஜனங்களுக்கு நான் தொடர்ந்து ஆலோசனை கூறவேண்டுமானால், நிலைமையை நான் பரிசீலனை செய்யும் வரையில் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும்"

என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

காந்திஜியின் யோசனைக் கிணங்கி, சமஸ்தான காங்கிரஸ் ஆக்டிங் அக்கிராசனர் ஸ்ரீ. கிருஷ்ணப் பிள்ளை, மார்ச் 25-ந் தேதி சத்தியாக்ரஹம் ஆரம்பமாகாது என்று ஒரு அறிக்கை வெளியிட்டார்.

சமஸ்தான காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்திய போதிலும், சர்க்கார் அடக்குமுறையை நிறுத்தவில்லை. காங்கிரஸ் ஊழியர்களும், மாணவர் சங்க பிரமுகர்களும் கைது செய்யப்பட்டனர்.

சமரசப் பேச்சுகள்

1939-ம்வரு ஜூன் மாதம் 4-ந் தேதி மகாத்மா காந்தி வெளியிட்ட ஒரு அறிக்கையில், சட்டமறுப்பை அடியோடு நிறுத்தி விட்டு, அதிகாரிகளுடன் சமரஸப் பேச்சுகளை ஆரம்பித்து, நிர்மாண திட்டங்களில் கவனம் செலுத்துமாறு திருவாங்கூர் சமஸ்தான காங்கிரசுக்கு யோசனை கூறினார். அடுத்த தினமே திவான் சர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருக்கும் ஒரு தந்தி கொடுத்தார். அதில், சமஸ்தான காங்கிரஸ் காரர்கள், தான் (காந்திஜி) கூறியபடி நடந்து கொண்டால்,

சமஸ்தான அதிகாரிகளும் அதே மாதிரி தாராள மனதுடன் நடந்துகொள்ளுவார்களென்று தாம் நம்புவதாய் குறிப்பிட்டிருந்தார்.

சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி ஜூன் மாதம் 10-ந் தேதி கூடி காந்திஜியின் யோசனையை ஏற்றுக்கொள்ளுவதென ஏகமனதாகத் தீர்மானித்தது. அதிகாரிகளிடம் சமரசப் பேச்சுகளே நடத்த ஸ்ரீமான்கள். பட்டம் தாணுப் பிள்ளை, வர்க்கீஸ், வி. கே. வேலாயுதன் ஆகிய மூவர் அடங்கிய கமிட்டியொன்றும் நியமிக்கப்பட்டது. இந்த கமிட்டி திவானே போட்டி காண மனுச் செய்ததின் பேரில், திவானும் கமிட்டி மெம்பர்களே சந்தித்துப் பேச சம்மதித்தார். ஜூலை மாதம் ஆரம்பத்தில் பேட்டி நடந்தது. சமரசப் பேச்சுகள் நடந்து கொண்டிருக்கையில் 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3-ந் தேதி ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமாகி விட்டதால், திருவாங்கூர் சர்க்கார், சீர்திருத்தம் சம்பந்தமாக இந்த சமயத்தில் சமஸ்தான காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் மேலும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கில்லை யென அறிவித்து விட்டது. ஜனநாயகத்தை பாதுகாக்க யுத்தம் புரிவதாகச் சொல்லும் பிரிட்டனுக்கு பண உதவி செய்துள்ள இந்த திருவாங்கூர் சர்க்கார், தன் சமஸ்தானத்தில் உள்ள எதேச்சாதிகாரத்தை ஒழிக்காமல் சீர்திருத்தமளிப்பதுபற்றி பேசக்கூட மறுத்ததை, அகில இந்திய சமஸ்தான மக்கள் ஸ்தாபனத்தின் நிரந்தரக் கமிட்டியும், இந்திய பத்திரிகைகளும் கண்டித்தன. யார் கண்டித்தா லென்ன? பிரிட்டனின் பக்கபலமுள்ளவரை இந்திய ராஜாக்கள் தங்களுடைய பிரஜைகளுக்கு உண்மையான அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்களென்பதில் சந்தேகமே கிடையாது.

ஹைதராபாத்

சமஸ்தானத்தின் வரலாறு :

ஹைதராபாத் சமஸ்தானத்தை ஸ்தாபித்த முதல் நிஜாம், உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த பேர்வழி. முகலாய சாம்ராஜயம் சிதறுண்டதற்கும் இந்த நிஜாம்—உல்—முல்க்தான் ஜவாப்தாரி. இவர் முகலாய சக்கரவர்த்தியை ஏமாற்றி, அவருக்கு எதிராக சூழ்ச்சி செய்தே இந்த ராஜ்யத்தை கைப்பற்றிக்கொண்டார். இவர் உண்மைப் பெயர் சின்கிலிச்சான். முதன் முதலில் இவர் சக்கரவர்த்தியால் மொராதாபாத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார்.

ஔரங்கசீப்பின் கொள்ளுப் பேரன் பெரோக்ஸியார் சக்கரவர்த்தியாயிருக்கையில், சையது அப்துல்லா கான் என்பவர் பிரதம மந்திரியாயிருந்தார். அவருடைய இளைய சகோதரர் சையது ஹுஸேன் அலி கான் டெக்கானில் வைசிராயாயிருந்தார். இந்த சையது சகோதரர்களுக்கு முகலாய தர்பாரிலிருந்த செல்வாக்கை ஒழிக்க டில்லியில் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. இந்த சூழ்ச்சி வெற்றி பெறுவதில்—நிஜாம்—உல்—முல்க் உதவி செய்தால், அவருக்கு டெக்கானின் வைசிராய் பதவியளிப்பதாக சையது சகோதரர்களின் எதிரிகள் சொன்னார்கள். சக்கரவர்த்தியே அந்த சூழ்ச்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு, உண்மையாக உழைத்து வந்த பிரதம மந்திரியை தொலைத்து விடப் பார்த்தார். ஆனால், பிரதம மந்திரி கெட்டிக்காரராகையால், நிஜாமின் சுயநலத்தை அறிந்துகொண்டு, அவரை தன் கைக்குள் போட்டுக்கொள்ள, மால்வாவின்

தலைமை அதிகாரியாக அவரை நியமிப்பதாகச் சொன்னார். நிஜாம் இதற்கு ஒப்புக்கொண்டார் என்பதை சொல்லத் தேவையில்லை. பிரதம மந்திரியை ஆதரித்தவர்களுக்கும் சக்கரவர்த்தியை ஆதரித்தவர்களுக்கும், டில்லித் தெருக்களில் சண்டை நடந்தது. சக்கரவர்த்தி தோற்றார். கைது செய்யப்பட்டார். வெற்றி பெற்ற பிரதம மந்திரி, தைமூர் வம்சத்தைச் சேர்ந்த ஒருவரை சிம்மாசனத்தில் வைத்தார். டில்லியில் நடந்த சண்டையில், நிஜாம் யார் பக்கமும் சேரவில்லை! பிரதம மந்திரி செயது அப்துல்லாதான் 1720-ம் வருஷம் நிஜாமை மால்வாவின் வைசிராயாக நியமித்தார். ஆனல் நிஜாம் சும்மாயிருக்கவில்லை. சேனைகளைத் திரட்டினர். சக்கரவர்த்தியின் படைகளை எதிர்த்து, தனக்கு மால்வா வைசிராய்ப் பதவி கொடுத்த பிரதம மந்திரியை கைது செய்து, பிரதம மந்திரியின் தம்பியைக் கொன்று, டெக்கானின் வைசிராயானர். பின்னர் சக்கரவர்த்தியே நிஜாமை பிரதம மந்திரியாகவும் ஆக்கினர்! அப்பொழுது நிஜாம், குஜராத், மால்வா, டெக்கான், ஆகிய மூன்று மாகாணங்களின் வைசிராயாகவு மிருந்தார். ஆனல் பிரதம மந்திரியின் பதவியை வகிக்க சாமர்த்தியமின்றி ராஜீநாமாச் செய்து விட்டு, வைசிராய் பதவியை மாத்திரம் கவனித்தார். சூழ்ச்சி செய்வதில் இவர் மகா நிபுணர். இவர் சக்கரவர்த்தியை எதிர்த்துப் போரிடுமாறு குஜராத் கவர்னருக்கு உத்திரவிட்டவுடன், சக்கரவர்த்தி குஜராத்துக்கு படையை அனுப்பி, துரோகியின் ராஜ்யத்தை நசுக்கினர். நிஜாம், வைசிராய் பதவியிலிருந்து டிஸ்மிஸானர். இதன் பேரில் நிஜாம், மகாராஷ்டிர மன்னர்களை தூண்டி விட்டு, மால்வா, குஜராத் இரண்டையும் தாக்குமாறு யோசனை கூறினர். ஹிந்துஸ்தானத்தின் மீது

படையெடுக்குமாறு நாதிர் ஷா வுக்கு யோசனை கூறியதும் இவரே. நாதிர் ஷா படையெடுத்து, சிந்து, காபூலை கைப் பற்றிய பின், நிஜாம், தான் டெக்கானில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்து விட்டதாகவும், அந்த ராஜ்யத்திற்கு தானே மன்னரென்றும் அறிவித்து விட்டார். இவர் 1738-ல் **104-வது வயதில்** காலமான பின், இவருடைய இரண்டாவது மகன் நாஸிர் ஜங், ஹைதராபாத் நிஜாமானார்.

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 82,698 சதுர மைல்கள். இங்கிலாந்து, அயர்லாந்து இரண்டின் விஸ்தீரணங்களையும் சேர்த்தால், ஹைதராபாத்தின் விஸ்தீரணமாகும். மொத்த ஜனத்தொகை 1,44,36,118. ஹைதராபாத் நகரத்தில் மாத்திரம் 4,66,000 பேர்கள் இருக்கிறார்கள். இது இந்தியாவின் நான்காவது பெரிய நகரமாகும்.

பாஷாவாரி ஜனத்தொகை :

தெலுங்கு பேசுகிறவர்கள்	69,72,534
மாராத்தி பேசுகிறவர்கள்	37,86,834
கன்னடம் ,,	16,20,094
உருது ,,	15,07,272

மதப்படி ஜனத்தொகை :

ஹிந்துக்கள்	1,22,03,500
முஸ்லிம்கள்	15,34,666
கிறிஸ்துவர்கள்	1,51,382
பார்ஸிகள்	7084
யூதர்கள்	27
பூர்வ குடிகள்	5,44,789

மொத்த ஜனத்தொகையில் ஹிந்துக்கள் 88% ; முஸ்லிம்கள் 10½%. ஆனல் கெஜட்டில் வெளியாகும் பதவிகளில்

ஹிந்துக்களுக்கு 22·5%ம், முஸ்லிம்களுக்கு 68%ம் தரப்பட்டிருக்கின்றன.

சமஸ்தானத்தின் வருஷ வருமானம் ரூ. 8½ கோடி. நிஜாம் இதிலிருந்து தன்னுடைய சொந்தச் செலவுக்காக ரூ. 50 லக்ஷம் எடுத்துக்கொள்ளுகிறார். இளவரசர்களுக்கு ரூ. 16 லக்ஷம். ராஜாவின் சொந்தச் செலவுக்கு இந்த 50 லக்ஷ ரூபாயைத் தவிர 8,110 சதுர மைல்கள் உள்ள நிலத்திலிருந்தும் ரூ. 2 கோடிக்கு மேலாக கிடைக்கிறது. அநேகமாக வரி பூராவும் ஏழைகளிடமிருந்தே வசூலிக்கப்படுகிறது. பணக்காரர்கள் பாடு கொண்டாட்டம்தான். வருமான வரியே கிடையாது. விவசாயிகள் எப்பொழுதும் பட்டேல்கள், பட்வாரிகள், தேஷ்முக்குகள் ஆகிய பாம்பரை அதிகாரிகளின் தயவு தாக்ஷண்யத்திலேயே ஜீவனம் நடத்த வேண்டியிருக்கிறது.

இந்த சமஸ்தானத்தில் பெயரளவுக்கு ஒரு சட்ட சபை இருக்கிறது. இதில் 21 மெம்பர்கள் இருக்கின்றார்கள். இந்த 21 பேர்களில் 13 பேர்கள் சர்க்கார் அதிகாரிகள்; 6 பேர்கள் உத்தியோகப்பற்றில்லாதவர்கள். உத்தியோகப்பற்றில்லாதவர்களில் இருவர் ஹைக்கோர்ட் வக்கீல்களின் பிரதிநிதிகள்; இருவர் ஜாகீர்தார்களின் பிரதிநிதிகள். பாக்கியுள்ள இரண்டு பேர் பிரதம மந்திரியின் நியமன மெம்பர்கள். இந்த சட்ட சபை வருஷத்திற்கு 2 அல்லது 3 தடவை கூடும். ஒவ்வொரு செஷனும் ஒரு நாள் அல்லது இரண்டு நாளுக்கு மேற்பட்டு நடக்காது.

இந்த சமஸ்தானத்தில் 21,830 கிராமங்களிருக்கின்றன. கிராமவாசிகளின் கடன் சுமை பற்றி புரொபசர் கேசவ அய்யங்கார், "35 குடும்பங்கள் உள்ள ஒரு கிராமத்தில், 27 குடும்பங்களுக்கு ரூ. 4,680 கடன் சுமையிருக்

கிறது. சராசரி கடன் சுமை ரூ. 173 ஆகும்" என்று கூறியிருக்கிறார்.

இந்த கிராமங்களைத் தவிர 1,167 ஜாகீர்கள் இருக்கின்றன. அவற்றின் ஜனத்தொகை 50 லக்ஷம்; வருமானம் சுமார் ரூ. 4,00,00,000. இந்த ஜாகீர்தார்களெல்லாம் "குட்டி நிஜாம்கள்".

ஹைதராபாத் சர்க்கார் கல்விக்காக வருஷத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்கிறது. பள்ளிக்கூடம் போகும் வயது வந்துள்ள பையன்களில் 28·6%ம், பெண்களில் 4·7%ம் தான் பள்ளிக்கூடம் செல்லுகிறார்கள். இந்த சமஸ்தானத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 5%.

கீழ்க்காணும் புள்ளி விவரத்திலிருந்து ஹைதராபாத், பாக்கி சில சமஸ்தானங்களைக் காட்டிலும் கல்வியில் எவ்வளவு பிற்போக்காக யிருக்கிற தென்பதை தெரிந்து கொள்ளலாம்:

சமஸ்தானத்தின் பெயர்	1000 ஆண்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்	1000 ஸ்திரீகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
திருவாங்கூர்	408	168
மைசூர்	174	33
பரோடா	331	79
ஹைதராபாத்	85	12

ஹைதராபாத் ஜனத்தொகையில் உருது பாஷை பேசுகிறவர்கள் 100க்கு 10½ பேர்களே இருக்கிற போதிலும், உஸ்மானியா சர்வகலாசாலையில் உருது மூலம் பாடம் சொல்லிக்கொடுப்பது ஆச்சரியமாகவே யிருக்கிறது. அந்த பாஷை ஹிந்தி—உருது கலப்பல்ல. அதாவது ஹிந்துஸ்தானியல்ல.

இந்த விசித்திரத்தைக் கண்டு வைசிராய் லார்டு இர்வின் (இப்பொழுது பிரிட்டிஷ் வெளி நாட்டு மந்திரியாயிருப்பவர்) 1929-ம் வருஷம் நிஜாமிடம் பின்வருமாறு கூறினர்:

"உமது சமஸ்தான முஸ்லிம்கள் இந்த உஸ்மானியா சர்வகலாசாலையில் சேர எவ்வளவு அநுகூலங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு அநுகூலங்கள் உமது ஹிந்து பிரஜைகள் விஷயத்திலும் இருக்கும்படி சர்வகலாசாலையின் கொள்கையை உருவகப்படுத்துவது புத்திசாலித்தனமாகும்."

2,000 முதல் 3,000 வரை ஜனத்தொகையுள்ள 11 கிராமங்களிலும், 1,000 முதல் 2,000 வரை உள்ள 15 கிராமங்களிலும், 500 முதல் 1,000 வரையுள்ள 2,988 கிராமங்களிலும், 500-க்குக் குறைவாக ஜனத்தொகையுள்ள இதர கிராமங்களிலும் பள்ளிக்கூடம் கிடையாது.

சமஸ்தான சர்விஸ்களில் பல்வேறு வகுப்பினருக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் (1931-ம் வருஷம் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது):

இலாகா	ஹிந்துக்கள்	முஸ்லிம்கள்	பார்ஸிகள்	ஐரோப்பியர்கள்
செக்ரிட்டேரியட்	16	54	2	3
நிதி	15	26	2	1
ரெவின்யூ	20	196	4	2
நீதி	12	136	1	0
போலீஸ், சிறை	13	40	1	4
கல்வி	53	183	4	29
வைத்தியம்	45	41	8	16
மராமத்திலாகா	34	62	4	7
சில்லறை இலாகாக்கள்	40	126	9	11

சமஸ்தான சர்க்கார் வகுப்புவாத சர்க்கார் என்பதை நிரூபிக்க மேற்கண்ட புள்ளி விவரங்களே போதும். போதாக்குறைக்கு நிஜாம் சமீபத்தில் ஒரு கவியும் கட்டினர். அதில் அவர் சொல்லுவதாவது :

"இஸ்லாத்தின் கலிமாவைக் கேட்டவுடன், ஹிந்துக்களின் சங்கநாதம் அடங்கி விட்டது, பூணூலுக்கு பூகம்பம் ஏற்பட்டது."

பொறுப்பாட்சிப் போர்

இந்த சமஸ்தானத்தில் பிரஜா உரிமைகள் பூஜ்யம் தான். யாராவது பொதுக்கூட்டம் நடத்த வேண்டுமானால் அதிகாரிகளிடமிருந்து அநுமதி பெற வேண்டும். காந்திஜியின் பிறந்த தினத்தைக் கொண்டாட ஹரிஜன சேவா சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் கூடவேண்டிய நேரத்திற்கு 24 மணிக்கு முன்னால் ஹரிஜன சங்கத்தின் காரியதரிசியிடமிருந்து ரூ. 2,000 ஜாமீனும், கூட்டம் எந்த விதத்திலும் அரசியலில் சம்பந்தப்பட்டதாக இருக்காதென்ற ஒரு உறுதிமொழியும் கோரப்பட்டது. அநுதாபக் கூட்டங்களும் அரசியல் கூட்டங்களாய் கருதப்பட்டன. பண்டித மோதிலால் நேரு, இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ. ஜி. கே. தியோதர் ஆகிய இருவர் காலமானதைக் குறித்து துக்கம் தெரிவிக்க ஜனங்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களுக்கு நிஜாம் சர்க்காரின் அநுமதி கிடைக்கவில்லை.

சமஸ்தானத்தில் எந்த புதிய ஹிந்து கோவிலையும் கட்டக்கூடாது ; இப்பொழுது உள்ள கோவில்களை பழுது பார்க்கக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு ஒன்று இருக்

கிறது. சில வருஷங்களாக இங்கு ஆரிய சமாஜ இயக்கம் நடந்து வருகிறது. இந்த இயக்கத்தால் முஸ்லிம் பிரசார முன்னேற்றத்திற்கு தடை ஏற்பட்டது. சுத்தியும்* தடை செய்யப்பட்டது.

ஆரிய சமாஜிகள் 'ஹவன குண்டங்களை' (ஹோமம்) வீட்டில்கூட வைத்து, பூஜிக்கக்கூடாது.

"ஹைதராபாத் பிற்போக்காகப் போகவோ, அல்லது கொடுத்துள்ள வசதிகளை வாபஸ் வாங்கவோ அவசியமே ஏற்படாது. ஏனெனில் அது ஒரு அடிகூட முன்னேறியிருக்கவில்லை. எந்தவித சலுகையும் அளிக்கவில்லை" என்று பண்டித ஜவாஹர்லால் நேரு தமது சுய சரிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனங்களின் அபிலாஷைகளைப் பெற ஹைதராபாத் சமஸ்தான காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு அரசியல் ஸ்தாபனத்தை நிறுவுவதென சமஸ்தான பிரமுகர்கள் 1938-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் முடிவுக்கு வந்தனர். ஸ்தாபனத்தின் சட்ட திட்டத்தையும் தயாரித்தனர்.

காரியக் கமிட்டியை நியமிக்கவும், சட்ட திட்டத்தை அங்கீகரிக்கவும், சமஸ்தான காங்கிரஸ் செப்டம்பர் மாதம் 9-ந் தேதி கூடவேண்டுமென முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனல் சர்க்கார் செப்டம்பர் 9-ந் தேதி பொது அமைதி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சமஸ்தான காங்கிரசை சட்ட விரோத ஸ்தாபனமென்று அறிவித்து விட்டனர்.

1938-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ந் தேதி சமஸ்தான காங்கிரஸ் சட்ட மறுப்பை ஆரம்பித்தது. தடை யுத்தரவை மீறிய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கோவிந்த

*இஸ்லாம் மதத்தை தழுவிய ஹிந்துக்களை மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்ப்பதற்கு 'சுத்தி' என்று பெயர்.

ராவ் நானும், இன்னும் சிலரும் அன்று கைது செய்யப் பட்டனர்.

ஆரிய சமாஜிகள், ஹிந்துக்களின் மத உரிமைகளுக்காக அக்டோபர் 27-ந் தேதி சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். பொறுப்பாட்சிக்காகவும், மத உரிமைகளுக்காகவும், மூறையே சமஸ்தான காங்கிரஸ் தொண்டர்களும், ஆரிய சமாஜ தொண்டர்களும் சட்டத்தை மீறி ைகதியாயினர்.

சிறைகளில் ராஜீயக் கைதிகளின் பாடு ரொம்ப ஆபத் தாகயிருந்தது. மர்மஸ்தானங்களில் சூடு போடப்பட்டது. இது சம்பந்தமாக சமஸ்தான காங்கிரசின் 11-வது சர் வாதிகாரி ஸ்ரீ. ராம ரெட்டி வெளியிட்ட ஒரு அறிக்கையில், "மன்னிப்புக் கடிதங்களில் கையெழுத்துப் போட்டு கோர்ட்டில் சமர்ப்பிக்க வேண்டுமென, போலீசார், காங் கிரஸ் தொண்டர்களை பலவந்தப்படுத்துகிறார்கள். சரீர மெங்கும் தடிகளால் அடித்தார்கள். மர்மஸ்தானங்களில் சூடு போட்டார்கள்" என்று கூறியிருக்கிறார்.

ஆர்யன் பாதுகாப்பு சங்கம், ஹிந்து பிரஜா உரிமைச் சங்கம் இரண்டும் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தி வந்த தால், காந்திஜியின் யோசனைப்படி சமஸ்தான காங்கிரஸ் தனது சத்தியாக்கிரக இயக்கத்தை 1938-ம் வருஷம் டிசம் பர் மாதக் கடைசியில் நிறுத்தி விட்டது. நிறுத்தியதற்குக் காரணம் கூறி, சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள் கீழ்க் காணும் அறிக்கையை வெளியிட்டார்கள்:

"வேறு இரு ஸ்தாபனங்கள் சட்டமறுப்பை ஆரம்பித்துள் ளன. எங்கள் நிலைமையை நன்கு தெளிவாக்குவதற்காகவே நாங்கள் இயக்கத்தை நிறுத்த வேண்டுமென காந்திஜியும், பண்டித நேருவும் சொன்னார்கள். அப்படியே நிறுத்துகிறோம்."

சமஸ்தான காங்கிரஸ் இயக்கம் நின்ற பின், அடக்கு முறை ஓய்ந்து விட்டதென எண்ண வேண்டாம். அந்த இயக்கத்தில் கலந்துகொண்ட காரணத்திற்காக 70 வக்கீல்களுக்கு சன்னது பறிமுதல் நோட்டீஸ் சாதரா செய்யப் பட்டன.

ராஜீய இயக்கத்தில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் இந்திய கைதிகள் மாத்திரம் (200) பேர்கள் 1939 ஜனவரியில் விடுதலை செய்யப்பட்டனர்.

நிஜாமுக்கு ஒரு சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்பதற்காகவே இயக்கம் நிறுத்தப்பட்டது. சமஸ்தான காங்கிரசின் கீழ்க்காணும் முக்கிய கோரிக்கைகள் சர்க்காரால் நிறைவேற்றப்படாமலிருந்தன. :

(1) நிஜாமின் ஆட்சிக்குட்பட்ட பொறுப்பாட்சி சர்க்காரை ஸ்தாபிக்க வேண்டும்.

(2) பேச்சு சுதந்திரம், சங்க அமைப்பு சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் போன்ற பிரஜா உரிமைகள் பாதுகாக்கப்படுமென்று அறிவித்துவிட வேண்டும். இந்த உரிமைகளை பறிக்கும் இப்பொழுதுள்ள விதிகள் ரத்தாக வேண்டும்.

(3) சர்க்கார் உத்தியோகங்களில் ஹிந்துக்களுக்கு குறைந்தது 50%வது வேண்டும். ஹிந்துக்களின் விகிதம் இவ்வளவுக்கு (50% வரும் வரை) முஸ்லிம்களை நியமிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில், இப்பொழுது அதிகாரமெல்லாம் ஜனத்தொகையில் 10%ம், உத்யோகங்களில் 75%ம் உள்ள முஸ்லிம்கள் வசமிருக்கிறது.

(4) ஜாதி, மத வித்யாசமின்றி, சமஸ்தானத்திலுள்ள எல்லா பிரஜைகளுக்கும் நன்மை யளிக்கக்கூடிய விதத்தில் சர்க்காரின் கல்விக் கொள்கை மாற வேண்டும்.

சர்க்காரின் மனப்பான்மையில் யாதொரு மாறுதலும்

ஏற்படாததால் சமஸ்தான காங்கிரஸ் மீண்டும் சட்ட மறுப்பை ஆரம்பிப்பதுபற்றி யோசித்தது. ஆனால் காந்திஜி, அப்பொழுது ஆரம்பிக்க வேண்டாமென்றார். "வெவ்வேறு காரணங்களுக்குள்ளாக" இரண்டு ஸ்தாபனங்கள் சட்டமறுப்பை நடத்திக்கொண்டிருப்பதால், ஹைதராபாத் சமஸ்தான காங்கிரஸ் இன்னும் கொஞ்ச காலத்திற்கு சத்யாக்கிரகத்தை ஆரம்பிக்காமலிருக்கத்தான் வேண்டும்" என்று யோசனை கூறினார். இதை சமஸ்தான காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது.

காங்கிரசும் ஆரிய சமாஜிகள் இயக்கமும்

1939-ம் வருஷம் பிப்ரவரி மாதம் லூடியானாவில் கூடிய அகில இந்திய சமஸ்தான மக்கள் மகாநாட்டில், ஹைதராபாத் ஆரிய சமாஜிகள் இயக்கம்பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அந்த இயக்கத்தை கண்டிப்பதாக இருக்கிறதென சிலர் நினைத்தார்கள். இந்த தப்பபிப்பிராயத்தை நீக்கி பண்டித ஜவாஹர் ஸ்ரீ. தேவிசந்த் என்ற பஞ்சாப் பிரமுகருக்கு 1939 ஏப்ரலில் பின்வருமாறு எழுதினார்:

"லூடியானா மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தை நீங்கள் கவனித்துப் பார்த்தால், ஆரியசமாஜிகள் ஆரம்பித்துள்ள சத்யாக்ரஹம் கண்டிக்கப்படவில்லை என்பதையும், அது வகுப்புவாத இயக்கம் என்று கூறப்படவில்லை யென்பதையும் தெரிந்து கொள்ளலாம். ஆரியசமாஜிகளுக்கு உண்மையான குறைகள் இருக்கின்றன; அதை ஒழிக்க அவர்கள் விரும்புவது வகுப்புவாதமல்ல என்பதும் அதில் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதைப் போல சத்யாக்ரஹத்தை இப்பொழுது நடத்துவது உசித மில்லையென்றும் தீர்மானத்திலிருப்பதைக் காணலாம்.

எனெனில் அந்த இயக்கத்தையும், தேசிய இயக்கம் பூர்வையும் "வகுப்புவாதம்" என்று கருத அது (ஆரிய சமாஜிகள் சத்யாக்ரஹம்) ஹைதராபாத் சர்க்காருக்கு ஒரு 'கொண்டிச் சாக்காக' இருக்கிறது. ஹைதராபாத் சர்க்காரை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ காங்கிரஸ் ஆதரிக்காதென்பதில் சந்தேகமே வேண்டாம்."

ஆரியசமாஜிகள் பிரஜா உரிமைகளுக்காக போராடுகிறார்களென்பதை அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். இந்தியாவில் பல பாகங்களிலிருந்து ஆரியசமாஜத் தொண்டர்கள் ஹைதராபாத்துக்கு ஆயிரக்கணக்கில் சென்று சத்யாக்கிரகத்தில் கலந்து கொண்டார்கள்.

முஸ்லிம்கள், சமஸ்தான காங்கிரஸ் இயக்கத்தைக் கண்டித்தனர். புது சீர்திருத்தத்தில் தங்களுக்கே அதிக அதிகூலங்கள் இருக்க வேண்டுமென கூச்சல் போட்டார்கள். கைது செய்யப்பட்டு கொண்டு போகப்படும் சத்யாக்கிரக இயக்கக் கைதிகளை வழியில் தாக்கினர். பொதுவாக முஸ்லிம் பத்திரிகைகள் காஷ்மீர் கிளர்ச்சியை ஆதரித்தும், ஹைதராபாத் இயக்கத்தைக் கண்டித்தும் எழுதின. "தன் சொந்த வீட்டில் பிடித்துக்கொண்டால் நெருப்பு; வேறு ஒருவன் வீட்டில் பிடித்துக்கொண்டால் அக்னி தேவதை" என்ற பழமொழியின் உண்மையை இவர்களுடைய நடத்தை நிரூபிப்பதாக ஆரிய சமாஜத் தலைவர்கள் கூறினர்.

ஆரிய் சமாஜிகள் சத்யாக்ரஹத்தில் 1939ம் வருஷம் மே மாதக் கடைசி வரை சுமார் 10,000 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

சீர்திருத்தம்

வந்துவிடும், வந்துவிடும் என்று வெகு நாட்களாக விளம்பரஞ் செய்யப்பட்ட ஹைதராபாத் சீர்திருத்தம்

ஜூலை 19-ந் தேதி (1939) வெளியிடப்பட்டது. சீர்திருத்தக் கமிட்டி 1937-ம் வருஷம் செப்டம்பரில் நியமிக்கப்பட்டது. அது தனது ரிப்போர்ட்டை 1938 ஆகஸ்டில் சமர்ப்பித்தது. அதன் மீது சர்க்கார் 1939 ஜூலை 19-ந் தேதிதான் உத்தரவு பிறப்பித்தனர்.

இந்த சீர்திருத்த திட்டப்படி 85 மெம்பர்கள் கொண்ட ஒரு சட்ட சபை அமைக்கப்படும். இதில் 43 பேர்கள் சர்க்காரின் நியமன மெம்பர்கள். பாக்கி 42 மெம்பர்கள் தொழில் முறையை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்படும் தொகுதிகள் மூலம் கூட்டுத் தொகுதி முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 42 ஸ்தானங்களில் 16, விவசாயிகளுக்கு. இந்த 16-ல் நில சொந்தக்காரர்களின் பிரதிநிதிகள் 8 பேர்களும், குடியானவர்களின் பிரதிநிதிகள் 8 பேர்களும் இருக்க வேண்டும். பாக்கி 26 ஸ்தானங்களில் சிற்றரசுகள், ஜாகிர்கள், டாக்டர்கள், பி. ஏ. பட்டதாரிகள், கைத்தொழில், வர்த்தகம், ஜில்லா போர்டுகள், ஜில்லா, டவுன் முனிஸிபாலிட்டிகள், தொழிலாளர்கள், ஹைதராபாத் முனிசிபல் கார்ப்பரேஷன்—இவற்றின் பிரதிநிதிகள் இருப்பார்கள்.

மேலும், சமஸ்தான சர்க்காரின் வகுப்புவாதத் தன்மை வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. நியமன மெம்பர்களில் பாதி பேர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களில் பாதி பேர்களும் முஸ்லிம்களாயிருப்பார்கள் என சீர்திருத்தம் கூறுகிறது. ஜனத்தொகையில் 10½% உள்ள ஒரு மைனரிட்டி வகுப்புக்கு 50 சத வீதம் ஸ்தானங்கள்! இப்பேர்ப்பட்ட லக்ஷணத்தில், பெருவாரியான ஜனங்களுக்கு போதிய பிரதிநித்துவம் இருக்காதென்பதை சொல்லத் தேவையில்லை.

சட்ட சபைக்கு திவானே சபாநாயகர்! நிர்வாகத்தைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தை, நிர்வாகத்தின் தலைமை அதிகாரியாயுள்ள திவான் சட்ட சபையில் அது மதிப்பாரென எப்படி எதிர்பார்க்க முடியும்?

ராஜ குடும்பம், அந்நிய நாட்டு சம்பந்தம், ராணுவம், போலீஸ், நிர்வாக சபை, நில வெகுமானம், ஜாகீர்தார்களுடன் நிஜாமுக்குள்ள சம்பந்தம், தர்ம சொத்துக்கள், வெகுமதிகள், பென்ஷன், சம்பளம், சமஸ்தான பாஷை, கடன், அரசியல் சட்டம் சம்பந்தமான திருத்தங்கள் ஆகியவைகளைப்பற்றி விவாதிக்கக்கூட சட்ட சபைக்கு உரிமையில்லை. பாக்கி விஷயங்களைக் குறித்து சட்ட சபை செய்யும் முடிவுகள் சிபார்சுகளாகவே கருதப்படும். அதை ஏற்கவோ, நிராகரிக்கவோ சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இந்த சட்ட சபையின் ஆயுள் காலம் ஐந்து வருஷம்.

நிர்வாக சபையில் (மந்திரி சபை) 8 பேர்கள் இருப்பார்கள். இவர்களெல்லாரும் சர்க்கார் அதிகாரிகள்; பொதுஜனப் பிரதிநிதிகளல்ல.

ஹைதராபாத்தில் தெலுங்கு பாஷை பேசுகிறவர்கள் தான் அதிகம். மொத்த ஜனத்தை ஒன்றரைக் கோடியில் தெலுங்கு பேசுகிறவர்கள் எண்ணிக்கை 70 லக்ஷமாகும். 38 லக்ஷம் பேர்கள் மராத்தி பேசுகிறார்கள், 16 லக்ஷம் பேர்கள் கன்னடம் பேசுகிறார்கள், 15 லக்ஷம் பேர்கள்தான் உருது பேசுகிறார்கள். எனவே, தெலுங்கை சமஸ்தான பாஷையாக வைப்பதுதான் நியாயம். ஆனால், வரிசைக் கிரமமாகப் பார்த்தால், நான்காவது ஸ்தானத்திலுள்ள உருது பாஷைக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்பட்டு, சமஸ்தான பாஷையாக்கப்பட்டிருக்கிறது.

மத சம்பந்தமான குறைகளை விசாரிக்க சட்ட பூர்வ

மான ஒரு நிரந்தரக் கமிட்டி நியமிக்கப்படுமென சீர்திருத்தம் கூறுகிறது. இதில் பாதி மெம்பர்கள் முஸ்லிம்கள்; பாக்கி பாதி மெம்பர்கள் ஹிந்துக்கள்.

அதுமுதல் பெற்ற பின்னரே பொதுக் கூட்டங்கள் போட வேண்டுமென்ற சட்டம் ரத்து செய்யப்படுகிறது. ஆனால் ஸ்தல அதிகாரி, தனது யுக்தானுசாரப்படி எந்த கூட்டத்தையும் தடை செய்ய அதிகாரமளிக்கப்படுகிறது. இந்த சீர்திருத்தம் திருப்திகரமாயில்லையென சமஸ்தான காங்கிரஸ் கூறிவிட்டது.

சர்வதேச ஆரியன் சங்கம், சீர்திருத்தத்தை பலமாகக் கண்டித்தது. ஆனால், அதே சமயத்தில், சத்யாக்ரஹ இயக்கத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. மத சுதந்திரம் சம்பந்தமாக சீர்திருத்தத்திலுள்ள ஷரத்துகள் 'வழா வழா' வென்றிருக்கிறதென்றும், இது சம்பந்தமாக சர்க்கார் தனது கொள்கையை ஸ்பஷ்டமாகத் தெரிவித்து விட வேண்டுமென்றும் இந்த சங்கம் கோரியது. ஜீவாதார உரிமைகளை ஒரு கமிட்டியின் விசாரணைக்கு விடக் கூடாது, அவற்றை சர்க்காரே அளித்துவிட வேண்டும் என்பதே இந்த சங்கத்தின் கருத்து. சர்வதேச ஆரியன் சங்கம் கோரியபடி, ஹைதராபாத் சர்க்காரும், சீர்திருத்தத்திலுள்ள மத சம்பந்தமான ஷரத்துக்களை விளக்கி 1939 ஆகஸ்ட் 8-ந் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அந்த அறிக்கை அளித்த சலுகைகள்:

(1) மத ஸ்தாபனங்களை அமைக்க உரிமை.

(2) மத சம்பந்தமான கூட்டங்கள் அல்லது சடங்குகளை பொது அல்லது சொந்த கட்டிடத்தில், அல்லது கட்டிடத்திற்கு முன்னுள்ள காம்பவுண்டில் போலீஸுக்கு முன்னதாக அறிவிக்காமலேயே நடத்தலாம். (ராஜிய கூட்டங்கள் போட வேண்டுமானால்

போலீஸுக்கு முன்னதாகவே தகவல் கொடுக்க வேண்டுமென்று சீர்திருத்தத்திலுள்ள ஒரு ஷரத்து கூறுகிறது.)

(3) பிரார்த்தனை, மத ஊர்வலங்கள், கோவில்களை கட்டல், ப்ரைவேட் ஸ்கூல்களை ஆரம்பித்தல்—இந்த உரிமைகள் மீது யாதொரு தடையும் இருக்காது.

(4) மத விவகாரக் கமிட்டியின் தீர்ப்பை எதிர்த்து ஹோம் இலாகாவுக்கு அப்பில் செய்துகொள்ளலாம். (மத இலாகாவுக்குத்தான் அப்பில் செய்துகொள்ளலாமென்று சீர்திருத்தத்திலிருந்தது. ஆரிய சங்கத்தின் கோரிக்கைப்படி, ஹோம் இலாகாவுக்கு அப்பில் செய்துகொள்ள சர்க்கார் அனுமதியளித்தது)

இது ஆரிய சமாஜிகளுக்கு பெரிய வெற்றி யென்பதில் சந்தேகமில்லை. அதன் தலைவர்களும் இந்த விளக்கத்தைக் கொண்டு திருப்தியடைந்து, ஹைதராபாத் பிரதம மந்திரி சர். அக்பர் ஹைதரியைப் பாராட்டினார்கள்.

எல்லா சத்யாக்ரஹக் கைதிகளும் 1939-ஜூ ஆகஸ்ட் மாதத்திலேயே விடுதலை செய்யப்பட்டனர்.

மொத்தத்தில் இந்த அரசியலமைப்பு, பிரிட்டிஷ் இந்தியாவில் 1908-ம் வருஷத்திற்கு முன்னிருந்த மின்டோ—மார்லி சீர்திருத்தத்தைவிட, என்—இப்பொழுது திருவாங்கூர், கொச்சி, மைசூரிலுள்ள அரசியலமைப்புகளைவிட படுமோசமான தென்பதில் சந்தேகமே கிடையாது. சீர்திருத்தத்தால் இந்த சமஸ்தான ஹிந்துக்களின் மதக் குறைகள் நீங்கினதேயொழிய, அரசியல் துறையில் பிரஜைகளுக்கு குறிப்பிடத்தக்க உரிமைகள் எதுவும் கிடைக்கவில்லை.

ராஜ்கோட்

சமஸ்தானத்தின் வரலாறு

ராஜ்கோட் சமஸ்தானம், குஜராத்திலுள்ள கத்தியவார் சமஸ்தானங்களில் ஒன்று. கத்தியவாரில் மொத்தம் 219 சிறிய சமஸ்தானங்களும், குண்டு மரியாதையுள்ள 17 சமஸ்தானங்களும் இருக்கின்றன. கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவுக்கு வந்த சமயத்தில் இந்த சமஸ்தானங்கள் அனைத்தும், பூராவாக பீஷ்வா அல்லது கெய்க்வாரின் சிற்றரசுப் பிரதேசங்களாக இருந்தன. இவற்றில் ஒன்றான கோண்டாலின் அதிபதி 1864-ம் வருஷம் நன்னடத்தை ஜாமீன் எழுதிக் கொடுத்திருக்கிறார்.* இதன் பேரில்தான் இவருக்கு பிரிட்டிஷார் சன்னது வழங்கினர். கத்தியவாரிலுள்ள பாக்கி ராஜாக்களும் (ராஜ்கோட் மன்னர் உள்பட) கோண்டால் ராஜா எழுதிக் கொடுத்த மாதிரியே நன்னடத்தை பத்திரங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

கத்தியவார் மன்னர்களின் ஊதாரித்தனத்தைப்பற்றியும், அதை எப்படி பிரஜைகள் வெறுத்தனர் என்பது பற்றியும் மகாத்மா காந்தி 1922-ம் வருஷம் பிப்ரவரி மாதம் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"கத்தியவாருக்கு விஜயம் செய்யும் கவர்னரை சந்தோஷப்படுத்துவதற்காக, வேட்டைகளுக்கும், இதர ராஜீய சம்பந்தமில்லாத, ஆனால் ஏராளமான பணம் இழுக்கும் தமாஷாக்களுக்கும் கத்தியவார் மன்னர் ஏற்பாடு செய்து வருவதாய்த் தோன்றுகிறது. ஒரு வேளை கவர்னரே இதைப் போற்றுமலிருக்கிறாரோ, என்னவோ? எப்பொழுதும் இவர்களுக்கு தமாஷாக்கள் எதற்காக?

---

*இரண்டாம் அநுபந்தம் பார்க்க.

அவரவர்களுடைய தலைநகர்களில் இருக்கையில் தமாஷாக்களை அனுபவிக்காம லிருந்திருக்கிறார்களா, என்ன? மேலும் இந்த வேட்டைகள், மாமிசம் உண்ணுத கத்தியவாரிகளின் மனதை புண்படுத்துகிறது. காட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ள மிருகங்களை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு வரவழைப்பதற்காக, சில தினங்களுக்கு முன்னதாகவே அந்த பிரதேசத்தில் ஆடுகள் வெட்டிப் போடப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்த மன்னர்கள் கண்ணை மூடிக்கொண்டு கண்டாகண்டபடி செலவு செய்வதை கண்டிப்பதற்காக பொதுக் கூட்டங்கள் நடப் பதை கத்தியவாரிலுள்ள அரசியல் ஏஜெண்ட் விரும்பவில்லை. எனவே, இந்த ஏஜெண்டு பொதுக்கூட்டங்கள் மீது தடை விதித்து, ஸ்ரீமான்கள். முனிலால் கோத்தாரி, மனசுக்லால் ராவ்ஜிபாய் மேத்தா இருவரையும் கைது செய்திருக்கிறார். ஏஜென்ஸி பிர தேசத்தில் இப்பொழுதுதான் முதல் முதலாக இதைப்போல அடக்குமுறைகள் தலைகாட்டுகின்றன. கைது செய்யப்பட்டவர் களை பாராட்டுகிறேன்.''

இதற்கு முன் இருந்த ராஜ்கோட் மன்னர், சென்ற மகா யுத்தத்தில் போர் முனைக்கே சென்று, பிரிட்டிஷ் எகாதிபத்தியத்திற்கு ராணுவ சேவை புரிந்திருக்கிறார்.

இந்த சமஸ்தானத்தின் விஸ்தரணம் 283 சதுர மைல் கள்; ஜனத்தொகை 75,540; வருஷ வருமானம் ரூ. 12,50,000.

பொறுப்பாட்சிப் போர்

இந்த சமஸ்தானத்திற்கு புதிய திவான் நியமிக்கப்படு வதை எதிர்த்து முதல் முதலில் 1938-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இதை அடக்க சர்க்கார் 9 பிரமுகர்களை கைது செய்து தடையுத்தரவுகளை யும் பிறப்பித்தனர். தடையை மீறி ஜனங்கள் பொதுக்

கூட்டம் நடத்தினர்கள். ஒரே நாளில் 2, 3 இடங்களில் போலீஸார், ஜனங்கள் மீது தடிகளால் தாக்கினர். இதில் 150 பேர்களுக்கு காயமேற்பட்டது.

செப்டம்பர் மாதம் 5-ந் தேதி ராஜ்கோட்டில் நடந்த பிரஜைகள் மகாநாட்டில் சர்தார் பட்டேல் பேசுகையில், ராஜ்கோட் இதர சமஸ்தானங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென அறிவித்தார்.

பிரஜைகளின் அபிலாஷைகளை ஒடுக்க பிரிட்டனிலிருந்து சர். பாட்ரிக் காடெல் என்ற வெள்ளைக்காரர் திவான் பதவிக்கு திடீரென தருவிக்கப்பட்டார். ரெஸிடெண்டின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே தாகூர் சாகிப் இவரை திவானாக நியமித்தார்.

காடெலுக்கு முன் இருந்த திவானுக்கு ரூ. 1,000 தான் சம்பளம். ஆனால். காடெலின் தோல் வெள்ளையாகயிருக்கிறதல்லவா? அதற்காக இவருக்கு ரூ. 2,000 சம்பளம் கொடுக்கப்பட்டது. செப்டம்பர் மாதம் 12-ந் தேதி (1938ஹ) காடெல் பதவி யேற்றார். பிரஜைகளின் இயக்கத்தை ஒடுக்க அந்த மாதத்திலேயே திவானுக்கு விசேஷ அதிகாரமளிக்கப்பட்டது.

தீப்பெட்டி ஏகபோக உரிமை

சமஸ்தானத்தில் தீப்பெட்டி ஏகபோக உரிமை சட்டம் இருந்தது. அதன்படி ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் தீப்பெட்டிகள்தான் சமஸ்தானத்திற்குள் வர அதமதிக்கப்பட்டது. வேறு கம்பெனிகளின் தீப்பெட்டிகளை ஜனங்கள் வரவழைத்து, ஏகபோக உரிமை சட்டத்தை மீறி, தெருக்களில் பகிரங்கமாக விற்றனர். விற்றவர்களில் பெரும்பாலோர் கைது செய்யப்பட்டார்கள். இந்த சட்ட மறுப்பின் முதல்

சர்வாதிகாரி ஸ்ரீ. தேபரும் சிறை புகுந்தார். இயக்கம் டவுனில் மாத்திரமின்றி, கிராமங்களுக்கும் பரவ ஆரம்பித்தது. இதை சர்க்கார் விரும்பவில்லை. "கிராமங்களுக்குள் செல்லாதே" என பல பிரமுகர்களுக்கு தடையுத்தரவு சாதரா செய்யப்பட்டது.

காடெல் தன்னுடைய 'திறமை'யைக் காண்பிக்க ஆரம்பித்தார். நில வரியைப் பரிசீலனை செய்ய கமிட்டி நியமிப்பதாகவும், நீக்குச்சி ஏகபோக உரிமையால் பாதிக்கப்பட்டவர்கள் தனித்தனியாய் மனுச் செய்துகொண்டால், அதை கவனித்து உத்தரவு பிறப்பிப்பதாகவும் ஒரு மாய வலையை வீசினார். இதில் பிரஜா பரிஷத் தலைவர்கள் சிக்கவில்லை. இயக்கம் பலப்பட்டது. சமஸ்தான சட்ட சபை மெம்பர்கள் காடெலின் அடக்குமுறைகளை கண்டிப்பதற்காக சட்ட சபைகளிலிருந்து ராஜீநாமாச் செய்தனர். போலீசாரும் தங்கள் வீரதீரத்தை, ஊர்வலமாகச் சென்ற பொடிப் பையன்களிடமும் காண்பித்தார்கள். கொதிக்கும் வெண்ணீரை அந்த பையன்கள் மேல் ஊற்றினர். இதைப் போல அக்கிரமம் பிரிட்டிஷ் இந்தியாவில் நடத்த சட்ட மறுப்பு இயக்கங்களில் கூட நடக்கவில்லை.

வருஷா வருஷம் சர்க்கார், தர்பார் மண்டபத்தில் குத்தகைகளை ஏலம் போடுவதுண்டு. அந்த வருஷம் (1938) அக்டோபர் மாதம் பரிஷத் தொண்டர்கள், தர்பார் மண்டபம் முன் நின்று, யாரும் குத்தகை எடுக்க வேண்டாமென பொது ஜனங்களைக் கேட்டுக்கொண்டனர். அதில் குறிப்பிடத்தக்க வெற்றி ஏற்பட்டது. வெள்ளைக்கார திவான் கூட இதைக் கண்டு ஸ்தம்பிக்க வேண்டியதாயிற்று. உடனே இன்னும் இரண்டு படி இறங்கினர். "நீக்குச்சி வியாபார ஏகபோக உரிமையை சர்க்கார் வாபஸ் வாங்குகிறது. ஜஸ்

ஏகபோக உரிமையும் அரை குறையாக வாபஸாகும்" என்று ஒரு அறிக்கை விடுத்தார்.

இந்த சமரச திட்டத்திற்கு பிரஜைகள் இணங்கவில்லை. காடெல் மீண்டும் தனது அடக்குமுறைகளை கடுமையாக்கினர். இதையெல்லாம் பிரஜைகள் எத்தனை நாள் சகித்துக் கொண்டிருப்பது? சிறிய கோரிக்கைகளைப் பெறக்கூட பெரிய தியாகங்கள் செய்ய வேண்டியிருந்தது. இதை உணர்ந்த சர்தார் பட்டேல்,

"ராஜ்கோட் போராட்டம் முதலில் சுதாட்டத்தை எதிர்த்து மறியலாக ஆரம்பமான போதிலும், இப்போது பொறுப்பாட்சிப் போராக வளர்ந்து விட்டது,"

என்று அறிவித்தார்.

'நானும் விட்டேனா' என்று பாட்ரிக் காடெல், எல்லா பொதுக் கூட்டங்களையும் தடியடிகளால் கலைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த சமயத்தில் தாகூர் சாகிப்புக்கு, திவானின் போக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. காடெலின் கொள்கை, பிரஜைகளையும் தன்னையும் பிரித்து விடுவதாக யிருந்ததை தாகூர் கண்டு கொண்டு, எப்படியாவது அவரை ஒழித்து விடுவதென தீர்மானித்து, அவரை டிஸ்மிஸ் செய்வதாக ஒரு உத்தரவு பிறப்பித்தார். ஆனால் ரெஸிடெண்ட் கிப்ஸன் இருக்கிறாரே! ரெஸிடென்டைக் கண்டால், ஏன், ரெஸிடென்ஸியிலுள்ள பியூன்களைக் கண்டால்கூட இந்த ராஜாக்கள் நடுங்குவார்களென்றும், இந்த விஷயம் தமக்கே நன்கு தெரியுமென்றும் மகாத்மாவே சொல்லியிருக்கிறார். எனவே, தாகூர் சாகிப், காடெலை டிஸ்மிஸ் செய்வதாக முதலில் பிறப்பித்த உத்தரவை, ரெஸிடெண்ட் கிப்ஸனின்

'போசனே' (கட்டளை) யின் பேரில் வாபஸ் வாங்கிக்கொண் டார். ஆனல், தாகூர் சாகிப், பழைய திவான் தர்பார் வீரவல்லா சொன்னபடியே ஆடிக்கொண்டிருந்தார். தாகூர் பிறப்பித்த டிஸ்மிஸ் உத்தரவுக்கும் இந்த வீரவல்லாதான் ஜவாப்தாரி யென்பது காடெலுக்குத் தெரியும். எனவே காடெல், இந்திய சர்க்காரின் அரசியல் இலாகாவுக்கு ஒரு அவசர மனுவை அனுப்பினர்.

இதன் விளைவாக அரசியல் இலாகாவிடமிருந்து வந்த ஒரு உத்தரவில், வீரவல்லாவும், அவர் மருமகனுகிய ராஜ் கோட் போலீஸ் சூப்பிரெண்டும், 24 மணி நேரத்தில் ராஜ் கோட்டை விட்டு வெளியேற வேண்டுமென கூறப்பட் டிருந்தது.

ஸ்ரீ. கிப்ஸன், தாகூருக்கும் காடெலுக்கும் சமரசம் செய்து வைத்து, ஒரு நிர்வாக கவுன்சில் நியமிக்குமாறு யோசனை கூறினர். அதன்படி 1938-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தாகூர் சாகிப்பை தலைவராகவும், சர். காடெலை முதல் மெம்பராகவும், மாணிக்கலால் ஸி. பட் டேலை இரண்டாவது மெம்பராகவும், ஸ்ரீ. ஜயந்திலால் ஜேஸன்புத்ராவை மூன்ருவது மெம்பராகவும் கொண்ட ஒரு கவுன்சில் அமைக்கப்பட்டது. இதில் 2-வது, 3-வது மெம் பர்கள் வீரவல்லாவின் கையாட்கள்.

திவான் காடெல், தனக்கு பிரஜைகளிடம் அன்பு தலும் புவதாகவும், உடனே தலைவர்களைக் கலந்துகொண்டு ஒரு சமரசத்திற்கு வர தான் துடித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். நவம்பர் 3-ந் தேதி பரிஷத் தலைவர்கள், தாகூர், திவான் ஆகியோர் அரண்மனையில் சந்தித்துப் பேசியபோது, பரிஷத் தலைவர்கள் கீழ்க்காணும் கோரிக்கை களை சமர்ப்பித்தனர்:

(1) பூர்ண பொறுப்பாட்சியே சர்க்காரின் லக்ஷியமென சர்க்கார் அறிவிக்க வேண்டும்.

(2) சில அதிகாரிகள் பதவியிலிருக்க லாயக்கற்றவர்கள் என்பதற்கு பரிஷத்திடம் சாக்ஷிய மிருக்கிறது. சாக்ஷியத்தைப் பார்த்து, அந்த அதிகாரிகளே டிஸ்மிஸ் செய்துவிட வேண்டும்.

(3) மாஜி திவான் வீரவல்லாவின் அக்கிரமங்களே விசாரிக்க ஒரு பக்ஷபாதமற்ற கமிட்டியை நியமிக்க வேண்டும்.

(4) கேவலமான முறையில் நடந்துகொண்ட போலீஸ் அதிகாரிகள் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளுக்கு சர்க்கார் இணங்க மறுத்ததும், சர்தார் பட்டேல், "கொடுங்கோலன் மண்டியிடுவதும், ஜனங்கள் வெற்றி பெறுவதும் நிச்சயம். சமஸ்தான சூழ்ச்சிகளில் சிக்காமல் பெறுப்பாட்சி கிடைக்கும் வரை போரை நடத்துக" என்று பிரஜைகளுக்கு உற்சாகமூட்டினர். மீண்டும் கடுமையான போர் ஆரம்பமாயிற்று. அடக்குமுறைகளும் மனிதத்தன்மையற்ற வழிகளில் இறங்கியது. தலைவர்களும், தொண்டர்களும் விடு வீடாகச் சென்று, சமஸ்தான அதிகாரிகளே ராஜீநாமாச் செய்யுமாறு வேண்டிக்கொண்டனர். சர்க்காரின் பிசாசுக் கொள்கையை சகியாத ஒரு போலீஸ் உதவி சூப்பிரண்டும், ஒரு இன்ஸ்பெக்டரும் ராஜீநாமாச் செய்தனர்.

சர்தார் பட்டேலின் புத்திரி மிஸ். மணி பென் பட்டேலும், தொண்டர்களும் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து ஜனங்களே தட்டியெழுப்பினர்.

சர். காடெலின் தந்திரோபாயங்கள், இயக்கத்தை பலப்படுத்தி விட்டதால், இனி ஏமாற்று வித்தையில் இறங்க வேண்டாமென அவருக்கே நல்ல புத்தி வந்தது போல் தோன்றிற்று. பம்பாய்க்குச் சென்று சர்தார்

பட்டேலிடம் சரணுகதியடைந்தார். சர்தாரை 'வெளியார்' என்று சொன்ன வெள்ளைக்காரர் காடெலுக்கு புத்தி வந்ததைக் குறித்து அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். சமரசம் ஏற்பட்டு விடும்போல் தோன்றிற்று.

ஆனல் சர். காடெல் நம்பிக்கைத் துரோகம் செய்தார். இதைப்பற்றி சர்தார் பட்டேல் 1938 டிசம்பர் மாதம் 10-ந் தேதி பின்கண்ட அறிக்கை வெளியிட்டார்:

"சர். காடெல் நவம்பர் 29-ந் தேதி என்னை பம்பாயில் சந்திக்கும் முன், கீழ்க்காணும் அறிக்கையை வைத்திருந்தார். இது தாக்கூர் சாகிபாலாவது அல்லது அவர் சார்பாகவாவது வெளி வரவேண்டிய அறிக்கை. அறிக்கையின் நகல்:

"எல்லா ராஜீயக் கைதிகளையும் விடுவிக்கிறேன். திவான் காடெலை தலைவராகக்கொண்ட ஒரு சீர்திருத்தக் கமிட்டியை நியமிக்கிறேன். கமிட்டியில் 10 மெம்பர்கள் இருப்பார்கள். இதில் 7 பேர் சர்தார் பட்டேலால் பொறுக்கி யெடுக்கப்படுவார்கள். 7 பேர்களும் பிரஜா பரிஷத் மெம்பர்களாயிருக்க வேண்டும். கமிட்டியின் தலைவர், இரு அதிகாரிகளை மெம்பர்களாக நியமனம் செய்வார். இந்தக் கமிட்டி, நான் (தாகூர்) பிரிட்டிஷ் சர்க்காருக்கு செய்ய வேண்டிய கடமைக்கும், சமஸ்தானுதிபதி என்ற ஹோதாவில் எனக்கு இருக்க வேண்டிய அதிகாரத்திற்கும் முரணில்லாத வகையில் பிரஜைகளுக்கு எவ்வளவு அதிகமாக அதிகாரங்கள் அளிக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கும் ஒரு சீர்திருத்தத் திட்டத்தை தயாரிக்கும். ராஜாக்கள் சபை செய்துள்ள நிர்மானத்தின்படி என் சொந்தச் செலவை சமஸ்தான வருமானத்தில் பத்தில் ஒரு பங்குக்கு குறைத்துக் கொள்ளுகிறேன். இக்கமிட்டி சமர்ப்பிக்கும் திட்டம் பூராவையும் அப்படியே அமுலுக்குக் கொண்டு வருவேன் என்பதையும் ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

"நான் நல்ல செய்தி வருமென எதிர்ப்பார்த்தால், ராஜ்

கோட்டில் அடக்குமுறை வலுத்திருப்பதைக் குறித்து ஆச் சரியப்படுகிறேன். காடெல் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்."

இதற்கு திவான் காடெல் விடுத்த பதிலில், சமரசத் திட்டத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்றே சர்தாரிடம் தான் சொன்னதாகக் கூறினார். இதிலிருந்து சர். காடெல் எவ்வளவு தூரத்திற்கு பொய் சொல்லுவார் என்பதை ஜனங்கள் நன்கு தெரிந்து கொண்டனர்.

ஜனங்களே திருப்தி செய்ய வேண்டுமென தாகூர் உண்மையிலேயே ஆவலாகயிருந்தார். இதனால்தான் திவா னுக்குத் தெரியாமல் தாகூர் சாகிப், பவநகர் திவானுகிய ஸ்ரீ. அனந்தராய் பட்டணியின் மூலம் மகாத்மா காந்தி யுடனும், சர்தார் பட்டேலுடனும் கடிதப் போக்கு வரத்து நடத்தினர். சமரசத்திற்கு வர தான் தயாரென ஸ்ரீ. அனந்த ராய் பட்டணி மூலம் சர்தாருக்குத் தெரிவித்து, உடனே ராஜகோட் வருமாறும் கேட்டுக்கொண்டார். இது போதா தென்று சர்தாருக்கு தானே தந்தி மூலம் அழைப்பு அனுப் பினர். சர்தாரும் இதற்கிணங்கி 1938-ம் வருஷம் டிசம்பர் மாதம் 25-ந் தேதி ஆகாய விமானத்தில் ராஜ்கோட் வந்து சேர்ந்தார். தாகூர்—பட்டேல் சந்திப்பு விஷயம் சர். காடெலுக்குத் தெரியாது! சர்தாரை அரண்மனையில் கண்ட காடெல் நடுங்கிப்போனர். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"உங்களுக்கு சந்தோஷமான கிறிஸ்துமஸ் வருக என்று ஆசி கூறுவதா, அல்லது சந்தோஷமான புது வருஷம் வருக என்று ஆசி கூறுவதா?" என்று சர்தார், காடெலைக் கேட்டார்.

இதற்கு காடெல், விளக்கெண்ணெய் முகத்துடன் "கப்பலேறி வீட்டுக்குத் திரும்புக என்று ஆசி கூறுங்

கள். அதற்குத்தானே நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்'' என்று பதிலளித்தார்.

இதிலிருந்து, சர்தாரைக் கண்டால் காடெலுக்கு சிம்ம சொப்பனமாயிருந்தது தெளிவாகும்.

சர்தார் பட்டேலுக்கும், தாகூர் சாகிப்பைத் தலைவராகக் கொண்ட நிர்வாக கவுன்சிலுக்கும் 8 மணி நேரம் விவாதம் நடந்தபின் ஒப்பந்தமேற்பட்டது. 1938-ஐம் டிஸம்பர்மீ 26-ந் தேதி தாகூர் சாகிப் வெளியிட்ட ஒரு அறிக்கையில், 10 மெம்பர்கள் கொண்ட ஒரு சீர்திருத்தக் கமிட்டியை அமைக்க ஒப்புக்கொண்டார். இந்த 10 பேர்களில் மூவர் சர்க்கார் அதிகாரிகளாகவும், பாக்கி 7 பேர்கள் சமஸ்தான பிரஜைகளாகவுமிருக்க வேண்டும். தாகூர் சாகிப் பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்ய வேண்டிய கடமைக்கும், சமஸ்தானாதிபதி என்ற ஹோதாவில் அவருக்கு இருக்க வேண்டிய இறுதியான அதிகாரத்திற்கும் முரணில்லாத வகையில் கமிட்டி சீர்திருத்தத்தை தயாரிக்க வேண்டியது. இதை தர்பார் அப்படியே அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். சர்க்காரின் அறிக்கையில் மேற்கண்ட நிபந்தனைகள் இருந்தன. ஆனால் சர்தாருக்கும் தாகூர் சாகிப்புக்கும் 26-ந் தேதியே ஒரு ரகசிய ஒப்பந்தமும் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் நகல் :

அமர்சிங்ஜி செக்ரிட்டேரியட்

26-12-38

இன்றைய தேதியில் வெளி வந்த சர்க்கார் அறிக்கை இரண்டாவது ஷரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கமிட்டியின் ஏழு மெம்பர்கள் சர்தார் வல்லபபாய் பட்டேலால் சிபார்சு செய்யப்படுவார்கள். அந்த ஏழு பேர்களையும் நாங்கள் நியமித்து விடுவோம்.

(ஒப்பம்)

தாகூர் சாகிப், தர்மேந்திர சிங்.

ராஜ்கோட்.

இந்தக் கடிதம் சர்தார் படேலிடம் இன்னுமிருக்கிறது.

ராஜ்கோட் பிரஜைகளின் வெற்றியைக் குறித்து, இந்தியா பூராவுமே மகிழ்ச்சி யடைந்தது.

திவான் சர். காடெல் தமது பதவியை ராஜீனாமாச் செய்து விட்டு கப்பலேறினர்.

பிரிட்டிஷ் தலையீடு

சர்தார்—தாகூர் சாகிப் ஒப்பந்தம்பற்றி டிசம்பர் 26-ந் தேதி தர்பாரின் அறிக்கை வெளியாயிற்று. 28-ந் தேதி தாகூர் சாகிப்பை ரெஸிடெண்ட் கிப்ஸன் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். ரெஸிடென்ஸி காரியாலயத்தில் 28-ந் தேதி நடந்த சம்பாஷணைகள் கீழே தரப்படுகிறது:

ரெஸிடெண்ட்: (தாக்கூரைப் பார்த்து) "நீர் செய்துள்ள உடன்படிக்கை, எல்லா ராஜாக்களையும் கதிகலங்கச் செய்து விட்டது. வல்லபபாய் பட்டேலை ராஜ்கோட்டுக்கு நீர் அழைத்தீரா?"

தாகூர்: "அவரா வந்தார். என்னை சந்திக்க வேண்டுமென்றார். நான் அவரை தேனீருக்கு அழைத்தேன்."

ஸ்ரீ. கிப்ஸன்: "சரி அவர் நம்பத்தகாத பேர்வழியாச்சே! வெளியார் தலையீட்டை அநுமதிக்கக் கூடாதென்பது இந்திய சர்க்காரின் விருப்பமென உமக்கு நன்றாகத் தெரியும். அவருடன் நீர் ஒப்பந்தம் செய்து கொண்டதால், இதர ராஜாக்களின் அநுதாபத்தை இழந்து விட்டீர். நீர் பிசகு செய்து விட்டீர். 'சாத்தியமான எல்லா அதிகாரமும்' என்று ஒப்பந்தத்திலிருப்பதுதான் தொந்தரவு கொடுக்கிறது. அந்த வார்த்தைகளுக்கு எப்படி வேண்டுமானாலும் வியாக்யானம் செய்யலாம். அது உம்மை பொம்மை ராஜாவாக ஆக்கிவிடும். இந்த வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பத்திலேயே அவர்கள் பூரண பொறுப்

பாட்சி கோருவார்கள். ரொம்ப ஆபாஸமான நிலைமையில் நீர் இருப்பீர். கமிட்டியின் ரிப்போர்ட்டை அப்படியே அமுலுக்குக் கொண்டு வருவதாக ஒரு ஷரத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறீர். இது படுமோசமாச்சே! வாக்குதத்தம் செய்து விட்டீரே! கமிட்டியின் தலைவர் யார்?"

நாகூர்: "கர்பார் வீரவல்லா."

கிப்ஸன்: "அவரில்லை. அவர் ராஜ்கோட்டுக்கு வரவே கூடாது."

நாகூர்: "ஏன்? ராஜா காலம் முடிந்த பின் வருவார்"

கிப்ஸன்: "இப்பொழுது அவரை அநுமதிக்க மாட்டேன்."

நாகூர்: "இல்லை. சர். பாட்ரிக் போனதும் அவர் வரலாம்.

கிப்ஸன்: "பாட்ரிக் போனபின் அதைப் பார்த்துக் கொள்ளலாம்."

(நாகூர்—கிப்ஸன் பேச்சுகளின்போது சர். காடெலும், இதர நிர்வாக கவுன்சில் மெம்பர்களும் பிரசன்னமாயிருந்தனர்.)

இந்த சம்பாஷணைகளிலிருந்து, பிரிட்டிஷ் சர்க்காரின் ஏஜெண்டாகிய ரெஸிடெண்ட் கிப்ஸன், ராஜ்கோட் போராட்டத்தில் பிரஜைகளுக்கு எதிராக வேலை செய்தது தெரியலாயிற்று.

நாகூரும், ரெஸிடெண்டின் மிரட்டலுக்குப் பணிந்து, சர்காருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறினர்.

பம்பாயில் இந்த சமயத்தில் நடைபெற்ற ராஜாக்கள் சபையில், ராஜ்கோட் விஷயம்பற்றி விவாதம் நடந்தது. ராஜாக்கள் அனைவரும் பிரஜைகளின் நியாயமான கிளர்ச்சியை நசுக்க கையாள வேண்டிய கொள்கையும் அப்பொழுது தீர்மானிக்கப்பட்டது. அந்த கூட்டத்தின் முடிவுகள் நாகூருக்கு அசட்டு தைரியத்தை அளித்தென்பதில் சந்தேகமில்லை. கூட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்த பிக்

கானீர் மகாராஜா பேசியதை 'ஹரிஜனி'ல், "உதையும், முத்தங்களும்" என்ற தலைப்பில் காந்திஜி வெளியிட்டார்.

பிக்கானீர் ராஜா பேசியதாவது :—

"பொறுப்புள்ளவர்களைப்போல குறைகளைக் கேளுங்கள். ஆனல், பொறுப்பாட்சி யளிக்காதீர்கள். நியாயமாக நடந்து கொள்ளுவதோடு உறுதியாகவும் இருக்க வேண்டும். லார்டு மிண்டோ எழுதிய சரித்திரப் பிரசித்தமான கடிதத்திலிருப்பதைப் போல "அடக்குமுறை, சமரச மனப்பான்மை கொள்கையையும்," 'உதைகளும், முத்தங்களும்' கொள்கையையும் பின்பற்றுக. அரசியல் ஸ்தாபனங்களான பிரஜா மண்டலங்களை அமைக்கவே அநுமதிக்கக்கூடாது. இப்பொழுது அமைக்கப்பட்டிருந்தால் அவற்றை நசுக்கி விடுங்கள். அதன் மெம்பர்களின் வேலைகளை கூர்ந்து கவனியுங்கள். கிளர்ச்சிக்காரர்கள் போலிகளாயில்லாமல் உண்மையான குறைகள் உள்ளவர்களாயிருந்தால் "ஒரு பிடி அன்னத்தைப் போட்டு வாயைத் தைத்து விடு" என்ற பழமொழியைப் போல அவர்களுக்கு சர்க்கார் இலாகாக்களில் தகுந்த வேலை கொடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்."

இந்தக் கூட்டத்தில் தற்காலிகமாக செய்யப்பட்ட முடிவுகள் :

(1) சமஸ்தான கோஷ்டிகளுக்கு பொது போலீஸ் படைகளை நிறுவ வேண்டும்.

(2) பிரஜா மண்டலங்களை உடனே நசுக்கிவிட வேண்டும்.

(3) நியாயமான குறைகளை நிவர்த்திக்க வேண்டும்.

(4) அந்நிய (பிரிட்டிஷ் இந்திய) கிளர்ச்சிக்காரர்கள் விஷயத்தில் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும்.

(5) சமூக வேலைகளுக்கு ஆதரவளிக்கலாம். ஆனல், ராஜீய வேலைகளை அநுமதிக்கக்கூடாது.

(6) சமஸ்தான மக்களின் உண்மையான ஆலோசனை ஸ்தாபனங்களை ஆதரிக்க வேண்டும்.

(7) 'சமரச மனப்பான்மை, அடக்குமுறைக் கொள்கை'; 'நியாயமாக நடந்துகொள்; ஆனல் உறுதியாகயிரு' என்ற கொள்கைகளே பின்பற்ற வேண்டும்.

மேற்கண்ட முடிவுகள்பற்றி காந்திஜி எழுதுகையில்,

"இவ்வளவு காலம் கழித்து சமஸ்தானங்களில் ஆரம்ப மாயிருக்கும் விடுதலே இயக்கத்தை நசுக்க ஒரு அயோக்கியத்தன மான சூழ்ச்சி நடந்திருப்பதையே இது காண்பிக்கிறது. மனிதனின் திட்டங்கள்–அவை கிரீடதாரியின் திட்டங்களாக இருந்தால்கூட– அடிக்கடி தோல்வியடைகின்றன. உதைகளால் பிரஜைகளே பணியவைக்க முடியாது. அவர்களுக்கு வேண்டியதை எடுத்து ஜீரணம் செய்து விடுவார்கள்",

என்று குறிப்பிட்டார்.

சர்தார் பட்டேல் கூறிய 7 பேர்களில் நான்கு பேர்களே நியமிக்க தாகூர் ஒப்புக்கொள்ளுவதாக, நிர்வாக கவுன்சில் மெம்பர் ஸ்ரீ. மாணிக்லால், சர்தாருக்குத் தெரிவித்தார். ஆனல், தாகூர் வெளியிட்ட இரண்டாவது அறிக்கையில், பட்டேல் கொடுத்திருந்த 7 பெயர்களில் மூன்றே பெயர்கள் இருந்தன. தாகூர் சாகிப் ஒரு பெரிய வகுப்புவாதப் பிரச்னையையும் இளப்பி விட்டார்.

"முஸ்லிம்களும், பய்யாட்களும் (ஜமீன்தார்கள்) பிரதிநிதித்துவம் கேட்கிறார்கள். சர்தார் பட்டேல், தான் கூறும் 7 பெயர்களில் மாறுதல் செய்ய சம்மதிக்க மாட்டே னென்கிறார். மேற்கண்ட இரு வகுப்புகளின் பிரதிநிதி களேயும் சேர்ப்பது நல்லதென தர்பார் எண்ணியது,"

என்று தாகூரின் அறிக்கை கூறியது.

தாகூர் தன்னுடைய இஷ்டப்படி சீர்திருத்தக் கமிட்டியையும் நியமித்தார். ஆனல், அதிலிருந்த 3

பிரஜா பரிஷத் மெம்பர்களும், தங்கள் சகபாடிகளான நான்கு பேர்கள் நியமிக்கப்படாததை (ஒப்பந்தத்தை தாகூர் மீறியதை) கண்டிப்பதற்காக சீர்திருத்தக் கமிட்டியிலிருந்து ராஜீநாமாச் செய்தனர்.

மீண்டும் போரை ஆரம்பிக்குமாறு பிரஜைகளின் தளபதி சர்தார் பட்டேல், 1939-ம் வருஷம் ஜனவரி மாதம் 25-ந் தேதி கட்டளை பிறப்பித்தார். இதில் கத்தியவார் மக்கள் மாத்திரம் சேர வேண்டுமென்றும் கூறினர். தான் **கத்தியவார் ராஜகீய பரிஷத்தின்** தலைவராயிருப்பதால், கத்தியவார் பிரஜைகளுக்கும், ராஜாக்களுக்கும் வழி காட்ட வேண்டியது தனது கடமை யென்பதையும் தெளிவாக்கினர்.

சமஸ்தான விஷயங்களில் காங்கிரஸ் இனியும் நடுநிலைமைக் கொள்கை அநுஷ்டிக்காதென மகாத்மா காந்தி 1939ஐ ஜனவரி மாதக் கடைசியில் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டார். அறிக்கையின் சாரம்:

"சமஸ்தான மக்களிடையே விழிப்பு ஏற்படாமலிருக்கும் போது சமஸ்தான விவகாரங்களில் நடுநிலைமைக் கொள்கை அநுஷ்டிக்க வேண்டுமென காங்கிரஸ் முடிவு செய்தது. அது ஒரு அருமையான ராஜதந்திர வேலை என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆனால் எங்கு பார்த்தாலும் சமஸ்தான மக்களிடையே விழிப்பும், நீண்ட காலம் கஷ்டங்களை அநுபவித்தேனும் நியாயமான உரிமைகளை பெற்றே தீருவதென்ற உறுதியும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும்போது, காங்கிரஸ் அதே நடுநிலைமைக் கொள்கையை அநுஷ்டிப்பது கோழைத்தனமாகும். இதை உணர்ந்து விட்டால், விடுதலைப் போர் எங்கு நடந்தாலும் சரி, அது அகில இந்தியாவும் கலந்துகொள்ள வேண்டிய போராட்டம் என்பது புலனாகும்."

ரெளிடெண்ட் கிப்ஸனின் தலையீட்டால் ஒப்பந்தம் மீறப்பட்டதால் ராஜ்கோட் சத்தியாக்கிரகம் பிரிட்டிஷ் சர்க்கார்-காங்கிரஸ் போர் என்று பட்டேல் அறிவித்தார். மகாத்மா காந்தியும் வைசிராய்க்கு எச்சரிக்கை விடுத்தார். ரெளிடெண்ட் தலையிட்டதை 'இல்லை, இல்லை' என்று மறைப்பதில் யாதொரு பிரயோசனமும் மேற்படாதாகையால் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியாகிய வைசிராய் உடனே தலையிட்டு ஒப்பந்தம் நிறைவேறும்படிச் செய்ய வேண்டுமென்றும் கோரினர்.

"ரெளிடெண்டுகளின் காரியதரிசிகளையும், பியூன்களையும் கண்டால்கூட சமஸ்தானாதிபதிகளுக்கு எவ்வளவு நடுக்கம் ஏன்பது, ரெளிடெண்டுகளையும், சமஸ்தானங்களையும் பற்றி ஏதேனும் தெரிந்துள்ளவர்களுக்கு நன்கு தெரியும். எனக்கு தெரிந்ததிலிருந்து இதை நான் எழுதுகிறேன். ரெளிடெண்டை திருப்தி செய்யவே தாகூர் சாகிப் ஒப்பந்தத்தை மீறினர். ராஜ்கோட் நிலைமை சீர்படாவிடில், மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள் ராஜீனாமாச் செய்து, இந்தியா பூராவிலும் அரசியல் நெருக்கடியை உண்டு பண்ணும்" என்றார் காந்திஜி.

கஸ்தூரிபாய் கைது

1939 வது பிப்ரவரி மாதம் 3-ந் தேதி ஸ்ரீமதி. கஸ்தூரிபாயும், மிஸ். மணி பென் பட்டேலும் ராஜ்கோட்டில் கைது செய்யப்பட்டார்கள். ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் போர்பந்தரில் பிறந்தவர். ஆனால், ராஜ்கோட்டில்தான் வளர்ந்தார். மேலும் இவர், ராஜ்கோட்டில் இதற்கு முன் இருந்த தாகூரின் திவானுடைய நாட்டுப்பெண்ணல்லவா? ராஜா ஒழுங்கான வழிக்கு வரும்படிச் செய்வது தமது கடமை யென்று அன்னை கருதினர். இதற்காகத்தான் ஸ்ரீமதி. கஸ்தூரி

பாய், தான் எவ்வளவோ தேக அசௌக்கியத்துடனிருந்த போதிலும், உடல் நலனை சற்றேனும் பொருட்படுத்தாமல் போரில் இறங்கினர்.

சிறைகளில் கைதிகளும், கிராமங்களில் எழுத்து வாசனைகூட இல்லாத பாமர மக்களும் சமஸ்தான அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டார்கள். சித்திரவதை செய்யப் பட்டனர். இவற்றைப்பற்றி காந்திஜிக்குத் தகவலும் கிடைத்தது. இது சம்பந்தமாக சமஸ்தான அதிகாரிகளுடன் கடிதப்போக்கு வரத்து செய்தார். அதற்கு யாதொரு பலனும் கிடைக்கவில்லை. ஒரு ராஜாவே தான் கொடுத்த வாக்குறுதியை மீறியதைக் கேட்டு மகாத்மா ஸ்தம்பித்துப் போய் விட்டார்.

"ஒரு சமஸ்தானாதிபதி தன் பிரஜைகளுக்கு கொடுக்கும் வாக்குறுதியை மீறும்போது என் நெஞ்சு வேதனை யடைகிறது. ஆகையால், தாகூர் சாகப் செய்த வாக்கு மாறுதலையும், நம் மிக்கைத் துரோகத்தையும் நேர் செய்யுமாறு அவரைக் கேட்பது என் கடமை. ஆகவே நான் சமாதான தூதனாக ராஜ்கோட்டுக்குச் செல்லுகிறேன். வாக்குறுதி மீறப்பட்டு நம்பிக்கைத் துரோகம் ஏற்படுவதைக் காணும்போது எனக்கு உயிரே பெரும் பாரமாகி விடுகிறது. ராஜ்கோட் விஷயத்தில் என் நிலைமை இதுவே. ராஜ் கோட் ராஜா சொற்ப மாறுதலுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தம் (தாகூர்—சர்தார் ஒப்பந்தம்) என்னால் தயாரிக்கப்பட்ட நகல் ஒப்பந்தமே. அதைத் தயாரித்தவன் நான் என்பதை இப்பொழுது ஞாபகமூட்டுகிறேன்,"

என்று ஒரு அறிக்கை வெளியிட்டு விட்டு, காந்திஜி 1939ஐ பிப்ரவரி மாதம் 26-ந் தேதி பம்பாயிலிருந்து ராஜ்கோட் பிரயாணமானார். புறப்படு முன், இயக்கத்தை



மகாத்மா காந்தி

நிறுத்தி விடுமாறு சத்யாக்ரஹிகளுக்கு உத்தரவிட்டார். அதன்படி ராஜ்கோட்டில் சட்டமறுப்பும் நின்றது.

உபவாசம் ஆரம்பம்

காந்திஜி வெளிடெண்ட் கிப்ஸனை சந்தித்துப் பேசினார். இதற்கு பலனென்றும் கிடைக்கவில்லை. தாகூருக்கு மார்ச் 2-ந் தேதி ஒரு இறுதிக் கடிதம் அனுப்பினார். அதில் பின் கண்ட கோரிக்கைகளுக்கு தாகூர் மனமார ஒப்புக்கொள்ள வேண்டுமென கோரியிருந்தார் :

(1) டிசம்பர் 26ல் வெளியிடப்பட்ட அறிக்கையை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். அதாவது உடன்படிக்கை பொறுப்புகளுக்கு முரணில்லாமல், ஜனங்களுக்கு சாத்தியமான அளவுக்கு அதிகாரங்கள் கொடுத்து சீர்திருத்த திட்டம் தயாரிப்பதற்கு கமிட்டி நியமித்தல்.

(2) ஜனவரி 21ல் வெளியிடப்பட்ட அறிக்கை, முதல் அறிக்கையை ரத்து செய்வதாயிருக்கிறது. ஆகையால் இரண்டாவது அறிக்கையை ரத்து செய்ய வேண்டும்.

(3) சத்யாக்ரஹ இயக்கத்தின் தலைவரான ஸ்ரீ. தேபர் உள்பட பிரஜா பரிஷத் சார்பாக கமிட்டியில் ஐந்து பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்.

(4) சீர்திருத்த கமிட்டிக்கு ஸ்ரீ. தேபர் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

(5) கமிட்டியில் சமஸ்தானாதிபதியால் நியமிக்கப்படும் மூன்று மெம்பர்களுக்கும் வோட் இருக்கக்கூடாது.

(6) டிசம்பர் 26ல் வெளியிடப்பட்ட அறிக்கையின் நோக்கத்தை அநுசரித்து ராஜ்கோட் நிர்வாக சபை நடந்துகொள்ள வேண்டும். சீர்திருத்தக் கமிட்டிக்கு மெம்பர்களை நியமிக்கும் போது காந்திஜியை கலந்துகொள்ள செய்ய வேண்டும்.

(7) எல்லா சத்யாக்ரஹ கைதிகளையும் உடனே விடுதலை செய்துவிட வேண்டும். வசூலிக்கப்பட்ட அபராதப் பணங்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். எல்லா தடை உத்திரவுகளும் ரத்து செய்யப்பட வேண்டும்.

இதற்கு அடுத்த நாள் (1939 ஹூ மார்ச் 3-ந் தேதி) பகல் 1-30 மணிக்கு தாகூரிடமிருந்து வந்த பதிலில்,

"சீர்திருத்தக் கமிட்டி அமைப்பு சம்பந்தமாக உங்கள் கடிதத்தில் காணப்படும் யோசனைகள் டிசம்பர் 26-ந் தேதியன்று வெளியான முதல் அறிக்கைக்கு ஒத்ததாகயில்லை. ஆகையால் உங்கள் யோசனையை நான் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை" என்றிருந்தது.

இதைப் பார்த்த காந்திஜி "இக்கடிதம் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுகிற மாதிரியல்லவா இருக்கிறது" என்றார். தாகூரின் பதில் பகல் 12 மணிக்கே எதிர்பார்க்கப் பட்டது. அந்த குறிப்பிட்ட நேரத்தில் பதில் வராததால், மன்னரின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக மகாத்மாஜி 1939-ஹூ மார்ச்-ல் 3வ மத்தியானம் உபவாசத்தை ஆரம்பித்தார்.

காந்திஜி தமது 70-வது வயதில் உபவாசம் ஆரம்பித்தது உலகம் பூராவையுமே கதிகலங்கச் செய்தது. ஆதிபத்திய சர்க்கார் உடனே தலையிட்டு, தாகூரை அவருடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறுச் செய்து, அதன் மூலம் மகாத்மாவின் உயிரைக் காப்பாற்ற விட்டால், தாங்கள் ராஜீநாமாச் செய்வதாக காங்கிரஸ் மந்திரி சபைகள் அனைத்தும் வைசிராயிக்கு தந்தியடித்தன. சிந்து மந்திரிசபை கூட இதைப்போல ஒரு தந்தி யடித்ததென்றால், அப்பொழுது காட்டிலிருந்த கொந்தளிப்பைப்பற்றி வேறு ஏதேனும் சொல்ல வேண்டுமா?

இந்தியாவிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களும், பிரமுகர்களும் ராஜ்கோட் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தலையீட வேண்டுமென வைசிராய்க்குத் தந்தியடித்தனர். வைசிராய்க்கும் இந்தியா மந்திரிக்கும் டெலிபோன் மூலம் சம்பாஷணை நடந்தது. இதன் விளைவாக 1939-ஐ மார்ச் 6-ந் தேதி காலை காந்திஜிக்கு வைசிராயிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதன் சாரம்:

"தாகூர் சாகிப் டிசம்பர் 26-ந் தேதி வெளியிட்ட அறிக்கை, அன்றே அவர் சர்தார் பட்டேலிடம் எழுதிக் கொடுத்த கடிதம் இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் சில சந்தேகங்கள் எழ இடமுண்டென்று நான் உணருகிறேன். அந்த அறிக்கையையும், கடிதத்தையும் இந்தியாவின் பிரதம நீதிபதியின் வியாக்கியானத்திற்கு விடுவதே சிறந்த வழி என எனக்குத் தோன்றுகிறது. உங்களை டில்லியில் சந்தித்துப் பேச விரும்புகிறேன்."

சத்தியத்தை நிலைநாட்டுவதற்கே மகாத்மா உபவாசம் ஆரம்பித்ததால், நியாயம் யார் பக்கம் இருக்கும் என்பதில் அவருக்கு கொஞ்சம்கூட சந்தேகமில்லை. வைசிராயின் யோசனைக்கு சம்மதித்து மார்ச் மாதம் 7-ந் தேதி பிற்பகல் உபவாசத்தை நிறுத்தினர்.

தாகூர் சாகிப் வாக்குறுதியை மீறி விட்டாரா? 1938 டிசம்பர் மாதம் 26-ந் தேதி வெளியான அறிக்கைப்படி சீர்திருத்தக் கமிட்டி எப்படி அமைக்கப்பட வேண்டும்? என்ற இரு பிரச்னைகளும் பிரதம நீதிபதி மாரிஸ் குவயரின் தீர்ப்புக்கு விடப்பட்டது.

மார்ச் மாதம் 15-ந் தேதி காந்திஜி வைசிராயைச் சந்தித்தார். இதற்குப் பின் 3, 4 தடவைகளும் சந்தித்து, சமஸ்தான பிரச்னைகள்பற்றி நீண்ட நேரம் பேசினர்.

ராஜ்கோட் தர்பார் சார்பாக வீரவல்லாவும், பிரஜைகளின் சார்பாக சர்தார் பட்டேலும் பிரதம நீதிபதி முன் ஆஜராகி, சாக்ஷியம் கொடுத்தனர்.

குவயர் தீர்ப்பு

"சீர்திருத்தக் கமிட்டியின் பத்து மெம்பர்களில் ஏழு பேர்களை நியமிப்பதில் சர்தார் பட்டேலின் வார்த்தையே முடிவானது; தாகூர் சாகிப்பின் வார்த்தை முடிவானதல்ல. தாகூர் சாகிப் இந்த 10 பேர்களில் ஒருவரை கமிட்டியின் தலைவராக நியமிக்க வேண்டுமேயொழிய 11-வது நபர் ஒருவரை தலைவராக நியமிக்கக்கூடாது. கமிட்டியில் தலைவர் உள்பட 10 பேர்தான் இருக்க வேண்டும்",

என்று சர். மாரிஸ் குவயர் தீர்ப்புக் கூறினர்.

மகாத்மா ராஜ்கோட் திரும்பியதும், ஜமீன்தார்களும், முஸ்லிம்களும் தங்களுக்கும் சீர்திருத்தக் கமிட்டியில் பிரதிநிதித்துவம் வேண்டுமென கேட்டனர். மகாத்மா இதற்கு சம்மதித்தார். ஆனால், தாகூர் சம்மதிக்கவில்லை. காந்திஜி, கமிட்டி மெம்பர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி (பரிஷத்துக்கு அப்பொழுதும் மெஜாரிட்டி இருக்க வேண்டும்) ஜமீன்தார்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவமளிக்கலாமென யோசனை கூறினர். இதற்கு தாகூர் சம்மதிக்கவில்லை. பரிஷத், கமிட்டியில் மைனரிட்டியாகவே இருக்க வேண்டுமென தாகூர் விரும்பினர். இதற்கு காந்திஜி எப்படி சம்மதிக்க முடியும்? சர்தாரால் சிபார்சு செய்யப்பட்ட கீழ்க்காணும் ஏழு பேர்களை சீர்திருத்தக் கமிட்டி மெம்பர்களாக நியமிக்குமாறு காந்திஜி, தாகூருக்கு எழுதினர்:

(1) பாபட்லால் புருஷோத்தம தாஸ் ஆனந்தா, பி. ஏ., எல். எல். பி.

(2) பாபட்லால் தான்ஜிபாய் மாளவியா.

(3) ஜம்னதாஸ் குஷால் சந்த் காந்தி.

(4) பாச்சர்லாதா வாதர்.

(5) விரஜ்லால் மாயசங்கர் சுக்லா.

(6) ஜதாலால் ஹரிகிருஷ்ண ஜோஷி.

(7) கஜனன் பவானி சங்கர் ஜோஷி எம்.ஏ., எல். எல். பி.

சீர்திருத்தக் கமிட்டியில் ஹரிஜனப் பிரதிநிதியும், முஸ்லிம் பிரதிநிதியும் இல்லையென அம்பேத்காரும், ஜின்னாவும் கூச்சல் போட்டனர். ஜின்னா, தாகூர் சாகிப்பின் வக்கீலாக இருந்து கொண்டு, தாகூருக்கு தாளம் போடுவதற்காக முஸ்லிம்களை இளப்பி விட்டார்.

காங்கிரசை எதிர்க்க வேண்டுமென்பதே இந்த இருவர்களின் விருப்பமாகையால், இவர்கள் தாகூரிடம் தங்கள் கவனத்தை செலுத்தாமல், காந்திஜியின் மீது பாய்ந்தார்கள்.

காந்திஜி பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்தபோது, தாகூர் சாகிப்பின் சகோதரன் பிரதுமன் சிங்கும், தாகூர் சாகிப்பால் முன்பு சீர்திருத்தக் கமிட்டியில் நியமிக்கப்பட்ட (சர்தார் ஜாப்தாவில் இல்லாத) மூன்று மெம்பர்களும், ஜமீன்தார்களும் 500 காலாடிகளுடன் காந்திஜியை சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். காந்திஜி பிரார்த்தனை செய்ய முடியாமல் வெளிக் கிளம்பினர். கும்பலும் அவரை சூழ்ந்து வந்தது. இவர்கள் ரஸ்தாவில் நடந்ததால் இளம் பிய புழுதி காந்திஜியின் கண்களில் விழுந்தது. அவர் பார்க்கக்கூட முடியவில்லை. ஒருவர் ஒரு டம்ளர் ஜலம்

கொண்டு வந்ததும், காந்திஜி அந்த ஜலத்தால் கண்களை துடைத்துக்கொண்ட பின்னர்தான், முன்னேற முடிந்தது.

காலிகள், கூலிகளின் எதிர்ப்பு ஒரு புறமிருக்க, வீர வல்லாவின் தூர்ப்போதனையின் பேரில் தாகூர் சாகிப் மீண்டும் முட்டுக்கட்டை போட்டார். சர்தார் பட்டேல் காந்திஜியின் மூலம் அனுப்பிய 7 பெயர்களில் ஸ்ரீ. பாச்சர் வாலா வாதர் ஒருவர்தான் ராஜ்கோட் சமஸ்தான பிரஜை என்று அறிவித்தார். "மற்ற 6 பேர்கள் ராஜ்கோட் பிரஜைகளல்ல. ஆகவே அக்கமிட்டியில் அங்கம் வகிக்க அவர்களுக்கு யோக்கியதாம்சம் இருக்கிறது என்பதற்கு காரணங்களை எனக்கு விவரமாகத் தெரிவிக்கவும்" என்று காந்திஜிக்கு ஒரு கடிதத்தையும் எழுதினர்.

இதே தாகூர் சாகிப் முதல் தடவையில் இந்த 6 பேர்களில் பாபட்லால் புருஷோத்தமதாஸ் ஆனந்தா, பாபட்லால் தான்ஜிபாள் மாளவியா இருவரையும் சமஸ்தானப் பிரஜைகளைக் கருதி, ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

அந்த 6 பேர்கள் சமஸ்தான பிரஜைகள்தான் என்பதற்கு காந்திஜியும் அத்தாட்சிகளை சேகரித்து அனுப்பினர். இதற்கும் பலன் கிடைக்கவில்லை. உடனே காந்திஜி, ரெளிடெண்டைச் சந்தித்து, ஒரு புது யோசனை கூறினர். டிசம்பர் மாத 26-ந் தேதி உத்தரவுப்படி தாகூரே முழு கமிட்டியை நியமிக்கலாம். அக்கமிட்டி தனது ரிப்போர்ட்டை பரிஷத்திடம் காண்பிக்க வேண்டும். ரிப்போர்ட், 26-ந் தேதி அறிக்கையை நிறைவேற்றி வைக்கவில்லையென பரிஷத் கருதினால், பரிஷத் தனது அபிப்பிராயத்தை ஒரு தனி ரிப்போர்ட் மூலம் தெரிவிக்க வேண்டும். இரு ரிப்போர்ட்டுகளும் பிரதம நீதிபதியின் தீர்ப்புக்கு அனுப்பப்பட வேண்

டும். இதுதான் மகாத்மாவின் யோசனை. இதை டெலி டெண்ட், வீரவல்லா மூலம் தாகூருக்கு அனுப்பினர். ஆனால் தாகூர் இதற்கும் சம்மதிக்க மறுத்து விட்டார். எனவே காந்திஜி மனமுடைந்து, ராஜ்கோட்டை விட்டுப் புறப்பட்டார். போகும்போது அவர்,

"நான் தோல்வியடைந்தேன். நீர் ஜெயம் பெறுவீராக. சாத்தியமானவரையில் அதிகமாகக் கொடுத்து ஜனங்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தும். இப்பொழுது நான் நம்பிக்கை இழந்து விட்டேன். அந்த நம்பிக்கை புத்துயிர் பெறுமாறு எனக்கு தந்தியடியும்",

என்று வீரவல்லாவிடம் கூறினர்.

காந்திஜி, ஒரு அறிக்கையில், இதுவரை தனக்கு எங்கும் ஏற்படாத ஏமாற்றம் ராஜ்கோட்டில் நிகழ்ந்ததென குறிப்பிட்டார். "நான் வெறுங்கையுடன், தேகம் நலிந்தும், நம்பிக்கையை தகனம் செய்து விட்டும் புறப்படுகிறேன். சித்திரவதை செய்யக்கூடிய தன்மை வாய்ந்த சத்தியவார் அரசியல் என் பொறுமையையும் புண்படுத்தத் தக்க விதத்தில் சோதித்து விட்டது" என்றார்.

காந்திஜி, நிர்ப்பந்தத்தால் தாகூரை பணிய வைத்திருக்க முடியும். ஆனால், அது அஹிம்சா தர்மத்திற்கு ஏற்றதல்லவென்று, அந்த வழியைப் பின்பற்ற அவர் விரும்பவில்லை. இது வீரவல்லாவுக்கு மகிழ்ச்சி யளித்தது.

மகாத்மா மே மாத மத்தியில் ராஜ்கோட்டுக்குத் திரும்பினர். உடனே வீரவல்லாவும் காந்திஜியை சந்தித்து, ராஜ்கோட் மன்னரிடம் நம்பிக்கை வைத்து ஜனங்களை திருப்தி செய்யும் பொறுப்பை அவரிடம் விட்டு விடுமாறு கேட்டார்.

குவயர் தீர்ப்பு தியாகம்

காந்திஜி 1938ஆம் மே மாதம் 17-ந் தேதி வெளியிட்ட ஒரு அறிக்கை இந்தியாவை திடுக்கிடச் செய்தது. குவயர் தீர்ப்பினால் கிடைத்துள்ள எல்லா பலன்களையும் விட்டுக் கொடுப்பதாகக் கூறினார்! அஹிம்ஸா முறைப்படி தான் உபவாசம் செய்யவில்லை யென்றும் சொன்னார். அந்த அறிக்கையில் அவர் கூறியதாவது :

"சென்ற மாதம் நான் கல்கத்தாவுக்குப் புறப்பட்டபோது என்னுடைய அஹிம்ஸா சத்யாக்ரஹ சாஸ்திரத்துக்கு, ராஜ்கோட் ஒரு ஆராய்ச்சிக்கூடமாக விளங்கிற்றென்று சொன்னேன். இப்போது நான் செய்திருக்கும் முடிவு அந்த உண்மையை மேற் கொண்டு ஊர்ஜிதம் செய்வதாகும். சகபாடிகளுடன் நீண்ட விவாதம் நடத்திய பிறகு, சர். மாரிஸ் குவயரின் தீர்ப்பினால் கிடைத்துள்ள எல்லா பலன்களையும் விட்டுக் கொடுத்து விடுவ தென்று இன்று தீர்மானித்தேன்.

என்னுடைய தவறை நான் உணருகிறேன். இந்த உப வாசத்தைப்போல், வேறெந்த உபவாசமும் வெற்றி பெறவில்லை என்று ராஜ்கோட் உபவாசம் முடிந்தவுடன் நான் சொன்னேன். அதில் **ஹிம்ஸையின்** தன்மை இருந்ததென்பது இப்போது எனக் குத் தெரிகிறது. தாகூர் சாகிப் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு ஆதிபத்ய சர்க்கார் உடனே தலையிட வேண்டுமென்று நான் உபவாசம் ஆரம்பித்தேன். மனதை மாற்றுதல், அல்லது அஹிம்ஸைக்கு இது வழியல்ல. இது **ஹிம்ஸை**, அல்லது பலாத்கார வழி. என்னுடைய உபவாசம் பரி சுத்தமானதா யிருந்திருக்க வேண்டுமானால், தாகூர் சாகிபிடம் மாத்திரம்தான் நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

தாகூர் சாகிப்பையும், அவருக்கு ஆலோசனை கூறுபவரை யும், பிரதம நீதிபதியின் தீர்ப்பு என்ற சுமையிலிருந்து விடுவித்து

விட்டேன். ஆகவே, ராஜ்கோட் மக்களின் நம்பிக்கைகளைப் பூர்த்தி செய்தும், சந்தேகங்களைப் போக்கியும் அவர்களைத் திருப்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.''

இந்த அறிக்கை வெளிவந்த இரண்டு தினங்களில் ராஜ்கோட் மன்னர், தான் பிறப்பித்திருந்த எல்லா தடையுத்தரவுகளையும் வாபஸ் செய்தார். சட்ட மறுப்பின் போது விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும், பறிமுதல் செய்த சொத்துக்களையும் திருப்பித் தந்து விடுமாறு உத்தரவிட்டார்

சமஸ்தான பிரஜைகள் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் வரை, சகல பிரஜா உரிமைகளையும் அனுபவிக்கலாமென்றும் கூறினார்.

இதையெல்லாம் அறிவிக்கும் பிரகடனம் வெளிவந்த தினத்தன்றே நடந்த தர்பார் கூட்டத்திற்கு காந்திஜியும், அன்னை கஸ்தூரி பாயும் சென்றிருந்தார்கள். இருவரும் தாகூர் சாகிப்பின் பக்கத்தில் அமர்ந்தனர்.

இந்த தர்பாரில்தான் சீர்திருத்தக் கமிட்டி நியமனமும் அறிவிக்கப்பட்டது.

இந்த கமிட்டிக்கு தர்பார் வீரவல்லா தலைவர். மெம்பர்கள்: ஸ்ரீமான்கள். ஜம்னு சங்கர் மொரார்ஜி பாண்டியா, தௌலத்ராய் வக்கில், ஜாதேஜ் ஜீவன் சிங், காளிதாஸ் மோத்திசந்த் பரேக், ஹாஜிவலி முகம்மது, மோஹன்லால் டாங்க், ஹிப்துலால் அப்துல் அலி, லக்ஷ்மீசந்த் தோஷி, கோகுலதாஸ் தயாபாய்.

காந்திஜி, பிரஜா ஊழியர்களை, தாகூர் சாகிப்புடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டு ராஜ்கோட்டை விட்டுப் புறப்பட்டார்.

உதவாக்கரை சீர்திருத்தம்

தாகூர் சாகிப் நியமித்த சீர்திருத்தக் கமிட்டியின் ரிப்போர்ட் மீது 1939-ஐல நவம்பர் மாதம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி தாகூர் சாகிப் தமது பிரஜைகளுக்கு அதுவரை இருந்த பல உரிமைகளையும் பறித்து விட்டார். சீர்திருத்தங்கள் முற்போக்கானதாய் இருப்பதற்கு பதிலாக பிற்போக்கானதாகவே யிருந்தது. உதாரணமாக, இதுவரை சட்ட சபைக்கு சர்வஜன வோட் உரிமைப் பிரகாரம் தேர்தல் நடந்தது.

புதிய சீர்திருத்தம், சொத்து யோக்யதாம்சங்கள் உள்ள வர்களுக்கும், சமஸ்தானத்தில் ஒரு குறிப்பிட்ட வருஷங் களுக்கு வசித்திருக்கிறவர்களுக்கும் மாத்திரம்தான் வோட்டுரிமை யளிக்கிறது.

சட்ட சபைக்கு, இதுவரை, தேர்ந்தெடுக்கப்பட்ட சபா நாயகமே இருந்தார். சீர்திருத்தம், திவான சட்ட சபை யின் நிரந்தர சபாநாயகராக்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் மாத்திரம் இருந்த சட்ட சபையில் இனி 40 தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும், 20 நியமன மெம்பர் களும் இருப்பார்கள். அந்த 40 ஸ்தானங்களில் சில ஸ்தா னங்கள் மைனரிட்டிகளுக்கு ஒதுக்கப்படும். எனவே இந்த சீர்திருத்தத்தின்படி, சட்ட சபையில் பொது ஜனங் களின் உண்மையான பிரதிநிதிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே யிருக்கும். இப்பொழுதுள்ள சட்ட சபைக்கு உள்ள அதிகாரம் கூட புதிய சட்ட சபைக்குக் கிடையாது. சமஸ்தான வருமானத்தில் எவ்வளவு விகிதத்தை ராஜா தனது சொந்தச் செலவுக்காக எடுத்துக்கொள்ளுவார் என் பதுபற்றி சீர்திருத்தத்தில் ஒன்றுமே யில்லை.

"பிரஜைகளுக்கு எவ்வளவு ஜாஸ்தியாக அதிகாரங்கள் கொடுக்க முடியுமோ அவ்வளவைக் கொடுப்பேன்" என்று தாகூர் சாகிப், 1938-வது டிஸம்பர் மீ 26-ந் தேதி வெளியிட்ட அறிக்கையில் வாக்குறுதி அளித்து, எவ்வளவு குறைவாக அதிகாரங்களே கொடுக்க முடியுமோ அவ்வளவைச் சீர்திருத்தத்தின் மூலம் பிரஜைகளுக்கு அளித்தார். "சுயமரியாதையுள்ள ராஜ்கோட் பிரஜைகள் இந்த சீர்திருத்தத்தை பகிஷ்கரிக்க வேண்டும்" என்று காந்திஜி அபிப்பிராயம் கூறினர்.

மகாத்மா காந்தியே தலையிட்டு உபவாசம் இருந்த பின் கூட இயக்கம் தோல்வியுற்றது வருந்தத்தக்கதுதான். ஆனல் காந்திஜி எதற்காக குவயர் தீர்ப்பை விட்டுக் கொடுத்தார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர் விட்டுக் கொடுத்திராவிட்டால் பெரிய வகுப்புக் கலகம் அங்கே உண்டாகி, ஒன்றுமறியாத நூற்றுக்கணக்கான பேர்வழிகள் மாண்டுபோயிருப்பார்கள். தேசிய இயக்கம் வகுப்புவாதப் பாதையில் திருப்பப்பட்டிருக்கும். இதற்காக வகுப்புவாத சுயநலத் தலைவர்களும், ஜமீன்தார்களும் அங்கு இராப்பகலாக உழைத்தனர். காந்திஜி பின்வாங்கியதால், அந்த சுயநலமிகளின் சூழ்ச்சி பலிக்காமற் போயிற்று. மகாத்மா எந்த தோல்வியையும், வெற்றிப்பாதையில் தேசம் ஒரு அடி முன்னேற உபயோகிக்கும் சாமர்த்தியமும் சக்தியும் வாய்ந்தவர். எனவே ராஜ்கோட் தோல்வியை பிரமாதமாகக் கருதுவதற்கில்லை.

மேலும் அங்கு நடந்த போரின் விளைவாக சுதேச மன்னர்களே பிரிட்டிஷ் சர்க்கார் எப்படி ஆட்டிவைக்கிற தென்பது ஜனங்களுக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. அந்நிய ஆட்சி இந்தியாவிலிருந்து போய்விட்டால் 'சமஸ்தான

பிரச்னை' என்று சொல்லப்படும் பிரச்னை தானாக தீர்ந்து விடும் என்பதும் புலனாயிற்று.

ஜெயப்பூர்

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 15,590 சதுர மைல்கள்; ஜனத்தொகை 36,31,775; வருமானம் ரூ 1,28,42,000. ஜெயப்பூரில் பல வருஷங்களாகவே மோசமான நிர்வாகம் இருந்து வருகிறது. 100 வருஷங்களுக்கு முன் ஆண்ட மகாராஜா ஜகத் சிங், கேவலமான வாழ்க்கை நடத்தி வந்தார். ஒரு முஸ்லிம் நாட்டியப் பெண்ணினிடம் சரணாகதியடைந்தார். சமஸ்தானம் இன்ஸால்வென்டாகி விடும்போலிருந்தது. அந்த முஸ்லிம் பெண் சொன்னபடி யெல்லாம் மகாராஜா கூத்தாடினார். தன்னுடைய ராஜ்யத்திலேயே பாதியையும், தன் தகப்பனார் கஷ்டப்பட்டு சேகரித்து வைத்திருந்த அருமையான லைப்ரரியும் அவளுடைய பாதாரவிந்தத்தில் வைத்தார்.

ஜெயப்பூர்தான் மார்வாரிகளுக்கு தாயகம். இந்த சமஸ்தானத்தில் 1931-ம் வருஷம் பிரஜா மண்டல் ஆரம்பிக்கப் பட்டது. 1936-ல் மண்டலின் சட்டதிட்டம் திருத்தியமைக்கப்பட்டது. காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பரும், ஜெயப்பூர் வாசியுமான சேத் ஜம்னலால் பஜாஜ்தான் இந்த ஸ்தாபனத்திற்குத் தலைவர். சமஸ்தான சர்க்கார், பஜாஜை வீண் வம்புக்கிழுத்தனர். சமஸ்தானத்தில் பிரஜா மண்டல் நடத்திவந்த பஞ்ச நிவாரண வேலைகளை கவனிப்பதாக ஜெயப்பூருக்கு சென்றுகொண்டிருந்த பஜாஜுக்கு, சமஸ்தான சர்க்கார் ஒரு தடையுத்தரவை பிறப்பித்தது. அதில், சேத் பஜாஜ் சமஸ்தானத்தில் நுழைந்தால் அமைதிக்கு பங்க

மேற்படுமாகையால், அவர் ஜெயப்பூர் சமஸ்தானத்தில் நுழையக்கூடா தென்றிருந்தது. பஜாஜ் காரியக் கமிட்டி மெம்பராகையால், இந்த தடையுத்தரவு காங்கிரசுக்கே ஒரு சவால் விடுவதாயிருந்தது.

அவர் உடனே தடையை மீறவில்லை. இதற்குக் காரணம் என்னவென்பதுபற்றி காந்திஜி ஒரு அறிக்கையில் குறிப்பிட்டதாவது :

" அந்த தடை யுத்தரவு ஒரு பைத்தியக்காரன் பிறப்பித்தது, என்று, தீர்க்க ஆலோசனை செய்ததின் பேரில் முடிவுக்கு வந்தேன். பைத்தியக்காரர்கள் சொல்லுவதை அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்களுக்கு மூளை கொதிப்பு தணிந்து, நிதான புத்தி வரும்வரை அவகாசம் அளிக்க வேண்டும். இங்கும் ஆங்கிலேய மந்திரிகள் ராஜாவை ஆட்டி வைக்கிறார்கள்."

வெள்ளைக்கார பிரதம மந்திரியின் மூளைக் கொதிப்பு, தணிவதற்கு பதிலாக அதிகமாகி விட்டது. 1939 ஜனவரி மாத மத்தியில் பிரஜா மண்டல் ஒரு சட்ட விரோத ஸ்தாபனமென்று, சமஸ்தான சர்க்காரால் அறிவிக்கப்பட்டது. உடனே சேத் பஜாஜ், தான் ஒருவர் தான் மண்டலின் ஏக மெம்பரென அறிவித்து, பாக்கி எல்லா மெம்பர்களையும் பொறுப்புகளிலிருந்து விடுவித்தார். பிரஜா மண்டலின் சட்ட திட்டத்தையே மாற்றி யமைக்க வேண்டுமென போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மண்டலுக்கு உத்திரவிட்டார். அவர் மண்டல் காரியதரிசிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது :

" சட்டதிட்டத்தின் (ஏ) ஷரத்தில் மூன்றுவது பாராவில் லக்ஷியத்தைப்பற்றி யிருப்பதையே குறிப்பிடுகிறேன். அந்த பாராவில், " ஜெயப்பூர் சமஸ்தான நிர்வாகத்தை

சட்டரீதியான வழிகளில், ஜனங்களுக்கு ஜவாப்தாரியாயும், மகாராஜாவின் தலைமையிலும் இருக்கும்படிச் செய்வதே பிரஜா மண்டலின் லக்ஷியம்" என்று இருக்கிறது. இதற்குப் பதிலாக கீழ்க் காண்கிற வரிகளைப் போன்றதை சேர்த்துக்கொள்ளுமாறு யோசனை கூறுகிறேன் :

"சமஸ்தான நிர்வாகத்தில் முற்போக்கான, ஜனங்களுக்கு அதிக பங்களிக்கும் சீர்திருத்தங்களைச் செய்யுமாறு அப்போதைக்கப்போது சமஸ்தான சர்க்காருக்கு சட்ட வாம்புக்குட்பட்ட வழிகளில் யோசனை கூறுவதே மண்டலின் லட்சியம்."

இந்த கடிதத்திற்கு மண்டலின் காரியதரிசி அனுப்பிய பதில் :

"எங்களுடைய இறுதியான லட்சியத்தை மாற்றிக் கொள்ள எங்களால் முடியாது. மாற்றிக்கொண்டால் எங்கள் வாழ்வுக்கு உலை வைத்துக் கொண்டவர்களாவோம்".

சேத் பஜாஜ் 1939-ஐ பிப்ரவரி மாதம் முதல் தேதி தடையை மீறி ஜெயப்பூரில் நுழைந்ததும், அவர் கைது செய்யப்பட்டு, இரவு பூராவும் மோட்டாரில் கொண்டு போகப்பட்டார். 350 மைல் மோட்டார் பிரயாணமானதும், அடுத்தநாள் காலை (2-ந் தேதி) 9-30-க்கு வடமதுரையில் விடுதலைசெய்யப்பட்டார். பஜாஜ் இத்துடன் நிற்கவில்லை. மீண்டும் அதே மாதம் 5-ந் தேதி ஜெயப்பூரில் நுழைந்தார். இந்ததடவை அதிகாரிகள் கொம்ப மூர்க்கத்தனமாக நடந்துகொண்டனர். கைது செய்வதாக பஜாஜிடம் சொல்லி, ஆனால் கைது செய்யாமல் ஏமாற்றி, இராப் பகலாக நூற்றுக்கணக்கான மைல் மோட்டார் பிரயாணம் செய்யும்படி பலவந்தப்படுத்தி, 7-ந் தேதி காலை பாரதபுரி என்ற சமஸ்தான எல்லையில் கீழே தூக்கிப் போட்டனர். இதில்

அவருக்கு படுகாய மேற்பட்டது. "இது வெள்ளைக்கார அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனம்" என்று காந்திஜி கண்டித்தார்.

ஜெயப்பூர் திவான் சர். பியூஷாம் செயின்ட் ஜான் யோக்கியப் பொறுப்பற்ற பேர்வழி என்பதை, அவர், சிக்கார் ராஜா ஆலோசனை கூறுபவரான பாரிஸ்டர் சுத்காருடன் பேசிக்கொண்டிருக்கையில் குறிப்பிட்டதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். திவான் சொன்னதில் சில பகுதிகள் மாத்திரம் கீழே தரப்படுகிறது :

"பஜாஜ் சமாதானப் பிரியர்தான். ஆனால் அவரும், அவருடைய மனிதர்களும் பஞ்சப் பிரதேசங்களுக்கு வந்தால் பாமர ஜனங்களுடன் தொடர்பு ஏற்பட்டு விடும். அரசியல் காரணங்களுக்காகத்தான் நான் இதை விரும்பவில்லை.

"ஜெயப்பூரில் அஹிம்ஸை இயக்கத்திற்கு 'மெஷீன் கன்' மூலம் பதிலளிக்கப்போகிறேன்.

"பலாத்காரத்திற்கும் அஹிம்ஸைக்கும் யாதொரு வித்யாசமுமில்லை. அஹிம்ஸையை சமாளிக்க பலாத்காரத்தை உபயோகிப்பதில் ஒன்றும் தவறு இல்லை."

திவானின் மனப்பான்மை இப்படி இருந்தால், சமஸ்தானத்தில் எப்படி அமைதி நிலவ முடியும்?

பிரஜா உரிமைகளுக்காகவே பஜாஜ் இரு முறை தடையுத்தரவுகளை மீறினார். இவர் இரண்டு தடவையும் கைது செய்யப்பட்டு கேவலமாக நடத்தப்பட்டதை இந்தியா பூராவும் கண்டித்தது.

பஜாஜ் மூன்றாவது முறையாக பிப்ரவரி மாதம் (1939ம் வருஷம்) 12-ந் தேதி தடையுத்தரவை மீறி, ஜெயப்பூரில் நுழைந்தார். இந்த தடவை கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்படாமலிருந்தார்.

பஜாஜ் கைதியானதும், சமஸ்தானம் பூராவும் சட்ட மறுப்பு ஆரம்பமாயிற்று. பலர் கைது செய்யப்பட்டனர். இந்தியாவில் மார்வாரிகள் உள்ள ஊர்களிலிருந்தெல்லாம் தொண்டர் படைகள் ஜெயப்பூர் சென்று போரில் கலந்து கொண்டன.

1939-ஆம் மார்ச் மாதம் 19-ந் தேதி காந்திஜி புது டில்லியிலிருந்து ஜெயப்பூர் பிரஜா மண்டல் தலைவர்களுக்கு கூறிய யோசனையின்படி, பொறுப்பாட்சியளிக்க சமஸ்தானாதிபதிக்கு சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்பதற்காக சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது. ஆனால் அதற்குப் பின் பொறுப்பாட்சியளிக்க தர்பார் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பஜாஜ் 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் விடுவிக்கப்பட்டதும், அவரும், சமஸ்தான அதிகாரிகளும் சமரசப் பேச்சை நடத்த ஆரம்பித்தனர்.

பஜாஜின் முயற்சியால் அங்கு பொதுநிலைமையில் சற்று அபிவிருத்தி ஏற்பட்டது. ஆனால் இது நீடித்திருக்கவில்லை. மகாயுத்தம் ஆரம்பமானதும், தர்பார், ஜனங்கள் மீது மீண்டும் போர் தொடுக்க ஆரம்பித்தது. பொதுஜன இயக்கத்தில் வக்கீல்கள் சேர்வதைத் தடுக்கவும், ஜனங்களுக்கு உண்மையாக சேவை புரிகிற பிரஜா மண்டலை ஒடுக்கவும் சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறார்கள். திருவாங்கூரில் சமஸ்தான காங்கிரஸுக்கு போட்டியாக தேசிய காங்கிரஸ் கிளம்பியது போல இங்கும் பிரஜா மண்டலுக்குப் போட்டியாக பிரஜா பரிஷத் என்ற ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆரம்பத்தில் பிரஜாமண்டலுக்கு விதித்த ஆனால் மண்டலால் நிராகரிக்கப்பட்ட நிபந்தனைகளெல்லாம் இந்த புதிய ஸ்தாபனத்தின் லட்சியங்களில்

சேர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, இந்த புதிய சங்கம், பொறுப்பாட்சி வேண்டுமென்று கேட்கவில்லை. பிரஜைகளின் குறைகளை ராஜாவிடம் அப்போதைக்கப்போது தெரிவித்து, அவற்றை சட்ட பூர்வமான வழிகளில் பெறுவதே சங்கத்தின் லக்ஷியம் என்று கூறப்படுகிறது. எனவே, குறைகள் தீர்க்கப்படாவிட்டால் இச் சங்கம் சட்டமறுப்பிலோ அல்லது வேறு எவ்வித 'சட்ட விரோதமான' நடவடிக்கையிலோ இறங்காது. சுருங்கச் சொல்லுமிடத்து, இச் சங்கம், சர்க்கார் போட்ட கோட்டை தாண்டாது.

1940 வருஷம் பிப்ரவரி மாதக் கடைசியில் பிரஜா மண்டலின் காரியாலத்தையும், இன்னம் பல இடங்களையும் சோதனைபோட்டு போலீஸார் கெடுபிடி செய்தனர். சமஸ்தான அதிகாரிகள், ஏற்கனவே யிருந்த நெருக்கடியை இன்னம் இளப்பிவிட ஆரம்பித்ததால், சேத் ஜம்னலால் பஜாஜ், பிரஜா மண்டலின் சட்ட திட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார். இவர் மாத்திரம்தான் இப்பொழுது பிரஜா மண்டலில் இருக்கிறார். பிரஜா உரிமைக்காக இவர் சட்ட மறுப்பு ஆரம்பித்தபோதும் இப்படித்தான் மண்டலின் சட்ட திட்டத்தை நிறுத்தி வைத்தார். பூனாவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கையில், சிகிச்சையை திடீரென நிறுத்தி பஜாஜ் ஜெயப்பூருக்குப் பிரயாணமானதால், நெருக்கடி எவ்வளவு தூரம் முற்றியிருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளலாம்.

ஒரிஸ்ஸா சமஸ்தானங்கள்

ஒரிஸ்ஸாவில் மொத்தம் 26 சமஸ்தானங்கள் இருக்கின்றன. இவற்றின் விஸ்தீரணம், இயற்கை ஒரிஸ்ஸாவில் 46% ஆகும்; ஜனத்தொகை 33% ஆகும்.

நீலகிரி

இந்த சமஸ்தானத்தில் 1938-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரஜா மண்டல் அமைக்கப்பட்டது. உடனே பிரஜைகள் பிரஜா மண்டல் மூலம் அனுப்பிய கோரிக்கைகளுக்கு தர்பார் இணங்காததால், சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. சத்தியாக்கிரஹிகளுக்கு கடுமையான அபராதங்கள் விதிக்கப்பட்டன. ஒருவருடைய அபராதத் தொகையை வசூல் செய்வதற்காக சொத்துக்களை ஜப்தி செய்ய அதிகாரிகள் மச்சுவப்பட்டணம் என்ற ஒரு கிராமத்திற்குச் சென்றனர். இதைத் தெரிந்துகொண்ட 7,000 பிரஜைகள் (சனதனிகள், ஹரிஜனங்கள், பூர்வ குடிகள் முதலியோர்) அந்த கிராமம் சென்று, சொத்துக்கள் ஜப்தியாவதை சாத்வீகமாக தடுத்தனர். அப்பொழுது கடுமையாக மழை பெய்ததையும் அவர்கள் பொருட்படுத்தாமல், திறந்த வெளியில் மணிக் கணக்கில் நின்றிருந்தனர். இந்த நெருக்கடியைப்பற்றி தகவல் கிடைத்ததும், அரசியல் ஏஜெண்ட் ஸ்தலத்திற்கு வந்தார். பிரஜைகள் அனைவரும் தங்களுடைய குறைகளை பிரஜா மண்டல் மூலம் ராஜாவிடம் சமர்ப்பிக்க விரும்பினர். இந்த யோசனைக்கு அந்த 7,000 பேர்களும் சம்மதிக்கிறார்களா? என்று கேட்கப்பட்டது. உடனே அத்தனை பேர்களும் கைகளைத் தூக்கி "ஆமாம்" என்று ஆரவாரம் செய்தனர்.

இதற்குப் பின் காங்கிரஸ் கார்யக் கமிட்டி மெம்பர் ஸ்ரீ. ஹரிகிருஷ்ண மஹதாப் மூலம் தர்பாருக்கும், பிரஜா மண்டலுக்கும் சமரசப் பேச்சு நடந்தது. இதன் விளைவாக பொறுப்பாட்சி சர்க்கார் கோரிக்கையைத் தவிர பாக்கி எல்லாவற்றிற்கும் இணங்க தர்பார் சம்மதித்தது. ஆனால் 1939-ம்

வருஷ ஆரம்பத்தில் தர்பார் திடீரென யாதொரு காரணமு மின்றி பிரஜா மண்டல் மீது தடை விதித்தது. பம்பாயில் ராஜாக்கள் கூடி, பிரஜைகளின் இயக்கத்தை ஒடுக்க முடிவு செய்ததின் எதிரொலிதான் இது என்று நம்ப வேண்டிய தாயிற்று.

தென்கனல்

இந்த சமஸ்தான சர்க்கார் பிரஜைகளை சுட்டுத்தள்ளு வதில் திருவாங்கூரை தோற்கடித்திருக்கிறது. 8,9 தடவை சுட்டிருக்கிறது. இதனால் 20 பேர்கள் மாண்டனர்.

1938-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் பிரஜா மண்டல் மீது தடை விதிக்கப்பட்டது. சமஸ்தான போலீஸ், பிரஜா மண்டல் தலைவர்களை கைது செய்தது. இதனால் பிரஜைகளுக்கும் போலீசுக்கும் ஏற்பட்ட தகராறில், ஒரே நாளில் காலை 11-மணி முதல் மாலை 4 மணிக்குள் போலீஸ் மூன்று தடவை சுட்டது. இதில் நால்வர் மாண்டனர்.

பிரஜைகள் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. பொறுப் பாட்சி சர்க்காரை அளித்து, நிர்ப்பந்த ஊழிய முறையை ரத்துச் செய்தால்தான் சத்யாக்ரகம் நிற்குமென அறிவித் தார்கள்.

தடையை மீறி பிரஜா மண்டல் நடத்திய பொதுக் கூட்டங்களுக்கு 20,000 ஜனங்களுக்குக் குறையா மல் வந்து கொண்டிருந்தனர். ஒரு கூட்டத்தில் 65 வய தான ஒரு கிழவர் (காங்கிரஸ் பிரசாரம் எப்படியிருக்கும் என்பதை அறியாத பேர்வழி) பின்வருமாறு பேசினார்:

"நாம் உழுகிறோம், பயிரிடுகிறோம். மாதக்கணக்கில் சேற் றிலும் ஜலத்திலும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறோம். எதற்காக? கானே பதில் சொல்லுகிறேன். காட்டிலிருந்து வரும் கரடிகளும்,

மான்களும், யானைகளும் நமது பயிர்களைத் தின்று விட்டுப் போவதற்காக! இந்த மிருகங்களை சுடக்கூட நமக்கு உரிமை இடையாது. சுட்டு விட்டால், ராஜாவும், அவருடைய சிநேகிதர்களும் வேட்டையாட முடியாதல்லவா? பாக்கி உள்ளதை நாம் அறுவடை செய்ததும், 26 வரிகள் கட்ட வேண்டியிருக்கிறது. போதாக் குறைக்கு வரி வசூலிப்பவர்களையும் 'திருப்தி' செய்ய வேண்டியிருக்கிறது. நீங்களே பாருங்கள், நான் தோலும் எலும்புமாகவே இருக்கிறேன். நான் சொல்லுவதை நம்புங்கள்; வீட்டிலுள்ள என் கிழவி கட்டிக்கொள்ளுவதற்கு சரியான துணி கூட இல்லை. பஞ்சமோ வருகிறது. நம்மை சர்க்கார் சிறையில் போட்டால் தினசரி இரண்டு வேளை சாப்பாடு நிச்சயம். வெளியிலிருந்தால் பட்டினியாகத்தானே இருக்க வேண்டும். இந்த தடியடிகளையோ, துப்பாக்கிப் பிரயோகங்களையோ கண்டு நாம் பயப்படவில்லை. நமது கடமையைச் செய்து, நமது உழைப்பின் பலன் நமக்குக் கிடைக்கும் வரை போரை நடத்துவோமாக."

பிரஜா மண்டல் காரியாலயத்திற்கு எதிரில் இருந்த தேசீயக் கொடியைப் பாதுகாக்கக் கூடினவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடந்தது; யானைகளும், குதிரைகளும் அவிழ்த்து விடப்பட்டன. மோட்டார்கள்கூட அந்தக் கும்பலைக் கலைக்க உபயோகிக்கப்பட்டன.

பிரிட்டிஷ் துருப்புகளும் வந்தன. உடனே அடக்கு முறை கடுமையாயிற்று. கிராமங்களில் கொள்ளைகள் கணக்கு வழக்கின்றி நடந்தன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இந்த வேலைகளின்போது, இதைச் செய்தவர்களுடன் அரசியல் ஏஜெண்டும் சென்றிருந்ததாகச் சொல்லப்பட்டது. அநேக ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். ஸ்ரீ. ஹரி கிருஷ்ண மஹதாபை தர்பார் அழைத்து, சமரசம் செய்து வைக்குமாறு கேட்டது. ஆனால் தர்பார், பிரஜா மண்ட

னின் கோரிக்கைகளுக்கு மாத்திரம் இணங்கத் தயாராக மில்லை. எனவே ஸ்ரீ. மஹதாபின் முயற்சிகளுக்கு பல னில்லாமற் போற்று.

தால்சார்

1938-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 16-ந் தேதி தால்சார் பிரஜா மண்டல் மீதும் தடை விதிக்கப்பட்டது. 8 மாத காலத்திற்கு சத்யாக்ரஹத்தை நடத்தினர். பிரஜைகள் எவ்வளவோ சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள். கைது செய்யப்பட்ட சத்யாக்ரஹிகள் மீது ஓரியா எழுத்துக்களில் 'நி' 'ஹ' (நிமாக் ஹராம்=உண்ட வீட்டிற்கு இரண் டகம் நினைக்கிறவன்) என்று போலீஸார் சூடு போட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது. அதில் ஒரு ஹரிஜன் மாண்டு போனார். அடிகளையும், சித்திரவதைகளை யும், ஸ்திரீகள் மானபங்கம் செய்யப்படுவதையும் சகிக்க முடியாமல், பிரஜைகள் டிசம்பர் மாதத்தில் (1938) சமஸ் தானத்தை விட்டு வெளியேறினர்.

இந்த சமஸ்தானத்தின் மொத்த ஜனத்தொகையே 70,000. இதில் 31,443 பேர்கள் பிரிட்டிஷ் இந்தியாவி லுள்ள அங்குலுக்குச் சென்றனர். காங்கிரஸ், ஓரிஸ்ஸா காங்கிரஸ் மந்திரி சபை, காந்தி சேவா சங்கம், அகில இந்திய கிராம கைத்தொழிற் சங்கம், மார்வாரி நிவாரண சங்கம் ஆகிய ஸ்தாபனங்கள் இந்த அகதைகளுக்கு உதவி செய் தன. தால்சாரில் சாதாரணமாக பிப்ரவரி கடைசிக்குள் ரூ. 65,000 வரி வசூலாகி விடும். ஆனால் பிரஜைகள் வரி கொடா இயக்கம் நடத்தியதால் 1939-ம் வருஷம் பிப்ரவரி மாதம் வரை ரூ. 5,000 தான், அதாவது 13ல் ஒரு பங்கு தான் வசூலாயிற்று.

1939-ம் வருஷம் மார்ச் மாதம் 21-ந் தேதி ஒரிஸ்ஸா சமஸ்தானங்களில் உதவி ஏஜெண்டான மேஜர் ஹென்னஸ்ஸிக்கும், தால்சார் சமஸ்தானப் பிரஜைகள் சார்பாக ஸ்ரீ. ஹரிகிருஷ்ண மஹதாபுக்கு மிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் விவரம்:

1. இப்போது வாரத் தொகை மீது ரூபாய்க்கு 5 அணா வீதம் வசூலிக்கப்படும் (மிஸ்லேனியஸ் செஸ்) சில்லரை செஸ் வரி 3 அணாவாகக் குறைக்கப்படும், அடுத்த நவம்பரில் வரி நிர்ணயம் நடக்கும். அப்போது வாரமும் செஸ் வரியும் சேர்ந்து, பக்கத்திலுள்ள அங்குல் ஜில்லாவில் இதே போன்ற நிலங்கள் மீது வசூலிக்கப்படும் வாரத்துக்கும் செஸ் வரிக்கும் அதிகமாக இராதவாறு நிர்ணயிக்கப்படும்.

2. தோல், கொம்பு, கஞ்சா, அபின், பங்கி மதுபான வகைகள் இவற்றைத் தவிர மற்றெல்லாப் பொருளிலும் (வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களில்) ஏகபோக உரிமைகள் ரத்து செய்யப்படும்.

3. பஞ்சாயத்துகளோ, மத சம்பந்தமான கோர்ட்டுகளோ விதிக்கும் அபராதங்களை வசூலிக்க சர்க்காரின் நிர்வாக அதிகாரம் பிரயோகிக்கப்பட மாட்டாது. சர்க்கார் அதிகாரிகள் மூலம் இந்த அபராதங்கள் வசூலிக்கப்பட மாட்டா.

4. பொது உபயோகமான காரியங்களைத் தவிர வேறு எல்லாவற்றிற்கும் கட்டாய வேலை முறை ரத்தாகி விடும். பொதுஜன உபயோகமான காரியங்களுக்கு கட்டாய வேலை முறை உபயோகிக்கப்பட்டால், கட்டாய வேலை செய்யும் தொழிலாளருக்கு சாதாரணமாக தொழிலாளருக்கு எப்போதும் கொடுப்பது போன்ற சம்பளங்கள் கொடுக்கப்படும்.

5. கைத்தொழில் வகுப்பினர் மீது—அதாவது தச்சு வேலை, இரும்பு வேலை, முதலியன செய்யும் ஜாதியார் மீது—போடப்படும் தலை வரி ரத்துச் செய்யப்படும்.

6. நாட்டை விட்டு வெளியேறினவர்கள் திரும்பின பிறகு அவர்கள் மீது அவர்கள் வெளியேறினதற்காக யாதொரு தண்டனையும் விதிக்கப்பட மாட்டாது; அவர்கள் மீது பழி வாங்கப்பட மாட்டாது.

7. ஜனங்கள், தமது பிரதிநிதிகள் மூலம் அரசியல் நிர்வாகத்தில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யும் முறையில் அரசியல் சீர்திருத்தங்கள் தயாரிக்கப்படும். அரசியல் இலாகாவின் அங்கீகாரம் பெற்றவுடன் சீர்திருத்தங்கள் அமுலுக்கு வரும்.

8. பிரசங்கங்களிலோ பொதுக்கூட்டங்களிலோ ராஜாவிடம் துவேஷம் ஏற்படும்படியோ, புரட்சிகரமாகவோ எதுவும் பேசப்படாத வரையில் பேச்சு சுதந்திரத்திலும், கூட்டம் கூடும் சுதந்திரத்திலும் சர்க்கார் தலையிட்டு இடையூறு செய்யாது.

9. ஜனங்கள் சமஸ்தானத்தில் தங்கள் சொந்த நிலத்தில் காட்டு மிருகங்களைக் கொல்ல உரிமையுண்டு. அதற்கு கட்டணமோ, அபராதமோ கிடையாது.

இவ்வொப்பந்தம் கையெழுத்துச் செய்யப்பட்டபோது, மேஜர் ஹென்னங்லியுடன் ராணுவ இரகசிய இலாகா அதிகாரி மேஜர் கிரிகரியும், ஸ்ரீ. ஹரிகிருஷ்ண மஹதாபும், லால்வேஷன் ஆர்மி (கிறிஸ்துவ ரக்ஷண்ய சேனை) யைச் சேர்ந்த அட்ஜுடன்ட் ஜூட்லமும், ஓரிஸ்ஸா மாகாண சர்க்காரின் பிரதிநிதியான ஓரிஸ்ஸா ரெவின்யூ கமிஷனரும் இருந்தனர்.

மேஜர் ஹென்னஸ்லி இவ்வொப்பந்தத்தில் கையெழுத்துச் செய்தபோது, அவ்வாறு கையெழுத்திட ராஜா அவருக்கு அதிகாரமளித்தார் என்றே கருத வேண்டும். எனவே ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டு வருவது ராஜாவின் கடமையாகும். ஆனால் அவ்வொப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை.

ஓரிஸ்ஸா மாகாண மந்திரி (இப்பொழுது மாஜி மந்திரி) ஸ்ரீ. நித்தியானந்த கனுங்கோ, கவர்னரின் மூலம் தால்சார் பிரஜைகளின் குறைகள் நீக்கப்படுமென்று, அங்கிருந்த அனைதைகளுக்கு வாக்குறுதி யளித்தார். இதன் பேரில் 30,000 அனைதைகள் 1939-ம் வருஷம் ஜூலை மாதக் கடைசியில் தங்கள் சமஸ்தானத்திற்குத் திரும்பினர்.

பூண்பூர்

இந்த சமஸ்தானம் பூரி ஜில்லாவிலிருக்கிறது. விஸ்தீரணம் 203 சதுர மைல்கள். ஜனத்தொகை 47,700. வருஷ வருமானம் ரூ. 70,000. சமஸ்தான போலீஸ் படையில் 42 பேர்கள் தான் இருக்கின்றனர்.

இதைப்போல படுமோசமான சமஸ்தானம் இந்தியாவில் வேறு எங்குமே கிடையாது. இங்கு யாராவது நல்ல உடைகளுடன் போனால் கூட 'இவன் என்ன மண்டைக் கர்வம் பிடித்தவன் போலிருக்கே' என்று அதிகாரிகள் நினைப்பதுண்டு. ஏழை குடியானவர்கள் வருஷத்திற்கு 5 மாதம் ஊதியமின்றி வேலை செய்யுமாறு தர்பாரால் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். யுவ ராஜாவின் காதுகுத்து வைபவம், கல்யாணம், சாவு, ராஜா தாயாரின் சாவு, இவைகளில் ஏதேனும் ஒன்று நடந்தால் வரியில் ரூபாய்க்கு நாலணா வீதம் பிரஜைகளிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது.

அரசியல் ஏஜெண்ட் விஜயத்தின்போது, பிரஜைகள் ஆடுகளையும், கோழிகளையும் பாதி விலைக்குத் தர வேண்டும். 50, 60 கறவைப் பசுக்களை பாலுக்காகத் தர வேண்டும். லஞ்சம் தாண்டவமாடுகிறது. அதிகாரிகளின் அட்டூழி

பத்தனத்தைப்பற்றி ஒரு பத்திரிகைக்கு எழுதிய ஒருவன் சில வருஷங்களுக்கு முன் கடுமையாக தண்டிக்கப்பட்டான். பத்திரிகைகள் சமஸ்தானத்திற்குள் வரக்கூடாது. 5 பேர்கள் ஒரு இடத்தில் கூடுவது குற்றமாகும்.

கல்யாணம் செய்துகொள்ளுகிறவரிடமிருந்து சர்க்கார் ரூ. 1-1-0 கல்யாண கட்டணமாக வாங்குகிறது. கல்யாண ஊர்வலத்திற்கு பல்லக்கை உபயோகிக்க ரூ. 15-ம், இதர வாகனங்களை உபயோகிக்க ரூ. 1-ம் செலுத்தி அநுமதி பெற வேண்டும். இந்த வாகனங்கள் சர்க்காருக்குச் சொந்தமில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இப்போர்ப்பட்ட நிலைமையில்தான் அங்கு பிரஜா மண்டல் நிறுவப்பட்டது. இந்த மண்டல், பிரஜைகளின் குறைகளை ராஜாவிடம் சமர்ப்பித்தது. இதனால் சிலர் கைது செய்யப்பட்டனர். பிரஜைகள் அனைவரும் முறையிட்டதின் பேரில் கைதியானவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். 1938-ம் வருஷம் நவம்பர் மாதம் தர்பார் ஒரு அறிக்கை வெளியிட்டு, பல்லக்குக் கட்டணத்தை ரூ. 2-க்குக் குறைத்தது.

"இந்த சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி சர்க்காரை ஸ்தாபிப்பது சாத்தியமில்லாததால், இந்த கோரிக்கைக்கு தர்பார் இணங்காது" என்று சர்க்கார் அறிவித்தது. பத்திரிகைகள் சமஸ்தானத்திற்குள் அநுமதிக்கப்பட்டன. ஆனால், எந்த பத்திரிகையும், எந்த சமயத்திலும் சர்க்காரால் தடை செய்யப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது. தர்பாரின் அநுமதி பெற்ற பின் கூட்டங்களை நடத்தலாமென்ற 'சலுகை' யும் அளிக்கப்பட்டது.

1939-ம் வருஷம் ஜனவரி மாதம் அடுத்த ஊர் ஒன்றில் களவுபோனதற்காக எண்பூர் பிரஜா மண்டல் ஊழியர்களை

ர்ண்பூர் போலீஸ் கைது செய்து, பிரஜா மண்டல் மீதும் தடை விதித்தது. இதன்பேரில் சமஸ்தானத்தில் கொந்தளிப்பு முற்றிற்று. பக்கத்து சமஸ்தானத்திலிருந்த, ஓரிஸ்ஸா சமஸ்தானங்கள் அரசியல் ஏஜெண்ட் மேஜர் பஸால்கட் டேக்கு இந்த தகவல் அனுப்பப்பட்டது. அவர் உடனே ஒரு சுபேதாருடன் ரண்பூருக்கு விரைந்து வந்தார். அப் பொழுது அரண்மனையை நோக்கி ஒரு கும்பல் வந்துகொண் டிருந்தது. மேஜர், சுபேதாருடன் கும்பலுக்கு எதிரில் நின்றுகொண்டு, திரும்பிப்போகுமாறு கும்பலை உத்தரவிட் டார். ஜனங்கள் கோபாவேசமடைந்தனர். பஸால்கட்டை, கும்பல் மீது சுட்டார். இதைக்கண்டு ஆத்திரமடைந்த ஜனங்கள், மேஜர் மீது பாய்ந்து, அவரை படுகாயப்படுத்தி னர். இதனால் அவர் மாண்டார். சுபேதாருக்கும் பலத்த காயமேற்பட்டது. பஸால்கட்டை சுட்டதால் ஜனங்களில் 19 பேர்கள் மாண்டனர்.

இது சம்பந்தமாக 24 பிரஜைகள் மீது வழக்கு தொடரப் பட்டது. இந்த வழக்கை விசாரித்த ஸ்பெஷல் செஷன்ஸ் ஜட்ஜ் ஸ்ரீ. ஜே. ஜி. ஷிரார் 1939-ம் வருஷம் ஜூன் மாதம் 1-ந் தேதி தீர்ப்பு கூறினார். ரண்பூர் பிரஜாமண்டல் காரியதரிசி ஸ்ரீ. ரகுனந்த் மகந்தி, பிரஜா மண்டல் பிரமுகர் ஸ்ரீ. திவாகர் பாரிதா, ஸ்ரீ. சிந்தாயக் ஆகிய மூவருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இன்னம் 8 பேர் களுக்கு ஆயுள் தண்டனை. மற்றும் 5 பேர்களுக்கு இரண்டு வருஷக் கடுங்காவல் தண்டனை. பாக்கி 8 பேர்களுக்கு விடுதலை.

இந்த சமஸ்தானத்தில் யாரேனும் 7 வருஷங்களுக்கு மேல் தண்டிக்கப்பட்டால், தண்டனை ஹைக்கோர்ட்டால் உறுதி செய்யப்பட வேண்டும். இதற்காக, இந்த வழக்

கின் தஸ்தாவேஜிகள் பாட்னா ஹைக்கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டன.

ஹிண்டோல்

இதன் ஜனத்தொகை 50,000. வருஷ வருமானம் ரூ. 1½ லக்ஷம். இங்கு பிரஜைகளின் இளர்ச்சி ஆரம்பமான சில தினங்களுக்கெல்லாம், ராஜா சீர்திருத்தமளிக்க சம்மதித்து விட்டார். பொறுப்பாட்சி யளிப்பதே சர்க்காரின் நோக்கமென்றும் தர்பார் ஒரு அறிக்கை வெளியிட்டது.

"சர்வஜன வோட்டுரிமைபடி தேர்தல் நடக்கும். சட்ட சபைக்கு பாதி மெம்பர்கள் நியமிக்கப்படுவார்கள். பூரண பிரஜா உரிமை அளிக்கப்படும். 1939-ம் வருஷம் ஏப்ரல் முதல் சீர்திருத்தம் அமுலுக்கு வரும்" என்றும் அந்த அறிக்கையிலிருந்தது.

இந்த ராஜாவை எல்லாரும் போற்றினர்கள். சில வருஷங்களுக்கு முன்னதாகவே இந்த சமஸ்தானத்தில் கோவில்கள் ஹரிஜனங்களுக்கு திறந்து விடப்பட்டதால், ராஜா மொம்ப நல்லவரென்றும், சீர்திருத்தம் அமுலுக்கு வந்து விடுமென்றும் அனைவரும் நம்பினர்கள். ஆனால், பண்டித ஜவாஹர் மாத்திரம், "எல்லாம் அமுலுக்கு வரும் வரை யாரும் சந்தோஷப்பட வேண்டியதில்லை" என்றார். இவர் சொன்னபடியே ஆயிற்று. 1939ஐ பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் திடீரென பிரஜா மண்டல் மீது தடை விதிக்கப்பட்டது. தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். எல்லாம், பம்பாயில் ராஜாக்கள் கூடி செய்த சதியாலோசனைகளின் விளைவுகள்தான் என்பதை சொல்லவும் வேண்டுமா?

காஷ்மீர்

இந்தியாவில் காஷ்மீர்தான் விஸ்தீரணத்தில் மிகப் பெரிய சமஸ்தானம். இதற்கு அடுத்தபடியாகத்தான் ஹைதராபாத் கூட வருகிறது. காஷ்மீரின் விஸ்தீரணம் 84698 சதுர மைல்கள். மொத்த ஜனத்தொகை 36,46,243. இந்த சமஸ்தானத்தில் இரு நகரங்கள், 39 டவுன்கள், 8,903 கிராமங்களிருக்கின்றன. மத வாரியாக ஜனத் தொகை :

முஸ்லிம்கள்	28,17,636
ஹிந்துக்கள்	7,36,222
சீக்கியர்கள்	50,662
பௌத்தர்கள்	38,724
கிறிஸ்துவர்கள்	2,263
ஜெயினர்கள்	597

1938-39 பட்ஜெட்படி சமஸ்தானத்தின் மொத்த வருமானம் ரூ. 2,47,27,000. இதில் ரூ. 8 லக்ஷம் (மொத்த வருமானத்தில் 16%) ராஜாவின் சொந்தச் செலவுக்குப் போகிறது, ராணுவத்திற்கு ரூ. 47½ லக்ஷமும், கல்விக்கு ரூ. 22 லக்ஷமும் செலவு செய்யப்படுகிறது.

1938-ல் இங்கிருந்த அரசியல் கக்ஷிக்கு முஸ்லிம் மகாநாடு என்ற பெயர் இருந்தது. பண்டித ஜவாஹரின் யோசனையின் பேரில் இந்த பெயரை 'தேசீய மகாநாடு' என்று மாற்ற வேண்டுமென முஸ்லிம் மகாநாட்டின் காரியக் கமிட்டி 1938-ம் வருஷம் ஜூன் மாதம் முடிவு செய்தது. இதற்குப் பின் பிரபல ஹிந்துத் தலைவர்கள் இந்த கக்ஷியில் சேர்ந்து, பொறுப்பாட்சி சர்க்காரால் ஏற்படக்கூடிய நன்மைகளை ஜனங்களுக்கு எடுத்துரைத்தனர். 1938 வரு ஆகஸ்ட்

மாதத்தில் அரசியல் கூட்டங்கள் மீது சர்க்கார் தடை விதித்தது. பொறுப்பாட்சி இயக்கத் தலைவர் ஸ்ரீ. ஷேக் மகம்மது அப்துல்லாவும், இன்னும் பலரும் தடையை மீறி சிறை புகுந்தனர். இதற்குப் பின் சமஸ்தானம் பூரா விலும் சட்ட மறுப்பு ஆரம்பமாயிற்று. ஹைதராபாத்தில் நிஜாம் சர்க்கார் காங்கிரஸ் இயக்கத்தை எப்படி ஹிந்துக் களின் வகுப்புவாத இயக்கமென்று சொல்லியதோ, அதைப் போலவே காஷ்மீரிலும் ஹிந்து ராஜாவின் சர்க்கார், பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை முஸ்லிம்களின் வகுப்புவாதக் கிளர்ச்சி என்றது.

1939-ம் வருஷம் ஜனவரி மாதம் காஷ்மீர் தர்பார் சீர்திருத்தமளிப்பதாக ஒரு பிரகடனம் வெளியிட்டது. இப்பொழுது சமஸ்தான அசெம்பிளியில் 33 தேர்ந்தெடுக் கப்பட்ட மெம்பர்களும், 42 நியமன மெம்பர்களுமிருக் கிறார்கள். சீர்திருத்தத்தின்படி 40 தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் 35 நியமன மெம்பர்களும் இருப்பார்கள். சபாநாயகரை ராஜா நியமிப்பார். உதவி சபாநாயகர் அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுவார். மந்திரி சபை ராஜாவால் நியமிக்கப்படும். இப்பொழுதுள்ள மந்திரி களுக்கு 4 அசெம்பிளி மெம்பர்கள் பார்லிமெண்டரி காரிய தரிசிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அசெம்பிளியில் விவாதிக்கப்படும் விஷயங்கள் சம்பந்தமான வேலைகளை மாத்திரமே இந்த காரியதரிசிகள் கவனிக்க வேண்டும். அசெம்பிளியின் சிபார்சுகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ மந்திரி சபைக்கு 'உரிமை' உண்டு.

பொறுப்பாட்சிக்கும், இந்த சீர்திருத்தத்திற்கும் மலைக் கும் மடுவுக்குமுள்ள வித்யாசமிருப்பதால் காஷ்மீர் பிரஜை கள் இதை ஏற்க மறுத்து விட்டனர்.

1939-ம் வருஷம் ஜூன் மாத ஆரம்பத்தில் காஷ்மீர் முஸ்லிம் கக்ஷியின் விசேஷ மகாநாடு ஒன்று கூடி, ஸ்தாபனத்தின் பெயரை மாற்றுவது பற்றி காரியக் கமிட்டி ஏற்கனவே செய்திருந்த முடிவை அங்கீகரித்தது.

ராமதுர்க்கம்

இது டெக்கான் சமஸ்தானங்கள் ஏஜென்ஸியிலிருக்கிறது. விஸ்தீரணம் 169 சதுர மைல்கள். ஜனத்தொகை 34,000. வருஷ வருமானம் ரூ. 2,55,561. இதில் ரூ. 5,718 வைத்தியத்திற்காகவும், ரூ. 18,300 கல்விக்காகவும், ரூ. 34,000 ராஜாவின் சொந்தச் செலவுக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டு வந்தது. இந்த சமஸ்தானத்தின் வருஷ வருமானம் 20 வருஷங்களுக்கு முன் ரூ. 70,000 தான். இப்பொழுது ரூ. $2\frac{1}{2}$ லக்ஷத்திற்கு மேலிருக்கிறது. நிலத் தீர்வை பிரிட்டிஷ் இந்தியாவிலிருப்பதைப் போல் மூன்று பங்கு அதிகம். வருஷ வருமானம் ரூ. 500க்கு மேலிருக்கும் ரயர்களுக்கு வருமான வரி விதிக்கப்படுகிறது.

இப்போர்ப்பட்ட நிலைமையில் அங்கு 1938-ம் வருஷம் மார்ச் மாதத்தில் வரி கொடா இயக்கம் ஆரம்பமானதில் யாதொரு ஆச்சரியமுமில்லை. சமஸ்தானத்திலுள்ள 33 கிராமங்களில் 15 கிராமங்கள் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டன. ராஜாவும் கொஞ்சம் இளகிய மனதுடையவராகையால், தற்காலத்துக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள ஆரம்பித்தார். நில வரி வசூலை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டு, ஒரு சீர்திருத்தக் கமிட்டியை நியமித்தார். அதில் மொத்தம் 5 மெம்பர்களில் பிரஜா மண்டலின் பிரதிநிதிகள் இருவர். அடக்குமுறை உத்தரவுகளும் வாபஸ் செய்யப்பட்டன.

பொறுப்பாட்சி சர்க்காரை நிறுவ தான் முடிவு செய்திருப்பதை ராஜா 1938-ம் வருஷக் கடைசியில் அறிவித்தார். மொத்த நில வரியில் அரை லக்ஷத்தைக் குறைப்பதாகவும், கிராம அபிவிருத்திக்காக வருஷத்திற்கு ரூ 10,000 ஒதுக்கிவைப்பதாகவும் கூறினார்.

காங்கிரஸ் தலைவர்கள் இந்த ராஜாவின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டினர். கர்னாடக மாகாண காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. தேஷ்பாண்டேயை தலைவராகவும், சங்ளி, ராமதுர்க்கம், ஜாம்கண்டி திவான்கள், 5 கர்னாடக காங்கிரஸ் காரர்கள் இவர்களை மெம்பர்களாகவும் கொண்ட கமிட்டியின் சிபார்சின் பேரிலேயே ராஜா பொறுப்பாட்சியளிக்க சம்மதித்தது குறிப்பிட்டதாக விஷயமாகும்.

ஆனல் ராஜாவுக்கும் பிரஜைகளின் பிரதிநிதிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்ட சிலர், மீண்டும் ஜனங்களை தூண்டிவிட ஆரம்பித்தனர். இப்படிச் செய்வது ஒப்பந்தத்திற்கு விரோதமென காந்திஜி ஒரு அறிக்கை வெளியிட்டு, அவர்களுடைய நடத்தையைக் கண்டித்தார். இந்த மெம்பர்கள் புதிதாக காங்கிரசில் சேர்ந்தவர்களென்றும், எதற்கெடுத்தாலும் முதலிலேயே அளவுக்கு மிஞ்சிய கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் பேர்வழிகளென்றும் ஸ்ரீ. சங்கர ராவ் தேவ் கூறினர். ராமதுர்க்கம் ராஜா காங்கிரசின் சிநேகிதர் என்றும் சொல்லப்பட்டது.

1939-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் இந்த சமஸ்தானத்தின் பிரஜா மண்டல் தலைவர்களில் இரண்டு, மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டனர். இதைக்கண்டு ஆத்திரமடைந்த ஜனங்கள், தலைவர்களை விடுவிக்க சிறையை நோக்கிப் புறப்பட்டனர். சிறை வாசலில் சிறைக்காவலாளர்களுக்கும் ஜனங்களுக்கும் சண்டை நடந்தது. காவலாளர்களும்,

போலீசும் ஜனங்கள் மீது சுட்டனர். ஜனங்களும் திருப்பித் தாக்கினர்கள். இதில் இரு கக்ஷியிலும் பலர் மாண்டனர். சிறைக்கு நீ வைக்கப்பட்டது. பிரஜைகள் இப்படி பலாத்காரத்தில் இறங்கியதை காங்கிரஸ் தலைவர்கள் கண்டித்தனர்.

கலகம் சம்பந்தமாக விசாரணை நடத்த பம்பாய் நீதிபதி ஸ்ரீ. திவார், ராமதர்க்க தர்பாரால் நியமிக்கப்பட்டார். இவர் தமது ரிப்போர்ட்டில், கலகத்திற்கு பிரஜா சங்கத் தலைவர்களின் பொறுப்பற்ற செய்கையே காரணமென்றும், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நியாயம் தானென்றும் கூறினர்.

லிம்டி

இது கத்தியவாரிலிருக்கிறது. விஸ்தீரணம் 250 சதுர மைல்கள். ஜனத்தொகை 40,000. மொத்தம் 40 கிராமங்களும், ஒரு டவுனும் (லிம்டி டவுன்) இருக்கின்றன. வருஷ வருமானம் ரூ. 8 லக்ஷம். இதில் 90%க்கு மேலாக கிராமங்களிலிருந்து, அநேகமாக நில வரி மூலம், வசூலிக்கப்படுகிறது. இந்த வருமானத்தில் 50%க்கு மேலாக ராஜ குடும்பத்தில் செலவுக்காகப் போகிறது.

பிரஜா மண்டல் ஊழியர்கள் கிராமங்களுக்குச் செல்லுவது யுவ ராஜாவுக்குப் பிடிக்கவில்லை. சர்க்கார், பிரஜா மண்டல் மீது தடையை விதிக்காமல் அதன் இயக்கத்தை ஏற்பாடான காலித்தனத்தின் மூலம் ஒடுக்க ஆரம்பித்தது. இந்த ஸ்தாபனத்திற்கு போட்டியாக சனதன மண்டல் என்ற ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இதில் அதிகாரிகளும், காலிகளும்தான் மெம்பர்கள். இவர்கள் பிரஜா மண்டலின் வேலைகளை பலாத்கார முறைகளின் மூலம் எதிர்த்தார்கள்.

இதற்கு சர்க்காரும் மறைமுகமாக ஆதரவளித்தது. ஆனால் பிரஜைகள் அனைவரும் ஒருமுகமாக பிரஜா மண்டலையே ஆதரித்தனர். இந்த ஆதரவு இருக்கக்கூடாதென சர்க்கார் முடிவு செய்தது. மண்டல் ஊழியர்களையும், கிராம வாசிகளையும் பயமுறுத்துவதற்காக, கிராமங்களில் 80, 90 பேர்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று, கத்தி, அரிவாள் துப்பாக்கிகளுடன் மண்டல் ஊழியர்களை தாக்கினர். அவர்களுடைய சொத்துக்களை சூறையாடினர். இந்த கொள்ளைக் கூட்டத்தில் சமஸ்தான அதிகாரிகளும் இருந்தார்கள். இவர்கள் தப்பி ஓட கணக்கு வழக்கின்றி மோட்டார்கள் தயாராக காத்துக்கொண்டிருந்தன.

1939-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி லிம்டியில் தர்பார் கோபால தாஸ் தலைமையில் பிரஜா மண்டல் மகாநாடு கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், 18ந் தேதியே டவுனில் சனாதன மண்டல் காலிகளில் 800 பேர் கூடினார்கள். கையில் தடிகள், கத்திகளுடன் டவுன் பூராவும் திரிந்தனர். இவர்களில் பெரும்பாலோர் சர்க்காரின் விருந்தினராக யிருந்தார்கள்! பிரஜா மண்டல் மகாநாட்டின் தலைவர் 18-ந் தேதி இரவு 2 மணிக்கு லிம்டி ஸ்டேஷனுக்கு வந்தார். காலிகள் அனைவரும் இவரை சூழ்ந்து கொண்டு, அடுத்த நாள் காலை 7 மணி வரை டவுனுக்குள் வர அநுமதிக்கவில்லை. காலை 7 மணிக்கு தர்பார் கோபால தாஸ் தனது இல்லத்திற்குச் சென்றதும், காலிகளும் அங்கு சென்று, அவர் வெளியில் வரமுடியாமல் தடுத்தனர். மகாநாடு மாலை 2 மணிக்கு கூடுவதாயிருந்தது. காலை 11 மணிக்கு பரிஷத் ஊழியர்களும், மகாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த கிராமவாசிகளும் பரிஷத் முகாம்களில் காலிகளால் தாக்கப்பட்டனர். இதனால் 600

பேர்களுக்குக் காயம். இந்த காலிகள் மகாநாட்டுப் பந்தலையும் கைப்பற்றி அங்கிருந்த நாற்காலிகளை நாளாக்கினர். இப்போர்ப்பட்ட நெருக்கடியான நிலைமையிலும் மகாநாட்டை நடத்தியே தீருவதென ஊழியர்கள் முடிவு செய்தார்கள். பம்பாய் மாஜி ஹோம் மந்திரி ஸ்ரீ. முன்ஷியின் மனைவி ஸ்ரீமதி. லீலாவதி முன்ஷியின் தலைமையில் மகாநாடு நடைபெற்றது. 19-ந் தேதி பூராவும் சமஸ்தானத்தில் காலிகள் ஆட்சிதான் இருந்தது.

ஜனங்களின் சொத்துக்கும், உயிருக்கும் ஆபத்து வந்ததால் அனைவரும் சமஸ்தானத்தை விட்டு வெளியேறுவதே நல்லதென தர்பார் கோபால தாஸ் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன்படி 10,000 ஜனங்களுக்கு மேல் பக்கத்திலுள்ள பிரிட்டிஷ் எல்லையில் குடியேறியுள்ளார்கள். இவர்களுடைய நிலங்கள் நோட்டீஸின்றி பறிமுதல் செய்யப்பட்டன.

தர்பாரை பணிய வைப்பதற்காக லிம்டி பருத்தியை பகிஷ்கரிக்க வேண்டுமென சர்தார் பட்டேல் வேண்டுகோள் விடுத்ததின் பேரில், சென்னை மாகாண மில் முதலாளிகள் உள்பட இந்திய முதலாளிகள் அனைவரும் அந்த பருத்தியை பகிஷ்கரித்து விட்டார்கள். இந்த பருத்தியை விவசாயிகளிடமிருந்து சமஸ்தான சர்க்கார் வாங்கியிருப்பதால், இது விற்பனையாகாமலிருப்பது, நிர்வாகம் நடத்த சர்க்காருக்கு போதிய பணமிருக்காது.

ஆயிரக்கணக்கான பிரஜைகள் இந்த சமஸ்தானத்தை விட்டு வெளியேறி ஒரு வருஷத்திற்கு மேல் ஆகிறது. ராஜாவின் அடக்குமுறைகளைப்பற்றி விசாரிக்க மத்திய சர்க்காரின் அரசியல் இலாகா யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஸ்ரீ. கே. எம். முன்ஷி சொல்வதைப்போல,

யுத்தம் நடக்கும் இந்த தருணத்தில் இந்திய ராஜாக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற்கு பெரும் தூண்களாக விளங்குகின்றனர். எனவே இந்த சமயத்தில் இந்திய சமஸ்தானங்களில் நடக்கும் அக்கிரமங்களை நிறுத்த அரசியல் இலாகா தலையிடா திருப்பதில் ஆச்சரியமெதுவுமில்லை.

இதர சமஸ்தானங்கள்

1938-ம் வருஷத்திலும், 1939ல் ஜனவரி, பிப்ரவரியிலும் கீழ்க்காணும் சமஸ்தானங்களின் பிரஜா உரிமைகளுக்காகவும், பொறுப்பாட்சிக்காகவும், கிளர்ச்சிகளும், சட்ட மறுப்புகளும் நடந்தன :

இந்தூர், மேவார், ராஜனந்தகான், சங்லி, கட்ச், காசி, சிர்மூர், ராஜ்பிப்லா, திரிபுரா, பாட்டியாலா, பாரத்பூர், பகவல்பூர், லோஹாவால், வாலா, போப்பால், தார், மிராஜ் (ஜூனியர்), கால்லியா, கோலாப்பூர், பாலிடானு.

இந்த கிளர்ச்சிகளின் விளைவாக பல சமஸ்தானங்களின் பிரஜைகளுக்கு சலுகைகள் கிடைத்தன.

மிராஜ் (ஜூனியர்) சமஸ்தானத்தில் நில வரியில் 25% குறைக்கப்பட்டது. சமஸ்தான அசெம்பிளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேர்களும், நியமன அதிகாரிகள் 8 பேர்களும் இருக்க வேண்டுமென பிரஜைகளின் தலைவர்களுக்கும் ராஜாவுக்கும் ஒரு ஒப்பந்தமேற்பட்டது.

கால்லியாவில் பலவந்தமாக வேலை வாங்கும் பழக்கத்தின் மீது சர்க்கார் தடை விதித்தார்கள். கடன் நிவாரண சட்டம் அமுலுக்கு வந்தது. நில வரியை குறைப்பதென ராஜா முடிவு செய்தார். இவர் தன்னுடைய சொந்தச் செலவுக்காக வருஷா வருஷம் சமஸ்தான பட்ஜெட்டில்

ஒதுக்கப்படும் ரூ. 1,50,225 ஐ, ரூ. 40,000க்குக் குறைத்துக்கொண்டு விட்டார்.

திருவாங்கூருக்கு சீர்திருத்தமளிக்கப் பட்டிருக்கிறது. அதன்படி சமஸ்தானத்தையும், பிரிட்டிஷ் இந்தியாவையும் சேர்ந்த 15 மெம்பர்களுக்கு மேற்படாத ஒரு ஆலோசனை போர்டு நியமிக்கப்படும். இப்பொழுதுள்ள ஹைக்கோர்ட் சீர்திருத்தப்படும். ஒரு பிரதம மந்திரியும், இன்னம் நான்கு மந்திரிகளும் நியமிக்கப்படுவார்கள்.

சட்டம் இயற்ற போதிய அதிகாரங்கள், பட்ஜெட் மீது சிபார்சு செய்யும் அதிகாரங்கள்—இவைகளையுடைய ஒரு அசெம்பிளி நிறுவப்படும். இதில் சபாநாயகரைத் தவிர 54 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களில் 29 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 25 நியமன மெம்பர்களில் 18 பேர்கள் சர்க்கார் அதிகாரிகள், 7 பேர்கள் உத்தியோகப் பற்றில்லாத விசேஷ உரிமைகளின் பிரதிநிதிகள்.

விவசாயிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம மண்டலிகள் என்ற கிராம பஞ்சாயத்துகள் நிறுவப்படும். சிறிய சிவில், கிரிமினல் வழக்குகளை பட்டுவாடா செய்ய நீதி அதிகாரங்களும், நில வரி வசூல் செய்வது உள்பட ஸ்தல விவகாரங்களை நிர்வகிக்க வேண்டிய அதிகாரங்களும் இந்த பஞ்சாயத்துக்களுக்கு உண்டு.

சமஸ்தான பட்ஜெட்டிலிருந்து ராஜாவின் சொந்தச் செலவு பிரிக்கப்படும். சமஸ்தான வருமானத்தில் 10% ராஜாவின் சொந்த செலவுக்காக கொடுக்கப்படும்.

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 4116 சதுர மைல்கள். ஜனத்தொகை 3,82,450.

தெரி-காவால் சமஸ்தானத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் மெஜாரிட்டியுள்ள ஒரு சட்டசபை

கிறுவப்பட்டது. மந்திரி சபையில் மூன்று பேர்கள் இருக்கிறார்கள். இதில் இருவர் சர்க்கார் அதிகாரிகள். மூன்றாவது நபர், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பராகிய பண்டித தேவேந்திரதத் ரத்தூரி பகதூர்.

சட்டசபையில் 35 மெம்பர்கள் இருக்கிறார்கள். இதில் 11 பேர்கள் அதிகாரிகள், 24 பேர்கள் உத்தியோகப்பற்றில்லாதவர்கள். 24 பேர்களில் 20 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள்; மைனாரிட்டிகளின் பிரதிநிதிகள் நால்வர். தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர் ஒருவரே சட்ட சபையின் தலைவராயிருக்கிறார்.

எந்த மசோதாவையும் நிறைவேற்ற சட்டசபைக்கு உரிமையுண்டு. பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், இன்னம் எந்த பொது ஸ்தாபனத்தையும் மேற்பார்வையிட சட்டசபை மெம்பர்களுக்கு அதிகாரமுண்டு.

இந்தூரில் முனிசிபல் எல்லைக்குள் பொதுக்கூட்டங்கள் மீதிருந்த தடை ரத்தாயிற்று. மகாராஜாவால் ஒரு சீர்திருத்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

வகுப்புவாத உணர்ச்சியை வேரோடு அறுத்து எறிவதற்காக, இந்த சமஸ்தானத்தில் 1939-ம் வருஷம் ஜூன் மாதம் ஒரு கல்வி திட்டம் அமுலுக்கு வந்தது. எல்லா மதங்களிடமும் சகிப்புத்தன்மை காண்பிக்கும் உணர்ச்சியை சிறுவர்களுக்கு ஊட்டுவதின் மூலம் வகுப்பு சவுஜன்யத்தை யடைவதே இந்த திட்டத்தின் நோக்கம். இந்தியாவிலுள்ள பல்வேறு மதங்களைப்பற்றி தெரிந்துகொள்ள, ஒவ்வொரு வகுப்புக்கும் பாடப் புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வகுப்புக்களுக்குத் தக்கவாறு புஸ்தகங்களிலும் விஷயங்கள் இருக்கும். இந்த திட்டம் இந்தியாவில் இதர பாகங்களில் எவ்வளவுக்கெவ்வளவு

சிக்கிரத்தில் அமுலுக்கு வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வகுப்புக் கலகங்களும், சச்சரவுகளும் சீக்கிரத்தில் குறையு மென்பதில் சந்தேகமில்லை.

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 9902 சதுர மைல்கள். ஜனத்தொகை 13,25,089. வருமானம் ரூ. 1,17,00,000.

கருந்தவாத், தென் மஹாராஷ்டிர சமஸ்தானங்களில் ஒன்று. இதன் ரீஜண்ட் ராணி சாஹிபா, பொறுப்பாட்சி யளிக்கும் கொள்கையை அங்கீகரித்து, பொதுக்கூட்டங்கள் மீதிருந்த தடையை ரத்துச் செய்தார்.

சிதாமா சமஸ்தான பட்ஜெட்டில், ஆளும் வம்சம் சம்பந்தமாக உள்ள ரிசர்வ் அதிகாரத்தைத் தவிர பாக்கி எல்லா தலைப்புகளின் கீழுள்ள பிரச்னைகள் சம்பந்தமாக யோசனை கூறும் உரிமை புதிய சட்டசபைக்கு அளிக்கப் படும். நிதி விஷயத்தில் கல்வி இலாகா, பொது சுகாதார இலாகா, முனிசிபாலிடி, பஞ்சாயத்து கோர்ட்டுகள் இவைகளின் மீது சட்ட சபைக்கு பூர்ண அதிகாரமுண்டு. புதிய சட்ட சபையில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும், 13 நியமான மெம்பர்களும் இருப்பார்கள். மொத்த மெம்பர்களில் மூன்றில் இரு பாகத்தினர் சமஸ்தானத்தின் அரசியலமைப்பை எப்படி மாற்றலாம் என்று யோசனை கூற, சட்ட சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சமஸ்தானத்தில் 1939-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பருத்தி ஏற்றுமதி வரியில் 50% நிரந்தரமாகக் குறைக்கப்பட்டது. கடன்கள், குடிவாரங்கள், தக்கவிகள் பாக்கிகளில் வஜா செய்யப்பட்டது. நிர்ப்பந்த ஊழிய முறையும் ஒழிந்தது.

சங்லி சமஸ்தானாதிபதி, பொறுப்பாட்சி யளிப்பதே தனது இறுதியான லக்ஷியம் என அறிவித்து தன்னுடைய

சொந்தச் செலவில் ரூ. 50,000த்தை குறைத்துக்கொண் டார். புதிய சட்ட சபையில் 45 மெம்பர்களிருப்பார்கள். இதில் 30 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு மெம்பர், கல்வி, வைத் திய, கூட்டுறவு, ஸ்தல சுயாட்சி, கிராம அபிவிருத்தி இலாகாக்களின் மந்திரியாக இருப்பார்.

கங்கபூர் சமஸ்தானத்தில் நிர்ப்பந்த ஊழிய முறையை ரீஜண்ட் ராணி ரத்து செய்து விட்டார். கல்வி வரியில் பாதியும், வைத்திய வரியில் பாதியும், குறைக்கப்பட்டது.

ரங்காரில் ஒரு சட்ட சபை அமைப்பதாக ராஜா வாக் களித்துள்ளார். இவர் தன் சொந்தச் செலவையும் குறைத் துக்கொள்ளுவார்.

ராம்பூரில் சீர்திருத்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

காசி சமஸ்தானத்தில் பாட்னு பிரமுகர் ஸ்ரீ. சச்சிதா னந்த சின்ஹாவைத் தலைவராகக் கொண்ட ஒரு சீர்திருத் தக் கமிட்டியை மகாராஜா நியமித்தார்.

ஆனல் இந்த சமஸ்தானத்தில் 1939 ஜூனில் ஒரு ஜில்லாவில் தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதை மீறி சமஸ்தான காங்கிரஸ்காரர்கள் கூட்டம் நடத்தினர் கள். கூட்டங்கள் போலீசாரின் தடியடிப் பிரயோகத்தால் கலைக்கப்பட்டன. சர்க்கார் காங்கிரசுக்கு விரோதமாக காட்டும் மனப்பான்மையை கண்டிப்பதற்காக, சீர்திருத்தக் கமிட்டியிலிருந்து 5 காங்கிரஸ்காரர்களும் ராஜீநாமாச் செய்தனர்.

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 875 சதுர மைல் கள். ஜனத்தொகை 3,91,165. வருமானம் ரூ. 18,65,000

ராஜ்பிப்லாவில் சர்தார் பட்டேலின் முயற்சியால் நில வரியைக் குறைக்க ராஜா ஒப்புக்கொண்டார். ஸ்தல

ஸ்தாபனங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களே இருப்பார்கள். மிகக் குறைவான கட்டணத்தில் சர்க்கார் நிலத்தில் வீடுகள் கட்ட பிரஜைகளுக்கு வசதியளிக்கப்பட்டது.

ஜயோரா ராஜா, பிரஜைகளுக்கு முக்கிய சீர்திருத்தங்கள் அளிப்பதாக வாக்களித்தார்.

பாட்டியாலாவில் பிரஜா உரிமைகள் தடைச் சட்டத்தினுள்ள மோசமான ஷரத்துக்களை ரத்துச் செய்யும் விஷயமாக கவனிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

1939-ம் வருஷம் ஜூன் மாதம் இந்த சமஸ்தானத்தில் குடியானவர்களின் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. "சமஸ்தானத்திலுள்ள 784 கிராமங்கள் நிலத்தில் உழுகிறவர்களே அந்த நிலங்களில் பூர்ண பாத்தியதை யுடையவர்களாகயிருக்க வேண்டும்; ராஜ குடும்பத்துடன் சம்பந்தப்பட்ட சர்தார்களுக்கு அந்த நிலங்களில் விளையும் பயிர்களில் ஒரு பங்கை தரவேண்டுமென்று கேட்கக்கூடாது" என்பதே இந்த குடிகளின் முக்கிய கோரிக்கை.

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 5,942 சதுர மைல்கள். ஜனத்தொகை 16,25,520. வருமானம் ரூ. 1,50,80,000.

ஜுர்வாய் சமஸ்தான நவாப் அளித்துள்ள சீர்திருத்தத்தின்படி, 16 தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் மாத்திரம் அடங்கிய ஒரு சட்ட சபை அமைக்கப்படும். பட்ஜெட்டை நிறைவேற்றவும், சபாநாயகரை தேர்ந்தெடுக்கவும் இந்த சட்ட சபைக்கு அதிகாரமுண்டு.

இதர் சமஸ்தானத்தில் புதிய சட்ட சபை அமைக்கப்பட்டது.

டோங் நவாப், "சமஸ்தானத்தில் அரைகுறையாக

தேர்ந்தெடுக்கப்படும் ஸ்தல, மத்திய நிர்வாக சபைகள் அமைக்கப்படும்'' என அறிவித்தார்.

பொதுஜன பிரதிநிதித்துவம் உள்ள கிராமபஞ்சாயத்து களையும், ஒரு மத்திய சட்ட சபையையும் அமைக்க ஒரு திட்டத்தை தயாரிக்கும் வேலையை, நவாப், சமஸ்தான நிர் வாக கவுன்ஸிலிடம் ஒப்படைத்திருக்கிறார்.

குவாலியர் சமஸ்தானத்தில் 1939-ம் வருஷம் ஜூன் மாதம் மகாராஜா ஒரு புதிய சீர்திருத்தத்தை வெளியிட் டார். பேச்சு சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரத்திற்கு உத்திரவாதமளிக்கப்பட்டது. இரு புதிய சட்ட சபைகள் நியமிக்கப்படும். அசெம்பிளியில் 85 மெம்பர்களிருப்பார்கள். இதில் 50 பேர்கள் ஜனங்களின் பிரதிநிதிகள்; பாக்கி 35 பேர்கள் மன்னரின் நியமன மெம்பர்கள். இரண்டாவது சபைக்கு 40 மெம்பர்கள். இதில் பாதி தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள்; பாக்கி பாதி, தர்பாரின் நியமன மெம்பர்கள். பல சமஸ்தா னங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு மந்திரிகளாவது நியமிக்கப்பட் டார்கள். குவாலியரில் அது கூட கிடையாது.

''கிடைக்கும் அநுபவத்தைக்கொண்டு காலாவட்டத் தில், பிரஜைகளின் பிரதிநிதிகளிலிருந்து ஒருவர் மந்திரியாக நியமிக்கப்படுவார்'' என்று தர்பாரின் பிரகடனம், ஜனங் களுக்கு தைரியம் கொடுத்திருக்கிறது!

இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 26,387 சதுர மைல்கள். ஜனத்தொகை: 35,23,070; வருமானம் ரூ. 2,49,50,000.

மகாத்மா காந்தி 1939-ம் வருஷ மார்ச் மாதம் மத்தியில் டில்லியிலிருந்து வெளியிட்ட ஒரு அறிக்கை

யில், எல்லா சமஸ்தானங்களிலும் நடந்துவந்த சத்யாக்ரக இயக்கங்களைத் தற்காலிகமாக நிறுத்துமாறு யோசனை கூறினர். இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு எல்லா சமஸ்தான பிரஜைகளும் இயக்கத்தை நிறுத்தினர்கள். ராஜாக்கள் அவர்களுடைய பிரஜைகளுக்கு சீர்திருத்தமளிக்க வேண்டுமென்று வைசிராய் புத்திமதி கூறினர்.

ஆனால், வைசிராயின் புத்திமதிக்குப் பின்னும் கோலாப்பூர், பகவல்பூர், பாரத்பூர், காசி, போன்ற சமஸ்தானங்களில் அடக்குமுறைகள் தலை விரித்தாடின.

போதாக்குறைக்கு யுத்தமும் 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பமாயிற்று. சாதாரண நாட்களிலேயே எதற்கும் மசியாத இந்த ராஜாக்களுக்கு, இந்த யுத்தம் பெரிய வரப்பிரசாதமாயிருந்தது. யுத்தம் ஆரம்பமாய் விட்டதால் எழுந்துள்ள அவசர நிலைமையை உத்தேசித்து இப்பொழுது எதுவும் சீர்திருத்தம் அளிப்பதற்கில்லை என்று பல சமஸ்தானங்கள் கூறிவிட்டன. இன்னும் சில சமஸ்தானங்கள், கொடுத்திருந்த சலுகைகளையும் வாபஸ் வாங்க ஆரம்பித்தன. மீண்டும் அடக்குமுறைகள்! இந்த சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் சமஸ்தான விவகாரங்கள் எதிலும் தலையிட மாட்டார்களென்பது இந்திய ராஜாக்களுக்கு நன்றாகத் தெரியும்.



ராஜ்கோட் மன்னர்



சர்தார் வல்லபபாய் பட்டேல்

முஜ்வள எஜ்ரது முஷ்லிகீ



ரமேரா முஷ்லிகீ



அத்தியாயம் 2.

அவுண்டு சிர்திருத்தம்

சமஸ்தானத்தின் வரலாறு

அவுண்டு சமஸ்தானம் பம்பாய் மாகாணத்தில் சத்தாரா ஜில்லாவில் இருக்கிறது. சமஸ்தானத்தின் விஸ்தீரணம் 501 சதுர மைல்கள். மொத்த ஜனத்தொகை 76,507. வருஷ வருமானம் ரூ. 4,78,033. ராஜா சமீபத்தில் நில வரியைக் குறைத்ததால், வருமானத்தில் ரூ. 50,000 குறைந்திருக்கிறது.

இப்பொழுதுள்ள சமஸ்தானாதிபதியின் பெயர் ராஜா ஸ்ரீமந்த் பாவன ராவ் சினிவாச ராவ் என்ற பாலாசாகிப் பந்த்—பிரதிநிதி.

"பிரதிநிதி" என்ற பட்டம் "பீஷ்வா" பட்டத்தை விட உயர்ந்தது. அந்த பட்டமானது முதல் முதல் சிவாஜி மகாராஜாவால் பிரஹலாத பந்த்துக்கு அளிக்கப்பட்டது. அதற்குப் பின் அவுண்டு ராஜாவின் முன்னோர்களுக்கு வழங்கப்பட்டது. மகாராஷ்டிர தர்பார்களில் "பிரதிநிதி"களின் ஸ்தானம், பீஷ்வாக்களின் ஸ்தானத்தைக் காட்டிலும் உயரமாகயிருந்தது.

அவுண்டு "பிரதிநிதி"களுக்கு ரூ. 18 லக்ஷம் வருமானம் கிடைக்கக்கூடிய நிலப் பரப்பு இருந்தது. ஆனல், கடைசி பீஷ்வா, பிரதிநிதிகளின் ஜாகீரில் ஒரு பகுதியை பறித்துக்கொண்டு விட்டார்.

ஸ்ரீமந்த் கோபால கிருஷ்ண ராவ் என்ற நானு சாகிப் பந்த்தை பட்டத்திலிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் நீக்கியதும்,

1909-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ந் தேதி இப்பொழுதுள்ள ராஜா ஸ்ரீமந்த் பாவன ராவ் சமஸ்தானாதிபதியாக்கப் பட்டார். இவருக்கு 1936-ம் வருஷம் "ராஜா" என்ற பட்டம் அளிக்கப்பட்டது. சூரிய நமஸ்காரத்தில் இவருக்கு அபார நம்பிக்கையுண்டு. இவர் இதைப்பற்றி எழுதியுள்ள புஸ்தகத்தில் இதன் மகிமையையும், அநுபவத்தினால் தான் அடைந்த பலன்களையும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த புஸ்தகம் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இவர் முகத்திலுள்ள தேஜஸைப் பாருங்கள். வயது 72 ஆகியும் இப்பொழுதும் சூரிய நமஸ்காரம் செய்கிறார். யாதொரு சிரமமுமின்றி, தினசரி, பிரஜைகளுக்கு தான் செய்ய வேண்டிய கடமைகளை அப்பழுக்கின்றி கவனித்து வருகிறார்.

சீர்திருத்தம்

அவுண்டு ராஜா, யாருடைய வற்புறுத்தலின் பேரிலும் நிர்ப்பந்தத்தின் பேரிலு மில்லாமல், தாமாகவே பொறுப்பாட்சி யளித்தது குறிப்பிடத்தக்கது. சமஸ்தானம் சிறியதாகயிருந்தாலும், இது இந்தியாவிலுள்ள மற்ற சமஸ்தானங்களுக்கு வழிகாட்டியிருக்கிறதென்பதில் சந்தேகமே கிடையாது. இதன் ராஜா 1938-ம் வருஷம் நவம்பர் மாத ஆரம்பத்தில் தமது 71-வது ஜெயந்தியின்போது ஒரு பிரகடனம் வெளியிட்டார். அதில், சமஸ்தான பிரஜைகளுக்கு பொறுப்பாட்சி யளிப்பதென தான் செய்துள்ள முடிவையும், "மேனாட்டு அநுபவத்தையும், உதாரணத்தையும் அடிப்படையாகக் கொண்ட சுய ஆட்சி முறை நமது ஜனங்களுக்கு பிரயோசனமல்ல; பழைய கிராம சுய ஆட்சியே

சிறந்தது'' என்ற தமது அபிப்பிராயத்தையும் அறிவித்தார்.

அவுண்டு ராஜா சாகிப்பும், சமஸ்தானத்தின் கல்வி மந்திரி (பின்னர் பிரதம மந்திரி) ஸ்ரீமந்த் ராஜகுமார் அப்பா சாகிப்பும் 1938-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் காந்தி ஜியை வார்தாவில் சந்தித்து, அவுண்டில் தாங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்போகும் பொறுப்பாட்சி திட்டம் பற்றி விவாதித்தனர். காந்திஜி கூறிய பல யோசனைகளை ராஜா சாகிப் ஏற்றுக்கொண்டார்.

1939-ம் வருஷம் ஜனவரி மாதம் 21-ந் தேதி அவுண்டு சீர்திருத்த திட்டம் அவுண்டு சட்ட சபையில் கல்வி மந்திரி ஸ்ரீமந்த் அப்பா சாகிப்பால் பிரேரிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேறியது. அந்த வைபவத்திற்கு அழைக்கப்பட்டிருந்த பம்பாய் பிரதம மந்திரி (இப்பொழுது மாஜி பிரதம மந்திரி) ஸ்ரீ. பி. ஜி. கேர், காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பரான ஸ்ரீ. சங்கர ராவ் தேவ், கர்னாடக காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கங்காதரராவ் தேஷ்பாண்டே ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர். சீர்திருத்த திட்டம் சட்ட சபையில் நிறைவேறியதும், ராஜா தனது அங்கீகாரத்தை யளித்து திட்டத்தை சட்டமாக்கினர்.

இந்த வைபவம் முடிந்ததும், ஸ்ரீ. பி. ஜி. கேர், தேசீயக் கொடியையும், ராஜா சாகிப், சமஸ்தான ஜண்டாவாகிய ''பாக்வா'' கொடியையும் ஏற்றி வைத்தனர். அப்பொழுது ராஜா சாகிப் பேசியதாவது:

''தேசீயக் கொடி இந்திய ஐக்கியத்தின் சின்னமாகவும், ''பாக்வா'' கொடி தியாகத்தின் சின்னமாகவுமிருக்கிறது. பிரஜைகள் தங்களுடைய பொது நாட்டின் முன்

னேற்றத்திற்கும், கதிமோட்சத்திற்கும் இந்த இரு கோடி களின் தாத்பர்யத்தை கிரஹித்துக்கொள்ள வேண்டும்."

அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள்

எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் வோட் டுரிமையுண்டு. இவர்கள் 5 மெம்பர்கள் கொண்ட கிராம பஞ்சாயத்துக்களே தேர்ந்தெடுக்க வேண்டும்.

பஞ்சாயத்துகளுக்கு விரிவான அதிகாரங்கள் கொடுக் கப்பட்டிருக்கின்றன. ஒரு தாலூகாவிலுள்ள எல்லா பஞ்சாயத்துகளின் தலைவர்களையும் கொண்ட தாலூகா கவுன்ஸில் ஒன்று அமைக்கப்படும். தாலூகாவின் வரு மானத்தில் பாதி இந்த கவுன்சிலிடம் கொடுக்கப்படும். அதை இந்த கவுன்சில், கிராமங்களிடையே விநியோகம் செய்யும். சமஸ்தானத்தில் இம்மாதிரி ஐந்து தாலூகா கவுன்ஸில்கள் இருக்கும். இந்த ஐந்து கவுன்ஸில்களின் தலைவர்களும், ஒவ்வொரு கவுன்ஸிலிலுமிருந்து 2 மெம்பர் களும், சமஸ்தான சட்ட சபைக்கு மெம்பர்களாக அனுப் பப் படுவார்கள். இதன்படி சமஸ்தான அசெம்பிளியில் 15 மெம்பர்கள்தான் இருப்பார்கள். முதல் 5 வருஷங் களுக்கு சமஸ்தானாதிபதி, சட்ட சபைக்கு ஐந்து மெம்பர் களே நியமிப்பார். இந்த அசெம்பிளியை கலைக்கவே முடி யாது. சமஸ்தானத்தில் இந்த சட்ட சபைக்கு மேற்பட்ட அதிகாரமே கிடையாது. ராஜா, பிரஜைகளின் முதல் சேவகராகயிருப்பாரென சீர்திருத்தத்தின் 24-வது பிரிவு கூறுகிறது.

எந்த மசோதாவையும், புனராலோசனை செய்வதற் காக ராஜா மும்முறை திருப்பியனுப்பலாம். மன்னர் சர்க் காருக்கும் சமஸ்தானாதிபதிக்கு மிடையே உள்ள உறவு சம்

பந்தமான பிரச்னைகள் ராஜாவின் நிர்வாகத்தில் இருக்கும். ராஜா அசெம்பிளியின் விசேஷக் கூட்டங்களைக் கூட்டலாம். முக்கியமான பெரிய காரணங்களுக்காக, ராஜா, சர்க்காரை 'சஸ்பென்ட்' செய்து வைக்கலாம். அப்படிச் செய்தால் உடனே அசெம்பிளியை கூட்டிவிட வேண்டும். அசெம்பிளி மெம்பர்களில் ஒருவர் பிரதம மந்திரியாகவும், மற்ற இருவர் மந்திரிகளாகவும் ராஜாவால் நியமிக்கப்படுவர். மந்திரிகள் அசெம்பிளிக்கு ஜவாப்தாரியானவர்கள். அசெம்பிளி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினால் இந்த மூவரும் பதவியிலிருந்து விலகிவிட வேண்டும்.

சமஸ்தானத்தின் வருமானத்தில் பாதி கிராம பஞ்சாயத்துக்களுக்காக ஒதுக்கப்படும். சமஸ்தானத்தின் பட்ஜெட், அசெம்பிளியின் வோட்டுக் குட்பட்டது. இன்னம் ஐந்து வருஷங்களுக்கு, ராஜா தன் சொந்த செலவுக்காக வருஷத்திற்கு 36 ஆயிரம் (மாதம் மூவாயிரம் ரூபாய்) எடுத்துக்கொள்ளுவார். அதற்குப் பிறகு அந்தப் பணமும் அசெம்பிளியின் வோட்டுக்குட்பட்டதாக இருக்கும். இலவச கட்டாய ஆரம்பக் கல்வி எல்லோருக்கும் அளிக்கப்படும். ஒரு வருஷத்திற்குள் படிப்பின்மையை ஒழிப்பதற்கு உடனே ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்படும்.

சமஸ்தானத்தின் நீதி நிர்வாகம் பெரும்பாலும் கிராம பஞ்சாயத்துக்களால் கவனிக்கப்படும்.

பஞ்சாயத்துக்களின் நீதி வேலைகளையெல்லாம் மேல் பார்க்க ஒரு ஹைக்கோர்ட் இருக்கும். ஜனங்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை கூற ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார்.

சீர்திருத்தம் அமுலுக்கு வந்த முதல் இரண்டு வருஷங்

களுக்கு, சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வர முடியாது.

இந்த சீர்திருத்தத்திற்கு காந்திஜியும், இதர காங்கிரஸ் தலைவர்களும் ஆசீர்வாதம் செய்தனர்.

இந்த சமஸ்தானத்தில் நீதிமன்றங்கள் சம்பந்தமாக செய்யப்பட்ட சீர்திருத்தம்பற்றி மகாத்மா காந்தி, 1939ஆம் ஜனவரி மாதம் 14-ந் தேதி ''ஹரிஜனி''ல் பின் வருமாறு எழுதினார் :

''கீழ்க் கோர்ட்டில் இலவசமாக, 'இப்படியா'! என்று நாம் நம்ப முடியாத அவ்வளவு சாதாரணமாக நீதி வழங்கப் படும். குணதோஷங்களைக் கூறுகிறவர்கள். நீதி இலவசமாக, சர்வ சாதாரண நீதியில் வழக்கப்படுவதை குறை கூறுமாட்டார்கள்; ஆனால் நடுவாந்திரக் கோர்ட்டுகள் எடுபடுவதையும், வழக்காடுகிறவர்கள், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் ஆகியவர்களின் கதியை நிர்ணயிக்கும் பொறுப்பு ஒரே நபரை நீதிபதியாகக் கொண்ட ஒரு ஹைக்கோர்ட்டின் கையில் விடப்பட்டிருப்பதையும் குறித்து அதிருப்தியடைவார்கள். 75,000 ஜனத்தொகையுள்ள ஒரு சமஸ்தானத்தில் ஒரு ஜட்ஜுக்கு மேலாகா யிருப்பது அனுவசியமாகும்; அசாத்யமுமாகும். சரியான ரகப் பேர்வழியை பிரதம நீதிபதியாக நியமித்தால் உயர்ந்த சம்பளம் பெறும் பல ஜட்ஜுகள் (பெஞ்சு) எப்படி கலப்பற்ற நீதியை வழங்குகிறார்களோ, அப்படியே அவரும் வழங்குவாரென்பதில் சந்தேகமில்லை. நீதி இப்படி சர்வ சாதாரணமாக்கப்படுவதால், தொல்லை பிடித்த முறையையும், பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் உபயோகிக்கப்படும் நூற்றுக்கணக்கான சட்ட நிப்போர்ட்டுகள் உள்பட குவியல் குவியலான சட்ட புஸ்தகங்கள் உபயோகிக்கப்படுவதையும் ஒழிக்கலாம்.''

இந்த சமஸ்தானத்தின் கல்வி மந்திரியாகயிருக்கும் ராஜகுமார் அப்பா சாகிப் பந்த்தின் குணத்தை காந்திஜி பாராட்டுகையில், "இவர் பெற்றுள்ள மேல் நாட்டுக் கல்வி இவரைக் கெடுக்கவில்லை. இவர் அஹிம்ஸையையும், சத்தியத்தையும் பின்பற்றுகிறவராம். கிராம அபிவிருத்தி வேலையில் கலந்து கொள்ளுகிறார். எவ்வளவு சுலபமாக பேனுவால் எழுதுகிறாரோ அவ்வளவு சுலபமாக மண்வெட்டி, கூடையைக் கொண்டும் வேலை செய்கிறார். தோட்டி வேலை செய்வதில் கொம்பவும் பெருமையடைகிறார்." என்று குறிப்பிட்டார்.

இந்த ராஜகுமார், ராஜாவின் இரண்டாவது புத்திரர். அடுத்தபடியாக பட்டத்திற்கு வரவேண்டியவர் ராஜாவின் பேரன். இவர் இப்பொழுது இங்கிலாந்தில் கல்வி பயின்று வருகிறார்.

"இந்த சமஸ்தானத்தில் படிப்பின்மை ஒழிப்பு இயக்கம் தீவிரமாக, பலனுடன் நடந்து வருகிறது" என்று, இந்த புஸ்தகத்தின் ஆசிரியருக்கு அவுண்டு திவான் 1939-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 21-ந் தேதி எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

1939-ம் வருஷம் மே மாதம், புதிய அரசியலமைப்புப்படி பொதுத் தேர்தல் நடைபெற்றது. ராஜகுமார் அப்பா சாகிப்பும் ஒரு அபேட்சகராக நின்று, தேர்தலில் வெற்றி பெற்றார். இந்த தேர்தல்கள் முடிந்தவுடன், ராஜா சாகிப், தமது புதல்வர் அப்பா சாகிப்பை சமஸ்தானத்தின் பிரதம மந்திரியாக நியமித்தார். பிரதம மந்திரி, ஸ்ரீ. அமீருதீன் குயோர்ஷி என்ற மெம்பரை தனது மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள விரும்பவே, ராஜாவும்,

ஸ்ரீ. குயோர்ஷியை மந்திரியாக நியமித்தார். எனவே இப்பொழுது அவுண்டில் இரு மந்திரிகள் இருக்கின்றனர்.

புதிய சட்ட சபை ஜூன் மாதம் 1-ந் தேதி கூடிற்று. அதில் பிரதம மந்திரி சமர்ப்பித்த பட்ஜெட்டில் சர்க்காரின் நிர்வாகச் செலவு குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைக்கப் பட்டிருந்தது. கிராம அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் ஆகிய மூன்றுக்கும் இதுவரை இருந்ததைவிட நான்கு மடங்கு அதிகமாக செலவு செய்யப்படும்.

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வருமுன் திவான் பிருந்த ராவ் சாகிப் எஸ். ஜி. தர்சனு, 30 வருஷ சர்வீஸ் முடிந்ததும் 1939ஆம் மே மாதக் கடைசியில் ரிடையரானர்.

அத்தியாயம் 3

சமஸ்தானங்களும் காங்கிரசும்

ஹரிபுரா காங்கிரலில் சமஸ்தானங்கள சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பின், காங்கிரஸ் தன் நடு நிலைமைக் கொள்கையை உதறித் தள்ள வேண்டிய பல சம்பவங்கள் நடந்தன. சமஸ்தானாதிபதிகள் ஹரிபுரா தீர்மானத்தில் தஞ்சமடைந்து, பிரஜைகளுக்கு மாகாணங் களிலிருந்து உதவி வராதென்ற தைரியத்தில் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டனர்.

எனவே, டில்லியில் 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதக் கடைசியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, சமஸ்தானங்கள் பற்றி காங்கிரஸ் கொள்கையை விளக்கு கையில்,

" பிரிட்டிஷ் இந்தியாவைப்போல் சமஸ்தான ஜனங்களுக்கும் தாமாகவே உரிமைகளைக் கொடுப்பதுதான் சமஸ்தானாதிபதி களுக்கு க்ஷேமம் என்பதை சமஸ்தானாதிபதிகள் உணரும்படிச் செய்வதே காங்கிரசின் கொள்கையாக யிருக்கும்," என்று கூறியிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார், இந்திய ராஜாக்களின் கொடுங் கோலாட்சிக்கு உதவி புரிந்தனர். தங்கள் அரசுப்புகளை தென்களுல், தால்சார் முதலிய சமஸ்தானங்களுக்கு அனுப்பி, பிரஜைகளின் நியாயமான கிளர்ச்சியை ஒடுக்கு வதில் ராஜாக்களுக்கு உதவினர். இதை காங்கிரஸ் கண்டித்தது. பக்கத்திலுள்ள சமஸ்தானங்களில் இப்படி அடக்குமுறைகள் தாண்டவமாடுவதை சகித்துக்கொண்

டிருக்க முடியாதென ஓரிஸ்ஸா காங்கிரஸ் மந்திரி சபை பிரிட்டிஷ் சர்க்காரை எச்சரித்தது.

"சமஸ்தானாதிபதிகளுக்கு, வெளியிலிருந்தோ, உள்ளேயிருந்தோ ஆபத்து வராமல் காப்பாற்ற பிரிட்டிஷ் சர்க்கார், ஆதிபத்திய சர்க்கார் என்ற ஹோதாவில் கடமைப்பட்டிருப்பது போல, சமஸ்தானாதிபதிகள் நியாயமாக ஆட்சி நடத்துகிறார்களா என்பதைப் பார்க்கவும் அது கடமைப்பட்டிருக்கிறது. சமஸ்தானத்தில் கடுமையான தொத்து வியாதி வந்தால் பக்கத்து மாகாண மந்திரிகள் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? தான் தலையிட்டால் பலனேற்படும் என்று காங்கிரஸ் கருதினால், சமயம் வரும்போது காங்கிரஸ் அப்படிச் செய்தே தீரும்,"

என்று காந்திஜி, பிரிட்டிஷ் சர்க்காரின் கடமையையும், காங்கிரசின் பொறுப்புகளையும், தெளிவாக்கினர். பிரிட்டிஷ் சர்க்கார் இதற்கு செவிசாய்க்கவில்லை.

காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களில் அநேகமாக அனைவரும் சமஸ்தானப் போராட்டத்திற்கு வழிகாட்ட ஆரம்பித்தார்கள். சர்தார் பட்டேல் கத்தியவார் சமஸ்தானங்களைப் பார்த்துக்கொண்டார். சேத் பஜாஜ் ஜெயப்பூரில் கவனம் செலுத்தினர். ஸ்ரீ. சங்கராராவ் தேவ் மகாராஷ்டிர, கர்னாடக சமஸ்தானங்களில் சிரத்தை காண்பித்தார். ஸ்ரீ. ஹரிகிருஷ்ண மஹதாப் ஓரிஸ்ஸா சமஸ்தான பிரஜைகளுக்கு யோசனை கூறினர். பண்டித ஜவாஹர் காஷ்மீர், காசி சமஸ்தான விவகாரங்களை விசாரித்து, பிரஜைகளின் சங்கங்கள் எந்த வழியைப் பின்பற்ற வேண்டுமென கூறினர்.

மகாத்மா காந்தி சும்மா இருந்தாரா? திருவாங்கூர், ஹைதராபாத் முதலிய சமஸ்தான காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கு அவ்வப்போது கட்டளை பிறப்பித்து வந்தார்.

இந்திய ராஜாக்கள் அனைவருக்கும் புத்திமதி கூறினார். 1938-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் எல்லா சமஸ்தான இயக்கங்களும் மகாத்மாஜியின் மேற்பார்வையில் நடக்க ஆரம்பித்தது. 'மகாத்மாஜியின் மேற்பார்வையில்' என்றால், 'காங்கிரசின் மேற்பார்வையில்' என்று அர்த்தம் என்பதை சொல்லத் தேவையில்லை.

சமஸ்தானங்களில் தனி காங்கிரஸ் ஸ்தாபனங்கள் இருக்க வேண்டுமென்றும், இந்த ஸ்தாபனங்கள் தேசிய காங்கிரசின் கிளைகளாக இருக்கக்கூடாதென்றும் காந்திஜி பல வருஷங்களாக சொல்லி வந்தார். 1922ம் வருஷத்தில் இது சம்பந்தமாக அவர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது :

" பிரஜைகள் தங்கள் குறைகளை போக்கிக்கொள்ள பொது ஜன அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டும். கிளர்ச்சி செய்ய வேண்டும். ஒத்துழையாமை ஆரம்பமானதும்தான் காங்கிரஸ் உபயோகமுள்ள ஒரு ஸ்தாபனமாயிற்று என்று அடிக்கடி சொல்லப்படுவதை நான் கேட்கிறேன். இது தவறான அபிப்பிராயமாகும். காங்கிரஸ் கிளர்ச்சியானது ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்க ஹேதுவான ஒரு நிலைமையை உண்டாக்கியது. ஜனங்களின் குறைகளை வெளியிட இந்தியாவில் காங்கிரஸ் ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனமாக இருந்து வருகிறது. காங்கிரஸ் பொது ஜனங்களின் சக்தியையும் பலக் குறைவையும் காண்பிக்கும் ஒரு 'தர்மாமீட்டர்.' சமஸ்தான பிரஜைகளும், அவர்களுடைய காங்கிரஸை ஆரம்பித்து, மகாநாடுகளை நடத்த வேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள தேசிய காங்கிரசுக்கும் இதற்கும் சம்பந்தமிருக்கக்கூடாது. சமஸ்தான பிரஜைகள் தங்களுடைய உள்ளூர் விவகாரங்களை தேசிய காங்கிரசுடன் கலந்து, கெடுத்துக்கொள்ளாமல், உடனே தனி ஸ்தாபனத்தை ஆரம்பிக்க வேண்டும்."

காந்திஜியின் இந்த அபிப்பிராயந்தான் ஹரிபுரா தீர்மானத்தில் அடங்கியிருக்கிறது.

ஓரிஸ்ஸா சமஸ்தான சர்க்கார்களின் கொடூர ஆட்சிக்கு உதவி புரியச் சென்ற பிரிட்டிஷ் சர்க்கார், ராஜ்கோட்டில் தன்னுடைய முழு ஸ்வரூபத்தையும் காட்டியது. பிரஜைகளுக்கும், தர்பாருக்கும் சமரசம் ஏற்படுவதில் சிரத்தை காண்பிப்பதற்குப் பதிலாக, பிரிட்டிஷ் சர்க்காரின் ஏஜெண்டாகிய ரெஸிடென்ட் கிப்ஸன், பிரஜைகள் - தாகூர் சாகிப் ஒப்பந்தத்தை சிதறடித்து விட்டார்.

உடனே காந்திஜியும், காங்கிரஸின் சமஸ்தானக் கொள்கையில் மாறுதலேற்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர்.

"சமஸ்தான மக்களிடையே விழிப்பு ஏற்படாமலிருக்கும் போது, சமஸ்தான விவகாரங்களில் நடுநிலைமைக் கொள்கை அநுஷ்டிக்க வேண்டுமென காங்கிரஸ் முடிவு செய்தது. ஆனல் இப்பொழுது எங்கு பார்த்தாலும் விழிப்பும், நீண்ட காலம் கஷ்டத்தை அநுபவித்தேனும் நியாயமான உரிமைகளை பெற்றே தீருவதென்ற உறுதியும் ஏற்பட்டிருக்கும்போது, காங்கிரஸ் அதே நடுநிலைமைக் கொள்கையை அநுஷ்டிப்பது கோழைத்தனமாகும்," என்றார்.

ராஜ்கோட் பிரச்னையில் மகாத்மாஜி உண்ணாவிரதம் இருந்தபோது, பிரிட்டிஷ் சர்க்கார் தலையிட வேண்டுமென்றும், பிரச்னை காந்திஜியின் விருப்பப்படி தீராவிட்டால், ராஜீநாமாச் செய்து, அரசியில் நெருக்கடியை உண்டு பண்ணுவோமென காங்கிரஸ் மந்திரி சபைகள் வைசிராயை எச்சரித்தன. இதிலிருந்து காங்கிரஸ், அப்போதைக்கப்போது, தனது சமஸ்தானக் கொள்கையை மாற்றிக் கொண்டு வந்திருப்பதை அறிந்துகொள்ளலாம்.

சமஸ்தான பிரஜைகளுக்கும் தலைமை வகித்து நடத்த தனக்கு உரிமையும், கடமையும் எப்போதும் உண்டு என்று காங்கிரஸ், திரிபுரி செஷனில் தன் கொள்கையை ஸ்பஷ்டமாகத் தெரிவித்தது. அந்த தீர்மானத்தின் வாசகம் :

"ஹரிபுராவில் சமஸ்தானங்கள் சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானத்தின் பயனாக, சமஸ்தான பிரஜைகள் தாங்களாக, கட்டுப்பாடுடன், அபிவிருத்திக்கு வழி தேட ஆரம்பித்து விட்டார்கள். ஹரிபுரா தீர்மானம் அதன் மூலம் எதிர்பார்த்த பலனைக் கொடுத்திருக்கிறது. சமஸ்தானப் பிரஜைகளிடையே தன்னம்பிக்கையும், பலமும் வளர வேண்டுமென்பதே ஹரிபுரா தீர்மானத்தின் அடிப்படைக் கருத்து. சமஸ்தானப் பிரஜைகளின் சுன்மையை உத்தேசித்தே அவ்வாறு செய்யப்பட்டது. அப்போதிருந்த சந்தர்ப்பங்களையும், அவற்றுல் அமைந்த சாதக பாதகங்களையும் கருத்தில் வைத்துக்கொண்டு அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே யல்லாது, காங்கிரஸ் தலையிடக்கூடாது என்று தன் உரிமையை குறைத்துக் கொள்ளவில்லை. சமஸ்தானப் பிரஜைகளுக்கும் தலைமை வகித்து நடத்தவும், தன் செல்வாக்கைக் கொடுத்து உதவவும் காங்கிரசுக்கு உரிமையும், கடமையும், எப்போதும் உண்டு. தனக்குள்ள உரிமையை அதன் மூலம் விட்டுக் கொடுக்கவில்லை. தற்சமயம் சமஸ்தானங்களில் ஏற்பட்டிருக்கும் பெரும் விழிப்பால் காங்கிரஸ் ஒரு தடையை தானே ஏற்கனவே ஏற்படுத்திக்கொண்டிருந்ததை தளர்த்தியோ அல்லது பூர்ணமாக விட்டோ நேராக சமஸ்தானப் பிரஜைகளுடன் அதிகமாக ஒத்துழைக்க சமயம் நேரலாம். அதன் மூலம், காங்கிரசானது சமஸ்தானப் பிரஜைகள் போராட்டத்தில் நாளுக்கு நாள் அதிகமாக நேர்முகமாக தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும்படி ஏற்படும்.

"அவ்வப்பொழுது சந்தர்ப்பம் ஏற்படுவதற்கேற்றவாறு இதுபற்றி வேண்டியதைச் செய்து, கொள்கையை அறிவிக்கவும்,

வேலையை நிர்ணயிக்கவும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது.

"காங்கிரஸின் லக்ஷியமாகிய பூரண சுயேச்சை சமஸ்தானங்கள் உள்ளிட்ட இந்தியா பூராவுக்குமே. இந்தியாவின் மற்ற பாகங்களிலிருப்பது போலவே சமஸ்தானங்களிலும் ராஜீய, சமூக, பொருளாதார சுதந்தரம் இருக்க வேண்டும் என இக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது."

இவ்வளவு தூரம் எச்சரிக்கைக் கொடுத்தும், சமஸ்தானாதிபதிகள் சரியான பாதையில் செல்லவில்லை. ஏதோ சிலர், ஒரு சில சீர்திருத்தங்களைக் கொடுத்தனர். வலது கையால் கொடுத்த அற்ப சலுகைகளை, மகாயுத்தம் ஆரம்பமானதும் இடது கையால் பிடுங்கிக்கொண்டு விட்டனர். பொறுப்பாட்சி என்ற பேச்சையே எடுக்கவேண்டாமென்கின்றனர். எனவே காங்கிரஸும் தனது நிலையை மேலும் விளக்கியது. 1940-ம் வருஷம் மார்ச் மாதத்தில் ராம்காரில் நடந்த 53-வது காங்கிரஸ் செஷன் இந்திய அரசியல் நெருக்கடி பற்றி நிறைவேற்றிய தீர்மானத்தில் சமஸ்தானங்களை பிரஸ்தாபித்து, கீழ்க்கண்டபடி கூறியிருக்கிறது :

"இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கோ, வெளிநாட்டுச் சுயநல உரிமைக்காரர்களுக்கோ, இந்திய சுதந்திரப் பாதையில் குறுக்கே நிற்பதற்கு உரிமை இருப்பதாக காங்கிரஸ் ஒப்புக் கொள்ள முடியாது. இந்தியாவின் ஆதிபத்தியம், சமஸ்தானங்களிலும் சரி, மாகாணங்களிலும் சரி, மக்களிடம்தான் இருக்க வேண்டும். மற்ற எல்லா நலன்களும், மக்களின் ஜீவாதார நலன்களுக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும். சமஸ்தானங்கள் விஷயமாக எழுப்பப்படும் கஷ்டம், பிரிட்டிஷாரின் சிருஷ்டியென்றும், அந்நிய ஆட்சியிலிருந்து இந்தியர் விடுபட்டு விட்ட

தாக, சந்தேகத்திற்கு இடமில்லாத முறையில் அறிவிக்கப்பட்டா லொழிய, இது திருப்திகரமாகத் தீராதென்றும் காங்கிரஸ் கருது கிறது.''

மாகாணங்களில் ஆட்சி புரிகிறவர்களாகிய பிரிட்டிஷ் சர்க்காரும், சமஸ்தானங்களில் ஆட்சி புரிகிறவர்களாகிய எதேச்சாதிகார மன்னர்களும் எப்படி ஒருவருக்கொரு வர் உதவி புரிந்துகொள்ளுகிறார்களோ, அப்படியே மாகா ணங்களிலும், சமஸ்தானங்களிலும் உள்ள இந்தியர்கள் தங் களுடைய பொது நலன்களுக்கு ஒன்றுபட்டு வேலை செய் வதில் யாரும், குறிப்பாக இப்பொழுது ஆட்சி நடத்துகிற வர்கள், குறை கூறுவதற்கு ஒன்று மில்லை.

பூர்ண சுயராஜ்ய லக்ஷியத்தைப் பெற இந்தியாவில் போர் ஆரம்பமாகும் பட்சத்தில், அது மாகாணங்களிலும், சமஸ்தானங்களிலும் சேர்ந்து நடக்குமென்பதில் சந்தேக மில்லை. சமஸ்தானங்கள், சட்ட மறுப்பு இயக்கங்களில் 1938, 1939-ம் வருஷங்களில் போதிய அளவுக்கு பயிற்சி பெற்று விட்டது. இயக்கம் ஆரம்பமானால், பிரிட்டிஷ் இந்தியா எதிர்பார்க்கிறபடி, போரின் முன்னணிக்கு சமஸ் தான பிரஜைகள் வருவார்களென்பதில் சந்தேகமில்லை.

அத்தியாயம் 4

பொறுப்பாட்சிக்கு பிரிட்டிஷ் எதிர்ப்பு

இந்திய சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி சர்க்கார் கள் ஏற்படுவதை பிரிட்டிஷ் சர்க்கார் ஆக்ஷேபிக்கிறதா? ஆக்ஷேபிக்கப் போவதில்லை யென்று உதவி இந்தியா மந்திரி பார்லிமென்டில் அறிவித்தார். இப்படிச் சொல்லப்பட் டதே யொழிய, உண்மையில் இதற்கு நேர்மாறுகவே பிரிட்டிஷ் சர்க்கார் நடந்து வருகிறது.

முதன் முதலில் திருவாங்கூர் திவான் சர். சி. பி. ராமஸ்வாமி அய்யர்தான், மகாராஜா பிரிட்டிஷ் மன்னரு டன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தமே, சமஸ்தான பிரஜை களுக்கு பொறுப்பாட்சி யளிப்பதற்கு தடையாக யிருப்ப தாகக் கூறினார்.

1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம், ஸ்ரீமூலம் அசெம்பிளியில், "பொறுப்பாட்சி சர்க்காரை ஸ்தாபிக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி விவாதிக்க, சபை நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டும்" என்று ஸ்ரீ. டி. எம். வர்க்கீஸ் ஒரு பிரேரணை கொண்டு வந்தார். இதற்கு திவான்—சபாநாயகரான சர். சி. பி. ராமஸ்வாமி அய்யர் பதிலளிக்கையில், ஒப்பந் தப் பொறுப்புகளைக் குறிப்பிட்டார். அவர் கூறியதன் சுருக்கம்.

"சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குமுள்ள ஒப்பந்தம், சமஸ்தான மக்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தமல்ல.

பிரிட்டிஷ் பார்லிமெண்டும் இவ்வுடன்படிக்கையின் ஒரு கட்சியல்ல. சமஸ்தானாதிபதியும் பிரிட்டிஷ் மன்னருமே உடன் படிக்கைகளின் கட்சிகள். ஆகையால் உடன்படிக்கைப் பொறுப்புகள் சமஸ்தானாதிபதியினுடையவை. அவற்றை அவர் வேறு யாருக்கும் (பொதுஜனப் பிரதிநிதிகளுக்கு) மாற்றிவிட உரிமையில்லை. உடன்படிக்கை செய்துகொண்ட இருவரில், ஒருவர் மற்றவரது அநுமதியின்றி தன் பொறுப்பை பிறருக்கு மாற்றுவது கூடாது.

"சமஸ்தானங்களில் உண்மையான பொறுப்பாட்சி ஏற்படுத்தினால், மகாராஜா தன் மீதுள்ள பொறுப்பை தன் இஷ்டப்படி நிறைவேற்ற முடியாதவராவார். இதற்கு பிரிட்டிஷ் ராஜாங்கம் சம்மதிப்பதாக இருக்கலாம்; சமரச ஏற்பாடுகள் செய்வதாயிருக்கலாம். எப்படியாயினும், உடன்படிக்கைப் பொறுப்புகளை நிறைவேற்றுவது மகாராஜாவுக்கு கஷ்டமாக இருப்பதாக கருதப்படும் வரையில் பொறுப்பாட்சியளிக்க முடியாது.

"தற்காலமுள்ள நிலைமையில் பொறுப்பாட்சி யளிக்க திருவாங்கூர் சர்க்காருக்கு உரிமையில்லை."

சர். சி. பி. இப்படிக் கூறுவது சுத்தத் தவறு என்பதை உதவி இந்தியா மந்திரி லார்டு விண்டர்டன் 1938-வது பிப்ரவரி மாதம் 21ந் தேதி பார்லிமெண்டில் அறிவித்தார்.

காப்டன் ஹீல்கர்ஸ் என்ற ஒரு மெம்பர் உதவி இந்தியா மந்திரியை பின்வருமாறு கேட்டார்:

"ஒரு இந்திய சமஸ்தானாதிபதி பொறுப்பாட்சி சர்க்கார் அளிப்பதற்கு, ஆதிபத்திய சர்க்காரின் சம்மதம் பெற வேண்டிய அவசியம் தடையாக இருக்கிறது என்று திருவாங்கூர் திவான் பகிரங்கமாக அறிவித்தது உதவி இந்தியா மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? இது விஷயமாக மன்னர் சர்க்காரின் கொள்கை யென்ன?"

உதவி இந்தியா மந்திரி பதில்:—"அந்த திவான் கூறியதின் சிப்போர்ட்டைப் பார்த்தேன். பூர்ண அதிகாரம் பெற்ற சமஸ்தானங்களின் உள்நாட்டு நிர்வாக விஷயமாக சாதாரண சமயங்களில் குறுக்கிடுவது பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையல்ல. அரசியல் வளர்ச்சிக்காக சமஸ்தானாதிபதி அளிக்கும் திட்டங்களுக்கு ஆதிபத்திய சர்க்கார் குறுக்கீடாக இருக்கவே இருக்காது என்பதை உறுதி கூறுகிறேன். நானித சமஸ்தானாதிபதிகள் இதைப் போல வளர்ச்சிகளுக்கு அங்கிகாரமளிக்குமுன் ஆதிபத்திய சர்க்காரின் சம்மதம் தேவையாகயில்லை; எனக்குத் தெரிந்தவரை இந்தமாதிரி விஷயங்களில் ஆதிபத்திய சர்க்காரின் சம்மதம் கேட்கப்படவுமில்லை. சாதாரண சமயங்களில் ஆலோசனை கேட்கப்பட்டால், பிரிட்டிஷ் சர்க்கார் யோசனை கூறுவதோடு நிறுத்திக் கொள்ளும்."

உதவி இந்தியா மந்திரியின் பதிலில், "பொறுப்பாட்சி" என்ற வார்த்தை இல்லாதபோதிலும், "அரசியல் வளர்ச்சி" என்ற வார்த்தை இருக்கிறது. பொறுப்பாட்சி, அரசியல் வளர்ச்சியின் கடைசிப் படியாகையால், "அரசியல் வளர்ச்சி"யில் பொறுப்பாட்சியும் உள்ளடங்கியிருப்பதாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியா மந்திரியிடமிருந்து இப்படி பதில் வருமென்று சர். ஸி. பி. எதிர்பார்க்கவில்லை.

இந்த பதிலுக்குப் பின் பொறுப்பாட்சியை உடனே அளித்திருக்கலாமல்லவா? தான் முதலில் கூறிய சால்ஜாப்புகளுக்கு பின்கண்ட சமாதானம் கூறியதோடு சும்மா இருந்து விட்டார்:

"18, 19-வது நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் சர்க்கார் நானித சமஸ்தானங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களையும், அந்த ஒப்பந்தங்களின் கீழ் சமஸ்தானங்களில் வளர்ந்துள்ள அரசி

பல் ரீதியான அநுஷ்டானங்களையும் நோக்குங்கால், லார்டு விண்டர்டலின் அறிக்கையானது நிலைமையை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்திருக்கிறதென்பது விளங்கும். 1805-ம் வருஷத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின் 9-வது ஷரத்தும்,* இதன் கீழ் வளர்ந்த அநுஷ்டானமும் வழிகாட்டிகளாக யிருந்தன. மன்னர் சர்க்காருக்கும் இந்தியாவிலுள்ள பெரிய சமஸ்தானங்களில் ஒன்றான மைசூர் சர்க்காருக்கும் 1913-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஒப்பந்தந்தான் சமீபத்திலேற்பட்டதாகும். அதில் 'நிர்வாக முறையில் முக்கியமான மாறுதல் எதுவும் வைசிராய் சம்மதமின்றி செய்யக்கூடாது' என்று கூறப்பட்டிருக்கிறது.

---

* 1805-ம் வருஷம் மே மாதம் 2-ந் தேதி திருவாங்கூர் மகாராஜா ரகுராஜ பகதூருக்கும் கிழக்கிந்திய கம்பெனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்திலுள்ள 9-வது ஷரத்து :

1795-ம் வருஷம் கிழக்கிந்திய கம்பெனிக்கும் காலஞ்சென்ற திருவாங்கூர் ராஜாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில், இரு சாராரின் உறவை பலப்படுத்துவதற்காகவும், சிநேக பாவத்தை உறுதிப்படுத்துவதற்காகவும், ஒருவர் நலனை இன்னொருவர் நலனுக பாவிப்பதற்காகவும் உள்ள பகுதிகள் இதன் மூலம் புதுப்பிக்கப்படுகிறது, ஊர்ஜிதம் செய்யப்படுகிறது; இதை அநுசரித்து மகாராஜா அவருடைய நிதிகளில் சிக்கனப்படுத்தவும், வரிகளை நன்கு வசூலிக்கவும், நீதி, நிர்வாகம், வர்த்தகப் பெருக்கு, வியாபாரம், விவசாயம், கைத்தொழில் அல்லது மகாராஜாவின் நலன்கள் வளர்ச்சி சம்பந்தமான எந்த விஷயங்களிலும், அவருடைய ஜனங்களின் சந்துஷ்டி, இரு நாடுகளின் பரஸ்பர நலன்கள் - இவைகள் சம்பந்தமாகவும், பிரிட்டிஷ் சர்க்கார் அப்போதைக்கப்போது அவசியமென கருதி கூறும் யோசனைக்கு (மகாராஜா) எப்பொழுதும் தன்னால் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவுக்கு செவிசாய்ப்பதாக இந்த ஒப்பந்தத்தின் மூலம் வாக்களிக்கிறார்.

"இந்த விஷயங்களை யெல்லாம் கவனித்துப் பார்க்குமிடத்து, இந்திய சமஸ்தானங்கள்–மன்னர் சர்க்கார் பரஸ்பர சம்பந்தத்தில் லார்டு விண்டர்டன் ஒரு முக்கியமான புதிய அத்தியாயத்தை புகுத்தியிருக்கிறார் என்பதை உணரலாம்."

1938-ம் வருஷக் கடைசியில் ராஜ்கோட் உள்பட பல சமஸ்தானங்களில் சட்டமறுப்பு இயக்கம் தீவிரமாக நடந்ததால், பார்லிமெண்டில் சமஸ்தானங்கள் பிரச்னை மீண்டும் கிளப்பப்பட்டது.

"இந்திய சமஸ்தானங்களில் அரசியல் சீர்திருத்தங்களை வழங்குவது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மையில் சமீபத்தில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன? இப்பொழுது பல இந்திய மாகாணங்களில் நடைபெறும் கிளர்ச்சிகள் பற்றி பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை யாது?" என்று, சர். ஜான் வார்ட்லா மில்னே என்ற மெம்பர் 1938-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16-ந் தேதி காமன்ஸ் சபையில் கேட்டார்.

இதற்கு சர்க்கார் பின்வருமாறு பதிலளித்தனர்:—

"1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 21-ந் தேதி லார்டு விண்டர்டன் செய்த அறிக்கை சர்க்காரை பூரணமாய் கட்டுப்படுத்துகிறது.

சமஸ்தானாதிபதிகள் ஆரம்பித்து வைக்கும் அரசியல் முன்னேற்றத் திட்டங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் முட்டுக்கட்டைகளைப் போட மாட்டார்கள். ஆனால், அரசியல் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டுமென்று சமஸ்தானாதிபதிகளை எவ்விதத்திலும் நிர்ப்பந்திக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. பல்வேறு நிலைமைகளை உத்தேசித்து, எத்தகைய அரசியல் இருக்க வேண்டுமென்று முடிவு செய்யும் பொறுப்பு சமஸ்தானாதிபதிகளுடையதுதான்.

"சமஸ்தானாதிபதிகளை பலாத்காரம், குழப்பம் இவற்றினின்றும் பாதுகாப்பதும், பிரஜைகளின் நியாயமான குறைகளுக்குப் பரிகார மளிப்பதில் உதவியளித்து யோசனை கூறுவதும், சமஸ்தானங்களிடம் ஆதிபத்திய உரிமையைப் பெற்றிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரின் பொறுப்புகள்."

பிரிட்டிஷ் சர்க்கார் இப்படிச் சொன்னார்களே யொழிய, அதே மாதத்தில் 28-ந் தேதி அவர்களுடைய பிரதிநிதியாகிய செஸிடென்ட் கிப்ஸன் மூலம், ராஜ்கோட் பிரஜைகளுக்கு பொறுப்பாட்சி கிடைப்பதை தடுத்து விட்டனர்.

எல்லா பிரஜா மண்டல்களும், இந்திய ராஜாக்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உடன்படிக்கைகள்படி செய்ய வேண்டிய கடமைகளுக்கு முரணில்லாத வகையில்தான் பொறுப்பாட்சி கேட்கிறது. அப்படி ராஜாக்கள் உடன்படிக்கைப் பொறுப்புகளை நிறைவேற்றுமற் போனால், பிரிட்டிஷ் சர்க்கார் சும்மா யிருக்காது. இதை இந்தியா உதவி மந்திரி கர்னல் மூர்ஹெட், காமன்ஸ் சபையில் பின்வருமாறு தெளிவாக்கினர்:

"1938 வது டிசம்பர் 16வ நான் தெரிவித்த கொள்கை விளக்கத்தின் கீழ் இப்பொழுது சமஸ்தானாதிபதிகள் அதுபவிப்பதைவிட அதிகமான அதிகாரங்களுள்ள எந்த ஸ்தாபனத்தையும் சிருஷ்டித்து விட முடியாது. அரசியல் அதிகாரத்தை சமஸ்தானாதிபதி விட்டுக்கொடுப்பதன் மூலம் ஏகாதிபத்திய பொறுப்புகளை நிறைவேற்றிவைக்கும் பொறுப்புகள் ரத்தாய் விட்டதாக கருத முடியாது. அந்த பொறுப்புகள் நிறைவேற்றி வைக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் சுதந்தரம் ஏகாதிபத்திய சர்க்காருக்கு உண்டு."

நிலைமை இப்படி தெளிவாக்கப்பட்டபோதுகூட பிரிட்டிஷ் சர்க்கார், சமஸ்தான பொறுப்பாட்சிக்கு மூட்டுக்கட்டை போடுவதற்கு என்ன காரணங்கள் என்பதை கவனிப்போம்.

(1) பண்டித ஜவாஹர் சொன்னதைப்போல், பிரிட்டிஷ் இந்தியாவில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடக்கும் சுயராஜ்ய இயக்கத்தின் வேகத்தை நேரிடையாக தடுக்க

முடியாத பிரிட்டிஷ் சர்க்கார், சமஸ்தானங்களின் மூலம் தடுக்கப் பார்க்கிறது.

(2) மகாயுத்தம் ஆரம்பமானதும்தான் சமஷ்டி திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. 1939 ஸெப்டம்பர் மாதத்திற்கு முன்னால் பிரிட்டிஷ் சர்க்கார் சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்படுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததற்கு, "பொறுப்பாட்சி ஏற்படும் போது சமஷ்டி சட்ட சபைப் பிரதிநிதிகள் தேர்தல் மூலமல்லவா பொறுக்கி யெடுக்கப்படுவார்கள்!" என்ற பீதி யிருந்தது. பொறுப்பாட்சி ஏற்பட்டால் அந்த பிரதிநிதிகள் சமஸ்தானாதிபதியால் நியமிக்கப்பட மாட்டார்கள். (அரசியலமைப்புப்பற்றிய சட்டம், சரித்திரம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவராகிய ஸ்ரீ. பெரிடேல் கீத் இப்படித்தான் அபிப்பிராயப்படுகிறார்.)

யுத்தம் ஆரம்பமாகுமுன் இருந்த நிலைமையிலேயே காங்கிரஸ் சமஷ்டி அசெம்பிளியில் மெஜாரிட்டியாக வந்திருக்க முடியும். காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டித் தலைவர் சர்தார் பட்டேல் இதை தெளிவாக்கியிருக்கிறார். அப்போப்பட்ட சமயத்தில், சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்பட்டு, பிரஜைகளின் உண்மையான பிரதிநிதிகள் சமஷ்டி சட்ட சபைக்கு வந்துவிட்டால், காங்கிரஸ் சொல்படி பிரிட்டிஷ் சர்க்கார் ஆட வேண்டுமே என்ற பீதியும் ஜான் புல்லுக்கு இருந்தது. இனி அந்த கவலை வேண்டிய தில்லை. ஏனெனில், காங்கிரஸ், முஸ்லிம் லீக், சமஸ்தானாதிபதிகள், ஆகிய சகலரும் அந்த சமஷ்டி திட்டத்தை நிராகரித்து விட்டனர்.

3. இரண்டு, மூன்று வருஷங்களாகவே, மகாயுத்தம் ஆரம்பமாகும் போலிருந்தது. பெரும்பாலான மாகாணங்

களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் இருந்தன. காங்கிரஸ் சொல்படியே கேட்க ஜனங்கள் தயாராயிருந்தார்கள். அந்த சமயத்தில் சமஸ்தானங்களிலும் பொறுப்பாட்சி வந்து, நிர்வாகம் ஜனங்களின் உண்மையான தலைவர்களிடம் போய்ச் சேர்ந்தால், காங்கிரஸுடன் சமஸ்தானங்களும் சேர்ந்து யுத்தத்தை எதிர்த்து விட்டால் என்ன செய்வது என்ற பயமும் இருந்தது. எனவே, சமஸ்தானாதிபதிகள் எதேச்சாதிகாரிகளாய் இருப்பதில்தான் பிரிட்டனுக்கு நன்மையுண்டு.

யுத்தம் முடிய இன்னும் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் கூட ஆகலாம். அதுவரை சமஸ்தானங்களில் ஜனநாயகத்தின் சின்னம்கூட தலைகாட்டப் போவதில்லை யென்பது நிச்சயம். ஆனால், பிரிட்டிஷ் இந்தியர்களும், சமஸ்தான பிரஜைகளும் 'நடக்கிற தெல்லாம் நடக்கட்டும்' என்று சும்மா யிருந்து விடுவார்களா ?

அத்தியாயம் 5

இரட்டையாட்சி பலிக்காது

சீர்திருத்த மலிக்கப்பட்டிருக்கும் சில சமஸ்தானங்களில் இரட்டையாட்சி அமுலுக்கு வந்திருக்கிறது. இது, 1920-ம் வருஷம் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் அமுலுக்கு வந்த ஆட்சியைப் போன்றது. இதன்படி, சில இலாகாக்கள் திவானின் ஏதேச்சாதிகாரப்படியும், வேறு சில இலாகாக்கள் சட்ட சபை மெம்பர்களின் விருப்பப்படியும் நிர்வகிக்கப்படும். சமஸ்தான நிர்வாக சபையில் (மந்திரி சபையில்) சட்ட சபையின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒன்று அல்லது இரண்டு மெம்பர்கள் இருப்பார்கள். சட்ட சபையிலுள்ள கக்ஷி பலத்தைப் பார்த்து, ராஜாவே, மெஜாரிட்டி கக்ஷியின் தலைவரை அழைத்து, அவரையும், அவர் கூறும் ஒரு நபரையும் மந்திரிகளாக நியமிப்பார். ஜனப்பிரதிநிதிகளாகிய இந்த மந்திரிகளிடம் உருப்படியான இலாகா எதுவும் கொடுக்கப்படுவதில்லை.

உதாரணமாக, கொச்சியை எடுத்துக்கொள்ளுவோம். இங்கு இப்பொழுது இரட்டையாட்சி அமுலிலிருக்கிறது. இந்த சீர்திருத்தம் 1938-ம் வருஷம் ஜூன் மாதம் 17-ந் தேதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அங்குள்ள சட்ட சபையில் மொத்தம் 58 மெம்பர்கள் இருக்கிறார்கள். இதில் 38 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள்; 12 பேர்கள் சர்க்காரின் ஊழியர்கள்; பாக்கி 8 பேர்கள் உத்தியோகப்பற்றில்லாத, நியமன மெம்பர்கள். சட்ட சபையின் ஆயுள் காலம் மூன்று வருஷம். இந்த ஆயுள் காலத்தை

நீடிக்க ராஜாவுக்கு அதிகாரமுண்டு. கொச்சி மகாராஜா, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ. அம்பாடி சிவராம் மேனனை மந்திரியாக நியமித்தார். (இவர் காலமாய் விட்டதால் இப்பொழுது டாக்டர் ஏ. ஆர். மேனன் மந்திரியாக இருக்கிறார்.) ஒரு மந்திரிதான் இருக்க வேண்டுமென யாதொரு நிபந்தனையுமில்லை. சில சமஸ்தானங்களில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலிருந்து 2, 3 மெம்பர்கள் மந்திரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது கொச்சியில் மந்திரியாயுள்ள டாக்டர் ஏ. ஆர். மேனன், விவசாயம், கூட்டுறவு, கிராம பஞ்சாயத்து, குடிசைத் தொழில், சுகாதாரம், ஆயுர்வேதம், மீன் இலாகா ஆகிய சில்லறை இலாகாக்களே மாத்திரம் நிர்வகிக்க அது மதிக்கப்பட்டிருக்கிறார். ஒரு பெரிய இலாகாகூட இவற்றிலில்லை. மந்திரி, "நிர்வாக விஷயத்தில் திவானுக்கு உதவி புரிவார்" என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. "திவானுக்கு உதவி புரிவார்" என்றிருப்பதால், திவான் சொல்படியே மந்திரி கேட்க வேண்டும் என்று அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது என்று திவான் சர். ஷண்முகம் செட்டி கூறுகிறார்.

"சட்டத்திலுள்ள எல்லா வார்த்தைகளையும் கவனிக்க வேண்டாம். எல்லாம் நடைமுறையில்தான் இருக்கிறது. நான் திவானாயிருக்கும் வரை, நான் கவனிக்கும் எல்லா இலாகாக்களிலும் மந்திரிக்கு சர்வ அதிகாரமுமிருக்கு மென்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்று சர். ஷண்முகம் சொல்லியிருக்கிறார்.

திவான் இப்படிச் சொன்னாரே யொழிய, நடைமுறையில் வேறு விதமாகத்தான் நடந்து கொண்டார். மாற்றப்பட்ட இலாகா மந்திரி அவருடைய இஷ்டப்படி செலவு

செய்ய மூன்று வருஷங்களுக்கு ரூ. 3 லக்ஷத்தையே திவான் ஒதுக்கிவைத்தார். இந்தத் தொகை போதாதென்றும், ஒரு வருஷத்திற்கு ரூ. 3 லக்ஷம் வேண்டுமென்றும் மந்திரி டாக்டர் மேனஜ் திவானைக் கேட்டார். இதற்கு திவான் இணங்கவில்லை.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்த இரட்டையாட்சியை விட சமஸ்தானத்திலுள்ள இரட்டையாட்சி மோசமானதென்று இந்த மந்திரியே அநுபவத்தின் மூலம் கூறியிருக்கிறார். 1939-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் இவர் பின் வருமாறு கூறினார் :—

"பிரிட்டிஷ் இந்தியாவில் இரட்டையாட்சி நடக்கையில், மந்திரிகளுக்கு நிதி விஷயங்கள் மீதும், அதிகாரிகள் மீதும் எவ்வளவு ஆதிக்கம் இருந்ததோ, அவ்வளவுகூட கொச்சியிலுள்ள இரட்டை ஆட்சியிலில்லை யென்பதை அநுபவ பூர்வமாகக் கூறுகிறேன். மாற்றப்பட்ட இலாகா மீது ஒதுக்கப்பட்ட இலாகாவுக்கு ஆதிக்கம் இல்லாமலிருக்க வேண்டும். உதாரணமாக, சில வரிகளையோ, அல்லது வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ மாற்றப்பட்ட இலாகாவுக்கு என்று ஒதுக்கி வைத்துவிட வேண்டும்."

ஜனங்களை பொறுப்பாட்சிக்கு அருகதையுடையவர்களாகச் செய்யவே முதலில் இரட்டையாட்சி அளிப்பதாக அதிகார வர்க்கத்தினர் சொல்லுகிறார்கள். படிப்படியாக பொறுப்பாட்சி யளிப்பதால் ஜனங்களிடையே ஒரு உண்மையான பொறுப்பு உணர்ச்சியை ஏற்படுத்தவே முடியாது. இப்பொழுது சில சமஸ்தானங்களில் அமுலுக்கு வந்து கொண்டிருக்கும் இரட்டையாட்சி வெறும் "கண் துடைப்பு" திட்டமேயொழிய, எதேச்சாதிகார ராஜாவின் முக்கிய அதிகாரத்தில் சிறிதளவுகூட ஜனப்பிரதிநிதிகளிடம் மாற்றும் திட்டமல்ல.

அத்தியாயம் 6

சமஷ்டி திட்டத்தின் கதி

இந்தியா சட்டத்திலுள்ள சமஷ்டி திட்டம் இனி அமுலுக்கு வரப்போவதில்லை என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம். இருந்தபோதிலும் இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்களையும், இதை ஏன் சமஸ்தானாதிபதிகள் எதிர்த்தார்கள் என்பதையும் நாம் கவனிப்பது நல்லது.

சமஸ்தானாதிபதிகள் கீழ்க்காணும் ஏழு நிபந்தனைகளின் பேரில்தான் சமஷ்டிக் கொள்கையை ஏற்றுக்கொண்டனர்.

(1) சமஷ்டி சர்க்காருக்கு, சமஷ்டியில் சேர்ந்துள்ளவர்கள் அளிக்கும் அதிகாரங்கள் மாத்திரம் இருக்க வேண்டும்.

(2) சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்ட வரை இதர அதிகாரம் எல்லாம் சமஸ்தானங்களிடமே இருக்க வேண்டும்.

(3) இந்தியா பூராவுக்கும் பொதுவாக நன்மையளிக்கும், அல்லது சமஷ்டியின் முக்கிய நலன்களுக்கு தேவையானதற்கும்தான் சமஷ்டி சர்க்காரிடம் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

(4) ராஜாக்களின் சொந்த விஷயங்கள், அவர்களுடைய வம்சங்கள் சம்பந்தமான விஷயங்கள் இவை அனைத்தும் மன்னர் சர்க்காரின் (பிரிட்டிஷ் சர்க்காரின்) ஏகபோக அதிகாரத்திற்குட்பட்டதாகயிருக்க வேண்டும்.

(5) மத்திய, சமஸ்தான சர்க்கார்களின் உரிமைகளை நிலைநாட்டவும், பாதுகாக்கவும் மன்னர் சர்க்கார், சமஸ்

தானங்கள் ஆகிய இரண்டின் கூட்டு நீதி மன்றமாக ஒரு சமஷ்டிக் கோர்ட்டை அமைக்க வேண்டும்.

(6) சமஸ்தானங்கள், மன்னர் சர்க்காருடன் தனித் தனியாக ஒப்பந்தம் செய்துகொண்டு சமஷ்டியில் சேரும்.

(7) ஒப்பந்தங்களும், சன்னதுகளும் இனியும் மீற முடியாததாக, மீற இசைந்து கொடுக்காததாக இருக்க வேண்டும்; சமஷ்டியில் சேருகையில் செய்துகொள்ளப் படும் ஒப்பந்தங்களால் முந்திய ஒப்பந்தங்களில் சற்று மாறுதலேற்பட்டால், அதற்கு மாத்திரம் விதிவிலக்கு உண்டு.

இந்த சமஷ்டி திட்டப்படி, சமஷ்டி சர்க்கார் இரட்டையாட்சி முறைப்படி நிர்வகிக்கப்படும். பிரிட்டிஷ் சர்க்கார், சமஷ்டி விவகாரங்களே ஒதுக்கப்பட்ட இலாகாக்கள், மாற்றப்பட்ட (சமஷ்டி சட்ட சபைக்கு) இலாகாக்கள் என்று இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். மாற்றப் பட்ட இலாகா விவகாரங்களிலும் தலையிட வைசிராய்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வைசிராயின் விசேஷப் பொறுப்புகள் என்று பெயர்.

சமஷ்டி திட்டம் அமுலுக்கு வருகையில் அதில் பத்து கவர்னரின் மாகாணங்களும், எல்லா சமஸ்தானங்களின் மொத்த ஜனத்தொகையில் பாதிக்கு (4 கோடிக்கு) குறைவாக இல்லாத சமஸ்தானங்களும், பிரதம கமிஷனரின் மாகாணங்களும் (பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானம், டில்லி, அஜ்மீர்-மீர்வாரா, குடகு, அந்தமான்-நிகோபர் தீவுகள், பாக்பிட்போடா) சமஷ்டியில் இருக்கும். அந்த சமஸ்தானங்களின் ராஜாக்கள், சமஷ்டி மேல் சபையில் 52 ஸ்தானங்களுக்கு மெம்பர்களே நியமனம் செய்ய சட்டப்படி அருகதையுடையவர்களாயிருக்க வேண்டுமென்ற நிபந்தனையு மிருக்கிறது.

சமஷ்டியில் உடனே சேராத சமஸ்தானங்கள், சமஷ்டி அமுலுக்கு வரும் வருஷத்திலிருந்து 20 வருஷங்களுக்குள் சமஷ்டியில் சேர உரிமை யுண்டு.

சமஷ்டிக்கு அவசியமான சமஸ்தானங்கள், சமஷ்டியில் சேர தாங்கள் தயாரென அறிவித்ததும், காமன்ஸ் சபை, லார்டு சபை இரண்டும் தனித்தனியாகக் கூடி, ஒரு பத்திரத்தை பிரிட்டிஷ் மன்னருக்கு வாசித்துக் கொடுக்கும். அதற்குப் பின்னர்தான் பிரிட்டிஷ் மன்னர், சமஷ்டியை ஆரம்பித்து வைக்க ஒரு தேதியை நிர்ணயிப்பார். ஒரு ஸ்திரமான சமஷ்டியை ஸ்தாபிக்க அவசியமான நிதியும், பொருளாதார, அரசியல் நிலைமையும் இருக்கிறதாவென்பதை கவனித்த பின்னரே, காமன்ஸ் சபை, லார்டு சபை இரண்டும், சமஷ்டியை அமுலுக்குக் கொண்டு வரும் தேதியை அறிவிக்குமாறு பிரிட்டிஷ் மன்னரை கேட்டுக் கொள்ளும்.

சமஷ்டி சட்ட சபைகள் அமைப்பு

சமஷ்டி **மேல் சபை**யில் பிரிட்டிஷ் இந்திய பிரஜைகளின் 150 பிரதிநிதிகளும், வைசிராய் நியமனம் செய்யும் 6 பிரிட்டிஷ் இந்தியர்களும், இந்திய சமஸ்தானாதிபதிகள் நியமனம் செய்யும் 104 பேர்களும் இருப்பார்கள்.

சமஷ்டி அசெம்பிளியில், பிரிட்டிஷ் இந்திய பிரஜைகளின் 250 பிரதிநிதிகளும், இந்திய சமஸ்தானாதிபதிகள் நியமனம் செய்யும் 125 பேர்களும் இருப்பார்கள்.

மேல் சபை மெம்பரின் வயது 30-க்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும். அசெம்பிளி மெம்பரின் வயது 20-க்குக் குறைந்ததாக யிருக்கக் கூடாது. ராஜ்யாதிகாரத்தை

ஏற்றுக்கொண்டுள்ள சமஸ்தானாதிபதிகளுக்கு மாத்திரம் வயது விஷயத்தில் விதிவிலக்கு உண்டு.

யாரும் இரண்டு சபைகளிலும் மெம்பராக யிருக்கக் கூடாது.

சமஸ்தான 'பிரதிநிதிகள்', சமஸ்தானாதிபதிகளால், சமஷ்டி சட்ட சபை மெம்பர்களாக நியமிக்கப்பட்டபின், இந்த மெம்பர்கள், இதர மெம்பர்களின் அந்தஸ்திலேயே இருப்பார்கள். தங்கள் இஷ்டப்படி வோட் செய்ய இவர்களுக்கு உரிமை யுண்டு. சமஸ்தானாதிபதி, தான் நியமித்த மெம்பர் மீது அதிருப்தியடைவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த மெம்பரை வாபஸ் வாங்க அவருக்கு அதிகாரம் கிடையாது.

மாகாணங்கள் சமஷ்டியில் சேர்ந்தேயாக வேண்டும். ஆனால் சமஸ்தானங்கள் இஷ்டப்பட்டால் சேரலாம்; இல்லையேல் இப்பொழுதுள்ளதைப் போலவே இனியும் தனியாக யிருக்கலாம். சமஸ்தானாதிபதி கையெழுத்திடும் சமஷ்டி பிரவேச சாஸனத்தை பிரிட்டிஷ் மன்னர் அங்கீகரிப்பதின் மூலமே அந்த சமஸ்தானம் சமஷ்டியில் சேருகிறது. இந்த சாஸனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அந்த சமஸ்தானம் சமஷ்டியில் நிரந்தரமாக யிருக்க வேண்டுமென சட்டம் கட்டுப்படுத்துகிறது. சாஸனத்தில் சமஷ்டி சர்க்காருக்கு விட்டு விடும் அதிகாரங்கள் போக பாக்கியுள்ள அதிகாரங்களையே சமஸ்தானாதிபதி உபயோகிக்க முடியும்.

சட்டத்திற்கு வியாக்யானம்

ஒரு தனிப்பட்ட நபர் விஷயத்தில் ஒரு சமஸ்தான கோர்ட், அதற்கு அரசியலமைப்புப்படியுள்ள அதிகார வரம்புபற்றி ஒரு தவறான வியாக்யானம் கூறுவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த நபர், சமஸ்தானத்திலுள்ள

ஹைக்கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து சமஷ்டி கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம்.

ஒரு கோர்ட், 'ஹைக்கோர்ட்' என்பதை மன்னர் சர்க்கார் அங்கீகரித்தாக வேண்டும்.

ஒரு வழக்கில், சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானத்தின் சர்க்காரே ஒரு கக்ஷியாக யிருந்தால், சமஷ்டி கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து, பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

10 மந்திரிகள்

ஒதுக்கப்பட்ட இலாகாக்களைத் தவிர, இதர இலாகாக்கள், 10 பேர்களுக்கு அதிகமாக யில்லாத "மந்திரிசபையின் உதவியின் பேரிலும், யோசனையின் பேரிலும் வைசிராயால் நிர்வகிக்கப்பட வேண்டும்" என்று சட்டத்திலிருக்கிறது. மந்திரிகளின் யோசனையை நிராகரிக்க வைசிராய்க்கு அதிகாரமுண்டு.

மந்திரிகளை பொறுக்குவது, அழைப்பது, டிஸ்மிஸ் செய்வது-இவைகளில் வைசிராய் தனது "யுக்தானுசார" அதிகாரத்தை உபயோகிக்கலாம். மந்திரி சபையில், முக்கிய மைனாரிட்டி வகுப்புகளுக்கும், சமஸ்தானங்களுக்கும், சாத்தியமானவரை பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டியது வைசிராயின் கடமையாகும்.

சமஷ்டி மந்திரி சபை பிரிட்டிஷ் மன்னரின் சார்பாக இந்தியாவில், கடல், ஆகாய, ராணுவப் படைகளுக்கு ஆட்களை சேர்க்கலாம்; மத்திய சர்க்கார் கொடுக்கும் சம்பளத்தில் உள்ள எல்லா படைகளின் மீதும் அதிகாரம் செலுத்தலாம்.

மந்திரிகளின் சம்பளங்களை வைசிராய் நிர்ணயிப்பார். (வைசிராயின் வருஷச் சம்பளம் ரூ 2,50, 800. இதைத்தவிர பல அலவன்சுத் தொகைகளும் உண்டு. இவருடைய சம்பளத்தையும், அலவன்சையும் குறைக்க சமஷ்டி சட்ட சபைக்கு அதிகாரம் கிடையாது.

சமஸ்தானத்தின் உரிமைகளுக்கு பாதுகாப்பு

எந்த இந்திய சமஸ்தானத்தின் உரிமைகளையும், சமஸ்தானாதிபதியின் உரிமைகள், அந்தஸ்தையும் பாதுகாக்கும் வேலை, வைசிராயின் விசேஷப் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது.

சமஷ்டி தேர்தல் சம்பந்தமாக ராஜாக்களுக்கு ஒரு சலுகையளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமஸ்தானாதிபதியோ அல்லது சமஸ்தானப் பிரஜையோ, ஒரு பிரிட்டிஷ் இந்திய மாகாணத்தில் வோட்டருக்கு வேண்டிய யோக்கியதாம்சங்களுடையவராயிருந்தால், அவர் அந்த மாகாணத்தில் சமஷ்டி சட்ட சபைத் தேர்தலில் அபேக்ஷகராய் நிற்கலாம்.

ஸ்தானங்கள் பங்கு முறை

சமஸ்தானங்களுக்கு சமஷ்டி மேல் சபையில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களை, சமஸ்தானாதிபதிகள் தங்களில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் குண்டு மரியாதைக்குத் தக்கவாறு பகிர்ந்துகொள்ள வேண்டும்.

சமஷ்டி அசெம்பிளி விஷயத்தில், ஒவ்வொரு சமஸ்தானத்தின் ஜனத் தொகைக்குத் தக்கவாறு, சமஸ்தானாதிபதிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும்.*

* 3ம் அநுபந்தம் பார்க்க.

எல்லா சமஸ்தானங்களும் சமஷ்டியில் சேர வேண்டு மென்ற கட்டாயமில்லாததால், சில சமஸ்தானங்கள் சமஷ் டியில் சேரவில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். இவற் றிற்காக சமஷ்டி சட்ட சபைகளில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களில் பாதியை, சமஷ்டிக்கு மெம்பர்களை நியமனம் செய்துள்ள ராஜாக்கள், வேறு மெம்பர்களையும் நியமனம் செய்து பூர்த்தி செய்வார்கள். இந்த அதிகப்படி மெம் பர்கள் ஒரு வருஷ காலத்திற்குத்தான் நியமிக்கப்படலாம். அதற்கு அடுத்த வருஷங்களிலும் பாக்கி சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேராவிட்டால், சமஷ்டியில் சேர்ந்துள்ள ராஜாக்கள், மீண்டும் அதிகப்படி மெம்பர்களை நியமனம் செய்வார்கள். ஆனல் சமஷ்டி சட்ட சபைகளில் சமஸ் தானங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களில் 90% ஐ பூர்த்தி செய்யும் சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேர்ந்து விட்டாலும், அல்லது சமஷ்டி அமுலுக்கு வருவதிலிருந்து 20 வருஷங்களுக்குள்ளும் சில சமஸ்தானங்கள் சேராம லிருந்தாலும், இந்த அதிகப்படி மெம்பர்களை நியமிக்கும் உரிமை, சமஷ்டியில் சேர்ந்துள்ள ராஜாக்களுக்கு இருக்காது.

வைசிராய், தனது யுக்தானுசார அதிகாரத்தை உப யோகித்து, அவசரச் சட்டங்களையும், நிரந்தரச் சட்டங் களையும் இயற்றலாம்.

வைசிராய் ஒரு நிரந்தரச் சட்டத்தை இயற்ற விரும் பினல், அது எதற்காக கொண்டு வரப்படுகிறது என்பதை விளக்கி, இரு சபைகளுக்கும் 'செய்தி' அனுப்புவார். அந்த செய்தியில் **மசோதாவின் நகலை மாத்திரம்** அனுப்ப அவருக்கு உரிமையுண்டு. செய்தி அனுப்பப்பட்ட ஒரு மாதத்திற்குப் பின், வைசிராய், அந்த மசோதாவை சட்டமாக்கி விடுவார். அந்த ஒரு மாத காலத்தில் மசோ

தாவைப்பற்றி இரண்டு சபைகளும் தங்களுடைய அபிப் பிராயங்களைக் கூறலாம். இவற்றை ஏற்கவோ, நிரா கரிக்கவோ வைசிராய்க்கு அதிகாரம் உண்டு.

சமஷ்டி நிர்வாகம்

சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானங்கள், பிரவேச சாஸனம் மூலம் சமஷ்டி சர்க்காருக்கு தங்களுடைய சில அதிகாரங்களை விட்டுக் கொடுக்கின்றன. இதன்படி சமஷ்டி சர்க்கார் அவ்வப்போது பிறப்பிக்கும் உத்தரவுகளை சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானங்களின் சர்க்கார்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

சமஸ்தானத்தில் சமஷ்டி சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வர, வைசிராய், சில நிபந்தனைகளின் பேரிலோ அல்லது நிபந்தனையின்றியோ, சமஸ்தானாதிபதிக்கு அதி காரமளிக்கலாம். இந்த சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதில் சமஸ்தான சர்க்காருக்கு ஏதேனும் அதிகப்படி செலவானால், அந்த அதிகப்படி தொகையை சமஷ்டி சர்க் கார் கொடுத்து விடும். இந்த தொகை சமஸ்தான சர்க்காரும், சமஷ்டி சர்க்காரும் கையெழுத்திடும் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும். இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக பின்னர் தகராறு கிளம்பினால், சமஷ்டி பிரதம நீதிபதியால் நியமிக்கப்படும் ஒரு மத்யஸ்தர் விசாரணை செய்து நிர்ண யிக்கும் தொகை சமஸ்தானத்திற்குத் தரப்படும்.

சமஷ்டி சட்டங்களை சமஸ்தான அதிகாரிகள் ஒழுங் காக அமுலுக்குக் கொண்டு வருகிறார்களா என்பதை தெரிந்துகொள்ள, வைசிராயின் அதிகாரிகள் சமஸ்தானங் களுக்கு விஜயம் செய்து, சமஸ்தான அதிகாரிகளின் வேலைகளை மேற்பார்வையிடலாம்.

சமஷ்டி சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட சமஸ்தானத்தில் சரியாக அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை யென்று வைசிராய் அறிந்தால், அந்த ராஜாவுக்கு உத்தரவுகள் பிறப்பிப்பார்.

சமஷ்டியில் அங்கம் வகிக்கும் ஒரு சமஸ்தானம், சமஷ்டியில் அங்கம் வகிக்கும் வேறு சமஸ்தானத்தின் மீதோ, அல்லது மாகாணத்தின் மீதோ வைசிராயிடம் புகார் செய்ய உரிமையுண்டு.

ஒரு கவர்னரின் மாகாண சர்க்கார் இயற்றும் சட்டத்தினாலோ, அல்லது பிறப்பிக்கும் உத்தரவினாலோ, அல்லது அதிகாரத்தை உபயோகிக்கத் தவறியதாலோ பக்கத்து சமஸ்தான பிரஜைகளின் நலன்களுக்கு பாதகமேற்படுவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த சமஸ்தானாதிபதி, இதைப்பற்றி வைசிராய்க்கு புகார் செய்யலாம். மாகாணங்களும், சமஸ்தானங்கள் மீது இதைப்போல புகார்களை வைசிராயிடம் சமர்ப்பிக்கலாம். வைசிராய், இதைப்பற்றி விசாரித்து தன்னிடம் ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க, நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமிப்பார். இக்கமிட்டி தனது சிபார்சையும் ரிப்போர்ட்டோடு அனுப்பும். வைசிராய் இதன் மீது தீர்ப்புக் கூறுமுன், தகராறிலுள்ள இரு கக்ஷிகளில் ஏதேனும் ஒன்று, வழக்கை பிரிவி கவுன்ஸிலின் தீர்ப்புக்கு விட வேண்டுமென கேட்க உரிமையுண்டு. அப்படிக் கேட்காவிட்டால், வைசிராயே தீர்ப்புக் கூறுவார். இந்த தீர்ப்பை எதிர்த்து பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

சமஷ்டி கோர்ட்

வைசிராய், சட்ட விவகாரங்கள் பற்றி சமஷ்டிக்

கோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம். சமஷ்டி நீதி பதிகள் தங்கள் அபிப்பிராயத்தை பகிரங்கமாக கோர்ட்டில் அறிவிப்பார்கள்.

சமஷ்டி சட்டம், இது சம்பந்தமான தஸ்தாவேஜுகள் (பிரவேச சாஸனம் முதலியவை) ஆகியவற்றிற்கு வியாக்யானம் கூறுவது சம்பந்தமாக, சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானம் ஒரு கக்ஷியாக உள்ள தகராறு இருந்தால், இந்த தகராறை விசாரிக்க சமஷ்டி கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. இக்கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யலாம்.

நிதி விஷயங்கள்

சமஷ்டியில் சேருமுன் தங்களுடைய கோரிக்கைகளெல்லாம் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென ராஜாக்கள் வற்புறுத்தினர். பிரிட்டிஷ் சர்க்காரும் இதற்கு சம்மதித்து, நிதி பிரச்னைகளை பரிசீலனை செய்து நிர்ணயிக்கவும், கப்பங்கள், மாற்றப்பட்ட பிரதேசங்கள்—இவைகள் பற்றி ஒரு ஏற்பாட்டிற்கு வரவும் சம்மதித்தனர். ஒவ்வொரு சமஸ்தானத்தின் நிலைமையை தெளிவாக்கும் பிரிவுகள், சமஸ்தானாதிபதி பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அடங்கியுள்ள பிரிவுகள்—இவை பிரவேச சாஸனத்தில் இருக்குமென்றும் உறுதி கூறப்பட்டது.

பிரிட்டிஷ் மன்னருக்கும், இந்திய ராஜாக்களுக்கும் உள்ள நேரிடையான உறவை, இந்திய சர்க்கார் சட்டம் பரிபூர்ணமாக ஊர்ஜிதம் செய்கிறது. இந்திய சமஸ்தானங்கள் இப்பொழுது இந்திய சர்க்காருக்கு கப்பம் முதலியவைகளுக்காக பணம் கட்டி வருகிறது. சமஷ்டி அமு

லுக்கு வந்த பின் இத்தொகையை பிரிட்டிஷ் மன்னரே சமஸ்தானாதிபதிகளிடமிருந்து வாங்கிக்கொள்ளுவார். இவர் இஷ்டப்பட்டால் இப்பணத்தை சமஷ்டி சர்க்காரிடம் கொடுக்கலாம்; இல்லாவிட்டால் தானே வைத்துக்கொள்ளலாம்!

வரி விதிப்பு அதிகாரம்

கீழ்க்காணும் கட்டணங்களையும், வரிகளையும் விதித்து, வசூல் செய்ய சமஷ்டி சர்க்காருக்கு அதிகாரமுண்டு:

(1) விவசாய நிலத்தைத் தவிர இதர சொத்துக்கள் ஒருவர் கையிலிருந்து வேறொருவர் கைக்கு மாறுவதின் மீது கட்டணங்கள்; சமஷ்டி ஜாப்தாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்டாம்பு கட்டணங்கள்; ரயில்வேக்கள் அல்லது ஆகாய விமானங்கள் ஏற்றிச் செல்லும் சாமான்கள், பிரயாணிகள் மீது வரிகள்; ரயில்வே கட்டணங்கள், சாமான்களை ஏற்றிச் செல்ல ரயில்வேக்கள் வாங்கும் கட்டணங்கள்—இவைகள் மீது வரிகள்.

(2) விவசாய வருமானம், கார்ப்பரேஷன் வருமானம்—இவைகளைத் தவிர பாக்கி வருமானங்கள் மீது வரி.

(3) கார்ப்பரேஷன் வரி.

(4) உப்பு சுங்க வரிகள்; உற்பத்தி, ஏற்றுமதி—இவைகள் மீது சுங்க வரிகள்.

இந்த வரிகளில் எந்த வரியையேனும் சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானத்திலும் சமஷ்டி சர்க்கார் விதிக்கலாம். ஆனால் இந்த சமஸ்தானம், பிரவேச சாஸனத்தில் குறிப்பிட்ட வரி விதிக்கும் அதிகாரத்தை சமஷ்டி சர்க்காரிடம் விட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட நான்கு தலைப்புகளின் கீழும் வசூலாகும் மொத்த தொகையில், வசூலுக்காக ஆன மொத்தச் செலவு முதலில் கழிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்பின் கீழும் சர்க்காருக்குக் கிடைத்துள்ள தொகை கண்டு பிடிக்கப்படும்.

முதல் தலைப்பின் கீழ் கிடைக்கும் தொகையில், பிரதம கமிஷனர் மாகாணங்களைச் சேர்ந்தது மாத்திரம் சமஷ்டி வருமானத்தோடு சேர்த்துக்கொள்ளப்படும். பாக்கி தொகை பூராவும், சமஷ்டி சட்ட சபை நிர்ணயிக்கும் கொள்கைப்படி, சமஷ்டியில் சேர்ந்துள்ள மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் விநியோகிக்கப்படும்.

ஆனல் சமஷ்டி சர்க்கார், இந்த வரிகளை, தன்னுடைய செலவுக்காக உயர்த்தலாம். இப்படி கிடைக்கும் அதிகப்படித் தொகை, சமஷ்டி வருமானத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

இரண்டாவது தலைப்பின் கீழ் கிடைக்கும் தொகையில், பிரதம கமிஷனர்களின் மாகாணங்களுக்குச் சேரவேண்டியதும், சமஷ்டி, சமஷ்டி ரயில்வே இவைகளின் வருமானங்களிலிருந்து தரப்பட்ட சம்பளங்கள், பென்ஷன்கள்-இவைகள் சம்பந்தமாக சேரவேண்டிய வரிப் பணமும் கழித்துக் கொள்ளப்படும். பாக்கியுள்ள பணத்தில் பாதி, மாகாணங்களுக்கும், சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானங்களுக்கும் விநியோகிக்கப்படும்.

இந்த தலைப்பின் கீழும் சமஷ்டி சர்க்கார் அதிகப்படி வரி விதித்து, இதன் மூலம் கிடைக்கும் தொகையை தன்னுடைய வருமானத்தில் சேர்த்துக்கொள்ளலாம். சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானம் எதிலாவது, வருமானத்தின் மீது வரி விதிக்க சமஷ்டி சர்க்காருக்கு அதிகாரமில்லாமலிருந்தால், அந்த சமஸ்தானம், சமஷ்டி சட்ட சபை

நிர்ணயிக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை சமஷ்டி சர்க்காருக்கு தந்தாக வேண்டும்.

மூன்றாவது தலைப்பின் கீழுள்ள வரி, சமஷ்டியில் சேர்ந்துள்ள எந்த சமஸ்தானத்திலும், சமஷ்டி அமுலுக்கு வந்து 10 வருஷங்கள் ஆகும் வரை விதிக்கப்பட மாட்டாது. அதற்குப் பின்னர் சமஸ்தானாதிபதி, அந்த வரியால் கிடைக்கப்போகும் தொகையை தானே சமஷ்டி சர்க்காருக்கு செலுத்தி விடுவதாகச் சொல்லி, அந்த வரி சமஸ்தானத்தில் விதிக்கப்படாமலிருக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

நான்காவது தலைப்பின் கீழ் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியையாவது அல்லது பூராவையுமாவது மாகாணங்களுக்கும், சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானங்களுக்கும் கொடுக்கும் விஷயமாக ஒரு முடிவுக்கு வர சமஷ்டி சட்ட சபைக்கு அதிகாரம் உண்டு.

சிவில் சர்விஸ்கள்

சிவில் சர்விஸ்களில் சமஷ்டியில் சேர்ந்துள்ள சமஸ்தானங்களின் ராஜாக்களுக்கும், பிரஜைகளுக்கும், பிரிட்டிஷ் இந்தியர்களுக்குள்ள உரிமைகள் அனைத்தும் உண்டு. பட்சபாதம் ஒன்றுமிருக்காது.

சமஷ்டி அரசியலமைப்பு தகர்ந்துபோனால்....

இந்திய சர்க்கார் சட்டப்படி, சமஷ்டியை நடத்துவது சாத்தியமில்லையென எந்த சமயத்திலாவது வைசிராய்க்குத் தோன்றினால், அவர் உடனே சமஷ்டி சட்ட சபையின் எல்லா அதிகாரங்களையும் (சமஷ்டி கோர்ட்டின் அதிகாரத்

தைத் தவிர), அல்லது சில அதிகாரங்களே மாத்திரம் தானே ஏற்றுக்கொள்ளலாம். அப்படி ஏற்றுக்கொள்ளுவதை அவர் பிரகடனம் மூலம் அறிவிப்பார். இந்த பிரகடனம், பார்லிமெண்டில் இந்தியா மந்திரியால் சமர்ப்பிக்கப்படும்.

வைசிராய், 6 மாத காலம் வரைதான் சமஷ்டி சட்ட சபை அதிகாரங்களே ஏற்றிருக்கலாம். இந்த காலத்தை நீடிக்க வேண்டுமானால் பார்லிமெண்டின் சம்மதம் பெற வேண்டும். சம்மதம் கிடைத்து விட்டால் பிரகடனம் மேலும் ஒரு வருஷ காலத்திற்கு அமுலிலிருக்கும்.

ராஜாக்களின் ஆட்சேபணைகள்

சமஷ்டி பிரவேச சாஸன நகலைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்காக, இந்திய ராஜாக்கள், மந்திரிகளின் கூட்டு மகா நாடு 1939-ம் வருஷம் ஜூன் மாதம் ஆரம்பத்தில் பம்பாயில் கூடியது. அந்த நகலிலுள்ள நிபந்தனைகள் அடிப்படையாகவே அதிருப்திகரமாயிருப்பதாயும், அந்த நிபந்தனைகள்படி சமஷ்டியில் சேர முடியாதென்றும் ஒரு தீர்மானம் செய்தனர். ஆனால் அதே சமயத்தில், சமஷ்டி யோசனையை மாத்திரம் கைவிட்டுவிட வேண்டாமென பிரிட்டிஷ் சர்க்காரை கேட்டுக்கொண்டார்கள். இந்த பிரவேச சாஸன நகலை ஆக்ஷேபிப்பதற்கு இவர்கள் கூறும் காரணங்கள் :

(1) ஒப்பந்த உரிமைகளுக்கு பாதுகாப்பு இல்லை.

ஒரு சமஸ்தான நிர்வாகத்தை எதிர்த்து நடக்கும் இயக்கங்களுக்கு மாகாண சர்க்கார்கள் மறைமுகமாக உதவி செய்கின்றன. சத்யாக்ரகப் படைகளெல்லாம் மாகாணங்களில் தலைமை ஸ்தலங்களை வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்தப் படைகளுக்கெல்லாம் இடம் கொடுக்க வேண்டாமென்று சமஸ்தான சர்க்கார்

கள் மாகாண சர்க்கார்களைக் கேட்டதற்குப் பலன் கிடைக்க வில்லை. இந்த பாதுகாப்பு, சட்டப்படி சமஸ்தானங்களுக்குக் கிடைக்க வேண்டியது. கூட்டுத் தனிக் கமிட்டி விவாதத்தின்போது 'இந்திய சமஸ்தானங்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு' என்ற வாக்கியத்திற்கு என்ன அர்த்தம் என்று கேட்கப்பட்டதற்கு, அப் பொழுதிருந்த இந்தியா மந்திரி பின்வருமாறு பதிலளித்திருக் கிறார்:

"மாகாணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட பிரச்னை ஒன்று இதில் இருக்கிறது. உதாரணமாக ஒரு மாகாணத்தில் சட்ட மறுப்பு வளருவதாகவும், அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினரோ, கக்ஷியினரோ அடுத்த சமஸ்தானத்தில் ஒரு கொந்தளிப்பை உண்டாக்க மாகாணத்திலிருந்து புறப்படுவ தாகவும் வைத்துக்கொள்ளுவோம், இப்பேர்ப்பட்ட சமயத்தில் சமஸ்தானத்தின் நிர்வாகத்திற்கு ஆபத்தான அந்த இயக்கத்தைத் தடுக்க அதிகாரம் இருக்க வேண்டுமென நினைத்தோம்."

வைசிராய்க்கும், கவர்னருக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் அனுப் பியுள்ள உத்தரவுகளில், சமஸ்தான உரிமைக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென இருக்கிறது. இதை, வைசிராய் விசேஷப் பொறுப்புகளில் 12-வது செக்ஷனிலும், கவர்னர் விசேஷப் பொறுப்புகளில் 52-வது செக்ஷனிலும் காணலாம்.

பாதுகாப்பு அளிக்க வேண்டுமென சட்டத்திலேயே ஸ்பஷ்ட மாகக் கூறப்பட்டிருந்தும், கேட்டபோது கிடைக்கவில்லை. சமஷ்டி வந்த பின்பும் பாதுகாப்பு கிடைக்குமென்று எப்படி நம்புகிறது?

சமஷ்டி அதிகாரத்திற்கு விடப்படும் விஷயங்களடங்கிய ஜாப்தாவில், சமஸ்தானங்கள் விட்டுக்கொடுக்கும் இனங்கள் சம் பந்தமாக சமஸ்தானங்களுக்கு உடன்படிக்கை உரிமைகள் ஏதே னும் இருந்தால், அது பாதிக்கப்படுமா என்பதுபற்றி பிரவேச சாஸன நகலில் தெளிவாக இல்லை.

(2) ஒரு விஷயத்தைப்பற்றி சமஷ்டி சட்டசபை சட்ட மியற்றினாலும், அதை நடத்திவைக்கும் நிர்வாக அதிகாரம் சமஸ்

தானங்களிடமே இருப்பது என்ற நிலைமைபற்றி இதற்கு முன் தயாரிக்கப்பட்ட பிரவேச சாஸனங்களில் மூன்றாவது பாரா தெளிவாகக் கூறியிருந்தது. இந்தத் தனிப் பாரா இப்பொழுது சமீபத்தில் வைசிராய் அனுப்பிய கடைசி நகலில் இல்லை.

(3) சமஸ்தானங்களில் சமஷ்டி ராணுவம் எப்பொழுது, எவ்வாறு பிரவேசிப்பது என்பதுபற்றிய நிலைமை தெளிவாக்கப்படவில்லை.

(4) "சமஷ்டி சர்க்கார் ஆதிக்கத்தில் நடைபெற வேண்டியதாக மதிக்கப்படும் கைத்தொழில்கள்" என்று ஒரு இனம் இருக்கிறது. இதற்கு சமஸ்தானங்கள் இப்போது உடன்பட்டால், இப்போது விதிவிலக்கு கோரப்படாத சில கைத்தொழில்கள், பிற்காலத்தில் முக்கியமாக மதிக்கப்பட்டு, சமஷ்டி ஆதிக்கத்தில் வந்து விடக்கூடும். ஆகையால் பிற்காலத்துக்கும் சேர்த்து விதிவிலக்கு ஏற்படுத்திக்கொள்ள சமஸ்தானங்களுக்கு உரிமை இருக்க வேண்டும்.

(5) சில உள்நாட்டு சுங்க வரிகளை அகில இந்தியச் சுங்கமாக பிற்காலத்தில் வசூலித்து, ஒவ்வொரு மாகாணத்துக்கும் வீதாசாரமாக விநியோகம் செய்வது என்ற விஷயத்தில் வீதாசாரம் கணக்கிடுவதற்கு 1937 மார்ச் மாதத்தோடு கணக்கெடுப்பது என்று சர்க்கார் கூறுகிறது. இது கூடாது. சமஷ்டி ஏற்படுகிற தேதியிலிருந்த நிலைமையே இந்த வீதாசார விநியோகத்துக்கு அடிப்படையாக இருக்க வேண்டும்.

(6) 1935-ம் வருஷ சட்டத்துக்கு இப்போது பிரிட்டிஷ் பார்லிமென்டில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது 297-வது ஷரத்துக்குப் பிறகு 297-ஏ என்ற ஒரு ஷரத்தை சேர்த்து சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களுக்குமிடையே சுங்கங்கள் ஏற்படுத்த சமஷ்டி சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கிறது. சமஷ்டியின் அடிப்படை நோக்கங்களுக்கே இது முரணாக இருக்கிறது.

இந்தத் திருத்தம் கொண்டு வருமுன் சமஸ்தானாதிபதிகளிடம் அபிப்பிராயம் கூட கேட்கப்படவில்லை.

மேற்கண்ட காரணங்களுக்காக சமஸ்தானாதிபதிகள் இந்த சமஷ்டி திட்டத்தை நிராகரித்தனர்.

ராஜாக்களின் இந்த முடிவை இந்தியாவிலுள்ள வெள்ளைக்காரப் பத்திரிகைகள் உள்பட எல்லா பத்திரிகைகளும் கண்டித்தன. வெள்ளையர்கள் நடத்தும் பத்திரிகைகளே என்ன கூறிய தென்பதை கவனிப்போம்:

"ஸ்டேட்ஸ்மன்": "ராஜாக்கள் தாங்களே முன்வரத் தவறி அகில இந்திய சமஷ்டியில் சேரவும் தவறிவிட்டால், பிரஜைகளோ கண்டா கண்டபடி காலவரையின்றி எப்படி வேண்டுமானாலும் நடத்துவதை ஆதிபத்திய சர்க்கார் அநுமதிக்கும் என்று (சமஸ்தானாதிபதிகள்) மனப்பால் குடிக்க வேண்டாம்."

பம்பாய் "டைம்ஸ்": "பிரிட்டிஷ் சர்க்காரில் ஏதேனும் மாறுதலேற்பட்டால், இப்பொழுதுள்ளதைக் காட்டிலும் தீவிரமான மந்திரி சபை பதவிக்கு வரும். இடதுசாரி சர்க்கார், இந்திய ராஜாக்கள் விஷயத்தில் இன்னும் குறைவாகவே அநுதாபம் காட்டுமென்பதை சொல்லத் தேவையில்லை...காந்திஜியின் வாழ்நாளில், நியாயத்திற்கும், பகுத்தறிவுக்கும் உகந்த விதத்தில் பிரச்னையை தீர்த்துக்கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம் இருக்கத்தான் இருக்கிறது."

பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையை அறிவிப்பதாக கருதப்படும் "லண்டன் டைம்ஸ்" இந்திய ராஜாக்களின் பம்பாய் மகாநாட்டு முடிவுபற்றி எழுதியது குறிப்பிடத்தக்கது. அந்த தலையங்கத்தில், சமஸ்தானாதிபதிகள் சமஷ்டியில் சேராவிட்டாலும், ராஜீய சக்திகளிலிருந்து அவர்கள் தப்ப முடியாதென கூறிவிட்டது. டைம்ஸ் எழுதியதில் முக்கிய பகுதிகள் வருமாறு:

"பெடரேஷனுக்கு வெளியே இருந்து விட்டால், இப்பொழு

துள்ள நிலைமையை நிரந்தரமாக்கலாம் என்று எதிர்பார்ப்பது வியர்த்தமாகு மென்பதை அவர்களில் புத்திசாலிகளா யுள்ளவர் கள் உணர்ந்திருக்கிறார்கள்.

"பெடரேஷனுக்கு வெளியிலிருப்பதன் மூலம், பிரிட்டிஷ் சர்க்காரின் பாதுகாப்பு சாசுவதமாக அவர்களுக்குக் கட்டாயம் கிடைத்து வரும் என்று கற்பனை செய்துகொள்ளும் சமஸ்தானாதி பதிகள், பிரிட்டிஷ் அரசியல் வளர்ச்சியின் உண்மைகளைத் தெரிந்து கொள்ளாமல், தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகி றார்கள். பிரிட்டிஷ் மன்னரும், வைசிராயும் வகிக்கும் அதிகாரம் பிரிட்டனிலுள்ள பொதுஜன அபிப்பிராயத்திலிருந்து கிளம்புவது. அந்த அபிப்பிராயம் பொதுஜன ஆட்சிக்கு எதிராக எதேச்சாதி கார ஆட்சி முறையை ஒருக்காலும் ஆதரிக்காது.

"பெடரேஷனின் இறுதியான நோக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத் தியத்திலுள்ள மற்ற நாடுகளைப்போல் சமமான அந்தஸ்துக்கு இந் தியாவைக் கொண்டு வருவதுதான். அத்தகைய பெடரேஷனில் சேர மறுக்கும் சமஸ்தானாதிபதிகளை பிரிட்டிஷ் பொதுஜன அபிப் பிராயம் ஒருக்காலும் ஆதரிக்காது. பெடரேஷனுக்கு வெளியே இருப்பதாக அவர்கள் தீர்மானிப்பார்களானால், இப்பொழுது இருப்பதுபோல், பிரிட்டிஷ் சர்க்காரின் பின் பலத்துடன் நடை பெறும் எதேச்சாதிகார ஆட்சி முறை கால வரம்பின்றி நிலைநாட் டப்படுவதையும், பொதுஜன அபிப்பிராயம் ஆதரிக்காது.

"முடிவு செய்ய வேண்டியது சமஸ்தானாதிபதிகளைப் பொறுத்த விஷயம். ஆனால், அவர்களுடைய பரம்பரை பாத்தியதை பத்திர மாயிருப்பதற்கு மிகச் சிறந்த உத்தரவாதம் பெடரேஷன்தான் என்பது தெளிவான விஷயம்."

ஆதிபத்திய சர்க்காரின் விருப்பத்திற்கு மாறுகப் போக சுதேச மன்னர்களுக்கு தைரியம் உண்டா? சமஷ்டி பிரதேச சாஸன சபைக்கு ராஜாக்கள் பதிலனுப்ப வேண் டிய காலத்தை, வைசிராய், 1939ம் வருஷம் செப்டம்பர்

முதல் தேதி வரை நீடித்தார். பம்பாய் மகாநாட்டில், இப்பொழுதுள்ள நிபந்தனைகள்படி சமஷ்டியில் சேரக்கூடாதென்று சரமாரியாகப் பேசிய பல சமஸ்தானாதிபதிகள், பிரிட்டிஷ் சர்க்காரின் மனோபாவத்தை அநுசரித்து தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு, சமஷ்டியில் சேரத் தயாரென சொன்னார்கள். சமஷ்டி உடனே அமுலுக்கு வர, எவ்வளவு சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேர தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டுமோ, அவ்வளவு சமஸ்தானங்கள் சமஷ்டி திட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தன.

ஆனால் 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3வ மகாயுத்தம் ஆரம்பமானது, நமது சமஸ்தானாதிபதிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாயிருந்தது.

வைசிராய், யுத்தத்தை ஒரு காரணமாகக் கொண்டு, சமஷ்டி ஏற்பாடுகளை தற்காலிகமாக ஒத்திவைத்தார்.

இந்த சமஷ்டி திட்டத்தை முதல் முதலில் எதிர்த்தது காங்கிரஸ்தான். எனவே அதன் ஆட்சேபணைகள் என்ன என்பதை இந்த சமயத்தில் கவனிப்பது நல்லது. பாபு ராஜேந்திரப் பிரசாத் இதை கீழ்க்காணும் வாக்கியங்களில் கூறுகிறார் :

" இந்தியாவுக்கு சமஷ்டி நிர்வாக முறைதான் மிகவும் பொருத்தமானதென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், பிரிட்டிஷ் சர்க்கார் தயாரித்திருக்கும் சமஷ்டி திட்டத்தின்படி, ஓரளவு சுதந்திரத்தை அநுபவிக்கும் மாகாணங்களும், எதேச்சாதிகார ஆட்சி முறையுள்ள சமஸ்தானங்களும், ஒன்று சேர்க்கப்படுகின்றன. அந்தத் திட்டத்துக்கு எங்களுடைய அடிப்படையான ஆட்சேபணை இதுதான். சமஷ்டியில் மாகாணங்கள், சமஸ்தானங்களிடையே சமமான உரிமைகளும் அதிகாரங்களும் இருக்க வேண்டும். சமஷ்டி சட்ட சபைக்கு அவர்கள் பிரதிநிதி

கள் அனுப்புவதிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியான முறை இருக்க வேண்டும். தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அதிகாரங்களும், உரிமைகளும், ஒரே மாதிரியாயிருக்க வேண்டுமென்று சமஸ்தானாதிபதிகள் வற்புறுத்துகிறார்கள். ஆனால், அதைவிட முக்கியமான மற்ற விஷயங்களிலும் அப்படி இருக்க வேண்டுமென்பதை அவர்கள் கவனிக்கவில்லை.''

(இது யுத்தம் ஆரம்பமாகுமுன் ராஜன் பாபுவால் வெளியிடப்பட்ட அறிக்கை.)

சமஸ்தானங்களிலிருந்து ஜனங்களின் பிரதிநிதிகளே சமஷ்டி சட்ட சபைகளுக்கு வரவேண்டும். ராணுவம், பொக்கிஷம், அந்நிய சாமான்கள் மீது வரி விதித்தல் - ஆகியவை சமஷ்டி மந்திரி சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும் என்றும் காங்கிரஸ் கோரியது.

ஜனநாயகத்திற்காக யுத்தத்தில் இறங்கியிருப்பதாக பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லிற்று. இந்த சொல்லை, இந்தியாவில் கிரியாம்சத்தில் காட்டுமாறு காங்கிரஸும், பெரும்பாலான மாகாண சர்க்கார்களும் (காங்கிரஸ் மந்திரி சபைகள்) கேட்டன.

அதாவது, சுயநிர்ணய உரிமை கோரியது. இதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்து விட்டது.

''எங்கள் எதிர்கால அரசியலமைப்பை நாங்களே நிர்ணயித்துக்கொள்ள எங்களுக்கு உரிமை உண்டு. அதை அங்கீகரியுங்கள்'' என்று இந்தியா சொல்லுகிறது.

இந்த உரிமையை பிரிட்டன் மறுக்கிறது.

பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் இது விஷயத்தில் இப்பொழுது சமரசம் ஏற்படாதென்றே தோன்றுகிறது. எனவே, சமஸ்தானப் பிரச்னையும் விவாதத்தின் மூலம் இப்போது தீரப்போவதில்லை.

அத்தியாயம் 7

சமஸ்தானங்கள் அவசியமா?

எல்லோருமோர் குலம் எல்லோரு மோரினம்
எல்லோரு மிந்தியா மக்கள்
எல்லோரு மோர் நிறை எல்லோரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

—பாரதி.

சமஸ்தானங்கள் இனியும், சுதந்திர இந்தியாவிலும், சமஸ்தானங்களாகவே இருக்க வேண்டுமா? அதாவது, இவை கிட்டத்தட்ட 600 ராஜாக்களின் ஆட்சியின் கீழ் இருக்க வேண்டுமா?

நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் இந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த அசோகன், சிவாஜி போன்ற பல மன்னர்கள் உண்மையிலேயே ஜனங்களின் க்ஷேம லாபத்திற்காக செங்கோலாட்சி செலுத்தி வந்தனர். எப்பொழுதாவது பஞ்சமேற்பட்டால், புதிய குளங்களை வெட்டச் சொல்லி, கோவில்களை கட்டச் சொல்லி, ஜனங்களுக்கு நிவாரண வேலைகளும், ஜீவனத்திற்கு அவசியமான வற்றையும் இந்திய மன்னர்கள் கொடுத்து வந்தனர். தாங்கள் பட்டினி கிடந்தாலும் கிடப்பார்கள்; பிரஜை யொருவன் பட்டினி கிடப்பதை சகிக்க மாட்டார்கள்.

ஆனால் இப்பொழுதுள்ள ராஜாக்களுக்கு பிரஜைகளிடத்தில் எவ்வளவு சிரத்தை யுண்டென்பது வேறு அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. சமஸ்தானங்களில்

வரி பளு தாங்க முடியாமல் பிரஜைகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், இந்த ராஜாக்கள் தங்கள் சொந்தச் செலவை குறைந்தபக்ஷ தேவைக்குக் குறைத்துக்கொள்ள மாட்டேனென்கிறார்கள். ஜனங்களின் குறைகளைப் போக்க வழி தேடாமல், அவர்களுடைய எழுச்சியை ஒடுக்க பிரிட்டிஷ் சர்க்காரின் ராணுவ உதவியை நாடுகின்றார்கள்.

ஏன், இந்த ராஜாக்களை சீர்திருத்தி விட்டால் போகிறது, என்று சிலர் சொல்லலாம். நல்ல வார்த்தையாகச் சொல்லி, மனதை மாற்றும் திறமை காந்திஜியைவிட இப்பொழுது இந்தியாவில்—ஏன் உலகத்திலேயே வேறு யாருக்கு இருக்கிறது? அவராலேயே முடியவில்லை யென்றால் வேறு யார்தான் இந்த காரியத்தில் வெற்றி பெறப் போகிறார்கள்?

இப்பொழுது ராஜாக்களில் அநேகமாக அனைவரும் எங்கிருந்து வந்தனர்? பிரிட்டிஷார் இந்நாட்டில் நுழைந்த காலத்தில் தேசம் அலங்கோலமாய்க் கிடைந்தது. ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சியை இந்நாட்டில் ஸ்திரப்படுத்துவதற்காக, தேசத் துரோகிகளுக்கு இந்நாட்டை தண்டாகக் கொடுத்தனர். இந்தியா, இந்திய மக்களுக்குத்தான் சொந்தம், இந்திய மக்களுக்கு சேவை புரிய வேண்டியதே தங்கள் கடமை என்பதை உணராத இந்த ராஜாக்களில் பலர், 1857-ம் வருஷம் நடந்த சுதந்திர யுத்தத்தில் இந்தியருக்கு எதிராக வெள்ளையர்களுடன் சேர்ந்து தங்கள் நாட்டினரையே முறியடித்தனர். இவர்களுக்கு தாய் நாட்டிடம் கொஞ்சமேனும் வாஞ்சையிருந்தால், புரட்சி சக்திகளை தாங்களே திரட்டி, அந்நியரின் ஆட்சியை எதிர்த்து போரிட்டிருக்க மாட்டார்களா? அல்லது தைரியமற்றவர்களாயிருந்தால் 'நாம் சும்மாவாவது இருப்போம்' என்று

எக்கக்ஷியிலும் சேராமலாவது இருந்திருக்க மாட்டார்களா? சுயராஜ்தான் பிரதானம், தேசம் அடுத்தபடிதான், என்று அவர்கள் நினைத்ததால்தான் தாய் நாட்டின் லக்ஷியத்தையே எதிர்த்துப் போராடினர்.

சென்ற மகாயுத்தத்தின்போது இவர்கள் பிரிட்டிஷாருக்கு எவ்வளவோ உதவி புரிந்தனர். இந்த மகாயுத்தத்திலும், ஆள் உதவி, பண உதவி, பொருளுதவி அனைத்தும் செய்வதாக வாக்களித்து, யுத்த நிதிக்கு லக்ஷக்கணக்கான ரூபாய்கள் அனுப்பியிருக்கின்றனர். "தர்மத்தை நிலைநாட்ட" உதவி செய்வதாகக் கூறுகிறார்கள். ஆனால் இவர்களுடைய சொந்த சமஸ்தானங்களில் தர்மம் தலை தூக்க விடப்பட்டிருக்கிறதா? இல்லை. ஹிட்லர் பெரிய நாஜி. அவரை எதிர்ப்பதாகச் சொல்லும் இந்த சமஸ்தானாதிபதிகள், சர்வாதிகாரத்திலுள்ள நல்ல அம்சங்கள் நீங்கலாக பாக்கியுள்ள எல்லாவற்றின் உருவாகவும் இருக்கும் 'குட்டி' நாஜிகள். இவர்கள் நாஜிஸத்தை எதிர்ப்பதின் விபரீதம் ஒரு புறமிருக்கட்டும்.

இன்று இல்லாவிட்டால், கூடிய சீக்கிரத்தில் ஒரு காலில் இந்தியா சுதந்திரமடைந்து, உலகிலுள்ள எப்பேர்ப்பட்ட பெரிய நாட்டிற்கும் சரிசம அந்தஸ்தில் இருக்கப்போவது நிச்சயம். ஹிமயம் முதல் குமரிவரை ஒரே ஜண்டா பறக்கப்போவதும் திண்ணம். இந்தியாவை ஆளும் அதிகாரம், பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து இந்தியர்கள் கைக்கு மாறியதும், இந்த சமஸ்தானங்களை, சமஸ்தானாதிபதிகளின் ஆட்சியின் கீழ் விட்டிருக்கலாமா?

இந்த கேள்விக்கு பலர், பலவித பதிலளிக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கிடையே ஒருமுக அபிப்பிராயமில்லை. ஆனால், சமஸ்தானாதிபதிகள் அவர்களுடைய எல்லைகளில்

ஜனநாயகத்தை ஸ்தாபிக்காவிட்டால், அவர்களே சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிடத்தான் வேண்டுமென்பதில் அபிப்பிராயபேதமே கிடையாது. எந்தக் காரியத்திலும் சரி, நாம் சமர்ப்பிக்கும் குறைந்தபக்ஷ கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், சமரசம் ஏற்பட்டு, சௌஜன்ய நிலைமை ஏற்படும். குறைவான கோரிக்கைகள்கூட ஏற்கப்படாவிட்டால், கோரிக்கைகளே சமர்ப்பித்தவர்கள், தங்கள் பலத்தை நிறைபோட்டு, எதிரியுடன் பலப் பரீக்ஷை செய்கின்றனர். மேலதிகாரம் செலுத்தியவர்கள் தோற்றுவிட்டால், ஜெயிப்பவர்கள், முன்னர் சமர்ப்பித்த குறைந்தபக்ஷ கோரிக்கைகளுடன் திருப்தியடைய மாட்டார்கள். நியாயமாக தங்களுக்கு இருக்க வேண்டிய உரிமைகள் அனைத்தையும் அநுபவித்தே தீருவார்கள். அதைப்போலவே, இந்திய சமஸ்தானாதிபதிகள் விஷயத்திலும் நடக்கப்போவது நிச்சயம். இப்பொழுது பிரஜைகளுக்கு பொறுப்பாட்சியளிக்க சமஸ்தானாதிபதிகள் மறுக்கின்றனர். காலம் மாறிய பின், பிரஜைகள், சமஸ்தானாதிபதிகளின் "அந்தஸ்தை" எப்படி அங்கீகரிக்க முடியும்?

மகாயுத்தம் ஆரம்பமாகுமுன், 1939-ம் வருஷம் பிப்ரவரி மாதம் லூடியானாவில் பண்டித நேரு தலைமையில் கூடிய அகில இந்திய சமஸ்தான மக்கள் மகாநாடு, பொறுப்பாட்சி கோரி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதோடு, சிறிய சமஸ்தானங்களே பெரிய சமஸ்தானங்களுடன் சேர்த்துவிட வேண்டுமென்ற வேறொரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது. அதன் வாசகம்:

"ஜனத்தொகையில் 20 லக்ஷத்திற்கு மேலாகவோ, அல்லது வருமானத்தில் ரூ. 50 லக்ஷத்திற்கு மேலாகவோ உள்ள சமஸ்தானங்களே மாத்திரம், சுதந்தர சமஷ்டி இந்தியாவில் மாகாணங்

களுடன் சேர அநுமதிக்க வேண்டுமென்றும், மேற்சொன்ன படி இல்லாத சிறிய சமஸ்தானங்களை நிர்வாக சௌகரியத்திற்காக தனியாகவோ அல்லது கோஷ்டிகளாகவோ பக்கத்து மாகாணங்களோடு சேர்த்துவிட வேண்டுமென்றும் இம்மகாநாடு சிபார்சு செய்கிறது. இந்த சிறிய சமஸ்தான மன்னர்களின் நியாயமான உரிமைகளுக்கும், சலுகைகளுக்கும் பாதுகாப்பு அளித்து விடலாம். இதைப்போல சேர்ப்பதற்காக வழியை சீர்படுத்த என்னென்ன செய்யலாமென்பதை கண்டு பிடிக்க ஒரு கமிட்டியை நியமிக்குமாறு காங்கிரஸ் மகாசபையை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.''

இதற்குப் பின் ராஜாக்கள் சபையில் பேசிய வைசிராய், ரூ. 20 லக்ஷத்திற்கு குறைவான வருமானமுள்ள சமஸ்தானாதிபதிகள் ஆதிபத்திய உரிமையுள்ளவர்களாக இருக்க முடியாதென்பதை சுட்டிக் காட்டினார். வைசிராயின் யோசனைப்படி சிறிய சமஸ்தானங்கள் பக்கத்து பெரிய சமஸ்தானங்களுடன் நிர்வாக விஷயங்களில் ஐக்கியப்பட ஏற்பாடாகி வந்தது. ஆனால் மகாயுத்தம் ஆரம்பமானதும் இந்த வேலை நின்று விட்டது.

ராஜாஜி அபிப்பிராயம்

ஸ்ரீ வி. ராஜகோபாலாச்சாரியார், சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்படும் பட்சத்தில், பக்கத்திலுள்ள சில ஜில்லாக்களோடு, நிர்வாக சௌகரியத்திற்காக சமஸ்தானங்களுடன் சேர்த்து விடலாமென்கிறார்.

''உதாரணமாக, திருவாங்கூரிலும், கொச்சியிலும், பூர்ண பொறுப்பாட்சி ஏற்பட்டால், அங்குள்ள மகாராஜாக்கள் பிரிட்டிஷ் மன்னரைப் போல்தான் இருப்பார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், பிரிட்டிஷ் மன்னருக்கு எவ்வளவு அந்தஸ்து உண்

டோ, அவ்வளவு அந்தஸ்தை, ராஜாக்களும், தங்கள் சமஸ்தானங்களின் எல்லைக்குள் வைத்துக்கொண்டிருக்கலாம். அம்மாதிரி ஜனநாயக ஆட்சி முறை ஏற்பட்டு விட்டால், பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், அவர்களுக்கு மிடையே ஒரு வித்தியாசமுமிராது. திருவாங்கூர், கொச்சி, மலையாளம் மூன்றும் இப்படி ஒன்று சேர்ந்து விட்டால், மகாராஜா இன்னம் பெரிய சமஸ்தானத்தை, அதிக வசதியுடன் ஆட்சி புரியலாம். மைசூரில் பூர்ண பொறுப்பாட்சி கொடுக்கப்பட்டு விட்டால், தென் கன்னட, வட கன்னட ஜில்லாக்காரர்களையும், பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னடியர்களையும், பெல்லாரியில் பாதியையும் கூட மைசூரில் சேர்ந்து விடும்படி நான் கேட்டுக்கொள்ள முடியும். அதனல் அவர்களுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. ஜனங்களேதான் ஆட்சியை நடத்த வேண்டும். தனிப்பட்டவர்களோ, அல்லது நண்பர்களின் குடும்பமோ இந்தக் காலத்தில் ஆட்சி நடத்த முடியாது என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து விட்டால், ஒன்றும் கஷ்டமில்லை. சர்க்கார் நிர்வாகம் சம்பந்தமான சகல காரியங்களுக்கும் ஜனங்களைக் கலந்தாலோசிக்க வேண்டும். இது நம்முடைய சர்க்கார் என்று ஜனங்கள் நினைக்கும்படி இருக்க வேண்டும்," என்று ராஜாஜி கூறுகிறார்.

ஸ்ரீ. சத்தியமூர்த்தியின் சப் பெடரேஷன் யோசனை

சிறிய சமஸ்தானங்கள் பெடரேஷனில் சேர்த்துக் கொள்ளப்படு முன் அவை ஒரு சப் பெடரேஷனில் சேர்க்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி யோசனை கூறுகிறார். இவர் 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ஹிமாலய சமஸ்தானங்களின் பிரஜைகள் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கையில் இந்த யோசனையை வெளியாக்கினர். இந்திய சமஸ்தானங்களில், ஜனத் தொகையில் லக்ஷத்திற்கு குறைவாக 500 சமஸ்தானங்களிருக்கின்றன

வருமானத்தில், 370 சமஸ்தானங்களுக்கு லக்ஷ ரூபாய்க்குக் குறைவாய் கிடைக்கிறது. 170 சமஸ்தானங்களுக்கு, ரூ. 10,000 த்துக்குக் குறைவாக வருமானம் கிடைக்கிறது. விஸ்தீரணத்தில் 100 சதுர மைல்களுக்குக் குறைவாகவுள்ள 350 சமஸ்தானங்களும், 10 சதுர மைல்களுக்குக் குறைவாயுள்ள 180 சமஸ்தானங்களும் இருக்கின்றன.

ஜனத் தொகையில் 20 லக்ஷத்திற்குக் குறைவாக அல்லது வருமானத்தில் ரூ. 50 லக்ஷத்திற்குக் குறைவாகவுள்ள சமஸ்தானங்களே நிர்வாக சௌகரியத்திற்காக தனியாகவோ, கோஷ்டியாகவோ பக்கத்து சமஸ்தானங்களுடன் சேர்க்கலாமென்று அகில சமஸ்தான பிரஜைகள் மகாநாடு கோரியது. இதற்கு ராஜாக்கள் சம்மதிக்காவிட்டால், தான் கூறும் இன்னொரு திட்டத்தையாவது மேற்கொள்ளத் தயாரா என்று ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி கேட்கிறார். அதாவது :

"எல்லா சிறிய சமஸ்தானங்களும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சப் பெடரேஷன்களில் சேர்ந்துவிட வேண்டும். இந்த சப் பெடரேஷனிலுள்ள சமஸ்தானங்களுக்கு பொது நீதிமன்றம், பொது செனின்யூ முறை, பொது போலீஸ் படை முதலியவை இருக்க வேண்டும். ஜனத்தொகை, விஸ்தீரணம், வருஷ வருமானம் - ஆகிய வற்றில் லூடியானு தீர்மானத்திலுள்ளபடி குறைந்தபக்ஷ நிபந்தனையை பூர்த்தி செய்யும் சப் பெடரேஷன்களே அகில இந்திய சமஷ்டியில் சேர்த்துக்கொள்ளலாம்."

பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லுவதைத் தவிர வேறு யார் என்ன சொன்னலும் இந்திய ராஜாக்கள் செவிசாய்க்க மாட்டார்களென்றே தோன்றுகிறது. தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்கிறார்கள். இந்தியாவின்

எந்த எதிர்கால அரசியலமைப்பிலும் "சமஸ்தானங்களின் பூரண ராஜ்யாதிகாரத்தையும், சுயாட்சியையும் பாதுகாக்க அவசியமான உத்தரவாதங்களும், ஒப்பந்தங்கள், சன்னதுகள் முதலியவை மூலம் சமஸ்தானங்களுக்குள்ள உரிமைகளுக்கு பாதுகாப்பும்" இருக்க வேண்டுமாம். இவர்கள் தங்களுடைய 'உரிமைகளை' பாதுகாத்துக்கொள்ள துடிக்கிறார்களே யொழிய, தங்கள் சமஸ்தானங்களிலுள்ள பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளை அங்கீகரிக்கத் தயாராயில்லை. இவர்களுக்கு பூர்ண ராஜ்யாதிகாரத்தையும் கொடுத்துவிட்டால், மத்திய ஆட்சி வெறும் பொம்மை சர்க்காராய்த்தான் இருக்க முடியும். இதற்கு மாகாண பிரஜைகளோ அல்லது சமஸ்தான பிரஜைகளோ சம்மதிக்க முடியாது.

இந்திய சர்க்கார் சட்டம் சம்பந்தமில்லாமல் தனி அரசியலமைப்பைத் தயாரிக்க சமரசப் பேச்சுகள் நடப்பதாயிருந்தாலும், அல்லது இந்த சட்டம் திருத்தப்படுவதற்காக பேச்சு வார்த்தைகள் நடப்பதாயிருந்தாலும், அவற்றில் சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுக்கும், ராஜாக்கள் சபைக்கும், சமஸ்தானங்களின் முக்கியத்துவம், சரித்திர பூர்வ அந்தஸ்து—ஆகிய இரண்டுக்கும் தகுந்தாற்போல் பிரதிநிதித்வம் இருக்க வேண்டுமாம்.

"சரித்திர பூர்வ அந்தஸ்தை" கவனித்தால், இவர்களுக்கு எதிலும் கொஞ்சம் கூட பிரதிநிதித்துவமே கிடைக்க நியாயமில்லை. ஏனெனில், பிரிட்டிஷ் ஆட்சி இங்கு ஸ்தாபிதமாகு முன், இந்த சமஸ்தானாதிபதிகளில் முக்கியமானவர்கள்தான் இங்கு ஆட்சி புரிந்தனர். நாட்டின் சுயராஜ்யத்தை பறிகொடுத்தவர்களுக்கு, 'தேசத்தை திறமையாக ஆட்சி புரிய யோக்கியதையற்றவர்கள்' என்

பதைத் தவிர வேறு எந்த "சரித்திர பூர்வ அந்தஸ்தும்" இருக்காது. இந்த அந்தஸ்தை இவர்கள் ஞாபகப்படுத்தாதிருப்பதே நலம்.

"சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு மூள்ள உறவை, சமஸ்தானங்களின் சம்மதமின்றி வேறு எந்த சர்க்காருக்காவது மாற்றக்கூடிய அரசியலமைப்பு அமுலுக்கு வருவதாக யிருந்தால், அல்லது சமஸ்தானங்களின் சம்மத மில்லாமலேயே சமஸ்தானங்களின் உரிமைகளும், நலன்களும் பாதிக்கப்படுவதை அநுமதிக்கும் அரசியலமைப்பு வருவதா யிருந்தால், அந்த அரசியலமைப்பை சமஸ்தானங்கள் ஏற்றுக்கொள்ளாது" என்றும் ராஜாக்கள் சபை கூறுகிறது.

"சமஸ்தானங்கள்" ஏற்றுக்கொள்ளாது என்றே ராஜாக்கள் சபை சொல்லுகிறது. அவற்றின் சார்பாகப் பேசவேண்டியவர்கள், சமஸ்தான பிரஜைகளின் பிரதிநிதிகளா அல்லது சமஸ்தானாதிபதிகளா என்பதை அச் சபை தெளிவாக்கவில்லை. ராஜாக்கள் சமஸ்தானங்களில் தேர்தலுக்கு நின்று, வெற்றியடையப் போவதில்லை; வெற்றியடையவும் முடியாது. எனவே, இவர்கள் தங்களையே 'சமஸ்தானங்கள்' என்று சொல்லுவதாகவே தெரிகிறது.

இந்தியா பூராவையும் கடந்து செல்லும் ஒரு பெரிய அலை, ராஜாக்களின் அநுமதிக்காக காத்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

எதிர்கால இந்தியாவில், பொம்மை ராஜாக்கள் கூட எதற்காக இருக்க வேண்டுமென்று தெரியவில்லை. கோவில்களே பொம்மைகள் தாங்கவில்லை. அதைப்போலவே ஜனநாயகம் பூர்ணமாக நிலவும் சமஸ்தானங்களின் நிர்வாகப்

பொறுப்பும் ராஜாக்களிடம் இருக்கப் போவதில்லை. கோவில் பொம்மை பணம் கேட்காது, அரண்மனை கேட்காது, ரோல்ஸ்—ராய்ஸ் கேட்காது, உலக யாத்திரை கேட்காது, பரிவாரங்கள் கேட்காது. ஆனால் பொம்மை ராஜாக்களோ, எல்லாம் கேட்பார்கள். இவர்களுக்கு தண்டத்திற்காக ஆகும் செலவை எவ்வளவோ உபயோககரமான காரியங்களுக்கு ஒதுக்கலாம். முடியாட்சி இல்லாத ராஜ்யங்கள் இல்லையா? பெருவாரியான ஜனங்களின் நன்மைக்கு உழைக்கும் சர்வாதிகாரி இருந்தால் பாதகமில்லை. சில நாடுகளுக்கு சர்வாதிகார ஆட்சி ஒரு குறிப்பிட்ட காலம் வரையாவது இருக்க வேண்டியது அத்யாவசியமாகும். ஆனால் வெறும் அலங்காரத்திற்காகவும், ஊர்வலத்திற்காகவும் மாத்திரம் பிரயோசனப்படும் ராஜாக்கள் நமக்குத் தேவையில்லை.

மேலும் பிறப்பில் உயர்வு, தாழ்வு எதற்காக?



வந்தேமாதரம்!

அநுபந்தம் 1

கிழக்கிந்தியக் கம்பெனி நிஜாமுடன் 1759-ம் வருஷம் மே மாதம் 14-ந் தேதி செய்துகொண்ட ஒப்பந்தத்திலுள்ள முக்கிய பகுதி :

"எட்டு ஜில்லாக்கள் உள்பட மசூலிப்பட்டணம் சர்க்கார் பூராவும், கோதாவரி, வாகல்மனூவர் ஜில்லாக்களும் இங்கிலீஷ் கம்பெனிக்கு இனமாக (இலவச சன்மானம்) கொடுக்கப்படும்; அவர்களுக்கு அளிக்கப்படும் சன்னது, பிரஞ்சுக்காரர்களுக்கு அளிக்கப்பட்டதைப்போலவே இருக்க வேண்டும்."

"வார் வாத்சலாபட் ஜங் பகதூர் இப்பொழுது அவருடைய நாட்டில் உள்ள பிரஞ்சுத் துருப்புகளை இன்னும் 15 தினங்களுக்குள் கங்கை நதிக்கப்பால் அனுப்பிவிட வேண்டும், அல்லது புதுச்சேரிக்கு அனுப்பிவிட வேண்டும், அல்லது டக்கான் நாட்டுக்கு வெளியே கிருஷ்ணை நதிக்கு அந்தப்பக்கத்திலுள்ள எந்த இடத்திற்காவது அனுப்பிவிட வேண்டும்; இனி எக் காரணத்தை முன்னிட்டும் அவர்களுக்கு இந்த நாட்டில் தங்க இடம் கொடுக்கக்கூடாது; அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளவும் கூடாது, அவர்களுக்கு உதவி செய்யவும் கூடாது, அவர்களை உதவிக்கு அழைக்கவும் கூடாது. எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் நவாப், இங்கிலீஷ் கம்பெனியின் விரோதிகளுக்கு உதவி புரிய மாட்டார்; அவர்களுக்கு பாதுகாப்பும் அளிக்க மாட்டார்.

"இங்கிலீஷ் கம்பெனி, நவாப்பின் விரோதிகளுக்கு உதவி புரியாது; அவர்களுக்கு பாதுகாப்பும் அளிக்காது."

அநுபந்தம் 2

கத்தியவார் ராஜாக்கள் எழுதிக்கொடுத்துள்ள நன்னடத்தை ஜாமீன் பத்திரங்களுக்கு கீழே காண்பதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

கோண்டால் ராஜா எழுதிக்கொடுத்த ஜாமீன் பத்திரம்:

நாராவைச் சேர்ந்த புல்ஸி சூப்ஸிங்ஜியின் புத்திரனாகிய பராட் காராரால், ஸ்ரீமந்த் ராவ் சர். சேனகாஸ்கேல் ஷாம்ஷர் பகதூருக்கு எழுதிக்கொடுத்தது.

கோண்டால் தாலூகாவைச் சேர்ந்த ஜதேஜாதுவாஜி, குன்வார் நாட்டுஜி இருவரும் இவர்களுடைய இரு பிரதேசங்கள் அடங்கிய மாகாணம் பூராவிலும், ஜனங்களை கலகத்திற்கு தூண்டமாட்டார்களென்று, இவர்கள் சார்பாக நான் என் இஷ்டப்படியே, ஸ்ரீமந்த் பண்டிட் பிரதானுக்கும், கெய்க்வார் சர்க்காருக்கும் கீழ்க்காணும் ஷரத்துகள்படி ஜாமீன் கொடுக்கிறேன்.

(1) வேறு யாருடனும் (தாலுக்தார்) நான் சச்சரவு செய்யமாட்டேன், வேறு எந்த தாலுக்தாருடைய - அவர் கத்தியவாரைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, ரஜபுதனத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி - பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு தஞ்சமளிக்கமாட்டேன், பலாத்காரச் செயலில் இறங்குமாறு யாரையும் தூண்டமாட்டேன், வேறு யாருடைய எல்லையையும் ஆக்ரமிக்கமாட்டேன். இதுவரை இருந்த வழக்கப்படி நடந்து கொள்ள சம்மதிக்கிறேன்; பய்யாத் (ஜமீன்தார்) யாராவது தன்னுடைய நிலங்களையோ கிராமத்தையோ எனக்கு எழுதித் தருவதாகச் சொன்னால்; நான் அந்த நிலங்களையோ, கிராமத்தையோ வாங்கமாட்டேன். பழைய விரோதிகள்மீது பழிக்குப்பழி வாங்கமாட்டேன். என்னுடைய எல்லையில் திருடர்கள் தஞ்சமடைய இடங்கொடேன். ஆனல் என் நாட்டில் யாரையேனும் வைத்தி

ருந்தால், அது போதிய முன்னேற்பாடுகளுடன்தான் இருக்கும். வேறு எந்த சமஸ்தானத்திலும் கொள்ளையடிக்க மாட்டேன்; ரோடுகளில் செல்லும் பிரயாணிகளை வழிப்பறி செய்யமாட்டேன்; பணத்துக்காக தவிக்கும் நில சொந்தக்காரர் யாரேனும் என் பெயருக்கு நிலத்தையாவது, கிராமத்தையாவது எழுதிக்கொடுப்பதாகச் சொன்னால், நான் அந்த விஷயத்தை சர்க்காருக்கு தெரிவித்து, அனுமதி பெற்றதின் பேரிலேயே அவற்றை வாங்குவேன்.

ஷரத்து 2. எந்த குற்றவாளியுடனும் - அவன் ஸ்ரீமந்த் ஸ்ரீ சர்க்காரைச் சேர்ந்தவனு யிருந்தாலும் சரி, அல்லது கம்பெனி பகதூரைச் சேர்ந்தவனுயிருந்தாலும் சரி, அவனுடன் சகவாசம் வைத்துக்கொள்ளமாட்டேன்.

ஷரத்து 3. எங்களுக்கு இரு பக்கத்திலும், ஸ்ரீமந்த் பந்த் பிரதான், கெய்க்வார் சர்க்கார், பிரிட்டிஷ் கம்பெனி இவற்றின் பிரதேசங்கள் இருக்கின்றன. இந்த பிரதேசங்களில் நான் கொள்ளையடிக்க மாட்டேன்; கொள்ளைக் கூட்டத்துடன் அந்த பிரதேசங்களுக்குச் செல்லமாட்டேன்; வியாபாரியையோ, பிரயாணியையோ தாக்கமாட்டேன்; அவர்களுக்கு கூலிகளையும், பாதுகாப்பாளர்களையும் சப்ளை செய்து, என்னுடைய எல்லையைக் கடக்கும் வரை பாதுகாப்பளிப்பேன். ஒரு கிராமத்தின் எல்லைக்குள் ஒரு வியாபாரிக்கோ, அல்லது பிரயாணிக்கோ நஷ்டம் ஏற்பட்டால் அந்த கிராமத்தின் சொந்தக்காரரே அதற்கு பொறுப்பேற்க வேண்டும்; அந்த நஷ்டம் ஒரு தாலூக்காரின் கிராமத்தில் ஏற்பட்டிருந்தால் அதற்கு தாலூக்காரே ஜவாப்தாரியாவார். அவர் உண்மைத் திருடனை ஆஜர் செய்யவேண்டும்.

ஷரத்து 4. நான் வேறு எவருடைய (ஜமீன்தார்) எல்லையை பலவந்தமாக ஆக்ரமித்திருந்தால், அல்லது ஒருவன் பணத்துக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை தெரிந்து கொண்டே அவனுடைய நிலத்தை விலைக்கு வாங்கியிருந்தால், அதைப்போல நிலங்களை, நியாயமான ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு

திருப்பிக் கொடுத்துவிட சம்மதிக்கிறேன்; பின்னால் அந்த நிலங்கள் மீது பாத்தியதை கொண்டாட மாட்டேன்.

ஷரத்து 5. மேற்கண்ட நிபந்தனைகள்படி நான் இந்த பத்திரத்தை எழுதிக் கொடுக்கிறேன். நவநகர் தாஜாகாவின் ஜாம்ஸு ஜாஸாஜியை இதற்கு உத்திரவாதியாக இருக்கும்படிச் செய்கிறேன். இந்த ஒப்பந்தத்தை (நான்) நிறைவேற்றத் தவறியதற்காக இங்கு சர்க்காரின் அதிகாரி (Mohsal) வந்தால், பிறகு பிரஸ்தாப பிரச்னை சம்பந்தமாக சர்க்காரும் அவர்களுடையஅதிகாரிகளும் கேட்கும் காரணங்களுக்கு, திருப்திகரமான பதிலளிக்க சம்மதிக்கிறேன்; அதிகாரி (Mohsal)யின் அன்றுடச் செலவுகளையும், அவர் விதிக்கும் அபராதத்தையும் செலுத்திவிடவும் சம்மதிக்கிறேன்—கர்ட்டாக் ஸுது,

சம்வத் 22, 1864.

ஜாமீன் கொடுப்பவரின் கையெழுத்து.

உத்தரவாதம் அளித்தவரின் கையெழுத்து.

அநுபந்தம் 3

சமஷ்டி ராஜாங்க சபை, சமஷ்டி அசெம்பிளி இரண்டிலும் சமஸ்தானங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும் ஒவ்வொரு சமஸ்தானத்தின் ஜனத்தொகையும்

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	அசெம்பிளியில்	ஜனத்தொகை
		1-வது டிவிஷன்		
ஹைதராபாத்	5	ஹைதராபாத்	16	14,436,148
		2-வது டிவிஷன்		
மைசூர்	3	மைசூர்	7	6,557,302
		3-வது டிவிஷன்		
காஷ்மீர்	3	காஷ்மீர்	4	3,646,243
		4-வது டிவிஷன்		
குவாலியர்	3	குவாலியர்	4	3,523,070
		5-வது டிவிஷன்		
பரோடா	3	பரோடா	3	2,443,007
		6-வது டிவிஷன்		
கலாட்	2	கலாட்	1	342,101
		7-வது டிவிஷன்		
சிக்கிம்	1	சிக்கிம்	—	109,808
		8-வது டிவிஷன்		
(1) ராம்பூர்	1	(1) ராம்பூர்	1	465,225
(2) காசி	1	(2) காசி	1	391,272
		9-வது டிவிஷன்		
(1) திருவாங்கூர்	2	(1) திருவாங்கூர்	5	5,095,973
(2) கொச்சி	2	(2) கொச்சி	1	1,205,016
(3) புதுக்கோட்டை	1	(3) புதுக்கோட்டை		400,694
பங்கனப்பள்ளி		பங்கனப்பள்ளி	1	39,218
சாந்தூர்		சாந்தூர்		13,583

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	அசெம்பிளியில்	ஜனத்தொகை
10-வது டிவிஷன்				
(1) உதயப்பூர்	2	(1) உதயப்பூர்	2	1,566,910
(2) ஜெயப்பூர்	2	(2) ஜெயப்பூர்	3	2,631,775
(3) ஜோத்பூர்	2	(3) ஜோத்பூர்	2	2,125,982
(4) பிக்கானீர்	2	(4) பிக்கானீர்	1	936,218
(5) ஆள்வார்	1	(5) ஆள்வார்	1	749,751
(6) கோட்டா	1	(6) கோட்டா	1	685,804
(7) பாரத்பூர்	1	(7) பாரத்பூர்	1	486,954
(8) டோங்க்	1	(8) டோங்க்	1	317,360
(9) தோல்பூர்	1	(9) தோல்பூர்	1	254,986
(10) கராலி	1	கராலி		140,525
(11) பண்டி	1	(10) பண்டி	1	216,722
(12) ஸிரோஹி	1	ஸிரோஹி		216,528
(13) துங்கர்பூர்	1	(11) துங்கர்பூர்	1	227,544
(14) பன்ஸ்வாரா	—	பன்ஸ்வாரா		260,670
(15) பிரதாப்கார்	1	(12) பிரதாப்கார்	1	76,539
ஜலாவர்		ஜலாவர்		107,890
ஷாபுரா		ஷாபுரா		54,233
(16) ஜயஸால்மீர்	—	(13) ஜயஸால்மர்	1	76,255
கிஷன்கார்		கிஷன்கார்		85,744
11-வது டிவிஷன்				
(1) இந்தூர்	2	(1) இந்தூர்	2	1,325,089
(2) போபால்	2	(2) போபால்	1	729,955
(3) ரேவா	2	(3) ரேவா	2	1,587,445
(4) தாட்டியா	1	(4) தாட்டியா	1	158,834
(5) ஓர்ச்சா	1	(5) ஓர்ச்சா		314,661
(6) தார்	1	(5) தார்		243,430

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ஆலோசனை சபையில்	ஜனத்தொகை
(7) திவாஸ் (சீனியர்)	1	திவாஸ் (சீனியர்)	1	83,321
திவாஸ் (ஜூனியர்)		திவாஸ் (ஜூனியர்)		70,513
(8) ஜவோரா		(6) ஜவோரா	1	100,166
ரத்லம்		ரத்லம்		107,321
(9) பன்னு		(7) பன்னு		212,130
சம்தார்	1	சம்தார்	1	33,307
அஜாய்கார்		அஜாய்கார்		85,895
(10) பிஜாவர்		(8) பிஜாவர்		115,852
சர்க்காரி	1	சர்க்காரி	1	120,351
சத்தார்பூர்		சத்தார்பூர்		161,267
(11) பவோனி		(9) பவோனி		19,132
நகாத்		நகாத்		74,589
மெய்ஹார்	1	மெய்ஹார்	1	68,921
பராந்தா		பராந்தா		16,071
(12) பர்வானி	1	(10) பர்வானி	1	141,110
அலிராஜ்பூர்		அலிராஜ்பூர்		101,963
(13) ஜாபுவா		(11) ஜாபுவா		145,522
செய்லானு	1	செய்லானு	1	35,223
சித்தாமு		சித்தாமு		28,422
(14) ராஜ்கார்		(12) ராஜ்கார்		134,891
நரலிங்கார்	1	நரலிங்கார்	1	113,873
கில்சிபூர்		கில்சிபூர்		45,583
		12-வது டிவிஷன்		
(1) கட்ச்	1	(1) கட்ச்	1	514,307
(2) இதார்	1	(2) இதார்	1	262,660

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ஆலோசனை சபையில்	ஜனத்தொகை
(3) நவநகர்	1	(3) நவநகர்	1	409,192
(4) பவநகர்	1	(4) பவநகர்	1	500,274
(5) ஜூனகாத்	1	(5) ஜூனகாத்	1	545,152
(6) ராஜ்பிப்லா	1	(6) ராஜ்பிப்லா	1	206,114
பலான்பூர்		பலான்பூர்		264,179
(7) திரங்கதாரா	1	(6) திராங்கதாரா	1	88,961
கோண்டால்		கோண்டால்		205,846
(8) போர்பந்தர்	1	(8) போர் பந்தர்	1	115,673
மோர்வி		மோர்வி		113,023
(9) ராதன்பூர்	1	(9) ராதன்பூர்	1	70,530
வாங்கனீர்		வாங்கனீர்		44,259
பாலிட்டானு		பாலிட்டானு		62,150
(10) காம்பே	1	(10) காம்பே	1	87,761
தரம்பூர்		தரம்பூர்		11203
பாலனினூர்		பாலனினூர்		52,525
(11) பாரியா	1	(11) பாரியா	1	159,429
சோட்டா உதயபூர்		சோட்டா உதயபூர்		144,640
சாந்த்		சாந்த்		83,531
ஜானவாடா		ஜானவாடா		95,162
(12) பன்ஸ்டா	1	(12) பன்ஸ்டா	1	48,839
சச்சின்		சச்சின்		22,107
ஜலாஹர்		ஜலாஹர்		57,261
தண்டா		தண்டா		26,196
(13) திரோல்	1	திரோல்	1	27,639
லிம்டி		லிம்டி		40,088
வாத்வான்		வாத்வான்		42,602
ராஜ்கோட்		ராஜ்கோட்		75,540

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ஆலோசனை சபையில்	ஜனத்தொகை
13-வது டிவிஷன்				
(1) கோலாப்பூர்	2	(1) கோலாப்பூர்	1	957,137
(2) சங்ளி சவந்த்வாடி	1	(2) சங்ளி சவந்த்வாடி	1	258,442 230,589
(3) ஜஞ்சிரா முதோல் போர்	1	(3) ஜஞ்சிரா முதோல் போர்	1	110,379 62,832 141,546
(4) ஜாம்கண்டி மிராஜ் (ஸீனியர்) மிராஜ் (ஜூனியர்) குருந்தவாத் (ஜூனியர்) குருந்தவாத் (ஸீனியர்)	1	(4) ஜாம்கண்டி மிராஜ் (ஸீனியர்) மிராஜ் (ஜூனியர்) குருந்தவாத் ஜூனியர் குருந்தவாத் ஸீனியர்	1	114,270 93,938 40,684 44,204 39,583
(5) அகால்கோட் பால்டான் ஜாத் அவுண்டு ராமதுர்க்கம்	1	(5) அகால்கோட் பால்டான் ஜாத் அவுண்டு ராமதுர்க்கம்	1	92,605 58,761 91,099 76,507 35,454
14-வது டிவிஷன்				
(1) பாட்டியாலா	2	(1) பாட்டியாலா	2	1,625, 520
(2) பவால்பூர்	2	(2) பவால்பூர்	1	984,612
(3) கெயிர்பூர்	1	(3) கெயிர்பூர்	1	227,183
(4) கபூர்தாலா	1	(4) கபூர்தாலா	1	316,757
(5) ஜிண்டு	1	(5) ஜிண்டு	1	324,676
(6) நாபா	1	(6) நாபா	1	287,574
		(7) தேரி-கார்வால்	1	349,573

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ஏசெம்பிளியில்	ஜனத்தொகை
(7) மண்டி, பிலாஸ்பூர், சுகட்	1	(8) மண்டி, பிலாஸ்பூர், சுகட்	1	207,465 100,994 58,408
(8) தேரி-கார்வால், சிர்மூர், சம்பா		(9) சிர்மூர், சம்பா		148,568 146,870
(9) பரிட்கோட், மாலர்கோட்லா, லொஹாரு	1	(10) பரிட்கோட், மாலர்கோட்லா, லொஹாரு	1	164,364 83,072 23,338
15-வது டிவிஷன்				
(1) கூச் பிஹார்	1	(1) கூச் பிஹார்	1	590,886
(2) திரிபுரா		(2) திரிபுரா	1	382,450
மணிப்பூர்	1	(3) மணிப்பூர்	1	445,606
16-வது டிவிஷன்				
(1) மயூர்பஞ்ச், சோனேப்பூர்	1	(1) மயூர்பஞ்ச் (2) சோனேப்பூர்	1 1	889,603 237,920
(2) பாட்னா, காலஹண்டி	1	(3) பாட்னா (4) காலஹண்டி	1 1	566,924 513,716
(3) கியோன்ஜார், தென்கனல், நாயகார், தால்சார், நீலகிரி	1	(5) கியோன்ஜார் (6) கங்கபூர் (7) பஸ்தார் (8) சுர்குஜா	1 1 1 1	460,609 356,674 524,721 501,939

சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ராஜாங்க சபையில்	சமஸ்தானங்களும், சமஸ்தானங்கள் கோஷ்டிகளும்	ஏஜெண்ட் பிரிவில்	ஜனத்தொகை
(4) கங்கபூர்		(9) தென்கனல்		284,326
பம்பரா		நாயகார்		142,406
சிராய்க்கலா	1	சிராய்க்கலா		143,525
பாட்		பாட்		135,248
போனை		தால்சார்	3	69,702
(5) பஸ்தார்		போனை		80,186
சுர்குஜா	1	நீலகிரி		68,594
ரய்கார்		பம்ரா		151,047
நந்தகான்				
		(10) ராய்கார்		277,569
(6) கெய்ராகார்		கெய்ராகார்		157,400
ஜாஷ்பூர்		ஜாஷ்பூர்		193,698
காங்கர்	1	காங்கர்	3	136,101
கொரியா		சரங்கார்		128,967
சரங்கார்		கொரியா		90,886
		நந்தகான்		182,380
மேற்கண்ட டிவிஷன்களில் குறிப்பிடப்படாத சமஸ்தானங்களுக்கு	2	மேற்கண்ட டிவிஷன்களில் குறிப்பிடப்படாத சமஸ்தானங்களுக்கு	5	2,852,197
இதிலுள்ள சமஸ்தானங்களின் மொத்த ஜனத்தொகை				78,801,912

அநுபந்தம் 4

முக்கிய சமஸ்தானங்களின் விஸ்தீரணமும், வருமானமும்

சமஸ்தானத்தின் பெயர்	விஸ்தீரணம் சதுர மைல்கள்	வருஷ வருமானம் ரூ.
காஷ்மீர்	85,885	2,47,27,000
ஹைதராபாத்	82,698	7,98,57,000
கலாட்	73,278	7,46,000
மார்வார் (ஜோத்பூர்)	35,000	1,52,24,000
மைசூர்	29,474	3,50,72,000
குவாலியர்	26,387	2,49,50,000
பிக்கானீர்	23,317	1,25,00,000
பகவல்பூர்	16,434	42,56,000
ஜெயப்பூர்	15,590	1,30,00,000
ரேவா	13,000	51,80,000
பஸ்தார்	13,000	9,59,000
மேவார் (உதயப்பூர்)	12,923	52,09,000
இந்தூர்	10,000	1,36,00,000
மணிப்பூர்	9,000	7,46,000
கட்ச்	8,249	32,00,000
பரோடா	8,164	2,49,00,000
திருவாங்கூர்	7,625	2,50,00,000
போபால்	6,924	80,00,000
கெயிர்ப்பூர்	6,050	21,99,000
பாட்டியாலா	5,942	1,40,00,000
கோட்டா	5,725	47,93,000
தேரி-கார்வால்	4,500	20,34,000
நவநகர்	4,000	1,12,59,000
ஜூனகாத்	3,337	86,00,000
கோலாப்பூர்	3,217	49,90,000
ஆள்வார்	3,158	38,00,000
பவநகர்	2,961	1,47,00,000
கொச்சி	1,480	87,58,000

தேர்ந்தவர்களின் புள்ளி விவரங்கள்.

ல = லக்ஷம்

மாகாணம் அல்லது சமஸ்தானத்தின் பெயர்	மொத்த ஜனத் தொகை	மொத்தம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்	விகிதம்	இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்	விகிதம்	மொத்த ஸ்திரீ ஜனத்தொகை	எழுதப் படிக்கத் தெரிந்த ஸ்திரீகள்	விகிதம்	இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரிந்த ஸ்திரீகள்	விகிதம்
	லக்ஷம்	லக்ஷம்				லக்ஷம்				
இந்தியா (பர்மாவை சேர்க்காமல்)	3360	235	7%	35 ல.	1·04%	1630	30 ல.	1·2%	3·5 ல.	·2%
சென்னை	465·5	42·5	9%	5·75 ,,	1·2%	235	6 ,,	2·5%	·75 ,,	·3%
வங்காளம்	500	50	10%	10 ,,	2%	240	6·5 ,,	2·7%	1 ,,	·4%
பம்பாய், ஸிந்து	220	20	9.1%	3·75 ,,	1·7%	100	2·75 ,,	2·75%	·5 ,,	·5%
மத்திய மாகாணம், பேரார்	155	8·75	5.6%	1 ,,	·7%	77·5	·75 ,,	·97%	10,000	·01%
பஞ்சாப்	235	12·5	5·3%	2.5 ,,	1%	107·5	1·5 ,,	1·4%	19,000	·18%
ஐக்ய மாகாணம்	485	22·5	4.6%	2·5 ,,	51%	230	2 ,,	·87%	26,000	·11%
பிஹார், ஓரிஸா	380	17·5	4.6%	1.75 ,,	·46%	190	1·25 ,,	·65%	12,500	·065%
திருவாங்கூர்	50	11.875	23·75%	80,000	1·6%	25	3·5 ,,	14%	15,000	·6%
கொச்சி	12·5	3·375	27%	37,000	3%	6·125	1·125,,	18·4%	8000	1·6%
பரோடா	25	4.25	17%	32,000	·9%	11·25	·75 ,,	6·6%	2000	·18%
மைசூர்	65	5.9	9·07%	90,000	1·4%	32·5	90,000	2·8%	13,000	·4%
ஹைதராபாத்	145	6	4%	75,000	·5%	70	68,000	·97%	7500	·1%
குவாலியர்	35	1·5	4·3%	14,000	·4%	15	15,000	1%	1000	·06%
காஷ்மீர்	37·5	1·25	3·3%	20,000	·54%	17·5	9000	·51%	800.	·046%

குறிப்பு :—இது சுமார் 8 வருஷங்களுக்கு முன் எடுக்கப்பட்ட புள்ளி விவரம்.

அநுபந்தம் 6

விஸ்தீரணத்திலும் சரி, வருமானத்திலும் சரி, மிகச் சிறிய சமஸ்தானங்கள் பல இருப்பதற்கு கீழே சில உதாரணங்கள் தரப்படுகின்றன :

சமஸ்தானத்தின் பெயர்	விஸ்தீரணம் சதுரமைல்	ஜனத் தொகை	வருஷ வரு மானம் ரூ
அமாலா	119	4682	3823
அவசார்	1	32	72
சிஞ்சிலிகாதத்	27	1051	662
தர்பாவதி	76	2935	3978
காதி	170	5447	6111
கிர்லி	21	1021	777
பலாஸ்வீர்	2	189	129
பிம்ப்லாதேவி	3	73	158
பிம்ப்ரி	72	2223	4000
சிவபாரா	4	152	428
வத்யாவன்	4	54	153
வசூரணி	132	5337	3810
ஜாரிகார்காதி	8	700	75

விஷய அட்டவணை

(எண்கள் பக்கங்களைக் காட்டுகின்றன)

அந்தப்புரம் : ஒரு மகாராணி கடிதம் 56, 57

அயோத்தி : பிரிட்டிஷ் தலையீடு 26, 27

அரசியல் இலாகா : 58, 77

ஆரிய சமாஜிகள் : ஹைதராபாத் இயக்கம் சம்பந்தமாக 166, 168, 172

ஆலயத் திறப்பு : திருவாங்கூரில் 66, 139, இந்தூர், ஹிண்டோல் 66

உபவாசம் ; ராஜ்கோட்டில் காந்திஜி 191

கடன் நிவாரணச் சட்டம் : பவகரில் 66

கப்பம் : 56

கர்ஸான் : ஆதிபத்திய சர்க்கார் பொறுப்பு, சமஸ்தானாதிபதிகள் கடமை பற்றி 95

காங்கிரஸ் தீர்மானங்கள் : ஹரிபுராவில் 108, திரிபுரியில் 245, ராம்காரில் 246.

காஷ்மீர் : 218

காந்திஜி : வைசிராய் சம்பளம் பற்றி 71, சமஸ்தானங்களில் தனி ஸ்தாபனம் பற்றி 243, திருவாங்கூர் கல்லெறி பற்றி 145, ராஜ்கோட் தாகூர் வாக்கு மீறியது பற்றி 190, "என் உபவாசம் ஹிம்ஸை கலந்தது" 198, பிரிட்டிஷ் கடமை பற்றி 242, "சமஸ்தான கொள்கையில் மாறுதலின் அவசியம்" 244.

காளிய : சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் உரிமை பற்றி 91.

கீத் : பொறுப்பாட்சி ஏற்பட்டால் சமஷ்டி தேர்தல் பற்றி 254.

குடகு : 29.

குவையர் : ராஜ்கோட் தகராரில் தீர்ப்பு 194

சத்தியமூர்த்தி : சப்பெடரேஷன் யோசனை : 284.

சன்னது : 32

சிந்து : பிரிட்டிஷ் கைப்பற்றியது 30

சிவில் அண்டு மிலிட்டரி ஸ்டேஷன் : 121

சீமை ராஜ பாண்டியன் : (திருவாங்கூர் பொறுப்பாட்சிப் போரில் மாண்ட தமிழ் நாட்டுத் தொண்டர்) 150.

சீர்திருத்தம் : மைசூர் 133, ராஜ்கோட் 200, ஹைதராபாத் 270

ஜான்ஸி ராணி : 32

"டைம்ஸ்" (பம்பாய்) : சமஸ்தானாதிபதிகளுக்கு எச்சரிக்கை 275.

"டைம்ஸ்" (லண்டன்) : "சமஷ்டியில் சேரா விட்டால்"—சமஸ்தானாதிபதிகளுக்கு எச்சரிக்கை 275, சமஸ்தானங்களில் நிர்வாக சீர்கேடு பற்றி 1859-ம் வருஷத்தில் எழுதியது 22.

தால்சார் : 211

திருவாங்கூர் : 136
தென்கனரி : 209
நாராயண தர்ம பரிபால யோகம் : 149
நாபா : பாட்டியாலாவுடன் தகராறு 40
நிஜாம் : முதல் இங்கிய சுதந்திர யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவி 34, வகுப்பு வாதப் பாட்டு 164.
நீலகிரி : 208
பஜாஜ் : ஜெயப்பூர் சத்யாக்ரஹத்தில் 202
பட்லர் கமிட்டி : 64, 98
பஸால்கட்டே : ரண்பூரில் கொலை 216.
பிண்டாரிகள் : 9
பீஷ்வா : 7
மகஜர் : திருவாங்கூர் 142.
மணிப்பூர் : கலகம் 42
மன்ரோ : பிரிட்டிஷ் கொள்கையால் சமஸ்தானங்களில் ஏற்பட்ட அனர்த்தம் பற்றி 20.
மன்ஸா : சத்யாக்ரஹம் 112
மாகாண சுயராட்சி: சமஸ்தானங்களில் எதிரொலி 105
மும்தாஜ் : இந்தூர் மாஜி மகாராஜா காதல் 82.
மைசூர் : சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் ஆட்சி 39, சீர்திருத்த மளிப்பது பற்றி மைசூர் ராஜா–பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்பந்தம் 49, சமஸ்தானத்தின் வரலாறு 119.
ரண்பூர் : 214
ராஜத்வேஷம்: திலகர் வழக்கு 40
ராஜ்கோட் : 174
ராஜாக்கள் சபை : 60, பிரஜைகளை ஒடுக்க சூழ்ச்சி 185
ராஜாஜி : சமஸ்தானங்களின் எதிர்காலம் பற்றி 283
ராமசாமி அய்யர், ஸி. பி : 139, 142, ஒப்பந்தங்கள், பொறுப்பாட்சிக்கு தடையாய் இருப்பதாக 248
ராமதுர்க்கம் : 220
ரீடிங் : ஆகிபத்திய சர்க்கார்-சமஸ்தானங்கள் உறவுபற்றி நிஜாமுக்குக் கடிதம் 37
ரெஸிடெண்ட் : 44, 58
லிம்டி : 222
லீ வார்னர் : பிரிட்டிஷ் கடமைகள் பற்றி 93.
லெஸ்லி ஸ்காட் : பட்லர் கமிட்டிக்கு போட்டியாக நியமிக்கப்பட்ட கமிட்டி
வல்லபபாய் பட்டேல் : மைசூரில் சமரச தூதராக 130, ராஜ்கோட்டில் தளபதியாக 180
வின்டர்டன் : சமஸ்தானங்களின் சீர்திருத்தம் பற்றி பிரிட்டிஷ் கொள்கை 250
விதுராஸ்வதம் : துப்பாக்கிப் பிரயோகம் 127
வெல்லெஸ்லி: "நமது கொள்கை சுதேச மன்னர்களை பேடிகளாக்கி விட்டது"—தம்பெனிக்குக் கடிதம் 20,
ஜெயப்பூர் : 202
"ஸ்டேட்ஸ்மென்" : ராஜாக்கள் சபையை கண்டித்து 275
ஸ்வீகாரம் : 33
ஹிண்டோல் : 217
ஹைதராபாத் : 158, 164

பிழைகள் திருத்தம்

பக்கம்	வரி	இப்படி இருப்பதை	இப்படி திருத்திப் படிக்கவும்
28	18	என்ன	என்று
64	8	பிரஜைர்கள்	பிரஜைகள்
75	4	யிருந்தும்	யிருந்ததும்
79	10	ஒவ்வொருவருக்குப்	ஒவ்வொருவருக்கும்
82	25	சாயடை	சண்டை
82	26	கண்மேற்பட்டது	காயமேற்பட்டது.